[illegible]

அருளிச்செய்தது.

இஃது

யாழ்ப்பாணத்து நல்லூர்

# ஆறுமுகநாவலரவர்கள்

செய்த புத்துரையுடன்

மேற்படியூர்

## சதாசிவப்பிள்ளையால்

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
சென்னை-20.

விளம்பி௵ கார்த்திகைமீ.

இதன்விலை ரூபா-கவ.

(Copyright Registered.)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமய நெறி,

## மூலமும் உரையும்.

### காப்பு

லலார் தொழும்வெண்ணெய் நல்லூர்ச்சிவாலயத்துட
பொல்லார்தாள் யாஞ்சூடுமே போது.

இதன்பொருள். நல்லார் தொழும் வெண்ணெய் நல்லூர்ச் சிவாலயத்துட் பொல்லார்தாள் - எண்வகைப் பத்திகளையுடைய நல்லோர்கள் வணங்காநின்ற திருவெண்ணெய்நல்லூரின்கணுள்ள சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாருடைய திருவடிகளே—யாம் சூடும் போது - நாங்கள் சிரமேற்சூடும் மலர்களாம். என்றவாறு.

எண்வகைப்பத்திகளாவன "தொண்டடி தொழல்பூசைத் தொழிலாமொழிதல் அகலாது தினமுயர்ச் சனைபுரிதல் உருகுதிங்கள், கொண்டபணி திருவடிக்கே கொடுத்த ஈசன் குணம் அருவு மருங்கதைகளைக் குவிக் கேட்டு, மண்டிவிழி துளும்பன் மயிர் சிலும்ப லுவமான மருவு திருப்பணி காட்டி வருவ வாங்கி, யுண்டிகொளா தொழிதலென விவைவயோ ரெட்டு முடையரவா பத்தரென வுரைத்துளாரே." என்னும் திருத்தொண்டர் புராணசாரத் திருவிருத்தத்திற் கூறப்பட்டன

வாம். பொள்ளாரென்பது ளகரவொற்றுமைபற்றிப் பொல்லெ ரென்றாயிற்று; சுயம்புமூர்த்தியென்றதாம்.

# பாயிரம்.

சிவவணக்கம்.

உலகமும் பலவுயிரு மொன்றிநிறைந் தோங்கி
யிலகுஞ் சிவனெம் மிறை

இ - ள். உலகமும் பலவுயிரும் ஒன்றி நிறைந்து - எல்லாப்புவனங்களிலும் பலவகைப்பட்ட ஆன்மாக்களிலும் பொருந்தி இரண்டற வியாபித்து நின்றும் — ஓங்கி இலகும் சிவன் (அவற்றிற்கு) அப்பாற்பட்டு விளங்காநின்ற சிவபெருமானே — எம்மிறை - நம்முடைய கருத்தா. எ - று.

பல்லுயிரென்றூ, ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் பிரளயகலர் சகலரென மூவகைப்படுதலினென்க.

சத்திவணக்கம்.

ஒன்றாகி யைந்தொழிற்கு மைந்துவித முற்றுயி
ணின்றருள்பொற் பாதநினை வாம்.

இ - ள். ஒன்று ஆகி - சிவபெருமானோடுமே வேற்றுமையின்றி ஒருமுதலாகி — ஐந்தொழிற்கும் ஐந்துவிதம உற்று - பஞ்சகிருத்தியத்தின்பொருட்டுப் பஞ்சசத்திபேதங்களைப் பொருந்தி — உயிருள் நின்றருள் பொற்பாதம் நினைவாம் - சருவான்மாக்களிடத்தும் வியாபித்து நின்ற சிவசத்தியினுடைய பொனாகிய திருவடிகளைத் தியானிப்பாம். எ - று.

பஞ்சகிருத்தியங்களாவன சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகமென்பனவாம். பஞ்சசத்திகளாவன ப

சத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்பனவாம். அக்கினிசத்தி ஒன்றேயாயினும் சுடு விளக்கம் அடுதலாகிய தொழில்வேறுபாட்டினாலே பலவாகத் தோன்றுமாறுபோலச் சிவசத்தி ஒன்றேயாயினும படைத்தல் காத்தல் முதலிய தொழில்வேறுபாட்டினாலே பலவாகத் தோன்றுமெனபது சிவாகமநூற்றுணிவு. (உ)

விநாயகர் வணக்கம

அடியரிடர் தீர்த்தருளு மானைமுகன் பாதங்
கடிமலர் தூய்க கைதொழுவாங் கண்டு.

இ - ள். அடியர் இடர் தீர்த்தருளும் ஆனைமுகன்பாதம் தம்மை வழிபடாநின்ற தொண்டர்களுடைய துன்பத்தை நீக்கி அநுக்கிரகஞ்செய்யும் யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளினது திருவடிகளை—கண்டு கடி மலர் தூய்க் கைதொழுவாம் - தரிசித்து மணம்பொருந்திய பூக்களைத் தூவிக் கைகுவித்து வணங்குவாம. எ - று. (௩)

சுப்பிரமணியர் வணக்கம

அமரரிடர் தீர்த்தே யவர்க்கருளும வென்றிக்
குமரனடி சிந்திப்பாங் கூர்ந்து

இ - ள். அமரர் இடர் தீர்த்தே அவர்க்கு அருளும் வென்றிக குமரன் அடி - தேவர்களுக்குச் சூரன முதலிய அசுரர்களால் நிகழ்ந்த துன்பத்தை நீக்கி அவர்களுக்குக் கிருபை செய்த வெற்றியையுடைய சுப்பிரமண்ணியசுவாமியினது திருவடிகளை—கூர்ந்து சிந்திப்பாம் - மனமொன்றித் தியானிப்பாம். எ - று.

திருநந்திதேவர் வணக்கம்.

நம்பன் கணத்துக்கு நாதனரு ணந்திபதம்
வம்பலர்கைக் கொண்டுபணி வாம்.

இ - ள். நம்பன் கணத்துக்கு நாதன் அருள் நந்தி பதம் - சிவபெருமானைச் சேவிக்குங் கணங்களுக்குத் தலைவராகிய கிருபையுடைய திருநந்திதேவரது திருவடிகளை—வம்பு அலர் கைக்கொண்டு பணியாம் - மணம் பொருந்திய பூக்களைக் கையிலெடுத்து அவற்றாலருச்சித்து வணங்குவாம். எ - று.

சனற்குமாரர் வணக்கம்.

சதுர்முகன் மைந்தன் சனற்குமரன் பாத
பதுமமலர் சென்னியில்வைப் பாம.

இ - ள். சதுர்முகன் மைந்தன் சனற்குமரன் பாதபதும மலர் - பிரமதேவருடைய புத்திரராகிய சனற்குமாரமகாமுனிவருடைய திருவடிகளாகிய செந்தாமரைமலர்களை—சென்னியில் வைப்பாம் - எமது சிரசின்மேற் சூடுவோம். எ - று.

மற்றைமுனிவர் வணக்கம்.

மற்றை முனிவர் மலர்த்தா டலைமேல்வைத்
தெற்றுவமே பாசமெலாம் யாம.

இ - ள். யாம் - நாம்—மற்றைமுனிவர் மலர்த்தாள் தலைமேல் வைத்து - (ஞானசாத்திரங்களைப் போதிக்கும் அகஸ்திய மகாமுனிவர் முதலிய) மற்றைமுனிவர்களுடைய செந்தாமரை மலர்போலுந் திருவடிகளையும் நமது சிரசின்மேலிருத்தி—பாசமெலாம் எற்றுவம் - பஞ்சபாசங்களையும் நீக்குவாம். எ - று.

ஏகாரம் அசை. பஞ்சபாசங்களாவன ஆணவம், மாயேயம், காமியம், வைந்தவம், திரோதாயி என்பனவாம். (எ)

காரைக்காலம்மையார்வணக்கம்.

நம்மடிக ளாடகத்தை ஞானவிழி யாற்றிளைக்கு
மம்மைதிருப் பாதநினைப் பாம்.

இ - ள். நம்மடிகள் நாடகத்தை ஞானவிழியால் நினைக்
ம் அம்மை - திருவாலங்காட்டின்கண்ணே நமமுடைய கட
ாகிய சிவபெருமானது தாண்டவததை ஞானக்கண்ணி
)லே தரிசிதது அநுபவிதத காரைககாலமமையாருடைய—
ருப்பாதம நினைப்பாம் - திருவடிகளைச் சிந்திப்பாம. எ - று.

திருஞானசமபந்தமூர்த்திநாயனார்வணக்கம்.

வெப்பொழிய மீனவற்கு நீறளித்த வேதியன்று
ளெபபொழுதுஞ் சிந்திபபாம யாம.

இ - ள். மீனவற்கு வெப்பு ஒழிய நீறு அளித்த் வேதியன்
ாள் - பாண்டியராஜனுக்குச் சுரநீங்கும்படி விபூதியைக் கொ
ததருளிய திருஞானசமபந்தமூர்ததிநாயனாருடைய திருவ
களை—யாம எபபொழுதும் சிந்திப்பாம் - யாமெக்காலத்தி
ந் தியானிப்பாம். எ - று. (கூ)

திருநாவுக்கரசுநாயனார்வணக்கம்.

பரித்தரிப்பாம் பாசம் பரமசிவன் பாதந்
தரித்துயர்நத வாகீசர் தாள்.

இ - ள். பரமசிவன் பாதம் தரித்து உயர்ந்த வாகீசர் தாள்-
வபெருமானுடைய திருவடிகளைச் சிரசின்மேலே தரித்து
தனுலுயர்ந்த திருநாவுக்கரசுநாயனாருடைய பாதங்களை—
ரித்துப் பாசம் அரிப்பாம் - யாம் எமது தலையின்மேலிருத்
தெப் பாசத்தை நீக்குவாம். எ - று. (௧௦)

சுந்தரமூர்த்திநாயனார் வணக்கம்.

பிழைப்பித்தே கூற்றுன் முதலைவாய்ப் பிள்ளை
யழைப்பித்தார் பாதநினைப் பாம்.

இ-ள் முதலை வாய்ப் பிள்ளை கூற்றூற் பிழைப்பித் அழைப்பித்தார் - முதலைவாயினிடத்தே நாசமடைந்த பிர - ணப்பிள்ளையை இயமனூலே பிழைப்பித்து அழைப்பித்த சுந் ரமூர்த்திநாயனருடைய—பாதம் நினைப்பாம் - திருவடிகளை தியானிப்பாம். எ - று. (சுக்

## மாணிக்கவாசகசுவாமிகள் வணக்கம்.

பரிமேல் வரவமலன் பாடியமெய்ப் பத்த
னிருபதமுஞ் சென்னியில்வைப் போம

இ-ள். அமலன் பரிமேல் வரப் பாடிய மெய்ப்பத்த இருபதமும் - சிவபெருமான் குதிரையின்மேலேறிவருமபடி பாடியருளிய மெய்யன்பராகிய மாணிக்கவாசக சுவாமிக டைய இரண்டு திருவடிகளையும்—சென்னியில் வைப்போம் சிரசின்மேலிருத்தி வணங்குவாம். எ - று. (சு

## மாளிகைத்தேவர்முதலியோர வணக்கம்.

மாளிகைத் தேவன் முதன் மதுர வாக்கினர்த
தாளிணையைப் பாமெந் தலை.

இ-ள். மாளிகைத்தேவன் முதல் மதுரவாக்கினர் த ணை - திருமாளிகைத்தேவர் முதலாகிய மதுரவாக்காயுள்ள தி விசைப்பாச் செய்தருளிய அடியார்களுடைய பாதங்களை எந்தலை வைப்பாம் - நமது சிரசின்மேலிருத்தி வணங்குவா எ - று.

திருவிசைப்பாச் செய்தார்கள் பெயர் "சீரார்மா ளிகை தேவர் கருவூர்த தேவர் திகழ்நம்பி கண்டரா தித்த தேவர் பாராள்வே ணாட்டடிக டிருவாலி யமுதர் பரவுபுரு டோத் மர்பண் புளசேதி ராய - சேராரு மிளம்பெருமானடிகள் சே ந்த ரெண்ணிலதி ராவடிக ளிவர்க ளோடும் - பாராளுங் க

லாடர் பட்டணத்துப் பிள்ளை பரவுதிரு விசைப்பாவைப் பாடினரே." என்னுஞ்செய்யுளாலறிக. (கந)

அடியாரவணக்கம்.

பொய்யுலக மென்றமலன பொற்பாதஞ் சார்ந்தார்தாள்
கைதொழுவா முள்ளங் களித்து.

இ - ள். உலகம் பொய் என்று - பிரபஞ்சவாழ்க்கை பொய்யெனத் துணிந்து—அமலன் பொற்பாதம் சார்ந்தார் தாள் - சிவபெருமானுடைய பொலிவாகிய திருவடிகளையடைந்த திருத்தொண்டாகளுடைய பாதங்களை—உள்ளம் களித்துக் கைதொழுவாம் - மனமகிழ்ந்து கைகுவித்து வணங்குவாம். எ-று.

மெய்கண்டதேவா வணக்கம்.

சிந்திப்பாம் வெண்ணெய்நகர் மெய்கண்ட தேவனடி
வந்திப்பாம் வாழ்த்திமகிழ் வாம்.

இ - ள். வெண்ணெய்நகர் மெய்கண்டதேவன் அடி சிந்திப்பாம் - திருவெண்ணெய்நல்லூரின்கணெழுந்தருளியிருந்த மெய்கண்டதேவருடைய திருவடிகளை மனசினாலே தியானிப்பாம்,—வந்திப்பாம்-காயத்தினாலே வணங்குவாம்,—வாழ்த்திமகிழ்வாம் - வாக்கினாலே துதித்து அதனாற்களிப்பாம். எ - று.

பதியுண்மையுணர்ந்தார் வணக்கம்.

உண்டுசிவ னென்று முயிருள்ளு மென்றுணர்ந்த
பண்டிதர்பொற் பாதநினைப் பாம்.

இ - ள். உயிர் உள்ளும் - ஆன்மாக்களுக்கு அகத்தும் புறத்தும்—என்றும் சிவன் உண்டு என்று உணர்ந்த - சதாகாலமும் சிவனொருவருண்டென்றறிந்த—பண்டிதர் பொற்பாதம்

நினைப்பாம் - ஞானிகளுடைய பொலிவாகிய திருவடிகளைச் சிந்திப்பாம். எ - று.

உள்ளும் என்ற எச்சவும்மையாற் புறமுங்கொள்ளப் பட்டது. (கசா)

இது முதலாறுபாட்டுக்களால் வாழ்த்து.

ஆனினமு மந்தணரு மன்பருமா னூர்திக்கு
வானவரும வாழ்க மகிழ்ந்து.

இ - ள். ஆன் இனமும் - பசுக்கூட்டங்களும்—அந்தணரும் - பிராமணர்களும்—ஆன் ஊர்திக்கு அன்பரும் - இடபவாகனத்தையுடைய சிவபெருமானிடத்தே அன்புடையவர்களும்—வானவரும்-தேவர்களும்—மகிழ்ந்து வாழ்க - களித்து வாழ்க. எ - று. (கஎ)

வாழ்க தரணிதனைத் தாங்குமனு நீதிமன்னர்
வீழ்கபுனன் மண்மகிழ மிக்கு.

இ - ள். தரணிதனைத் தாங்கும் மனுநீதி மன்னர் வாழ்க - பூமியைப் பரிபாலனஞ்செய்கின்ற மனுநீதியையுடைய அரசர்கள் வாழக்கடவர்;—மண் மகிழப் புனல் மிக்கு வீழ்க - பூமியின்கண்ணுள்ள ஆன்மாக்கள் மகிழும்படி மாசந்தோறும் மும்மழை மிகுந்து பொழிக. எ - று. (கஅ)

உதவியதே தும்பெரியோர்க் கூட்டிப்பி னுண்ணும்
விதிவினையார் வாழ்கநில மீது.

இ - ள். உதவியது ஏதும் பெரியோர்க்கு ஊட்டி - தம்மாலியன்றதெவ்வளவிலேனும் பெரியோர்களுக்கு அன்னமருத்துவித்து—பின் உண்ணும் விதி வினையார் - பின் சேடம் புசிக்கும் விதிக்கிசைந்த தொண்டையுடைய அடியார்கள்—நிலமீது வாழ்க - பூமியின்மேல் வாழக்கடவர். எ - று.

சேடம் பரிகலசேடமெனவும் பாத்திரசேடமெனவும் இரு வகைப்படும். (கக)

வரையாதே யுச்சிதனில வந்தவரை யூட்டும்
புரையோா் தழைகபுகழ் புக்கு.

இ-ள். உச்சிதனில் வந்தவரை வரையாதே ஊட்டும் புரையோா் - உச்சிக்காலத்தில வாதவர்கள் யாவராயினும் அவாகளை நீக்காமல் அயாகளுக்கு அன்னமருத்துவிக்கின்ற உயர்ச்சியையுடையோர்கள்—புகழ் புக்குத தழைக - கீாத்திபெற்றுச் செழிக்கக்கடவாகள். எ - று. (உ0)

திருப்பணிசெய்வாாக்குஞ்சிவனையுன்னிச்செம்பொன்
விருப்புடனீ வார்பெறுக வீடு.

இ - ள். சிவனை உன்னித் திருப்பணி செய்வார்க்கும் செம்பொன் விருப்புடன் ஈவார் - சிவபெருமானைக் குறித்துத்திருப்பணிசெய்யும் பத்தர்களுக்கும செம்பொனனைச் சிரத்தையுடன் கொடுப்போர்கள்—வீடு பெறுக - மோக்ஷமடையக்கடவாகள். எ - று.

எச்சவும்மையால் குருசங்கமங்களைக் குறித்துத திருப்பணி செய்யும பத்தர்களுக்குமென்பது கொள்ளப்படும். (உக)

உய்வா ருதவுநிதி வாங்கித் திருப்பணியைச்
செய்வார் பெறுக சிவம்.

இ - ள். உய்வார் உதவும் நிதி வாங்கித் திருப்பணியைச் செய்வார் - உய்யக்கருதும் பத்தர்கள் கொடுக்குந்திரவியங்களைவாங்கித் திருப்பணியைச் செய்பவர்கள்—சிவம் பெறுக - சிவத்தையடையக்கடவர்கள். எ - று.

சிவபத்தர்களாயினோர் தம்மிடத்துள்ள தனத்தை. மூன்று கூறுபண்ணி ஒருகூற்றைத் தமது சீவனத்தின்பொருட்டு வை

த்துக்கொண்டு மற்றையிரண்டு கூறையும் திருப்பணிக்குக் கொடுத்தல்வேண்டுமென்று சிவாகமங்கூறுமெனவறிக. (உஉ)

### நூற்பெயரும் வழியும் நுதலிய பொருளும்.

சைவ சமயநெறி சைவா கமத்தாய்ந்து
கொய்துரைப்பாம் வாஞ்சையுளங் கொண்டு.

இ - ள். சைவசமயநெறி - சைவசமயநெறியை—வாஞ்சை உளம் கொண்டு - உலகத்தவர்கள் அறிந்து ஈடேறல்வேண்டு மென்னும் விருப்பத்தை மனசிலே பொருந்தி—சைவாகமத்து ஆய்ந்து கொய்து உரைப்பாம் - காமிகமுதலிய சைவாகமங்களிலாராய்ந்து எடுத்துச் சொல்வாம். எ - று.

சைவசமயநெறியெனவே நூனுதலியபொருளும், நூற்பெயரும் பெறப்பட்டன. ஆகமமென்னுமொழியில் ஆவென்பது ஞானமும், கவ்வென்பது மோக்ஷமும, மவ்வென்பது மலநாசமுமாம்; ஆகவே, ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி ஞானத்தையுதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுக்கையால் ஆகமமெனப் பெயராயிற்றென்றுணர்க. (உ௩)

### அவையடக்கம்.

தேசிகனோக் காற்றிமிரந் தீருமுயிர்க் கிந்நூலி
னாசறுஞ்சொல் லாய்ந்தவர்நோக் கால்.

இ - ள். உயிர்க்குத் திமிரம் தேசிகன நோக்கால் தீரும் - ஆன்மாக்களிடத்துள்ள மலவிருளானது ஆசாரியனுடைய பார்வையினாலே நீங்கும்—(அதுபோல)—இந்நூலின் ஆசு சொல் ஆய்ந்தவர் நோக்கால் அறும் - இந்நூலினிடத்துள்ள குற்றமானது பஞ்சலக்கணத்தை ஆராய்ந்த புலவர்களுடைய பார்வையினாலே நீங்கும். எ - று.

அறநூல் பொருணூல் இன்பநூல் வீட்டுநூல் என்னும் நான்குநூற்கும் கருவி எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி என்னும ஐந்திலக்கணங்களே, அவற்றுள்ளும் நான்கிற்குங் கருவி சொலலே, அசசொல்லிற்குக் கருவி அதுவேயாகையால், எல்லாவற்றினுஞ் சொல்லே சிறப்பெனபது நோக்கித் தலைமைபற்றிய வழக்கால் இஙகே அவவைந்தினையுஞ் சொலெனறார். இக்கருத்துப்பறறியன்றே வடநூலாரும் சத்தமென வழங்குவர். (உச)

## நூல்வழங்குநிலனும் நூற்பயனும்.

இரவியென விந்நூ லிலங்குகவெங் கெங்கு
மிருண்மலந்தீர்த் தாக்குமுயிாக் கின்பு

இ - ள். இரவி என இந்நூல் எங்கெங்கும் இலங்குக - சூரியன் உலகமெங்கும் பிரகாசித்தலபோல இந்நூல் தமிழ்வழங்கும நிலமெங்கும் பிரகாசிக்கக்கடவது;—உயிர்க்கு இருண் மலம் தீர்த்து இன்பு ஆக்கும - இது ஆன்மாக்களுக்கு மலவிருளைக் கெடுத்துப் பேரின்பததை விளைவிக்கும. எ - று. (உரு)

## பாயிரமுற்றிற்று.

இந்நூலாசிரியர் இதனை ஆசாரியரிலக்கணம் மாணாக்கரிலக்கணம் பொதுவிலக்கணமென மூன்றதிகாரத்தாற் கூறத் தொடஙகினார். அவற்றுள், தீக்ஷை பிரதிட்டை முதலிய கருமங்களைச் செய்து முடித்தற்கு அதிகாரிகள் ஆசாரியராதலால் ஆசாரியரிலக்கணம் முதற்கண்ணும், அவவாசாரியர்களிவரென்றறிந்து அவரையடைந்து வழிபட்டுத் தங்கள் தங்கள் பக்குவத்திற்கேற்ற தீக்ஷை பெறவேண்டுவோர் மாணாக்கராகையால் மாணாக்கரிலக்கணம் இடைக்கண்ணும், அவவிருவருஞ் சரியை கிரியை முதலியவற்றையறிந்து அவ்வாறநுட்டித்து

அபரமுத்தி பரமுத்திகளைப் பெறவேண்டுகையாற் பொதுவிலக்கணம் இறுதிக்கணுறும், வைக்கப்பட்டன.

முதலாவது

# ஆசாரியரிலக்கணம்.

யாம் இது கூறுவமென நுதலிப் புகுகின்றார்.

தேசிக ராதி திறந்தொகுத்துச் செப்புவா
மாசறுவார் தேறுகவா ராய்ந்து.

இ - ள். தேசிகா ஆதி திறம் தொகுத்துச் செப்புவாம் - ஆசாரியர் சாதகர் புத்திரர் சமயிகள் எனனும இந்நால்வாகளுடைய முறைமைகளையும் யாந்தொகுத்துக் கூறுவாம்;—ஆசு அறுவார் ஆராய்ந்து தேறுக - ஆணவமுதலிய குற்றந்தீரும்படி விரும்புவோர் அவைகளை ஆராய்ந்தறியக்கடவர். எ - று. (க)

மேனிறுத்தமுறையானே ஆசாரியரிலக்கண முணர்த்தத்
தொடங்கி ஆசாரியராதற்குரிய சென்மதேசமும்
வருணமும் இரண்டு திருக்குறளால்
உணர்த்துகின்றார்.

கங்கைநதி யாதிநவ தீர்த்தக் கரைநாட்டிட்
டங்குமவ ருற்பவித்துத் தாம்.

இ - ள். கங்கை நதி ஆதி நவதீர்த்தக் கரை நாட்டுள் - கங்காநதி முதலாகிய ஒன்பது தீர்த்தக்கரைகளினுமுள்ள புண்ணியதேசங்களில்—உற்பவித்துத் தங்குமவர் - பிறந்து வசிக்கின்றவர்கள். எ - று.

தாம் அசை. நவதீர்த்தங்களாவன கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சோணநதி, துங்கபத்திரை என்பனவாம். சிறப்புடைப்பொருளைத் தானெடுத்து மொழிதலென்னுந் தந்திரவுத்தியால சிறந்தனவாகிய ஒன்பது நதிதீரங்களை எடுத்துரைத்தார், ஆகலாற் பிற புண்ணிய நதி தீரத்துள்ள தேசங்களும, சுயம்புலிங்க முதலியசிவலிங்கங்கள் உள்ள தலங்களும், கிருஷ்ணசாரமென்னும் மான் சஞ்சரிக்குந் தேசங்களும் புண்ணியதேசங்களாகுமெனக் கொளக. தக்குலவரெனனும் எழுவாய்க்குப் பயனிலை வருந்திருக்குறளின் உத்தமராவாரெனபதாம. (உ)

உத்தமரா வாரவர்த முள்ளுஞ் சிறப்புடைய
வுத்தமரே நாற்குலத்துள் ளோர்.

இ - ள். உத்தமர் ஆவார - ஆசாரியராதற்கு உத்தமர்களாவார்கள்; அவாதமுள்ளும் நாற்குலத்துள்ளோரே சிறப்புடைய உத்தமா - அப்புண்ணியதேசத்திலே பிறந்தவர்களுள்ளும பிராமணர் க்ஷத்திரியர் வைசியா சூத்திரனென்னு நான்கு வருணத்தோர்களே சிறப்புடைய உத்தமர்கள். எ - று.

நான்குவருணத்தாருங் குரவராவார் என்பதற்குப் பிரமாணம்:—சுப்பிரபேதத்தில் ஸ்ரீ௵ஷணாக்ஷத்ரியாவெஸ்யாஃ ஶூ௫ாஃஶ கெ௱௱ஜாஃ। ஸுவாயுஷ்ரா௫ ஷிஜயா நா௫௫ ஷா௵ஷா வ௫ ॥ பிராமணரும் க்ஷத்திரியரும் வைசியரும சுத்தகுலத்திற் பிறந்த சூத்திரரும் ஆகிய நால்வருமே ஆசாரியராவார்; மற்றையோர்க்கு ஒருக்காலும் ஆசாரியத்துவம் இல்லையாமென்றறிக. கந்தகாலோத்திரத்தில் வொஷ்ணாஃ ஸிவஸஂஸாராக ஸ௱க்ஷ க்ஷிஞெரா ஸ வெசு। வொஷாணஃஸிவதாஂயா ஸி௫ஞ ஸூ௱௫ஃ

ஹவேஷு || கல்லானது சிவசம்ஸ்காரத்தினாலன்றோ போக மோக்ஷங்களைத் தருவதாம். கல்லானது சிவத்தன்மையடையுமாகிற் சூத்திரன் அங்ஙனமாகானென்பது எங்ஙனம். சைவபுராணத்தில் ஶிவஶாஸ்த்ரஸமாயுக்தா: ஸர்வஶாஸ்த்ரவிஶாரதா: | ப்ராஹ்மணாதி சதுர்வர்ணா ஆசார்யா: பரிகீர்த்திதா: || பசுசாத்திரம் பற்றுதுவிட்டுச் சிவசாத்திரம் பற்றிப் பயிலும்பிராமணா முதலிய நான்கு வருணத்தாருமே ஆசாரியராவாரென்று புகழப்படுவர் என்பன முதலிய வசனங்களாம். (௩)

மனக்குற்றமு முடற்குற்றமுமில்லாதோரே ஆசாரியராதற்குரியரென்பதுணர்த்துகின்றார்.

அவருள்ளு முள்ளு மவலத்தை யற்றா
ரவரருகர் தேசிகரா தற்கு.

இ-ள். அவருள்ளும்-அந்நான்குவருணத்தாருள்ளும்—உள்ளும் அவலத்தை அற்றாரவர் தேசிகர் ஆதற்கு அருகர் - காமமுதலிய மனக்குற்றங்களும் அங்கவீனத்துவமுதலிய உடற்குற்றங்களு மில்லாதவர்களே ஆசாரியராதற்குரியவர்கள். எ-று.

உள்ளுமென்றவெச்சவும்மையால் உடற்குற்றங்களுமென்பது கொள்ளப்பட்டது. (௪)

இருவகைக்குற்றங்கட்குங் காரணமுணர்த்துகின்றார்.

காலப் பழுதாலுங் கற்பிற் பழுதாலுங்
காயத்தி னும்பழுதாங் காண்.

இ-ள். காலப் பழுதாலும் - விலக்கப்பட்ட நாட்களிலே புணர்ந்த காலப்பழுதினாலும்—கற்பிற் பழுதாலும் - நான்கா

நாள் ஸ்நானஞ்செய்தவுடனே தன்புருடன் முகத்திலே விழியாமல் மற்றைப்புருடர்முகத்திலே விழித்த கற்பிறபழுதினாலும்—காயத்தினும் பழுது ஆம் காண் - பிறந்த பிள்ளைகளுடைய உடலிலும் மனசிலுங் குற்றங்களுண்டாமென்றறிக. எ - று.

மற்றைப்புருடர்முகத்திலே விழித்தால் தான் பெறும் பிள்ளை அவர்களைப்போலப் பிறக்குமாதலால், ஸ்நானஞ்செய்தவுடனே ஸூரியனைத் தரிசிக்கிற் குற்றமில்லையென்றுணர்க ()

நல்லவுருவுண்டாதற்குக் காரணமுணர்த்துகின்றார்.

ஆகார தோடமற வன்னைபுசித்தா னல்ல
வாகாரப புத்திரர்பா லாம.

இ - ள். அன்னை ஆகாரதோடம் அறப் புசித்தால் - மாதாவானவள் நான்காநாளிலே கடினபதார்த்தங்களைக் கூட்டாமல் பாயசம் பால் தயிர் முதலாகிய சாத்துவிக பதார்த்தங்களைப் புசிக்கில்,—புத்திரர்பால நல்ல ஆகாரம் ஆம் - அவள் பெறும் புத்திரரிடத்திலே நலவுருவமுண்டாகும. எ - று.(சு)

நல்லுருவத்திற்கும் நற்குணத்திற்குங் காரண
முணர்த்துகின்றா.

முற்றினர்க்கு நல்வினைமுன் முற்றுங் குணமெல்லா
மற்றையருக் குண்டோ வரம்.

இ - ள். முன் நல்வினை முற்றினர்க்கு - பூர்வசன்மத்திலே புண்ணியங்களைச் செய்தவர்களுக்கு—குணமெல்லாம் முற்றும் - நன்மையாகிய குணங்களெல்லாம் பலிக்கும்;—மற்றையருக்கு வரம் உண்டோ-அவ்வாறு புண்ணியஞ்செய்யாமற்றவர்களுக்கு அக்குணங்களுண்டாமோ, உண்டாகா. எ - று.

அகக்குற்றங்க ளிவைகளென் றறிந்து அவைகளி லொன்றாரே
ஆசாரிய ... ... ... ... ளினெடு
திருக்குரா ... ... ... ரு.

... நவு தெரியா ... குறிய
னவபா ... பயலவ லன.

இ - ள். அறவு ... ... ன் - மிக்கொழுக்க குற
றமுடையன, — ... ... ரியன் ... வன - மிக்கருமையினுங்
குற்ற ... டையன, அறவு பரியன் ... வன - மிக ... குற்றத்தல
... ... முடையன எ - று. (அ)

அறவ ... ... யனவுங் கா ...
னறவு ... ... ... ... லனை

இ - ள். அறவு ... ரியன அவல ... ... வெள்ளையனுங்
குற்றமுடையன, — அறவு ... கரியன அ ... ல ... மிகக்கரியவ
னுங் குற்றமுடையன, - அறவு செய்ய ... அவலன் - மிக
... வக்கவனுங் குற்றமுடையன எ - று. (கூ)

கஞ்சன குணிடன ... னனி ... ... றுப ... 
னெனு ... ... ... ... ... 

இ - ள். கஞ்ச ... அ ... - முடவனுங் குற்றமுடைய ... , —
குணிடன அவ ... ... ... திகைகயனுங் குற்றமுடைய ... , —
கூனன அவலன் ... ... குற்றமுடையன, — க ... அ
... நகண்குற்ற ... குற்றமுடையன, — இருசலை ...
இவ ... அவலனை இருக ... நடனுங் குற்றமுடையன,
கை ஆதி உறுப்பு ... ... அவலன ... முதலிய
அவயவங்களிலே குறைபட்டவனுங் குற்றமுடையன. எ - று.

மேற்போந்த அ ... பத்தெட்டாந்திருக்குறளி
றுதியாக வெல்லாவற்றிற்கும் ... ப் பொருளுரைக்கப்படும். ()

காக்கைக் கணன்குழிந்த கண்ணனிழி கண்ணனிடா
நோக்கியுயிர்க் காக்குமவ னும்

இ - ள். காக்கைக் கணன் அவலன் - காகத்தைப்போலும் ஒருகட்பார்வையுடையோனுங்குற்றமுடையன்,--குழிந்த கண்ணன் அவலன் - ஆழிய கண்ணையுடையோனுங் குற்றமுடையன்,—இழி கண்ணன் அவலன் - எப்பொழுதும் பீளைநீரொழுகுங்கண்ணையுடையோனும் குற்றமுடையன்,—நோக்கி உயிர்க்கு இடர் ஆக்குமவனும் அவலன் - சமயம் பார்த்து ஆன்மாக்களுக்குத் துன்பத்தைச் செய்வோனும் குற்றமுடையன். எ - று. (கக)

பரியவுத டன்பரிய பல்லன பரந்து
முருவழிந்த மூக்குடையா னும்.

இ - ள். பரிய உதடன் அவலன் - பரியவுதட்டையுடையோனுங் குற்றமுடையன்,—பரிய பல்லன் அவலன் - பரிய பல்லையுடையோனுங் குற்றமுடையன்,—பரந்தும் உருவு அழிந்த மூக்கு உடையானும் அவலன் - சப்பையாகிய வடிவு குன்றிய மூக்கையுடையோனும் குற்றமுடையன். எ - று. ()

முழந்தாள் குறியனெடுந் தாளினன் மோட
னழுந்தியற நீண்டவடி யான.

இ - ள். முழந்தாள் குறியன் அவலன் - முழந்தாள் மிகக்குறியவனுங்குற்றமுடையன்,—நெடுந்தாளினன் அவலன் - முழந்தாள் மிகநெடியவனுங்குற்றமுடையன்,—மோடன் அவலன் - புருடாகிருதிக்குச் சொல்லப்பட்ட அளவுகளினுயர்ந்தவனுங் குற்றமுடையன்,—அழுந்தி அற நீண்ட அடியான் அவலன் - பாதம் பஞ்சுபோலாகாது கடினமாய் நீண்டு முறம்போற் படம் விரியப்பெற்றவனுங் குற்றமுடையன். எ - று. (கஉ)

பெரிய வயிறன் பிணிகொள் வயிற
னெரிகுரலன் விக்கலன்சொ னீத்து

இ - ள். பெரிய வயிறன் அவலன் - பெரிய வயிற்றையுடையோனுங் குற்றமுடையன,—பிணி கொள் வயிறன் அவலன் மகோதரவியாதியையுடையோனுங் குற்றமுடையன்,—நெரி குரலன் அவலன - நெரி குரலோடு பேசுவோனுங் குற்றமுடையன்,—சொல் நீத்து விக்கலன் அவலன் - சொற்களைச் செப்பமாகச் சொல்லாது திக்கிச் சொல்லுகின்றவனுங் குற்றமுடையன். எ - று. (கச)

நீங்காத வாதநோய் பித்தநோய் நெஞ்சத்தி
னுங்காச நோயுமுடை யான்.

இ - ள். நீஙகாத வாதநோய் - ஒழியாத வாதநோயையேனும்,—நீங்காத பித்தநோய்-ஒழியாத பித்தநோயையேனும்,—நெஞ்சத்தின் ஆம் காசநோய் - நெஞ்சிலேயுண்டாகின்ற காசநோயையேனும—உடையானும் அவலன் உடையவனுங் குற்றமுடையன. எ - று. (கரு)

அறவுந் தருண னறவும விருத்த
னறவுமழ கற்ற னவன.

இ - ள். அறவும் தருணன் அவலன் - பதினாறுவயசுக்குட்பட்டவனாகிய தருணனுங் குற்றமுடையன்,—அறவும் விருத்தன் அவலன் - எழுபதுவயசுக்கு மேற்பட்ட வனாகிய விருத்தனுங்குற்றமுடையன்,—அறவும அழகு அற்றனவன் அவலன் - மிகவழகில்லாதவனுங் குற்றமுடையன். எ - று. (கசு)

கோவி யவாவ னிரங்காக் குணக்கேடன்
பாவியமல் லாத துரைப் பான்.

இ - ள். கோவி அவலன் - மிகுந்த கோபத்தையுடையோனுங் குற்றமுடையன்,—அவாவன் அவலன் - மிகுந்த ஆசையையுடையோனுங் குற்றமுடையன்,—இரங்காக் குணக்கேடன் அவலன் - ஆன்மாக்களிடத் திரங்காத துர்க்குணனும் குற்றமுடையன்,—பாவியம் அல்லாதது உரைப்பான் அவலன் - சொல்லுதற்கு அருகமலலாத வார்த்தையைச் சொல்வோனுங் குற்றமுடையன. எ - று. (கஎ)

மடிவஞ் சனையன் மறவி பசுநூற்
படிறனுரைக் கும்பயன்பற் றான்.

இ - ள். மடியன் அவலன் - மிகச்சோம்பலுடையோனுங குற்றமுடையன்,—வஞ்சனையன அவலன் - கபடத்தையுடையோனுங்குற்றமுடையன்,—மறவி அவலன் - ஆசாரியனிடத்திலே தான் கேட்ட நூற்பொருளைச் சிந்தித்துத தரியாமல் அதனை உடனே மறந்துவிடுவோனுங் குற்றமுடைன்,—பசுநூற்படிறன் அவலன் - எப்பொழுதும் பதிநூல்களையே படியாமற் பசுநூல்களைப் படிக்கும் பொய்யனுங குற்றமுடையன்,—உரைக்கும பயன் பற்றான் அவலன் - தனக்குத் தன் ஞசிரியன் போதித்தபடி தான தன் மாணுக்கர்களுக்குப் போதிக்குஞ் சத்தி பொருந்தாதவனுங் குற்றமுடையன். எ - று.()

என்றே யிசைத்த விவைமுதலா கும்பழுது
ளொன்றுமிலா ருத்தமரென் றோர்.

இ - ள். என்றே இசைத்த இவை முதல ஆகும் பழுதுள் - இப்படிச் சொல்லப்பட்ட இவை முதலாகிய குற்றங்களுள்,—ஒன் றும் இலார் உத்தமர் என்று ஓர் - ஒரு குற்றமுமில்லாதவர்களே ஆசாரியராதற்கு உத்தமர்களென்றறிக. எ - று.

இக்குற்றமுடையோர்கள் தீக்ஷை பிரதிட்டைகள் செய்யிற் சிவசாந்நித்தியமாகாதென்று சிவாகமங்கள் செப்புகையால்,

ஆசாரியராகாரென்று விடுக்க. இவ்விலக்கணங்கள் மூர்த்திபாக்குமொக்கும். மூர்த்திபராவார் பிரதிட்டாதிகளிலே ஆசாரியரோடு கூடியிருந்து ஓம சாந்தி முதலிய கருமங்களை அவரேவலாற்செய்வோர். (௧௯)

ஆசாரியர்கட்குரிய விசேடவிலக்கணம் ஆறுதிருக்குறளாற் குளகமாகவுரைக்கின்றார்.

சமயமுத னான்குந் தரித்தா ரியனாற்
சமயநெறி தன்னையுமுன் சார்ந்து

இ - ள். ஆரியனாற் சமயம் முதல் நான்குந் தரித்து - தன்னுடைய சந்தானத்துக்கேற்ற ஆசாரியனால் சமயதீக்ஷை விசேடதீக்ஷை நிர்வாணதீக்ஷை ஆசாரியாபிஷேகமென்கின்ற நான்கையும் பெற்று,—முன் சமயநெறி தன்னையும் சார்ந்து - முன்னர் அதற்கதற்கேற்ற ஆசாரங்களையும் அநுட்டானங்களையும் அநுட்டித்து. எ - று. (௨0)

ஆரியன்பா லன்பாகி யாய்ந்தா கமமனைத்தும்
நேரியவே தாந்த நிலையும்.

இ - ள். ஆரியன்பால் அன்பு ஆகி - தன்னுடைய ஆசாரியனிடத்திலே பத்தியுடையவனாகி,—ஆகமம் அனைத்தும் நேரிய வேதாந்த நிலையும் ஆய்ந்து - சமஸ்தாகமங்களையுஞ் சூக்குமமாகிய வேதாந்தநிலையையுமாராய்ந்துணர்ந்து. எ - று.

வேதாந்தமென்றது வேதத்தின் ஞானகாண்டமாகிய உபநிடதங்களை. வேதாந்தமெனினும், வேதசிரசெனினும், உபநிடதமெனினும், பிரபலசுருதியெனினும் ஒக்கும். உபநிடதங்களை, உற்று நோக்கி வியாசமுனிவரியற்றிய சூத்திரரூபமாகிய பிரமமீமாஞ்சையும் வேதாந்தமெனப்படும். அதன் மெய்ப்பொருள் வேதசிவாகமமிரண்டையும் நன்குணர்ந்த நீலகண்டசிவாசாரியர் உரைத்த பாடியத்தால் இனிது விளங்கும். மற்

றுள்ளோர் உரைத்த பாடியங்களும் அவர் வேதாந்தமெனப் பெயரிட்டியற்றிய பிரகரணங்களும் சிவாகமத்துக்கு மறுதலைப்பட்ட புறச்சமயநூற்பொருளையுடையனவாதலின், அவற்றை மெய்யெனக் கொண்டு மயங்காதொழிக. வேதம் பொருள் பலபடத்தோன்றுஞ் சூத்திரமும், சிவாகமம் அதனை அங்ஙனமாகவொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும்போலச் சிவபெருமானால் அருளிச்செயப்பட்டன. வேதசிவாகமங்கட்குப் பேதமின்மை "வேதமொ டாகம மெய்யா மிறைவனூ—லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக—நாத னுரையிவைநாடி லிரண்டந்தம்—பேதம தென்னிற் பெரியோர்க்கபேதமே." என்னுந் திருமந்திரத்தானும், வயந்து வேதஶிவாகமயோர்பேதம் ந பஶ்யாம: வேதோபி ஶிவாகம: "வேதசிவாகமங்கட்குப் பேதங்காண்கின்றிலம் வேதமே சிவாகமம்" என நீலகண்டபாடியத்தில் நீலகண்டசிவாசாரியர் கூறியவாற்றானுமுணர்க. சமயங்கள் புறப்புறச்சமயமும், புறச்சமயமும், அகப்புறச்சமயமும், அகச்சமயமுமென நான்குவகைப்படும். இந்நான்கும் தனித்தனி அறுவகைப்படும். இவற்றையெல்லாங்கடந்து நின்றது சித்தாந்தசைவம். இங்ஙனமேயாகவும், தற்காலத்துச் சைவசமயிகள் பலர் புறச்சமயங்களாறனுள் ஒன்றாயுள்ள ஏகான்மவாதவகைநான்கனுள் ஒன்றாகிய மாயாவாதத்துக்குரிய ஆசாரியரை வேடவொற்றுமைபற்றித் தம்மாசாரியரெனக் கொண்டு வழிபட்டொழுகியும், அம்மாயவாதநூல்களைத் தஞ்சமயநூல்களெனக் கொண்டு பாராட்டியும், தஞ்சமயநிலையின் வழுவித் தாம் முன்னர்ப்பெற்ற சிவதீக்ஷையின்பயனையும் அநுட்டித்த சமயாசாரங்களின் பயனையும் இழந்து, எரிவாய் நிரயத்துக்கு இரையாகுகின்றனர்.(உக)

தாசனாய்ப் பூசை சமைக்கும் பொழுதமலற்
கேசறவுற் றற்றெனதி யான்.

இ - ள். பூசை சமைக்கும் பொழுது - சிவார்ச்சனை முதலாகிய கிரியைகளைச் செய்யும்போது,—தாசனாய் - சிவபெருமானை ஆண்டவனாகவுந் தன்னை அடிமையாகவும் பாவித்து,—அமலற்கு ஏசறவு உற்று - அநாதிமலமுத்தராகிய அந்தச்சிவபெருமானிடத்தே அன்புவைத்து,—எனது யான் அற்று - தனதல்லாத புவனபோகங்களை எனதென்னும் மமகாரமும் தானல்லாத தனுகரணங்களை யானென்னும் அகங்காரமுமாகிய இவவிரண்டையும நீங்கி. எ - று. (௨௨.)

அமலனைத்த னுட்கண் டகம்பிரம மென்றே
சமலர்க்குப் பாசந் தடுத்து.

இ - ள். அமலனைத் தன் உள் கண்டு - தீக்ஷை செய்யும்போது மலரகிதராகிய சிவபெருமானைத் தன்னுள்ளே தரிசித்து,—பிரமம் அகம் என்றே-சிவோகமபாவனை பண்ணி,—சமலர்க்குப் பாசம் தடுத்து - மலசகிதராகிய ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கி. எ - று. (௨௩.)

சாம்பவியாற் சத்தியான் மாந்திரியாற் சத்திபதிந்
தாம்பயத்தின் பேதமா ராய்ந்து.

இ - ள். சத்தி பதிந்து ஆம் பயத்தின் பேதம் ஆராய்ந்து - பாசநீக்குமிடத்து அவவவவான்மாக்களது சத்திநிபாதங்களால் விளையுங் குறிகளின் பேதங்களை ஆராய்ந்தறிந்து அவவவற்றிற்கேற்ப,—சாம்பவியால் - சாம்பவிதீக்ஷையாலேனும்,—சத்தியால் - சத்திதீக்ஷையாலேனும்,—மாந்திரியால் - மாந்திரிதீக்ஷையாலேனும். எ - று.

இருவினையொப்பும் ஆணவமலபரிபாகமும் உற்றவிடத்தே சத்திநிபாதம் உண்டாகும். சத்திநிபாதமாவது ஆன்மாவினது ஞானத்தைத் தடுக்கும் ஆணவமலசத்தி நழுவும் அவசரத்திலே முற்பிற்பாடறச் சிவத்தினது சிற்சத்தி பதிந்து அவவா

ன்மாவினது நித்தியஞானக்கிரியையை விளக்குவதாம். நிபாதம் - பதிதல். சத்திநிபாதங்கள் நான்கு. அவையாவன மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்பனவாம். நன்முக முற்றிய காய்சேர்த்த ஔஷதமேயன்றிப் பிஞ்சு கூட்டிய ஔஷதம் பலியாதவாறுபோலச் சத்திநிபாதமுள்ளார்க்குச் செய்த தீக்ஷையேயன்றி அஃதில்லார்க்குச் செய்த தீக்ஷை பலங்கொடாதெனவுணர்க. (உ௪)

வீட்டிமல மூன்றுமுயி ருள்விமலன் பொற்பாதங்
காட்டுமவன் றேசிகனே காண.

இ - ள். மலமூன்றும் வீட்டி - மும்மலங்களையும் போக்கி,— உயிருள் விமலன் பொறபாதம் காட்டுமவனே - அவவான்மாக்களுள்ளே சிவபெருமானுடைய பொலிவாகிய திருவடிகளைத் தரிசிப்பிப்பவனே,—தேசிகன் காண் - ஆசாரியனென்றறி. எ - று. (உரு)

மேற்கூறப்பட்ட தீக்ஷைகளுள்ளே சத்திதீக்ஷையுஞ்
சாம்பவிதீக்ஷையுமாமாறுணர்த்துகின்றார்.

சத்திமனத் தாற்புரிகை சாம்பவிஞா னக்கணிறாற்
சுத்திசெய லென்றே துணி.

இ - ள். சத்தி மனத்தாற் புரிகை - மேற்கூறிப்போந்த மூவகைத்தீக்ஷைகளுள்ளும சத்திதீக்ஷையாவது குண்டம் மண்டலம் அக்கினி நெய் சுருக்குச் சருவமுதலியனவெல்லாம் மனத்தாற் கற்பித்துக்கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கனது பாசத்தைக் கெடுத்தலாம்.— சாம்பவி ஞானக்கணிறாற் சுத்தி செயல் என்றே துணி - சாம்பவிதீக்ஷையாவது திருநோக்கு முதலியவற்றால் மாணாக்கனது பாசத்தைச் சேதிக்கையாம். எ - று.

சத்தியெனினும் ஞானவதியெனினுமொக்கும். சாம்பவிதீக்ஷையெனினும் விஞ்ஞானதீக்ஷையெனினுமொக்கும். (உசு)

மாந்திரிதீக்ஷையாமாறுணர்த்துகின்றார்.

மாந்திரிதான் குண்டத்தான் மண்டலத்தினன் மலத்தை
தேய்ந்திடவே செய்யுஞ் செயல். [த்

இ - ள். மாந்திரிதான் - மாந்திரிதீக்ஷையாவது—குண்டத்தான மண்டலத்தினன் மலத்தைத் தேய்ந்திடவே செய்யுஞ் செயல் - குண்டமண்டலங்களைப் புறத்தேயிட்டு விதிப்படி புறம்பே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணுக்கனது மலத்தைக் குன்றும்படி செய்யுந்தீக்ஷையாம். எ - று.

மாந்திரியெனினுங் கிரியாவதியெனினுமொக்கும். ஞானவதி கிரியாவதியென்னுமிரண்டும் ஔத்திரிதீக்ஷையெனப்படும். ஔத்திரியாவது ஓமத்தோடு கூடச்செய்வது. (உஎ)

ஆசாரியர்வகையும் பெயருமுணர்த்துகின்றார்.

முந்திப் பிரேரிப்பான் போதிப்பான் முத்திதனென்
றிந்தவிதத் தார்தே சிகர்.

இ - ள். தேசிகர் - ஆசாரியர்—முந்திப் பிரேரிப்பான் - பிரேரகாசாரியனும்,—போதிப்பான் - போதகாசாரியனும்,—முத்திதன் என்று - முத்திதாசாரியனுமென—இந்தவிதத்தார் - இம்மூவகையினர். எ - று.

முந்திப் பிரேரிப்பான் முற்பட்டுச் செலுத்துவான். பிரேரகனெனினுஞ் சோதகனெனினும் இழுக்காதென்க. (உஅ)

மேனிறுத்தமுறையானே பிரேரகாசாரியனிவனென்பதுணர்த்துகின்றார்.

சைவரைச் சாரவருட் டக்கா னிவனென்றே
யுய்விப்பான் முந்தினனென் றோர்.

இ - ள். மூந்தினன் - அம்மூவகையாசாரியருள்ளும் மூற்பட்ட பிரேரகாசாரியனுவான்—சைவரை அருள் தக்கான் இவன் என்று சார உய்விப்பான் - சைவத்துக்கு யோக்கியர்களாகிய மாணுக்கர்களை உமக்கு அருள்செய்தற்கு யோக்கியராகிய ஆசாரியரிவரென்று காட்டி அவரை அடையும்படி செலுத்தி உய்விப்பவனே—என்று ஓர் - எனஅறி. எ - று.

யோக்கியனல்லாத ஆசாரியனை வாரத்தால் யோக்கியனென்றுகாட்டிஞேன் நரகமடைவனென்றுகமமோதுமெனவறிக.

போதகாசாரியனிவனென்பதுணர்த்துகின்ருர்.

பரிந்தடைந்தா னைத்தீக்கை பண்ணி நியதி
புரிந்தருளு வானபோ தகன்.

இ - ள். போதகன்-போதகாசாரியனுவான்—பரிந்து அடைந்தானைத் தீக்கை பண்ணி நியதி புரிந்தருளுவான் - தன்மேலன்புகொண்டு தன்னையடைந்த மாணுக்கனுக்குச் சமயதீக்ஷை விசேஷதீக்ஷைகளைச் செய்து ஆசாரங்களைக் கற்பித்தருளுவோன். எ - று. (கo)

முத்திதாசாரியனிவனென்பதுணர்த்துகின்ருர்.

அடைந்தவனைப் பக்குவம்பார்த் தாண்டா றிரண்டிட்
டடிந்தவனே பாசமுத்தி தன்.

இ - ள். பாசமுத்திதன் - முத்திதாசாரியனுவான்—அடைந்தவனை ஆறிரண்டு ஆண்டுகள் பக்குவம் பார்த்துத் தடிந்தவனே - முந்திய சமயதீக்ஷை விசேஷதீக்ஷைகளைப் பெற்ற மாணுக்கனைப் பன்னிரண்டுவருஷத்துக்குள்ளே பக்குவம் பரீக்ஷித்து நிர்வாணதீக்ஷை செய்து அவனுடைய பாசத்தைச் சேதிப்பவன். எ - று.

பாசமுத்திதன் பாசநீக்கத்தைக் கொடுப்பவன். முத்தி - விடுதல். தன்-கொடுப்பவன். (கக)

இன்னவருணத்தார்க்கு இன்னவருணத்தாரே
ஆசாரியராகலாமென்பது இரண்டுதிருக்
குறளா லுணர்த்துகின்றார்.

அந்தணரே யந்தணர்க்குத் தேசிகரா வாரொழிந்தார்
தந்தொகைக்கு மந்தணரே தாம்.

இ-ள். அந்தணர்க்கு அந்தணரே தேசிகர் ஆவார் - பிராம ணருக்குப் பிராமணரே ஆசாரியராவார்;—அந்தணர் ஒழிந் தார் தந்தொகைக்கும் தேசிகர் ஆவார் - அந்தப்பிராமணர் மற் றை அரசர் வைசியர் சூத்திரருக்குமாசாரியராவார். எ - று.

தேசிகராவாரென்பது பின்னுங்கூட்டப்பட்டது. (௬௨)

மன்னரொரு மூவர்க் கிருவர்க்கே வாழ்வசியா
பின்னவராற் பிந்தினர்க்கே பேறு.

இ-ள். மன்னர் ஒரு மூவர்க்குந் தேசிகா ஆவார் - அரசா தஞ்சாதியினருந் தமபினிழிந்த வைசியா சூத்திரரிருவருமா கிய மூவர்க்கே ஆசாரியராவாா,—வாழ் வசியர் இருவர்க்கே தேசிகர் ஆவார் - வாழாநின்ற வைசியா தஞ்சாதியினருந் தம் மினிழிந்த சூத்திரரொருவருமாகிய இருவாக்கே ஆசாரியரா வார்,—பின்னவ ராற பிந்தினர்க்கே பேறு - சூத்திரராற் சூத் திரர்க்கே தீக்ஷாபலமுண்டாம. எ - று.

மேலைத்திருக்குறளில் வந்த தேசிகராவாரென்பது இங்குமி ரண்டிடத்திற்கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. (௬௩)

ஞானகாண்டத்திற்கு மேலெய்தியதன்மேற் சிறப்புவிதி
யுணர்த்துகின்றார்.

அற்றிடினே யந்தணருண் ஞானி யடுத்தவன்பாற்
பெற்றிடுக வந்தணன்மெய்ப் பேறு.

இ - ள். அந்தணன் - பிராமணனானவன்—அந்தணருள் ஞானி அற்றிடின் - தன்சாதியாராகிய பிராமணருள் ஞான காண்டம் போதிக்க வல்ல ஆசாரியனில்லையாயின்,—அடுத்த வன் பால் மெய்ப் பேறு பெற்றிடுக - தனக்கடுத்த அரசனி டத்திலே ஞானோபதேசம் பெறக்கடவன். எ - று. (௩௪)

இவ்விதி கருமகாண்டத்திற் கெய்தாதென்பதை
மேலும் வற்புறுத்துகின்றார்.

பிரமோப தேசம பெறுதலே பாங்கு
கருமோப தேசங் கழி.

இ - ள். பிரமோபதேசம் பெறுதலே பாங்கு - முற்கூறி யபடி ஞானோபதேசமாத்திரம் பெறுதலே முறைமை,—கரு மோபதேசம் கழி - கருமோபதேசம் ஒருக்காலும் பெறு தொழி. எ - று. (௩௫)

இவ்விதி மற்றைவருணத்தார்க்குமொக்குமென்ப
துணர்த்துகின்றார்.

இந்தமுறை மற்றையர்க்கு மேற்கு மிதுதன்னை
நிந்தையல வென்றே நினை.

இ - ள். இந்தமுறை மற்றையர்க்கும் ஏற்கும் - இப்படித் தன் வருணத்தின் ஞானாசாரியனில்லையாயில் தனக்கடுத்த வருணத்தானிடத்திலே ஞானோபதேசம் பெறலாமென விதி த்தவிதி பிராமணருக்கேயன்றி மற்றை வருணத்தார்க்கும் பொருந்தும்;—இது தன்னை நிந்தை அல என்றே நினை - இவ் விதியை இகழ்ச்சியன்றென்று நினைத்துக்கொள். எ - று.

பிராமணர் முதலிய மூன்றுவருணத்தாருள்ளும் ஞானாசாரி யனில்லாது நான்காம் வருணத்தாராகிய சூத்திரருள் ஞான

சாரியனுண்டாயின், அவ்வாசாரியனிடத்தே பிராமணர் முதலாயினோர் ஞானோபதேசம் பெறலாம், வைதிகத்திலே பிரமவிருடிகளாகிய துருவாசர் முதலாயினோர் பிராமணர் முதலிய முதன் மூன்றுவருணத்தாருள்ளும ஞானசாரியரில்லாமையால் நான்காம் வருணத்தானாகிய விதுரனிடத்திலே ஞானோபதேசம் பெற்றார்களென்று பாரத பாகவதங்களிற் கூறப்படுகையாலும், சைவத்திலே திருத்துறையூரிலிருந்தருளிய ஆதிசைவராகிய சகலாகமபண்டிதரென்னும் ஏதுப்பெயரையுடைய அருணந்திசிவாசாரியர் திருவெண்ணெய்நல்லூரிலிருந்தருளிய நான்காம்வருணத்தாராகிய மெய்கண்டதேவரிடத்திலே ஞானோபதேசம பெறக்காண்கையாலுமென்றறிக.(கசு)

சூத்திராசாரியனுக்குச் சிறப்புவிதி யுணாததுகின்றார்.

சூத்திரனுந் தேசிகனு வான்மரணாந் தந்துறவி
சாத்திரத்தின் மூன்றுமுணர்ந் தால்.

இ - ள். சூத்திரனும - சூத்திரனும,—மரண அந்தம் துறவி - நைட்டிகப்பிரமசாரியாகி—சாததிரத்தின் மூன்றும் உணர்ந்தால் - சைவாகமங்களிற்சொல்லப்பட்ட பதி பசு பாசமென்கின்ற திரிபதார்த்தலக்ஷணஙகளையும் உள்ளபடியறிந்தானாகில்,—தேசிகன் ஆவான் - ஆசாரியனாவான். எ - று.

சூத்திரனுமென்றவும்மை இறந்தது தழீஇநின்றது. சூத்திரருள் நைட்டிகப்பிரமசாரிகட்கே குருத்துவம் கிருகத்தர்களுக்குச் சமயிபுத்திரசாதகததுவமாத்திரங் குருத்துவமில்லையென்று காமிகாகமத்திற் கூறப்படுதல்பற்றி இவ்வாறுரைத்தார். சூத்திரருட்கிருகத்தருக்குங் குருத்துவமுண்டென்று வேறுசிலவாகமங்களில் விதிக்கப்பட்டது. முன்னைவிதி நைட்டிகப்பிரமசரியம் வழுவாது அநுட்டிப்போர் பலருளராகப் பெற்ற முன்னை யுகங்களிலும்,பின்னைவிதி நைட்டிகப்பிரமசரியம் வழு

அநுட்டிப்போர் மிக அரியராகப்பெற்ற இக்கலியுகத்தி கொள்ளற்பாலனவாதலின், விரோதமின்மை தெளிக. கப்பிரமசரியத்திற் சிறிதாயினும் வழுவிய ஆசாரியரை ண்டு தீக்ஷை பூசை முதலியவை செய்துகொண்டவா தினை யொழுகுதல் தப்பாதென்பது சிவாகமநூற்றுணிவு. "ழையார் தஞ்சயனத் தெய்திதன் மெய்தொடினுங்— காய்த்துவாதத லேதுறவு காண்." என்னுந் திருக்குறளை நோக் கின் பாவத்துக்கஞ்சாது பழிக்கு நாணாது துறவுவேடமாத்தி ரத்தரித்துக் கூடாவொழுக்கம் பூண்டு வேண்டியவாறொழுகும் அநாசாரியரை ஆசாரியரெனக் கொள்ளலும், பிறர்மனைவிய ரையும் வரைவின்மகளிரையும் விரும்பாது பழிபாவங்களஞ் பயவாத இல்வாழ்க்கையிலொழுகும் ஆசாரியரை அநாசாரிய ரெனத் தள்ளலும் உய்தியில் குற்றமாமென்க. (௧௭)

முதன்மூன்று வருணத்தார்களுமோதற்குரிய நூல்கள் இவைகளென்பதுணர்த்துகின்றார்.

அந்தணர்முன் மூவர்க்கு மாமறையு மாகமமுஞ்
சந்தையுற வோதுமது சால்பு.

இ - ள். அந்தணர்முன் மூவர்க்கும் - பிராமணர் முதலிய மூன்றுவருணத்தார்க்கும்—மா மறையும் ஆகமமும் சந்தை உற ஓதுமது சால்பு - பெருமையாகிய வேதங்களையுஞ் சிவாக மங்களையும் சந்தை இரட்டை முதலாகிய இலக்கணங்கள் பொருந்த ஓதுதல் தகுதியாம். எ - று. (௧௮)

நான்காம் வருணத்தாரோதுதற்குரிய நூல்களிவைக ளென்பதுணர்த்துகின்றார்.

மற்றையவர் சைவாக மத்தை மதித்துணர்வா
ருற்றபுரா ணாதிவித மும்.

இ - ள். மற்றையவர் - நான்காம் வருணத்தாராகிய சூத்திரர்—சைவாகமத்தை - சிவாகமங்களையும்—உற்ற புராணாதி விதமும் - பொருந்திய பதினெண்புராணமுதலிய நூல்களையும்—மதித்து உணாவார் - ஓதி அவற்றின்பொருளைச் சிந்தித்தறிதற்குரியவாகள். எ - று.

எனவே, சூத்திரா வேதமோதுதற்கதிகாரிகளல்லரென்பது பெறப்பட்டது. வேதவாக்கியஙகளின் அருததங்களைக்கேட்க அவர்களுக்கு அதிகாரமுண்டு. சிவாகமஙகளை ஓதல்வேண்டின், நான்கு வருணததாருஞ்சிவதீக்ஷை பெறறே ஓதல்வேணடும். பெருந்தோதின அரசருக்கும் உலகத்திறகுந் தீஙகு வருமென்று சிவாகமஙகள் செப்புகின்றன, சிவதீக்ஷை பெற்றே சிவாகமங்களையோதல்வேண்டுமென்பதறகுப் பிரமாணம்:—
சுப்பிரபேதம் ஸாக்ஷாச்சைவமிதம் தந்த்ரம் நதேயம் யஸ்ய
கஸ்யசித்। தீக்ஷிதஸ்ய ப்ரதாதவ்யம் ஶிவபக்திபராயச।
ஶ்ராவணீயம் நவாந்யத்ர ஸ்வயம் நந்தி ப்ரஸாததே ॥
இந்தச் சுத்தசைவாகமம் எல்லார்க்குங் கொடுகசுத்தக்கதும ன்று விளக்கததககதுமன்று; தீக்ஷை பெற்றவனாய் நிலையுடையோனாய்ச் சிவபத்தியோனாயிருப்பவனுககே விளக்கததக்கது. ஏனையோர்க்கு விளக்கல் குற்றமெனப்படும் எனபதாம். (௧௬)

வேதாகமங்களின் கருத்தின்னதெனபதனை ஓதுகின்றா.

வேதமுத னூல்கள் பதிபசுபா சமவிளங்க
வோதியுணாத் துஞ்சிற் றுயிர்க்கு.

இ - ள். வேதமுதனூல்கள் - வேதசிவாகமங்களானவை—சிற்றுயிர்க்குப் பதி பசு பாசம் விளங்க ஓதி உணர்த்தும் - சில்வாழ்நாளையுடைய ஆன்மாக்களுக்குப் பதி பசு பாசங்களை விளங்கும்படி சொல்லியறிவிக்கும். எ - று.

1244 (61844

வேதத்தின் ஞானகாண்டம் சிவாகமத்தின் ஞானகாண்டம் என்னுமிரண்டும் திரிபதார்த்தலக்ஷணங்களையே கூறுவனவாயினும், வேதத்தின் ஞானகாண்டம் மாயாவாதிகள் முதலிய பலர்க்கும் அவரவராகன்மாநுகுணமாகப் பல பொருள்படக் கிடத்தலானும், சிவாகமத்தின் ஞானகாண்டம் அவ்வாறாகாது சத்திநிபாதமுடையார்க்கு உண்மைப்பொருளைத் தெளித்துணர்த்தலானும், நிருவாணதீக்ஷை செயப்பெற்றுச் சிவாகமத்தை ஓதியுணர்ந்தார்க்கன்றி வேதாந்தத்துண்மைப்பொருள் ஒருவாற்றானும் விளங்குதல்கூடாமையானும், சிவாகமமிருபத்தெட்டும் சிவபெருமானுடைய ஊர்த்துவமுகத்திற்றோன்ற வேத நான்கும் மற்றை முகங்களிற்றோன்றினமையானும், சிவாகமமே சிறப்புடைத்தென்றறிக. சனகர் முதலிய முநீந்திரர் நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாளவரையும் ஓதியும் ஞானம் நிலைபெறாதவராயினர் என்றும் பின்பு ஆகமாந்தமென்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை ஓதி ஞானம் பெற்றனர் என்றும் காந்தத்திலே சங்கரசங்கிதையிற் கூறியவாற்றானும், இவ்வுண்மை தெளிக. (௪௦)

திரிபதார்த்தஞானமுடையோரே ஆசாரியரென்ப துணர்த்துகின்றார்.

ஐயந் திரிபுமற வாய்ந்தார் பொருண்மூன்றுஞ்
சைவரமலன்சொற் றரித்து.

இ - ள். அமலன் சொல் தரித்து - அநாதிமலமுத்தராகிய சதாசிவமூர்த்தியுடைய வாக்காகிய வேதாகமங்களைக் குருமுகமாகக் கேட்டு மனசிலே தரித்து—பொருள் மூன்றும் ஐயம் திரிபும் அற ஆய்ந்தார் - அவைகளிலே சொல்லப்பட்ட திரிபதார்த்தங்களையும் சந்தேகவிபரீதமறும்படி ஆராய்ந்தறிந்தவர்களே—சைவர் - சைவாசாரியர்கள். எ - று.

சந்தேகமாவது ஒருபொருளை இதுவோ அதுவோ என்று இரண்டுறக் கருதல். விபரீதமாவது ஒன்றை மற்றொன்றாகத் திரித்துணர்தல்.

மேற்கூறிப்போந்த அவயவதோஷமுடையராயினும் திரிபதார்த்தஞானமுடையோரே ஆசாரியரென வற்புறுத்திக் கூறுகின்றார்.

அம்பினு மாக்கைக் குறிகள் பொருந்தாரேனும்
காருணாந்தான் தேசிகனே காண்.

இ-ள். ஆக்கைக் குறிகள் அற்றிடினும் — முற்கூறிய அவயவலக்ஷணங்களில்லையாயினும் — பொருள் மூன்றும் கண்டு உணர்ந்தானை — திரிபதார்த்தங்களையும் படித்து உள்ளபடியறிந்தவனை — தேசிகன் காண் — ஆசாரியனென்றறி என்று. (௬௧)

எவ்வாவிலக்கணமும் அமைந்தோராயினும் சிவஞானமில்லாதோர் ஆசாரியராகாரென வற்புறுத்துகின்றார்.

குறியுங் குணமு முறினும் பரம
வறிவிலரேற் றேசிகரன்றே யன்று.

இ-ள். குறியுங் குணமும் உறினும் — நற்குறிகளும் நற்குணங்களும் அமைந்திருப்பினும் — பரம அறிவிலரேல் — மேலாகிய சிவஞானமில்லாதவர் ஆசாரியருமாகமாட்டார் — அன்று — ஆகாரென்று. (௬௨)

நால்வகைச் சாத்திரமில்லாதார்க்கு மேலைத் திருக்குறளினையியைத்து விலக்குகின்றார்.

ஆசறினு மாகத்து மச்சாலவரையல்லார்
தேசிகரா வல்லரெனத் தேறு.

இ - ள். அந்நால்வரை அல்லார் - அந்நான்குவருணத்தாரல்லாதார்—ஆகத்தும் ஆசு அறினும் - சரீரத்தினும் மனத்தினுங் குற்றமற்றிருப்பினும்—தேசிகரோ அல்லர் எனத் தேறு- ஆசாரியராவரோ ஆகாரென்றறி. எ - று.

ஆகத்தும் என்றவும்மையால் மனத்துமென்பது கொள்ளப்பட்டது. மோகத்தால் இழிந்த சாதியாருக்கு நிருவாணதீக்ஷை சாதகாபிஷேகம் ஆசாரியாபிஷேகம் என்னுமிவைகள் செய்தானும், செய்யப்பெற்றானும், அவனிடத்தே தீக்ஷை பெற்றானும் அரசனுக்கும் உலகுக்குந் தீங்கு விளைத்து நரகத்திலாழ்வரென்று சிவாகமஞ்செப்புமென்றறிக. (௪௪)

ஆசாரியர்களுக்குரிய முத்திரைகள் இத்துணையவென்பதும அவையிவையென்பதும் இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

தேசிகர்க்குச் சின்னமுமைந் துண்டு திருநீறொன்
றாசிக்குங் கண்டியுமொன் றாம்.

இ - ள். தேசிகர்க்குச் சின்னமும் ஐந்து உண்டு - ஆசாரியர்களுக்குப் பஞ்சமுத்திரைகளுண்டு;—திருநீறு ஒன்று - விபூதி ஒருமுத்திரை,—ஆசரிக்கும் கண்டியும் ஒன்றாம - ஆசரிக்கப்படுகின்ற உருத்திராக்ஷமாலையும் ஒருமுத்திரையாம். எ - று.

கண்டிகையென்பது கண்டியெனக் கடைக்குறைந்து நின்றது. (௪௫)

உரித்துப வீதமு முத்தரியந் தானு
முரித்துட்டி ணீடந்தா னும்

இ - ள். உபவீதமும் உரித்து - பூணூலும் ஒருமுத்திரையாதற்குரியது,—உத்தரியந்தானும உரித்து - உத்தரீயமும் ஒரு

முத்திரையாதற்குரியது,—உட்டிணீடந்தானும் உரித்து - உட்டிணீடமும் ஒருமுத்திரையாதற்குரியது. எ - று.

உரித்தென்பது பின்னிரண்டிடத்துங்கூட்டப்பட்டது. உத்தரீயமென்பது உத்தரியமெனக் குறுக்கல்விகாரம் பெற்று நின்றது. உஷ்ணீஷமென்னும் வடமொழி தமிழிலே உட்டிணீடமெனத் தற்பவமாயிற்று. உஷ்ணீஷமாவது விதிப்படி செய்யப்பட்ட தலைச்சீலை. (௬௬)

சூத்திராசாரியருக்கு உரியனவல்லாத முத்திரை யுணர்த்துகின்றார்.

உரித்தல்ல சூத்திருக் குத்தரிய மென்று
முரித்துட்டி ணீடந்தா னும்.

இ - ள். உத்தரியம் சூத்திரருக்கு என்றும் உரித்து அல்ல - மேற்கூறப்பட்ட பஞ்சமுத்திரைகளுள் உத்தரீயஞ்சூத்திராசாரியருக்கு எக்காலத்துமுரியதன்று,—உட்டிணீடந்தானும் உரித்து அல்ல - உஷ்ணீஷமும் அவர்களுக்குரியதன்று. எ - று.

அல்லவென்பது பின்னுங்கூட்டப்பட்டது. (௬௭)

உபவீதவிலக்கணம் மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்.

அந்தண ராதிகுலக் கன்னிகைநூற் றபருத்தித்
தந்துமும் மூன் றாகச் சமை.

இ - ள். அந்தணர் ஆதி குலக்கன்னிகை நூற்கும் பருத்தித் தந்து - பிராமணர் முதலிய சாதியிற்றோன்றிய கன்னியரால் நூற்கப்பட்ட பருத்திநூலினால்—மும்மூன்று ஆகச் சமை - ஒன்பதிழைகொண்டதாக ஒன்று முறுக்கு. எ - று.

முறுக்கும் விதியெப்படியென்னில், கிழக்குமுகமாகவிருந்து, வலக்கையிலே நாலங்குலப்பிரமாணத்திலே தொண்ணூற்றாறிழை சுற்றி, இன்னும் அப்படி இரண்டுதரஞ்சுற்றி, அந்தமூ

ன்றிழையையுஞ்சேர்த்து மேன்முறுக்காக முறுக்கி,ஒன்றாக்கி, அதனை மூன்றாக மடித்துக் கீழ்முறுக்காக முறுக்கி, ஒருபுரியாக்குதலாம். (௨௮)

அந்தநூன் மூன்றினையொன் றாக்கிடுக வந்தணர்தா
மிந்தநூல் பூணடிடுக வேழு.

இ-ள். அந்தநூல் மூன்றினை ஒன்று ஆக்கிடுக-அப்படி முறுக்கப்பட்ட நூலை மூன்றாக்கி நடுவே பிரமக்கிரந்தியென்னும் முடிச்சிட்டு ஒரு பூணூலாக்கு;—அந்தணர்தாம் இந்தநூல் ஏழு பூண்டிடுக-பிராமணர் இப்படி ஏழுபூணூல தரிக்கக்கடவர். எ-று.

மன்னர்க்கு மூன்றருக மாம்வசிய ருக்கிரண்டா
மன்னியருக் கேகமரு கம்.

இ-ள். மன்னர்க்கு மூன்று அருகம் ஆம்-அரசருக்கு மூன்று பூணூல் தரிப்பது தகுதியாம்,—வசியருக்கு இரண்டாம்-வைசியருக்கு இரண்டுபூணூல் தரிப்பது தகுதியாம்,—அன்னியருக்கு ஏகம் அருகம-சூத்திரருக்கு ஒருபூணூல் தரிப்பது தகுதியாம். எ-று. (௩௦)

பூணூல் தரிப்பதற்கு மந்திர முணர்த்துகின்றார்.

பூசுர ராதிபுரு டாதியாற் பூண்கவுரத்
தாசறுமே புத்திமுத்தி யாம.

இ-ள். பூசுரர் ஆதி புருடாதியால் உரத்துப் பூண்க-பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரரென்கிற நான்குவருணத்தாரும் முறையே தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்கின்ற நான்குமந்திரங்களினாலும் பூணூலை மார்பிலே தரிக்கக்கடவர்;—ஆசு அறும்-இப்படித் தரிக்கில் அவர்களிடத்துள்ள குற்றங்கணீங்கும்,—புத்தி முத்தி ஆம்-போகம் மோக்ஷமென்னும் இரண்டுங்கிடைக்கும். எ-று. (௩௧)

சூத்திரருட்கிருகத்தா பூணூல் தரித்தற்குரிய காலம
வரையறுத்துணர்த்துகின்றார்.

தாப்பணத்தி லர்ச்சனையி லாகுதியி லுந்தரிக்க
விற்பயிலுஞ் சூத்திரரிந் நூல்.

இ - ள். இற்பயிலும் சூத்திரர் - இல்லறத்தினொழுகுகின்ற சூத்திரர்—தாப்பணத்தில - தாப்பணகாலத்திலும்—அர்ச்சனையில் - பூசாகாலத்திலும்—ஆகுதியிலும் - அக்கினிகாரியகாலத்திலும—இந்நூல் தரிக்க-இப்பூநூலைத தரிக்ககடவர். எ - று.

உம்மையால் தீக்ஷாகாலம் உற்சவகால முதலியனவுங் கொள்க. (௫௨)

சூத்திரருள் எக்காலத்தும் பூணூல் தரித்தற்குரியார்
இவரென்பதுணர்த்துகின்றார்.

இவரு ணயிட்டிகனெப் போதுந் தரிக்க
வவனியிலு மாசையறுந் தால்.

இ - ள். இவருள் - இச்சூத்திரருள்—நயிட்டிகன் - நைட்டிகப்பிரமசாரியானவன்,—அவனியிலும் ஆசை அறுத்தால் - மண்ணாசை பொன்னாசை பெண்ணாசையென்கின்ற மூவகையாசைகளையும் நீக்கியிருப்பானாகில்,—எப்போதும் தரிக்க - எக்காலத்தும் பூணூல் தரிக்கக்கடவன். எ - று.

அவனியிலுமென்ற உம்மையால் பொன் பெண் என்பனவுங் கொள்ளப்பட்டன. (௫௩)

ஆசாரியர்கட்குரிய கர்மங்கள் இவைகளென்ப
துணர்த்துகின்றார்.

நித்தியமு நைமித் திககா மியமுமெனு
மித்திறம்பாங் காரியர்க்கென் றெண்.

இ - ள். நித்தியமும் நைமித்திக காமியமும் எனும் இத்திறம் - நித்தியமும் நைமித்திகமும் காமியமுமென்கின்ற இம்மூவகைக்கர்மங்களும்—ஆரியர்க்குப் பாங்கு என்று என் - ஆசாரியர்களுக்கு உரியனவென்றறி. எ - று.

இம்மூன்றும் நித்தியம் நித்தியாங்கம் என்றும், நைமித்திகம் நைமித்திகாங்கம் என்றும், காமியம் காமியாங்கம் என்றும், ஓவ்வொன்று இவ்விரண்டாய் அறுவகைப்படும். (௫௪)

நிறுத்தமுறையானே நித்தியகர்மமுணர்த்துகின்றார்.

புனன்மூழ்கித் தர்ப்பித் தமலனடி பூசித்
தனலோம்ப லாதிநித்தி யம்.

இ - ள். புனல் மூழ்கித் தர்ப்பித்து - சலத்திலே ஸ்நானம் பண்ணித் தர்ப்பணஞ்செய்து—அமலன் அடி பூசித்து - சிவபெருமானுடைய திருவடிகளையருச்சித்து—அனல் ஓம்பல் ஆதி - அக்கினிகாரியஞ்செய்தன்முதலியன—நித்தியம் - நித்தியகர்மங்களாம். எ - று. (௫௫)

நைமித்திககருமம் இரண்டுதிருக்குறளா
லுணர்த்துகின்றார்.

பரமப் பிரதிட்டை தீக்கை பணலுங்
கருதிடுங்கா னைமித்தி கம்.

இ - ள். பரமப் பிரதிட்டை தீக்கை பணலும் - மேலாகிய பிரதிட்டை தீக்ஷைகள் செய்தலும்—கருதிடுங்கால் நைமித்திகம் - ஆராயுங்காலத்து நைமித்திககர்மங்களாம். எ - று.

உம்மையால் சிவோற்சவம், சாந்தி, நவகலசஸ்நபனம், அஷ்டோத்தரசதகலசஸ்நபனம், சகஸ்ரகலசஸ்நபனம் முதலாயினவுங்கொள்க. (௫௬)

உரைத்தமலன் வாக்கை யுளங்கொளக்கற் பார்க்கு
விரித்தலுநை மித்திகமா மே.

இ - ள். அமலன் வாக்கை - அநாதிமலமுத்தராகிய சதாசிவமூர்த்தியுடைய வாக்காகிய திவ்வியாகமங்களை—உளம் கொளக் கற்பார்க்கு - மனசிலே பொருந்தக் கற்றற்கு அதிகாரிகளாகிய நன்மாணாக்கர்களுக்கு—உ.ரைத்து விரித்தலும் - சொல்லி அவற்றின் பொருளை விரித்துரைத்தலும்—நைமித்திகமாம் - நைமித்திககர்மமாம். எ - று. (ருஎ)

நிறுத்தமுறையானே காமியகர்மமுணர்த்துகின்றார்.

சித்தியினை வேண்டியருச் சிக்கை செபம்பணலென்
றொத்தவிதங் காமியமென் றோர்.

இ - ள். சித்தியினை வேண்டி - சித்திபேதங்களை விரும்பி—அருச்சிக்கை செபம் பணல் என்று ஒத்த விதம் - விசேஷதினங்களிலே விசேஷமாகச் சிவபூசை செய்தலும் மந்திரங்களைச் செபம்பண்ணுதலுமென்று அவரவர்கள் பிரீதிக்கிசைந்த இவ்விதமாகிய கர்மங்கள்—காமியம் என்று ஓர் - காமியகர்மங்களென்றறி. எ -று. (ருஅ)

நால்வகையாச்சிரமிகளுள்ளும் ஆசாரியராதற்கு
அதிகாரிகளல்லாத ஆச்சிரமிகளை
யுணர்த்துகின்றார்.

சன்னியாசி பாரியுட னேவனத்திற் றங்குமவ
னென்னுமிவர் தேசிகரன் றே.

இ - ள். சன்னியாசி பாரியுடனே வனத்தில் தங்குமவன் என்னும் இவர் - சன்னியாசியும் மனைவியுடனே வனத்திலே தங்குகின்றவனாகிய வானப்பிரத்தனுமென்னும் இவ்விருவரும்—தேசிகர் அன்று - ஆசாரியராகார். எ - று.

சந்நியாசிகள் தபசுவியெனவும், விவிதீஷு எனவும், வித்துவானெனவும், மூவகையர். வனத்திலே தனித்து மரத்தினிழலே தானிருக்குமிடமாகக் கொண்டவனாய், மாணாக்கர்களைத் தேடி அவர்களுக்கு நூல்களைக் கற்பிப்பதும் தண்டு கமண்டலந்தரிப்பதுமின்றி, மணல் முதலிய க்ஷணிகலிங்கத்தையே பூசை பண்ணிக்கொண்டு, பாணியே பாத்திரமாக இரந்து புசித்து, வேறொருவியாபாரமுமின்றி மௌனியாயிருப்பவன் தபசுவியென்னுஞ்சந்நியாசி. வேதசிவாகமங்களை அத்தியயனம்பண்ணலும் பிறாக்குப் பண்ணுவித்தலும் அவைகளைக் கேட்டலும் சிந்தித்தலும் ஆகிய இவைகளுடனே, மேற்கூறிய கிருத்தியங்களையுமுடையவன் விவிதிஷு என்னுஞ்சந்நியாசி. ஆசாரியரால் அபிடேகம் பெற்று மாணாக்காகளுக்குச் சிவாகமவியாக்கியானம பண்ணிக்கொணடு அதனை எப்போதுஞ் சிந்தித்திருத்தலோடு, மேற்கூறிய கிருததியஙகளையுமுடையவன் வித்துவானென்னுஞ் சந்நியாசி. வானப்பிரத்தா இல்லைவிட்டு மனைவியோடு வனத்திற்சென்று பொறிகளையடக்கிச் சிவபூசை அக்கினிகாரியம் குருபூசையென்னுமிவைகளைச் செய்துகொண்டிருப்பவர். மனைவியோடு கூடாத வானப்பிரத்தருமுளர். மனைவியோடு கூடிய வானப்பிரத்தனுக்குச் சபத்தினீகனென்றும், மனைவியோடு கூடாத வானப்பிரததனுக்கு விபத்தினீகனென்றும் பெயர்.

நான்காம் வருணத்திற் சந்நியாசியில்லையெனச் சிலர் கூறுவர். சித்தியவிசுவசாதாக்கியத்திற் பிராமணர் முதற் பத்துச் சாதிக்கும் பிரமசரியம் கிருகத்தம் வானப்பிரத்தம் சந்நியாசமென்னுநான்காச்சிரமமுமுண்டென விதித்தலானும், இராமாயணத்திற் கிருதயுகமுதலிய நான்கு யுகத்தினும் முறையே பிராமணர் முதலிய நான்குவருணத்தார்க்கும் தபோமுக்கியத்துவஞ் சாற்றலானும், பிரமாண்டபுராணத்திற் கிருதயுகத்துக்குப்

பிராமணசந்நியாசி முக்கியன் திரேதாயுகத்துக்கு க்ஷத்திரியசந்நியாசி முக்கியன் துவாபரயுகத்துக்கு வைசியசந்நியாசி முக்கியன் கலியுகத்துக்குச் சூத்திரசந்நியாசி முக்கியன் எனப்பகர்தலானும, அவர்கூற்றுப் பொருந்தாதென மறுக்க. (ருக)

ஆசாரியராதற்கு அதிகாரிகளாகிய ஆச்சிரமிகளை யுணர்த்துகின்றார்.

பிரம சரிகிருகி யென்னவே பேசு
மிருவருமே தேசிகரென் றெண்.

இ - ள். பிரமசரி கிருகி என்னவே பேசும் இருவருமே - பிரமசாரியும் கிருகத்தனும் என்று சொல்லப்படும் இவ்விருவருமே—தேசிகர் என்று எண் - ஆசாரியராதற்குரியரென்று நினை. எ - று.

பிரமசாரிகள் பௌதிகப்பிரமசாரியெனவும் நைட்டிகப்பிரமசாரியெனவும் இருவகையர். பாலியவயது தொடுத்துக் கன்னிகாகல்யாணகாலம் வரையும் விரதநியமித்துத் துறவியாயிருப்பவன் பௌதிகப்பிரமசாரி. மாணாந்தம் விரதநியமித்துத் துறவியாயிருப்பவன் நைட்டிகப்பிரமசாரி. கிருகத்தர் சாதகன் உதாசீனன் எனவிருவகையர். (ருO)

மேற்கூறிப்போந்த இருவகையாசாரியருள் இன்னான் இன்னது கொடுப்பானென்பது உணர்த்துகின்றார்.

முத்தி கொடுப்பான் முனிபுத்தி முத்தியும்
பத்தியினில் வாழும் பதி.

இ - ள். முனி முத்தி கொடுப்பான் - பிரமசாரியாகிய ஆசாரியன் தன்னையடைந்த மாணாக்கர்களுக்கு முத்தியொன்றே கொடுத்தற்குரியன்,—பத்தியின் இல் வாழும் பதி புத்தி முத்

தியும் கொடுப்பான் - பத்தியோடு கிருகத்தில் வாழுமாசாரியன் புத்திமுத்தியிரண்டையுங்கொடுத்தற்குரியன். எ - று. (சுக)

நான்குவருணத்தாருக்குஞ் செய்யப்படுந்தீக்ஷை
இதுவென்பதுணர்த்துகின்றார்.

குண்டத்தான் மணடலத்தா னுங்கொடுக்கதீக்கையினை
யெணடிகழு நாலவர்க்கு மே.

இ - ள். எண் திகழும நால்வர்க்குமே - மேற்கூறப்பட்ட இருவகையாசாரியரும் நன்குமதிககபபடுகின்ற பிராமணர் முதலிய நானகுவருணத்தார்க்கு மாத்திரமே—குண்டத்தான் மண்டலத்தானும் தீக்கையினைக் கொடுக்க - விதிப்படி குண்டத்தானும மண்டலத்தாலும் இயற்றப்படுவதாகிய ஔத்திரிதீக்ஷையைச் செய்யக்கடவர். எ - று.

ஞானவதியென்றுங் கிரியாவதியென்றும் இருவகைப்பட்ட ஔத்திரிதீக்ஷைதான் இன்னும நிர்ப்பீசதீக்ஷை சபீசதீக்ஷையென வெவவேறிருவகைப்படும்.

அவற்றுள் நிர்ப்பீசதீக்ஷையாவது மலபரிபாகமுனடயராய வழியும் தீக்ஷைக்குப்பின் ஒருதலையான் வழுவின்றி அநுட்டிக்கக்கடவனவாகிய சமயாசாரங்களை அநுட்டிக்கும் ஆற்றலும் அறிவும் இலராயினருக்கு மற்றைக்கருமங்களோடு கூடச் சமயாசாரத்தையும் ஆகுதியாற்சுத்திசெய்தொழித்து நித்தியகரும மாத்திரையில் இயன்றமட்டும் அதிகாரமுடையராகச் செய்வதாம். ஆயினும் சமயாசாரங்களைச் சுத்திசெய்தொழித்தமையின் நைமித்திகத்திலும் காமியத்திலும் அதிகாரங்கொடாமையால் இது நிரதிகாரதீக்கையெனவும் பெயர் பெறும். இத்தீக்ஷை சமயமும் விசேடமும் நிருவாணமுமென மூவகைப்படும். அவற்றுட்சமயமும் விசேடமும் ஒரோவொன்றேயாம். மற்றைநிருவாணதீக்ஷை அசத்தியோநிருவாணமெனவும் சத்தி

யோநிருவாணமெனவும் இருவகைப்படும். அசத்தியோநிருவாணம் தேகாந்தத்தின் முத்தியைப் பயப்பது. சத்தியோநிருவாணம் அப்பொழுதே முத்தியைப் பயப்பது. சமயாசாரசுத்தியோடு செய்யப்படும் நிருவாணதீக்ஷையும் அதற்கங்கமாயும் சுதந்திரமாயுஞ்செய்யப்படும் சமயவிசேடங்களும் நிர்ப்பீசதீக்ஷையெனக் கொள்க.

இனிச்சபீசதீக்ஷையாவது மலபரிபாகத்தோடுகூடக் கற்றறிவும் ஆற்றலும் மிக்குடையராயினோருக்குச் சமயாசாரகன்மமாத்திரநிறுத்தி மற்றைக் கன்மமெல்லாம சுத்திசெய்தொழித்து நித்தியகன்மமுதலிய மூன்றினும் பேரதிகாரமுடையராகச்செய்வதாம். ஆதலின இது சாதிகாரதீக்ஷையெனவும பெயர் பெறும். இத்தீக்ஷைபெறுடையார் தீக்ஷைவேறுபாட்டால் சாதகரும் ஆசாரியருமென இருதிறப்படுவர். இந்தச்சபீசதீக்ஷைதான் உலோகதருமிணியும சிவதருமிணியுமென்றிருவகைப்படும். இவை முறையே பௌதிகதீக்ஷை நைட்டிகதீக்ஷையெனவும் பரியாயப்பெயர் பெறும. உலோகதருமிணியாவது போககாமிகட்குத்திரோதானசுத்திரூபமாகிய சிகாச்சேதமின்றிச் செய்வது. சிவதருமிணியாவது முத்திகாமிகட்குத திரோதானசுத்திரூபமாகிய சிகாச்சேதத்தோடு செய்வது. உலோகதருமிணி அபரமுத்தியாகிய பதப்பிராப்தியைப் பயக்கும். சிவதருமிணி பரமுத்தியைப் பயக்கும. சமயாசாரசுத்தியின்றிச் செய்யப்படும் நிருவாணதீக்ஷையும அதற்கங்கமாய்ச் செய்யப்படும் சமயவிசேடங்களும சபீசதீக்ஷையெனக் கொள்க. (௩௨)

நான்குவருணத்துப் பெண்களுக்குந் தீக்ஷைசெய்யும் முறைமையுணர்த்துகின்றார்.

**கணவ னநுமதிசெய் தாற்கா ரிகைக்கும்**
**பணுகவுப தேசம் பரிந்து.**

இ - ள். காரிகைக்கும் - பெண்ணுக்கும்,—கணவன் அநுமதிசெய்தால் - அவளுடைய நாயகன் அநுமதி செய்தானாகில,—பரிந்து உபதேசம பறுக - அன்புகொண்டு தீக்ஷை செய்யக்கடவர். எ - று.

கன்னிகையாகில் பிதாவினநுமதியும, விதவையாகில் பிதா புத்திரன் முதலியோர் அநுமதியும, வேண்டப்படுமென்க. பெண்களுக்கு எக்காலத்தும தமக்கென அதிகாரமின்மையால் அநுமதி வேண்டிற்றென்க. "ஏந்திழைக்குப் பதியேவ லியற்றுதலே நியதி யீசனிணைத் தாளிணைய வேசறவு பெருகிற்-காந்தனநுமதிபெற்றுக் கைக்கொள்கபூசை" என்பதனாலுமறிக.()

அத்துவசுத்தி பெறுதற்கு அருகரையும் அருகரல்லாதாரையும் உணர்த்துகின்றார்.

அருகமே நால்வர்க்கு மத்துவ சுத்தி
யருகமல மற்றை யவர்க்கு

இ - ள். அத்துவசுத்தி நால்வர்க்குமே அருகம் - அத்துவசுத்தியானது நான்குவருணத்தார்க்குமே உரியது,—மற்றையவர்க்கு அருகம் அல - அவரொழிந்த மற்றைச்சாதியாருக்கு உரியதன்று. எ - று.

அத்துவசுத்தியாவது ஆறத்துவாக்களினும் கட்டுப்பட்டிருக்கின்ற போகங்கள் எல்லாவற்றையும் ஏககாலத்திலே புசித்துத தொலைப்பித்து மோக்ஷத்தைக் கொடுத்தலாம். இதுவே நிர்வாணதீக்ஷையெனப்படும். அத்துவா - வழி. நிர்வாணம் - மோக்ஷம். அத்துவாக்களாறுவன மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என்பனவாம். இவற்றுள் மந்திரங்கள் பதினொன்று, பதங்கள் எண்பத்தொன்று, வர்ணங்கள் ஐம்பத்தொன்று, புவனங்கள்

இருநூற்றிருபத்துநான்கு, தத்துவங்கள் முப்பத்தாறு, கலைகள் ஐந்து என்றறிக. (சுச)

மற்றைச்சாதியாருக்குப் பாசம அறுக்கும் முறைமை உணர்த்துகினறார்.

அன்னியர்க்குப் பாச மறுத்திடுக பார்வையினாற்
றன்னதுகை வைத்துந் தலை.

இ - ள். அன்னியர்க்கு - ஔத்திரிதீக்ஷைக்கு அருகரல்லாத மற்றைச்சாதியாருக்கு—பார்வையினால் - அவரவர் பக்குவத்திற்கேற்பச் சாக்ஷுஷதீக்ஷையினாலும்—தன்னது கை தலை வைத்தும் - சிவஹஸ்தமஸ்தகசம்யோகமாகிய பரிச தீக்ஷையினாலும்—பாசம் அறுத்திடுக - பாசத்தை நீக்கக்கடவர். எ - று.

உம்மையினாலே வாசிகதீக்ஷை மானசதீக்ஷை சாத்திர தீக்ஷை யோகதீக்ஷை என்னும மற்றைநானகுங் கொள்ளப்படும். இவவாறினுள், சாக்ஷுஷதீக்ஷையாவது மாந்திரிகன் பாம்பினாற் கடிக்கப்பட்டவனைக் கருடபாவனையினாலே பார்த்து விஷந்தீர்த்தல்போல ஆசாரியர் சீடனைச் சிவபாவனையினாலே பார்த்துப் பாசவிமோசனஞ்செய்தலாம். பரிசதீக்ஷையாவது பரிசனவேதியினாலே தாமிராதிலோகங்களைப் பரிசித்துக் களிம்பைநீக்கிப் பொன்னாக்குதல்போல ஆசாரியர் தமது கையைச் சிவன்கையாகப் பாவித்து அங்ஙனமே அருச்சனை செய்து அதனைச் சீடனுடைய தலையில் வைத்து எங்கும் பரிசித்து அவனது பாசத்திரயத்தை நீக்கி அவனைச் சிவனாக்குதலாம். வாசிகதீக்ஷையாவது வருணாச்சிரமானுகுணமாகப் பதினொருமந்திரத்தோடு பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தலாம். மானசதீக்ஷையாவது ஆசாரியர் தம்முடைய இரேசகவாயுவினாலே புறப்பட்டுச் சீடனுடைய பூரகவாயுவினாலே அவனுடைய இருதயத்திலே பிரவேசித்துச் சீடசைதன்னியத்தை

வாங்கித துவாதசாந்தபரியந்தம் பிராசாதோச்சாரணசகிதமா கக் கொண்டுபோய்ப் பின்பு தம்முடைய இருதயத்திலே சிவ சைதன்னியத்துடன் கலந்ததாகப் பாவித்துப் பின்பு அச்சீட சைதன்னியத்தைச் சீடதேகத்திலே பிரதிட்டை செய்தலாம். சாத்திர தீக்ஷையாவது சைவாகமாதி சிவசாததிரப்பொருளைப் போதித்தலாம். யோகதீக்ஷையாவது நிராதாரசிவயோகத்தை அப்பியாசம் பண்ணுவித்தலாம். இவ்வறுவகைதீக்ஷயும் ஔதிரிதீக்ஷக்கு அருகரல்லாதவர்களுக்குப் பண்ணப்படுவ னவெனவும் ஔத்திரிக்கு அங்கமெனவும் அறிக. (சரு)

தீக்ஷசெய்தற்குக் காலபரீக்ஷயுணர்த்துகின்றார்.

தேர்ந்தறிக பக்குவத்தை நிர்வாண தீக்கைக்குத்
தேர்ந்திடே லேனைய தீக்கைக்கு

இ - ள். நிர்வாண தீக்கைக்குப் பக்குவத்தைத் தேர்ந்து அறிக - ஆசாரியர் மாணாக்கனுக்கு நிர்வாணதீக்ஷ செய்யுங் கால் விதித்த காலமளவாயினும் ஒருவருஷமாயினும் அவனு டைய பக்குவத்தைப் பரீக்ஷித்து அறியக்கடவர்,—ஏனைய தீக் கைக்குத் தேர்ந்திடேல்-மற்றைச் சமயதீக்ஷ விசேஷதீக்ஷ களுக்குக் காலம் விசாரிக்கவேண்டுவதில்லை. எ - று. (சசு)

சத்திநிபாதமுடைய மாணாக்கனது இலக்கணம் மூன்று திருக்குறளால் உணர்த்துகின்றார்.

உறினே பருவ முடல்சிறையென் றொல்கி
யறுமாறுந் தேடுவனு ராய்ந்து.

இ - ள். பருவம் உறின் - ஒருவனிடத்தே சத்திநிபாதமுண் டாமாயின்,—உடல் சிறை என்று ஒல்கி - அவன் தான் பூசி முடித்து அலங்கரித்துப் பொருளென நினைந்து இருந்த தேகத் தைச் சிறைச்சாலையென்று துணிந்து உவர்த்து வருந்தி,—

அறும் ஆறும் ஆராய்ந்து தேடுவேன் - அது நீங்குநெறி யாதெ
ன்று ஆராய்ந்து தேடுவேன். எ - று. (௬௭)

மெய்புளக மாகும் விழிபொழியும் வாய்குளறுங்
கைதொழூஉங் கூச்சங் களைந்து.

இ - ள். மெய் புளகம் ஆகும் - அவனுக்குச் சிவசரித்திர
முதலியன செவிப்புலப்பட்டமாத்திரத்தே சரீரம் புளகங்கொ
ள்ளும்,—விழி பொழியும் - கண்கள் ஆனந்தவருவி சொரி
யும்,—வாய் குளறும் - வாக்குத தழுதழுக்கும்,—கூச்சம் களை
ந்து கை தொழூஉம் - சிவனடியாரைக் கண்டமாத்திரத்தே
குலம் குணம் விசாரியாமற் கூச்சத்தையொழித்து வணங்
குவன். எ - று. (௬௮)

விருமபுந் திருநீறு மெய்க்கணிநதார் தமமை
யரும்புமவா தம்பா லருள்.

இ - ள். திருநீறும் மெய்க்கு அணிநதார தம்மை விருமபும் -
விபூதியையும் உருத்திராக்ஷமாலையையுந் திருமேனியிலணிந்த
சிவபத்தாகளை விரும்புவன்,—அவாதம்பால் அருள் அருமபும்-
அவனுக்கு அவாகளிடத்தே அன்பு விளையும. எ - று. (௬௯)

பக்குவனுக்குச் செய்யுமுறைமையுணர்த்துகின்றூர.

இந்தவித மீராறாண் டெண்ணித் திரிவுமறப்
பந்தமறுத் தாள்க பரிந்து

இ - ள். இந்தவிதம் ஈராறு ஆண்டு திரிவும் அற எண்ணி -
இந்தப்பிரகாரம் மாணுக்கரைப் பன்னிரண்டுவருடகாலம் உய
ர்ந்தவனைத் தாழ்ந்த கருமத்தேவியும் தாழ்ந்தவனை உயர்ந்த
கருமத்தேவியும் பரீக்ஷித்துச் சந்தேகவிபரீதமறத் தெளிந்து—
பரிந்து பந்தம் அறுத்து ஆள்க - பக்குவப்பட்ட மாணுக்கனிட

த்தே அன்புகூர்ந்து அவனுக்கு நிர்வாணதீக்ஷைசெய்து பாச த்தை நீக்கியாளக்கடவர். எ - று. (எ0)

அவ்வவ்வருணத்தாரைப் பரீக்ஷிக்குங்காலவரையறை இரண்டுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

பணணிடுக தீக்கையினைப் பக்குவம்பார்த் தாறிரண்டு
ளெண்ணிமும்மூன் றாறின்மூன் றின்.

இ - ள். ஆறிரண்டெண் - பன்னிரண்டுவருஷத்தும், — மும்மூன்று - ஒன்பதுவருஷத்தும், — ஆறின் - ஆறுவருஷத்தும், — மூன்றின் - மூன்றுவருஷத்தும் — பக்குவம் பார்த்து எண்ணி - பக்குவம் பரீக்ஷித்துத் தெளிந்து, — தீக்கையினைப் பண்ணிடுக - நிர்வாணதீக்ஷையைச் செய்க. எ - று. (எக)

சூத்திரா ராதியாக்குச் சொன்னமுறை யாலாண்டு
பார்த்தே யநுக்கிரகம் பண.

இ - ள். சூத்திரர் ஆதியர்க்கு - சூத்திரா வைசியா க்ஷத்திரியர் பிராமணரென்னும் நான்குவருணத்தார்க்கும், — சொன்ன முறையால் ஆண்டு பார்த்து — மேலைத்திருக்குறளிற் சொல்லிய முறையே பன்னிரண்டு முதலிய வருஷங்களைக் கொண்டு பரீக்ஷித்து, — அநுக்கிரகம் பண் - நிர்வாணதீக்ஷை செய். எ-று.

அபக்குவனுக்குச் செய்யுமுறைமையுணர்த்துகின்றார்.

இக்குணத்தி லொன்று மிலனே லவன்றன்னை
யக்கணமே நீக்கலழ காம.

இ - ள். இக்குணத்தில் ஒன்றும் இலனேல் - பரீக்ஷிக்கப்பட்ட மாணுக்கன் இந்தநற்குணங்களுள் ஒன்றாயினும் இலனாகில், — அவன்றன்னை அக்கணமே நீக்கல் அழகு ஆம் - அவனைத் தீக்ஷைக்கு அருகனல்லனெனக் கருதி அப்போதே நீக்குதல் அழகாம். எ - று. (எக)

அபக்குவனை நீக்காமையால் வருங்குற்றம் இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.

அச்சத்தா லார்வத்தா லாடகத்தான் மற்றுமுள
விச்சையினுற் றீக்கையியற் றின்.

இ - ள். அச்சத்தால் - இவன் அரசனெனல் முதலியவற்றால் வரும் அச்சத்தினாலேனும்,—ஆர்வத்தால் - இவன் பிள்ளையெனல் முதலியவற்றால் வரும் விருப்பத்தினாலேனும்,—ஆடகத்தால் - பொன்னாசையினாலேனும்,—மற்றும் உள இச்சையினால் - பிற ஆசைகளினாலேனும்,—தீக்கை இயற்றின் - ஆசாரியன் அபக்குவனுக்குத் தீக்ஷை செய்யில். எ - று. (எச)

வீழ்வர் நிரயத் திருவரும் வீழ்ந்தழுங்கி
யாழ்வரவ ரேறலரி தாங்கு.

இ - ள். இருவரும் நிரயத்து வீழ்வர் - அவ்வாசாரியனும் மாணக்கனுமாகிய இருவரும் நரகத்திலே வீழ்வார்கள்,—வீழ்ந்து அழுங்கி ஆழ்வர் - விழுந்து அழுந்தி வருந்துவார்கள்,—அவர் ஆங்கு ஏறல் அரிது - அவர்கள் அவ்விடத்தினின்றும் ஏறுதலரிதாம். (எரு)

மேன்முடிந்தது முடிக்கின்றார்.

ஆதலினு னீக்கி யபக்குவரை யன்பர்க்குப்
போதிக்க தீக்கை புரிந்து.

இ - ள். ஆதலினால் அபக்குவரை நீக்கி - ஆகையால அபக்குவர்களைத் தம்மிடத்தன்பும் அவர்களிடத்தருளுங்கொண்டு தள்ளி,—அன்பாக்குத் தீக்கை புரிந்து போதிக்க - பக்குவர்களுக்கு நிர்வாணதீக்ஷை செய்து திரிபதார்த்தங்களையுணர்த்தும் ஞானசாத்திரங்களை உபதேசிக்கக்கடவர். எ - று.

சிவாகமத்திற் கருமகாண்டத்துக்கு விசேஷதீக்ஷை பெற்றோரும், ஞானகாண்டத்துக்கு நிருவாணதீக்ஷை பெற்றோருமே, அதிகாரிகளாவரென்றுணர்க. (௭௬)

நிருவாணதீக்ஷை ஒருகாலத்தில் இத்துணையருக்குச்
செயலாமென்பதுணர்த்துகின்றார்.

ஒருவற்கே தீக்கை புரிகவொரு காலத்
திருவர்க்கு மாகுமென வெண்.

இ - ள். ஒருகாலத்து ஒருவற்கே திக்கை புரிக-ஒருகாலத்திலே ஒருவனுக்கே நிருவாணதீக்ஷை பண்ணுக,—இருவர்க்கும் ஆகுமென எண் - இருவருக்குஞ்செய்யலாமென்றறி. எ - று.
எனவே ஒருவனுக்குச் செய்தலே உத்தமமென்றாயிற்று. ()

மேற்படச்செய்யில் வருங்குற்றமுணர்த்துகின்றார்.

பலரையொரு காலத்திற் பண்ணிடினே தீக்கை
யலலுறுவ னாரியன்கீ ழாழ்ந்து

இ - ள். ஆரியன் பலரை ஒருகாலத்தில் தீக்கை பண்ணிடின் - ஆசாரியன் இருவரல்லாத பலருக்கு ஒருகாலத்திலே தீக்ஷை பண்ணுவானாயின்,—கீழ் ஆழ்ந்து அலல் உறுவன் - கீழாகிய நரகத்திலேயழுந்தி வருத்தமடைவன். எ - று. (௭௭)

தீக்ஷைக்கேற்ற காலமைந்திருக்குறளா
னுணர்த்துகின்றார்.

கார்த்திகை யைப்பசிவைகாசியுங்காலோத்தமங்காண்
சீர்த்திகழுந் தீக்கை செய.

இ - ள். சீர் திகழும் தீக்கை செய - நன்மை விளங்குந் தீக்ஷையைச் செய்தற்கு—கார்த்திகையும் ஐப்பசி வைகாசியும்

கால உத்தமம் காலம் - கார்த்திகைமாசமும் ஐப்பசிமாசமும் வைகாசிமாசமும் உத்தமகாலங்களாம். எ - று. (௭௬)

மத்திமமாம் பங்குனியு மானியொடு மார்கழியு
மற்றையதா மாசியல வன்.

இ - ள். பங்குனியும் ஆனியொடு மார்கழியும் மத்திமமாம் - பங்குனிமாசமும் ஆனிமாசமும் மார்கழிமாசமும் மத்திமகாலங்களாம்;—மாசி அலவன் மற்றையதாம் - மாசிமாசமும் ஆடிமாசமும் கனிட்டகாலங்களாம். எ - று. (௮0)

மற்றையமா தங்களொரு நான்கும் வழுவவற்று
ளுற்றிடுநற் காலங்க ளும்.

இ - ள். மற்றைய மாதங்கள் ஒருநான்கும் வழு - தை ஆவணி சித்திரை புரட்டாதியென்னும் மற்றைநான்குமாதங்களும் தீக்ஷைக்கேலாத காலங்களாம்;—அவற்றுள் நற்காலங்களும் உற்றிடும் - அவைகளுள்ளே தீக்ஷைக்கேற்ற புண்ணிய காலங்களும் வரும். எ - று.

புரட்டாதி மாசி ஆடி மார்கழியென்னும் இந்நான்குமாதங்களையுந் தீக்ஷைக்காகாவெனக் காரணாகமம் விலக்கியிருக்க, இந் நூலாசிரியர் பின்னையமூன்றையும் ஆகுமெனக் கொண்டு, முன்னையதைத் தை ஆவணி சித்திரையோடு சேர்த்து, ஆகா வென விலக்கியது ஆகமபேதத்தாலெனவுணர்க. (௮௧)

பற்றிடினே பாம்பு பரிதிதனைத் திங்கடனை
யற்றையநா ணன்றென் றறி.

இ - ள். பாம்பு பரிதிதனைத் திங்கடனைப் பற்றிடின் - கேது இராகுக்கள் சூரியனையேனுஞ் சந்திரனையேனுந் தீண்டுமாயின்—அற்றையநாள் நன்று என்று அறி - அந்நாட்கள் தீக்ஷைக்குரிய நல்ல தினங்களென்றறி. எ - று. (௮௨)

அயனமிரண் டுஞ்சித் திரையாதி நாளு
நயமுறுநதீக் கைக்கினிய நாள்.

இ - ள். அயனம் இரண்டும் - தைமாதப்பிறப்பும் ஆடிமா தப்பிறப்புமாகிய அயனங்களிரண்டும்—சித்திரை ஆதி நாளும்- சித்திரை விஷு ஐப்பசிவிஷு என னுமிரண்டும்—நயம உறும் தீக்கைக்கு இனிய நாள - நன்மை பொருந்திய தீக்ஷைக்கு உசிதமாகிய நாட்களாம். எ - று.

இந்நாட்களினன்றியும் சிவபெருமானுக்குக்கொழுந்து சாத் துப்போதும பவித்திரோற்சவ நடத்துமபோதும் தீக்ஷை செ ய்யலாம எனஅறிக. (அக)

இக்காலநியமம இன்னாக்கில்லையென்பது இரண்டு
திருக்குறளாலுணாததுகினறா.

விளமபினம புத்தி விருமபினர்க்குக காலம்
விளம்பாநூல் கால விதம.

இ - ள். புத்தி விரும்பினாக்குக் காலம விளமபினம-போக காமிகளுக்கே இத்தீக்ஷா காலநியமஞ்சொன்னோம்;—நூல் கா லவிதம விளம்பா - முத்திகாமி அதிபக்குவனுதலால் அவனுக் குச் சைவாகமங்கள் காலநியமஞ்சொல்லா. எ - று. (அச)

முத்தி விரும்பினருக் கெக்கா லமுமுறையா
லுத்தமத்தி லுத்தமமா கும்.

இ - ள். முத்தி விரும்பினருக்கு - முத்திகாமிகளுக்கு— முறையால் - ஆசாரியர் அவர்களிடத்துள்ள அதிதீவிரபக்குவ த்தை அறிந்தமுறைமையினுல்—எக்காலமும் உத்தமத்தில் உத்தமம் ஆகும்-எந்தக்காலமும் உத்தமோத்தமகாலமாம்.எ-று.

தீக்ஷாகாலத்திலே மாணாக்கன் உதகஞ்செய்யு
முறைமையுணர்த்துகின்றார்.

பொருளுட லாவியெனு மூன்றும் புதல்வன
குரவன்கொ ளென்கை குணம்.

இ - ள். புதல்வன - தீக்ஷாகாலத்திலே மாணாக்கன்—குரவன் - குருமூர்த்தியே—பொருள் உடல் ஆவி எனும் மூன்றும் கொள என்கை குணம் - என்னுடைய உடல் பொருளாவி யெனுமூன்றினையுங் கொண்டருளுமென்று கொடுத்தலே முறைமையாம். எ - று.

ஞானதீக்ஷையில உடல பொருள ஆவி மூன்றையுந் தானஞ் செய்தலாவது முன் செயற்கையாற்றன்னுடைமையாய நின்ற இம்மூன்றனையும் தனக்கன்றிச் சிவபெருமானுக்கே உடைமையாகச் செய்தலாம். ஆவியாகிய தன்னைத் தானஞ் செய்தலாவது தான் சிவபெருமானுக்குப் பரதந்திரன் என்று உணர்ந்து அவரருளாலல்லது ஒன்றைச் செய்யாதுநிற்றலேயாம். தானே தனக்குச் சுதந்திரமின்றிச் சிவபெருமானுக்குடைமையாயவழித் தன்னின் வேறாய உடல்பொருள்கள் தன்னுடைமையாமாறு யாண்டையதென்க. (அசு)

ஆசாரியன கொள்ளுமுறைமை இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

புதல்வன் கொடுத்த பொருளனைத்துங் கொள்ளே
லதனிலிரு மூன்றிலொன்றே யாம

இ - ள். புதல்வன் கொடுத்த பொருள அனைத்தும கொள்ளேல - மாணாக்கன் தந்த பொருண்முழுதையும் வாங்காதே;—அதனில் இருமூன்றில் ஒன்றேயாம் - அப்பொருளில் ஆறிலொருபங்குமாத்திரமே வாங்கு. எ - று. (அஎ)

பற்றற் றவன்கொடுக்கும் பண்ட மனைத்தினையும
பற்றுத லுந் தேசிகற்குப் பாங்கு.

இ - ள். பற்று அற்றவன் கொடுக்கும் பண்டம் அனைத்தினையும் பற்றுதலும் - மாணுக்கன் வானப்பிரத்தனுயேனுஞ் சந்நியாசியாயேனும் பற்றற்று இருப்பவனுகில் அவன தரும பொருண்முழுதையும் வாங்குதலும்—தேசிகற்குப் பாங்கு - ஆசாரியனுக்கு முறைமையாம. எ - று.

நைட்டிகப்பிரமசாரி தானுகக்கொடுக்கில் வாங்கலுமாகுமென்று ஆகமமோதுமெனவறிக. (அஅ)

ஆசாரியனுக்கு வேண்டுவதிதுவெனபது இரண்டு
திருக்குறளாலுணாததுகின்ருர்.

அன்னை புதல்வற் களிப்பண் மருந்திரங்கி
யின்னமுறை யார்தே சிகர்.

இ - ள். அன்னை புதல்வற்கு இரங்கி மருந்து அளிப்பள் - மாதாவானவள் குழந்தைக்கு வந்த நோயினை அறிந்து இரங்கி அதனது பக்குவதிற்கேற்பமருந்து கொடுத்து அந்நோயைத தீர்ப்பள்;—இன்னமுறையார் தேசிகர் - இங்ஙணமே மாணுக்கருக்கு வந்த சனனமரணநோயை அறிந்து இரங்கி அவாபக்குவத்திற்கேற்பத் தீக்ஷை செய்து அந்நோயை நீக்கும் முறைமையையுடையவர்களே ஆசாரியர்கள். எ - று. (அக)

இரங்கிக் குரவன் பருவமெனில் யார்க்கும்
வரங்கொடுக்க நூலின் வழி.

இ - ள். குரவன் பருவமெனில் யார்க்கும் இரங்கி நூலின்வழி வரம் கொடுக்க - ஆசாரியன் சத்திநிபாதங்காணப்படுமாயில் அதனையுடைய யாவர்க்கும் பொருளுடையர் இல

ரென்பது பாராமல் இரங்கி ஆகமவிதிப்படி தீக்ஷை செய்யக் கடவன். எ - று.

பக்குவமில்லானுக்குத் தீக்ஷைசெய்தலும், பக்குவமுடையானுக்குத் தீக்ஷை செய்யாமையுமாகிய இரண்டும் குற்றமேயா மென்க. (கூ0)

உரைத்ததிது உரைப்பதிதுவென்பதுணர்த்துகின்றார்.

உரைத்தாமே தேசிகர் தம்மை யினியா
முரைப்பாம் புதல்வரையு மோர்.

இ - ள். யாம் தேசிகர்தம்மை உரைத்தாம - நாம் இதுகாறும் ஆசாரியரிலக்கணத்தைச் சொன்னோம்;—இனிப புதல்வரையும் உரைப்பாம் - இனி மாணாக்கரிலக்கணத்தையுஞ்சொல்வாம்,—ஓர் - அதனையறி. எ - று. (கூக)

ஆசாரியரிலக்கணமுற்றிற்று.

ஆ திருக்குறள் - ககஎ.

இரண்டாவது

# மாணாக்கரிலக்கணம்.

மாணாக்கராதற்குரிய சென்மதேசமுணர்த்துகின்றார்.

நவின்றநதி யின்கரைநன் னாட்டுற் பவித்துப்
பயின்றவரே தீக்கைபரிப் பார்.

இ-ள். நவின்ற நதியின் கரை நல் நாட்டு உற்பவித்துப் பயின்றவரே - ஆசாரியரிலக்கணத்திற் சொல்லப்பட்ட நதி தீரங்களிலுள்ள புண்ணியஸ்தலங்களிலே பிறந்து வசிப்பவர்களே—தீக்கை பரிப்பார் - தீக்ஷை பெறுதற்கு அருகர்கள். எ - று. (க)

வருணமுணர்த்துகின்றார்.

அவருள்ளு மந்தண ராதியொரு நால்வ
ரிவரே சிறப்புளரென் றெண்.

இ - ள். அவருள்ளும் - அவர்களுள்ளும்—அந்தணர் ஆதி ஒருநால்வர் இவரே - பிராமணர் முதலாகிய இந்நான்குவருணத்தாருமே—சிறப்பு உளர் என்று எண் - மாணாக்கராதற்குச் சிறப்புடையரென்றறி. எ - று.

இவர் சிறப்புளரெனவே, சிறப்பிலாதாரும் உளரென்பது பெற்றாம். அவர் அநுலோமர் அறுவரும் பிரதிலோமருள் சூதன் மாகதன் வைதேககன் என்னுமூவரும் அந்தராளருமெனவறிக. அநுலோமர் பிரதிலோமர் வகையும் தோற்றமும் பொதுவிலக்கணத்திற்கூறுதும், ஆண்டுக் காண்க. (௨)

அவருள்ளும் விதந்துணர்த்துகின்றார்.

அவருள்ளு முள்ளு மவலத்தை யற்றா
ரவரருகர் தீக்கையினுக் கார்ந்து.

இ - ள். அவருள்ளும் - அவர்களுள்ளும்—உள்ளும் அவலத்தை அற்றாரவர் தீக்கையினுக்கு ஆர்ந்து அருகர் - காமமுதலிய மனக்குற்றங்களும் அங்கவீனத்துவமுதலிய உடற்குற்றங்களும் இல்லாதவர்களே தீக்ஷை பெறுதற்குப் பூரணயோக்கியர்கள். எ - று. (௩)

மாணாக்கரது வகையுணர்த்துகின்றார்.

சமயியெனப் புத்திரகன் சாதகனு மென்ன
வமைவரொரு மூவரடை வால்.

இ - ள். அடைவால் - அம்மாணாக்கர்கள்தாம்பெற்ற தீக்ஷை முறைமையால்—சமயி எனவும் - சமயியென்றும்—புத்திரகன் எனவும் - புத்திரகனென்றும்—சாதகன் எனவும் - சாதக

னென்றும்—ஒருமூவர் அமைவர்- முத்திறத்தராயிருப்பார்கள். எ - று. (௪)

நிறுத்தமுறையானே சமயியதிலக்கணம் இருபது திருக்
குறளாலுணர்த்தத் தொடங்கி முதற்கண் அவனுக்
குரிய தீக்ஷையுங் கருமமுமுணர்த்துகின்றார்.

தரித்துச் சமயமெனுந் தீக்கை சமயி
தெரித்தபடி நித்தியஞ்செய் வான்.

இ - ள். சமயி - சமயியானவன்—சமயம் எனும் தீக்கை தரித்து - சமயதீக்ஷையைப் பெற்று—தெரித்தபடி நித்தியம் செய்வான் - சிவாகமம் விதித்தபடி தனக்குரிய நித்தியகருமத்தையாதரித்துச்செய்வான். எ - று. (௫)

அஃதிதுவெனவுணர்த்துகின்றார்.

தண்ணறலின் மூழ்கியே தாப்பணஞ்செய் தேசெபமு
முண்ணினைவான் சங்கரன்றாளும்.

இ - ள். தண் அறலின் மூழ்கியே - குளிர்மையாகிய நீரிலே ஸ்நானஞ்செய்து—தாப்பணம் செபமும் செய்து - தாப்பணமும் செபமும் பண்ணி—சங்கரன் தாளும் உள் நினைவான் - சிவபெருமானுடைய திருவடிகளையும் ஆசாரியருடைய திருவடிகளையும் மனசினாலே தியானிப்பான். எ - று.

சங்கரன்றாளும் என்ற உம்மையால் ஆசாரியன்றாளுங்கொளளப்பட்டது. (௬)

அவன் செய்தற்குரிய சரியாபாதமாகிய சிவபுண்
ணியங்களுள் சிவனை வழிபடும் முறைமையை
ஐந்து திருக்குறளாலுணர்த்துகின்றார்.

சென்றாலயத்துட் டிருவலகிட் டேமெழுகித்
தூன்றுமலர் கொய்து தொடுத்து.

இ - ள். ஆலயத்துள் சென்று - தனக்குரிய நியதியை முடித்துக்கொண்டு வீட்டினின்றும் புறப்பட்டுப் போய்த் தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கித் திருக்கோயிலுள்ளே பிரவேசித்துப் பத்திரலிங்கமாகிய பலிபீடத்தையும் இடபதேவரையும் நமஸ்கரித்து,—திருவலகு இட்டு-மெல்லிய மார்ச்சனியினாலே கிருமிகள் சாவாமல் மேற்படவலகிட்டு,—மெழுகி - ஈன்றணிமையதும் நோயினதுமல்லாத பசுவினது சாணியைப் பூமியில் விழுமுன் இலையிலேற்று வாவி நதி முதலியவற்றில் வடித்தெடுத்துவார நீருடனே கூட்டித் திருமெழுக்குச் சாத்தி,—துன்றும மலர் கொய்து தொடுத்து - திருநந்தனவனத்திலே நெருங்கிய பூக்களைக் கொய்து பழுது நீக்கி இண்டை முதலாகப் பலவகைப்படும் திருமாலைகளைக் கட்டி. எ - று.

சாணியைக் கீழே விழுமுன் ஏந்தல்கூடாதபோது சுத்தநிலத்தில் விழுந்த சாணியை மேல் கீழ் தள்ளி நடுப்படவெடுக்க.

சூரியோதயத்துக்குமுன்னே ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்துச் சந்தியாவந்தனமுடித்து, இரண்டு கைகளையுங்கழுவித் திருப்பூங்கூடையை எடுத்து, ஒரு தண்டுநுனியிலே மாட்டி உயரப்பிடித்துக்கொண்டாயினும் அரைக்குமேலே கையினாலே பிடித்துக்கொண்டாயினும் திருநந்தனவனத்திற்போய்ச் சிவபெருமானை மறவாத சிந்தையோடு பத்திரபுஷ்பமெடுக்க. கைகளை அரையின்கீழே தொங்கவிடுதலும், கைகளினாலே உடம்பையேனும் வஸ்திரத்தையேனுந் தீண்டுதலும் ஆகாவாம். பத்திரபுஷ்பமெடுக்கும்போது பேசுதலும், சிரித்தலும், சிவபெருமானுடைய திருவடிகளிலேயன்றிப் பிறவற்றிலே சிந்தை வைத்தலும், கொம்புகள் கிளைகளை முறித்தலும் பெருங்குற்றங்களாம். பத்திரபுஷ்பமெடுத்தவுடனே, அவைகளைப் பத்திரத்தினாலே மூடி மடத்தையடைந்து, கால்களைக் கழுவிக்கொண்டு உள்ளே புகுந்து, திருப்பூங்கூடையைத்

தூக்கிவிட்டு, திருமாலைக்குறட்டைச் சலத்தினாலலம்பி இடம் பண்ணித் திருப்பூங்கூடையிலுள்ள பத்திரபுஷ்பங்களை அதில் வைத்துக்கொண்டு, மௌனியாயிருந்து, சாவதானமாக ஆராய்ந்து, பழுதுள்ளவைகளை அகற்றிவிட்டுத் திருமாலைதொடுக்க.

தாழ்ந்த சாதியார், சிவதீக்ஷைபெறாதவர், ஆசௌசமுடையவர், நித்தியகருமம் விடுத்தவர், ஸ்நானஞ்செய்யாதவர், தூர்த்தர் என்னும் இவரெடுத்த பூவும், அசுத்தநிலம் சுடுகாட்டின் சமீபம் சண்டாளபூமியின சமீபம் என்னும் இவற்றினுண்டாகிய பூவும், எடுத்துவைத்தலர்ந்தபூவும், தானே விழுந்து கிடந்த பூவும், பழம் பூவும், உதிர்ந்த பூவும், அரும்பும, இராவிலெடுத்த பூவும், கை சீலை எருக்கிலை ஆமணக்கிலை என்பவற்றிற் கொண்டுவந்த பூவும, காற்றினடிபட்ட பூவும, புழுக்கடி எச்சம் சிலந்திநூல் மயிர் எனபவறறோடு கூடிய பூவும, மோந்த பூவும், காகம் கோழி நாய் கழுதை பன்றி குரங்கு பூனை முதலியவை தீண்டிய பூவும் சாத்தலாகாது. திருக்கோயிலுள்ளும் அதன் சமீபத்திலும் உண்டாகிய பூ ஆன்மார்த்தபூசைக்கு ஆகாது.

சூரியோதயகாலத்திலாயினும், விடிய மூன்று நாழிகைக்கு முன்னாயினும், இரண்டுநாழிகைக்கு முன்னாயினும், ஒரு நாழிகைக்கு முன்னாயினும், எடுத்த புஷ்பமே உத்தமம். மத்தியானத்தெடுத்த புஷ்பம் சிவபெருமானுக்கும் தேவர்களுக்கும பிதிர்களுக்கும் மனிதர்களுக்கும் ஆகாது.

உதயத்தில் நந்தியாவர்த்தப்பூ, வெள்ளெருக்கம்பூ உத்தமம். மத்தியானத்தில் அலரிப்பூ, தாமரைப்பூ, தும்பைப்பூ உத்தமம். சாயங்காலத்தில் மல்லிகைப்பூ, கருமத்தம்பூ, சண்பகப்பூ உத்தமம். அர்த்தராத்திரியில் கடப்பம்பூ, பொன்மத்தம்பூ, சிறுசண்பகப்பூ, பிச்சிப்பூ உத்தமம்.

விநாயகருக்குத் துளசியும், சிவபெருமானுக்குத் தாழம்பூவும், உமாதேவியாருககு அறுகும் நெல்லியும், வைரவருக்கு நந்தியாவர்த்தமும், சூரியனுக்கு வில்வமும், விஷ்ணுவுக்கு அக்ஷதையும், பிராமணருக்குத் தும்பையும் ஆகாவாம்.

திங்கட்கிழமை, சதுர்த்தி, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, அமாவாசி, பௌர்ணிமை, மாசப்பிறப்பு என்னுமிக் காலங்களிலே வில்வமெடுக்கலாகாது. ஆதலின இவையல்லாத மற்றைக்காலங்களிலே வில்வமெடுத்து வைத்துக்கொள்க. வில்வமரத்தினடியை அடைந்து நாடோறும் ஹரகரவென்னும் ஒலியோடு பிரதக்ஷிணஞ்செய்வோர் பாவத்தினின்று நீங்குவர். மரிக்கும்போது வில்வத்தடிமண்ணை உடம்பிற்பூசினோர் சிவபுரத்தையடைவர். வில்வபத்திரம சிவபெருமானது இச்சா ஞானக்கிரியை வடிவாயிருக்கும.

ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, திருவோணநக்ஷத்திரம், சத்தமி, அட்டமி, துவாதசி, சதுர்த்தசி, அமாவாசி, பௌர்ணிமை, விதிபாதயோகம், மாசப்பிறப்பு, பிராதக்காலம், சாயங்காலம், இராத்திரி என்னு மிக்காலங்களிலே துளசியெடுக்கலாகாது. ஆதலின் இவையல்லாத மற்றைக்காலங்களிலே துளசியெடுத்து வைத்துக்கொள்க. இரண்டிலே கீழேயுள்ள துளசிக்கதிர் எப்போதும் எடுக்கலாம்.

வில்வமும் கொக்கிறகுமந்தாரையும் ஆறுமாசத்திற்கும், வெண்டுளசி ஒருவருஷத்திற்கும், தாமரைப்பூ ஏழுநாளிற்கும் அலரிப்பூ மூன்றுநாளிற்கும வைத்துச்சாத்தலாம். (எ)

ஆதரவி னாலே யமலன் முடிக்கணிவித்
தோதித் துதியு முகந்து.

இ - ள். ஆதரவினாலே அமலன முடிக்கு அணிவித்து - சிர த்தையினோடுமே சிவபெருமானுடைய திருமுடியிலே அவ ரைத தீண்டுதற்கருகராகிய ஆதிசைவரைக்கொண்டு சாத்து வித்து,—உகந்து - இத்திருத்தொண்டுசெய்யும பெரும்பேறு பெற்றேனேயென்று மனமகிழ்ந்து,—துதியும் ஓதி - முப்பத்தி ரண்டிராகஙகளுள் அவவக்காலத்துக்கேற்ற இராகத்துடனே தோத்திரங்களைச சொல்லி. எ - று.

முப்பத்திரண்டிராகங்களாவன பைரவி, தேவக்கிரியை, மேகரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, ஸ்ரீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, லலிதை, தோடி, வசந்தம், ராமக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாக்ஷரி, காந் தாரி, சாரங்கம் என்பனவாம்.

வசந்தகாலவிராகம் காம்போதி, அசாவேரி, தன்னியாசி. அன்றியும் மாலையிராகம் கலியாணி, காபி, கன்னடம், காம் போதி. யாமராகம் ஆகரி. விடியவிராகம் இந்தோளம், இராம கலி, தேசாக்ஷரி, நாட்டை, பூபாளம். உச்சியிராகம சாரங்கம், தேசாக்ஷரி. அன்றியும் ஆகரி, இந்தோளம், இராமகலி, சாரங்கம், பூபாளநீக்கி நின்ற மற்றவை எக்காலத்துக்கும் பொதுமைய.

மிகமேலாகிய சிவஸ்தோத்திரங்கள் தேவாரம், திருவா சகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என் னும் அருட்பாக்களைந்துமாம். (அ)

நலங்கொளகி லாலு நறும்புகையுங் காட்டி
யிலங்கிடவா னெய்விளக்கு மிட்டு.

இ - ள். நலம்கொள் அகிலாலும் நறும் புகையும் காட்டி - நன்மை பொருந்திய காரகிலினாலும் சந்தனம் முதலிய பிற கந்

தவ க்கங்களினுலும் சுகந்த தூபம் பணிமாறப்பண்ணி,—இலங்கிட ஆன நெய் விளக்கும் இட்டு - பிரகாசிக்கும்படி கபிலை முதலிய பசுக்களினது நெய்யினுலே திருவிளக்குமிட்டு. எ-று.

குங்குலியம் இரண்டுபாகமும், அகிற்பொடி ஒருபாகமும், சந்தனப்பொடி மூன்றுபாகமும், சிறிது கர்ப்பூரப்பொடியோடு கூட்டி நல்ல தழலிலே இட்டுத் தூபம் பணிமாறப்பண்ணுக. இது மிதாரியெனப் பெயர்பெறும். இங்ஙனமன்றிக் குங்குலியமும் நெய்யுங்கூட்டியேனும், குங்குலியமும் வில்வக்கட்டைப் பொடியுங் கூட்டியேனும், குங்குலியமும் சந்தனப்பொடியும் செங்கழுநீர்க்கோட்டப்பொடியுங் கூட்டி நெய்கலந்தேனும், தூபங்கொடுக்க. இவையெல்லாம் ஒன்றாகக் கூட்டித் தூபங்கொடுத்தலுமாம். எட்குப்பொடி ஒருகூறும், குங்குலியம் இருகூறும், சந்தனப்பொடி மூன்றுகூறும், சிறிது கர்ப்பூரப்பொடியோடும் தேனோடுங்கூட்டி இடுவது உத்தமதூபம். இலாமிச்சம்வேர்ப் பொடி ஒருகூறும், குங்குலியம் இருகூறும், சந்தனப்பொடி மூன்றுகூறும், நெய் தேனோடு கூட்டி இடுவது மத்திமதூபம். குங்குலியமும் நெய்யுங்கூட்டி இடுவது அதமதூபம்.

தீபத்துக்குக் கபிலைநெய் உத்தமத்தினுத்தமம். மற்றைப்பசுநெய் உத்தமத்தின்மத்திமம். ஆட்டுநெய் எருமைநெய் உத்தமத்தினதமம். வெள்ளெள்ளினெய் மத்திமத்தினுத்தமம். மற்றையெள்ளினெய் மத்திமத்தின்மத்திமம். மரக்கொட்டைகளினெய் அதமத்தினதமம். தாமரைநூல் வெள்ளெருக்குநூல் பருத்திநூல் என்பவற்றுள், இருபத்தோரிழையாலேனும், பதினறிழையாலேனும், பதினொன்றிழையாலேனும், ஏழிழையாலேனும், கர்ப்பூரப்பொடி கூட்டித் திரிபண்ணுக. திரியிலெரியுஞ்சுடர் நாலங்குலவுயரமாயின் உத்தமம், மூன்றங்குலவுயரமாயின் மத்திமம், இரண்டங்குலவுயரமாயின் அதமம்.

சென்றாலயத்துட்டிருவலகிட்டே என்பது முதல் மூன்று திருக்குறளினுற் சொல்லப்பட்ட சிவபுண்ணியங்களின் மகி

மை "நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா நித்தலு
மெம் பிரானுடைய கோயில் புக்குப்—புலர்வதன்மு னலகிட்டு
மெழுக்கு மிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித—
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச் சங்கரா சயபோற்றி
போற்றி யென்று—மலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதி
யென்று மாரூரா வென்றென்றே யலறா நில்லே." எ - ம்.
"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி—யரும
பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து—
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல் லார்க்கு—
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே." எ-ம்.
"விளக்கினாற் பெற்ற வின்ப மெழுக்கினாற் பதிற்றி யாகுந்—
துளக்கினன் மலர்தொ டுத்தாற் றூயவிண் ணேற லாகும்—
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகு—
மளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளு மாறே." எ-ம்.
வருந் திருநாவுக்கரசுநாயனார் தேவாரங்களாலுணர்க. (௯)

செல்வத்தி னுக்கிசையச் செய்து திருப்பணியு
மல்லலறுத் தாளென் றழுது.

இ - ள். செல்வத்தினுக்கு இசையத் திருப்பணியும் செய்து- தன்னிடத்துள்ள செல்வத்துக்கேற்பத் திருப்பணியுஞ்செய்வித்து,—அல்லல் அறுத்து ஆள் என்று அழுது - மனங்கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்பக் கண்ணீர் சொரியக் காருண்ணிய சொரூபியாகிய சிவபெருமானே அடியேனுடைய சனனமரணத்துன்பங்களை நீக்கி அடியேனை ஆட்கொண்டருளுமென்று பிரார்த்தித்தழுது. எ - று.

சிவபெருமானுடைய திருவடிகளை அடையக்கருதிய செல்வர்கள் தங்களுடைய செல்வத்தை மூன்றுகூறு பண்ணி அவற்றுள் ஒருகூற்றைத் தங்கள் சீவனத்தின்பொருட்டு வைத்துக்கொண்டு மற்றையிரண்டுகூற்றையுந் திருப்பணியிலே செல

விடலவேண்டுமென்று சிவாகமஞ்செப்புதலால், செல்வத்தினுக்கிசையவென்றார். திருப்பணியுமென்ற உம்மையாற் பூசையுங்கொள்க. (௧௦)

தொழுதே யெழுதித் துகிலாக்கி யுள்ள
மழகா ரமலனடி யார்ந்து.

இ - ள். தொழுது - சிவபெருமானை வணங்கி,—உள்ளம் துகில் ஆக்கி அழகு ஆர் அமலனை எழுதி - தன்னுடைய மனசை ஒருபடமாக்கி அதிலே சின்மயமாகிய சாந்தைப் பூசிப்பாவனையாகிய தூரிகைக்கோலினாலே அந்தச்சிவபெருமானுடைய திருவுருவத்தையெழுதி,—அடி ஆர்ந்து - அவருடைய திருவடித்தாமரையினிடத்தாகிய ஆனந்தத்தேனைப் பருகி. எ - று.

குருவை வழிபடுமுறைமை யெழுகிருக்குறளா
லுணர்த்துகின்றார்.

புரிந்தே குரவ னடியிணையும் போற்றிப்
பரிந்தே யலர் தூய்ப் பணிந்து

இ - ள். குரவன் இணை அடியும் புரிந்து - ஆசாரியருடைய இரண்டுபாதங்களையும் விரும்பி—பரிந்து அலர் தூய்ப் பணிந்து போற்றி - அன்புடனே புஷ்பஞ்சாத்தி வணங்கித் துதித்து. எ - று. (௧௨)

ஏவுதன் முன்னே யியற்றிப் பணியறிந்து
நாவி னவின்றவ னாமம்.

இ - ள். ஏவுதல் முன்னே அறிந்து - ஆசாரியர் நித்திரை நீங்கி எழுந்திருந்து இன்னது செய்யென்று ஏவுதற்குமுன்னே தானெழுந்திருந்து ஸ்நானம்பண்ணி அநுஷ்டானஞ்செய்து முடித்துக்கொண்டு அவர் முன்னே வந்து நின்று;— அவன் நாமம் நாவில் நவின்று - அவருடைய திருநாமத்தை

பலமுறை நாவினாலுச்சரித்து,—பணி இயற்றி - அவருக்கு வேண்டுந்தொண்டுகளைச் செய்து. எ - று. (௧௩)

சிந்தனை செய்க சிவனிவனே யென்றுளந்துட
பந்தமறுப்பானைப் பரிந்து.

இ - ள். பந்தம் அறுப்பானைச் சிவன் இவனே என்று - பாசத்தை நீக்கும் ஆசாரியரைச் சிவபெருமான் இவரேயென்று—உளத்துள் பரிந்து சிந்தனை செய்க - மனதிலே அன்பினோடு பாவனைசெய்யக்கடவன். எ - று. (௧௪)

சிவனைக் குரவனெனச் சிந்தியே லிந்த
வவமதியா லாழ்வர வத்து

இ - ள். சிவனைக் குரவன் எனச் சிந்தியேல் - சிவபெருமானை ஆசாரியராகப் பாவியாதே,—இந்த அவமதியால் அவத்து ஆழ்வர் - பாவித்தவர் இந்த அவமதியினாலே நரகத்துன்பத்திலழுந்துவர். எ - று. (௧௫)

இட்டனெனக் காண்பரவ னேவலரை யேவலனென்
றிட்டனையார் காண்பா ரியம்பு

இ - ள். இட்டன் ஏவலரை அவன் எனக் காண்பர் - தன்னால் விரும்பப்பட்ட நாயனுடைய ஏவலாளரை அந்த நாயனாகப் பாவிப்பார்கள்,—இட்டனை ஏவலன் எனக் காண்பார் யார் இயம்பு - நாயனை ஏவலாளராகப் பாவிப்பவர் யாவர் சொல்லு. எ - று. (௧௬)

இதுகொள்கை யல்ல விதனை விடுக
மதிநிபுணர் வேண்டிடில் வரம்.

இ - ள். இது கொள்கை அல்ல - சிவபெருமானை ஆசாரியராகப் பாவிப்பது யுக்தமன்று;—மதிநிபுணர் வரம் வேண்டிடில்

இதனை விடுக-சாத்திரத்திலே வல்லவர்கள் நற்கதியையடைய விரும்பில் இந்தப்பொல்லாத புத்தியை விடக்கடவர். எ - று.

இம்மூன்று திருக்குறட்கருத்தும் "சிவனெனவே தேசிகனை யன்பரையுஞ் சிந்தி—யவனையிவ ராகநினை யல்" "சிவனெனவே தேவரையுஞ் சிந்தி சிவனை—யவரெனக்கண் டாரநிர யத் தார்" "அரையனெனக் காண்ப ரமைச்சை யமைச்சா—வரையனைக்கண் டாற்றுயர மாம்" என்னுஞ் சங்கற்பநிராகரணத் திருக்குறள்களானுமுணர்க. (கள)

முன்னூலி னிலலாப் பொருளைமொழி வாரேறு
றின்னா நிரயத் திழிந்து.

இ - ள். முன்னூலின் இலலாப் பொருளை மொழிவார் - மாணாக்கருக்கு வேதாகமங்களிலே பேசப்படாதபொருளைத் தங்கள மனசினாலேகற்பித்துச் சொல்லும் ஆசாரியர்கள்— இன்னா நிரயத்து இழிந்து ஏறார் - துன்பத்தைத்தரும் நரகத்திலே விழுந்து கரையேறாது வருந்துவார்கள். எ - று. (கஅ)

குருபன்னியை வழிபடுமுறைமை இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

ஆசாரி யன்மனைவி யையடி தீண டாதருச்சி
வாசார மலர்தூய் மதித்து.

இ - ள். ஆசாரியன மனைவியை மதித்து - ஆசாரியருடைய மனைவியாரை மனோன்மனியாராகப் பாவித்து,—அடி தீண டாது வாசம் ஆர் மலர் தூய அருச்சி—அவருடைய திருவடிகளைத் தீண்டாமல் தன்பெயரைச் சொல்லி மணநிறைந்த பூககளைப் பூமியிலே தூவி அருச்சித்து வணங்கு. எ - று.

வாசமென்பது கடைக்குறைந்து நின்றது. இக்கிருகத்தாசாரியனால் விதிப்படி மணஞ்செய்யப்படாமல் மோகத்தினாலே

கொள்ளப்பட்டவனை இங்ஙனம் அருச்சித்தலுஞ்செய்யாது இகழ்தலுஞ் செய்யாதொழிகவெனச் சிவாகமமோதுமென்றுணர்க. (௪௬)

அந்தயுகந் தோறுமடி தீண்டியருச் சிக்கைதகு
மிந்தக் கலியுகத்தே யாது

இ - ள். அடி தீண்டி அருச்சிக்கை - குருபன்னியை அடி தீண்டிப் பூசித்தல்—அந்த யுகந்தோறும் தகும - முந்திய கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் என்னும் மூன்றுயுகங்களிலுந் தகும்;—இந்தக் கலியுகத்து ஏயாது - இந்தக்கலியுகத்திலே தகாது. எ - று.

அடிதீண்டியருச்சிக்கை தகாதெனவே, தலைவகிர்தல எண்ணெய்வார்த்தல் முழுக்காட்டுதல் காலபிடித்தல்முதலியனவுந் தகாவென்றாராயிற்று. கற்புடைய மகளிரும் அழகிற்சிறந்த புன்மக்களைக்காணின் அவர்தங்கள் உறவினர்களாயினும் தங்கள் நிலை கலங்கி அவர்களையும் நிலை குலைப்பாராதலால், இவ்வாறு கூறினார். அது "தந்தையாயினும் விழைவிற்றமனுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனு—மைந்தராயினுமிகவும் வனப்புடைய ரெனிலவர்மேன் மடநல் லார்தஞ்—சிந்தைநடந்திடுதனாற் சாபமலர்க் கணைவேளிற் செவ்வி வாய்ந் தோன்—பைந்தொடியாரினிதமரும் வளகத்திற் றனிவருதல் பான்மை யன்றே." என்னும் காசிகண்டச்செய்யுளாலறிக. ()

குருபுத்திரர் முதலாயினோரை வழிபடுமுறையை
யுணர்த்துகின்றார்.

பணிக புதல்வர் பதமும் பரிவாற்
பணிகவவர் சுற்றமும் பார்த்து.

இ - ள். புதல்வர் பதமும் பரிவால் பணிக - ஆசாரியருடைய புத்திரரை விநாயகரும் கந்தருமாகப் பாவித்து அவா

கள்பாதங்களை அன்பினோடு வணங்கக்கடவன்;—அவர் சுற்றமும் பார்த்துப் பணிக - அவருடைய சுற்றத்தாரையும் சண்டேசுரராகப் பாவித்து வணங்கக்கடவன். எ - று. (உக)

சிவனடியாரை வழிபடுமுறைமை மூன்றுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

சிவநேசர் பாதம் வணங்கிச் சிறக்க
வவரேவல் செய்க வறிந்து.

இ - ள். சிவநேசர் பாதம் வணங்கி - புத்திரருஞ்சாதகருமாகிய சிவபத்தருடைய பாதங்களை வணங்கி,—அவர் ஏவல் அறிந்து சிறக்கச் செய்க - அவரவரேவல்களை அவரேவுமுன் குறிப்பாலறிந்து சிறக்கும்படி செய்யக்கடவன். எ - று.

சமயிகள் சாமானியசமயி விசேஷசமயியென இருவகையர். அவருள் ஆசாரியரால் திருநோக்கு முதலிய தீக்கையினாலே தீக்கிக்கப்பட்டுப் புறம்புள்ள சிவகைங்கரியங்களைச் செய்பவன் சாமானியசமயி. ஆசாரியரால் ஆகுதிபண்ணிச் சிவஹஸ்தம் வைக்கப்பட்டவன் விசேடசமயி. இப்படியே புத்திரரும் சாமானியபுத்திரர் விசேடபுத்திரரென இருவகையர். சாதகாசாரியருமிருவகையர். இவ்வறுவரும் உத்தமோத்தரவிசிட்டராகையால் அவரவர்தாரதம்மியமுணர்ந்து வணங்கி ஏவல்செய்கவென்பார் அறிந்தென்றார். ஆசாரியர் சந்நிதியிலே சேட்டரிருந்தால் கனிட்டர் வணங்குமுறைமை எங்ஙனமெனின், அப்பொழுது மானதமாக வணங்கிக்கொண்டு அவர் புறம்போ சென்றபின் காயத்தினால் வணங்கல்வேண்டுமென்றறிக. நைட்டிகாசாரியனைப் பிரமமாகவும் கிருகத்தாசாரியனைச் சதாசிவனாகவும் பாவித்தல்வேண்டும். (உஉ)

ஆராத காதலுற வன்ன மருத்துவித்துப
பேராத வின்னருளைப் பெற்று.

இ - ள். ஆராத காதல் உற அன்னம அருத்துவித்து-தெவிட்டாத விருப்பம் பொருந்த அவ்வடியார்களை அன்னுதிகளைப் புசிப்பித்து—போராத இன் அருளைப் பெற்று - நீங்காத இனிமையாகிய ஆசீர்வாதத்தைப் பெற்று. எ - று.

நான்குவேதங்களையும் ஓதியுணர்ந்த பிராமணர் நூற்றுவரைப் புசிப்பித்த பலம் ஒருசாமானியசமயியைப் புசிப்பித்தலாலாகும்; சாமானியசமயியைப் புசிப்பித்தலிற் பதின்மடங்குபலம் ஒரு விசேடசமயியைப் புசிப்பித்தலாலாகும்; விசேடசமயியைப் புசிப்பித்தலிற் பதின்மடங்குபலம் ஒருபுத்திரனைப் புசிப்பித்தலாலாகும்; புத்திரனைப் புசிப்பித்தலிற்பதின்மடங்குபலம் ஒருசாதகனைப் புசிப்பித்தலாலாகும்; சாதகனைப் புசிப்பித்தலினூறுமடங்குபலம் ஓராசாரியரைப் புசிப்பித்தலாலாகும் எனவறிக. (௨௬)

இன்றன்றோ வாக்கை யெடுத்த பலமடைந்தே
னென்றுமிசைப் பான்சமயி யே.

இ - ள். ஆக்கை எடுத்த பலம் இன்று அன்றோ அடைந்தேன் - சரீரமெடுத்ததினாலே பெறும் பயனை இன்றல்லவா பெற்றேன்—என்றும் இசைப்பானே சமயி-என்றிப்படிச் சற்காரவசனஞ் சொல்பவனே சமயியாவான். எ - று. (௨௭)

நிறுத்தமுறையானே புத்திரனிலக்கணம் நான்கு
திருக்குறளாலுணர்த்துகின்றார்.

விருப்பத் துடனே சமய விசேடம்
பரித்துப் புனலிற் படிந்து.

இ - ள். விருப்பத்துடனே சமய விசேடம் பரித்து-ஆதரவுடனே சமயதீக்ஷையையும் விசேஷதீக்ஷையையும் பெற்று—புனலில் படிந்து - சலத்திலே ஸ்நானம்பண்ணி. எ - று. (௨௫)

சிறக்கவே தர்ப்பணத்தைச் செய்துசிவ பூசை
மறப்பறவே செய்து மதித்து.

இ - ள். மதித்து - சிவாகமவிதியை நினைந்து—தர்ப்பணத்தைச் சிறக்கவேசெய்து - மந்திரதேவர் முதலாயினோர் தர்ப்பணத்தை விதிப்படி செய்து,—சிவபூசை மறப்பு அறவே செய்து - சிவார்ச்சனையை மறப்பின்றி முடித்து. எ - று. (உசு)

அங்கியினை யோமபித் தியானித் ததிதியர்க்கு
மங்கலத்தாற் பூசை வகுத்து.

இ - ள். அங்கியினை ஒமபி - அக்கினிகாரியஞ்செய்து,—தியானித்து - சிவத்தியானம்பண்ணி,—அதிதியர்க்கு மங்கலத்தால் பூசைவகுத்து-தமதாச்சிரமத்தின்கண்ணே பசித்து வந்த அதிதிகளுக்குப் பாததியாதி தூபதீபங்களால் பூசைசெய்து அன்னமூட்டி. எ - று.

அதிதி முன்னொருகாலும் அறியப்படாத பரதேசி. அவன் ஒருநாளிருந்தாற்றான் அதிதியெனப்படுவன். ஊரிலிருப்பவனையும் வேறொருநிமித்தத்தினால் வருகின்றவனையும் அன்னத்தின்பொருட்டு ஊர்தோறுந் திரிகின்றவனையும் அதிதியெனக்கொள்ளலாகாது. (உஎ)

வாரமுறத் தேசிகரு மாதவரு மேவியது
காரகரே புத்திரகர் காண்.

இ - ள். தேசிகரும் மாதவரும் ஏவியது - ஆசாரியரும் சாதகருமேவியதை—வாரம் உறக் காரகரே புத்திரகர் காண் - அன்பு பொருந்தும்படி செய்பவரேபுத்திரரென்றறி. எ - று.

புத்திரர் சாமானியபுத்திரர் விசேடபுத்திரரென இருவகையர். சமயதீக்ஷையும் விசேஷதீக்ஷையுமாத்திரம் பெற்றவர் சாமானியபுத்திரர்; அவ்விரண்டோடு நிர்வாணதீக்ஷையும்

பெற்றுச் சாதகாபிடேகமில்லாதிருப்பவர் விசேடபத்திரர். ஆதிசைவராலே நிரூபிக்கப்பட்ட புத்திரன் தனது நித்தியகர் மத்திலும் தனது பிராயச்சித்தத்திலும் தன்பொருட்டுச் செய்யப்படும் நைமித்திகத்திலும் அதிகாரியாவான்; பிறர்பொருட்டுச் செய்யப்படு நைமித்திகத்துக்கு அதிகாரியாகான். பரார்த்தத்திலே பிரதிட்டைக்கங்கமாகிய ஓமாதியிலும் அங்குரார்ப்பணமுதலிய கர்மத்திலும் சாதகபுத்திரரென்னுமிருவரும் அதிகாரிகளாவரென வறிக. (உஅ)

நிறுத்த முறையானே சாதகனிலக்கணம் ஏழு திருக்குறளானுணர்த்துகின்றார்.

தரித்துச் சமய விசேடநிரு வாணந்
தெரித்தபடி நித்தியமுஞ் செய்து.

இ - ள். சமய விசேடம் நிருவாணம் தரித்து - சமய விசேடம்நிருவாணமென்னும் மூன்றுதீக்ஷையையும் பெற்று— நித்தியமும் தெரித்தபடி செய்து - நித்தியகர்மத்தையும் நைமித்திககர்மத்தையும் சிவாகமம விதித்தபடி பண்ணி. எ - று.

சித்திவிரும் பிச்செய்து காமியமுந் தேசிகன்றாள்
பத்தியினாற் சென்று பணிந்து.

இ - ள். சித்தி விரும்பிக் காமியமும் செய்து - மூவகைச்சித்திகளையும் விரும்பிக் காமியகர்மத்தையும் பண்ணி,—தேசிகன் தாள் பத்தியினால் சென்று பணிந்து - ஆசாரியருடைய திருவடிகளை அன்பினோடு போய் வணங்கி. எ - று.

சித்தி மூன்றாவன உத்தமோத்தமசித்தி, உத்தமசித்தி, கனிட்டசித்தி என்பனவாம். வித்தியேசுரராதலும் உருத்திரராதலும் பிரமவிட்டுணு முதலிய தேவர்களாதலும் உத்தமோத்தமசித்தி. தேவர்களுக்கொப்பாகிய சரீரத்தையெடுத்து ஆகாசகமனம்பண்ணி அங்குள்ள போகங்களைப் புசித்துத் திரும்பி வரு

தல் உத்தமசித்தி. பிலத்துவாரத்திலே பாதாளத்திற்பிரவேசித்து அங்குள்ள போகங்களைப் புசித்துத் திரும்புதல் கனிட்டசித்தி. இச்சித்திகள் உலகராற்காணப்படாதனவெனவும் காணப்படுவனவெனவும் பரமெனவும் அபரமெனவும் வருமெனவுணர்க. இவைகளை இங்கே விரித்துரைக்கிற்பெருகும். காமியகாமமாவது புமரூபம், ஸ்திரீரூபம், ஸ்திரீபும்ரூபம் என்னும் மூவிததேவதைகளையும் செப தர்ப்பண பூசைகளினாலே சாந்நித்தியம்பண்ணிக்கொண்டு அவ்வாறே நாடோறும் அநுட்டித்தலாம். ஆசாரியரையேயன்றிச் சேட்டாசாரியர் முதலியோரையும் வணங்கல்வேண்டுமெனக. அவர்களை வணங்கலாகாக் காலமும் வணங்கும்போது கால் நீட்டலாகாத்திசையும் முறையே "வழியிடை நடக்கும்போது மலரினைக் கொய்யும் போதும்—விழுமியாக் கீயும் போது முத்தர வினையின கண்ணும்—மெழுதிடும் போதும் வாய்மை யியலினை யிதழின் கண்ணே—யமருறு மரசா பாற்சென் றடைந்தமாந் திருக்கும் போதும்." எ-ம். "புனலிடைமூழ்கும் போது கிரியையைப் புரியும் போது—மனலினை யோம்பும் போது மருச்சனை செய்யும் போது—மனையிடை யருந்தும் போது மலசல மாற்றும் போதும்—பனவரைக் குரவர் தம்மைப் பதம்பணி வதுபாங் கன்றே." எ-ம். "தேசிகன் றனைத் தேவர் திருவடி தன்னை யீச—னேசரைச் சந்தி தோறு நிருமலன் றனையர்ச் சிக்கும்—பூசுரர் தம்மைத் தந்தை தாய்தமைப் பணியும் போது—காசினைக் களைவார் நீட்டல் வடக்கினுங் கிழக்குங் காலே." எ-ம. வரும் அருணகிரிபுராணச் செய்யுட்களாலறிக. (௬௦)

அனுமதியைப் பெற்றேதம் மாச்சிரம மெய்தி
யுனியுட் குரவனடி யும்.

இ-ள். அனுமதியைப் பெற்றே தம் ஆச்சிரமம் எய்தி - அவ்வாசாரியரிடத்திலே அநுமதியைப் பெற்றுக்கொண்டு

தமது ஆச்சிரமத்துக்குப் போய்—குரவன் அடியும் உள் உன்னி - அவ்வாசாரியருடைய திருவடிகளையும் மனசிலே தியானித்து. எ - று.

உம்மையால் சேட்டாசாரியர் முதலியோரடியுங்கொள்க. ()

இரவுபக லில்லா விடத்திரண்டற் றோங்கும்
பரமசிவம் பாராமற் பார்த்து

இ - ள். இரவு பகல் இல்லா இடத்து - கேவலமும் சகலமும் இல்லாதவிடத்திலே—ஓங்கும் பரமசிவம் - சாக்கிராதீதமாகிய பரமசிவத்தை - பாராமல் - ஊனக்கண்ணினாலே பாராமல்—பார்த்து - ஞானக்கண்ணினாலே உள்ளபடி பார்த்து—இரண்டு அற்று - இரண்டறப் புணர்ந்து. எ - று.

ஞானக்கண்ணாற்சிவனை ஞானமாகிப் பார்க்கவேண்டுமென்பது "ஊனக்கண் பாச முணரா பதியைஞானக் கண்ணினாலன்றி" என ஆசிரியாதாமே இறைவனாற் பயனிற் கூறியவாற்றானுமறிக. (௩௨)

தூங்கி விழித்துலகங் கண்டு சுளித்துடலந்
தாங்குமதற்குச் சலித்து.

இ - ள். தூங்கி விழித்து உலகம் கண்டு - இப்படி நிட்டையிலழுந்தி விழித்தபோது உலகத்தைக் கண்டு—உடலம் சுளித்துத் தாங்கும் அதற்குச் சலித்து - தமது சரீரத்தை வெறுத்து அதனைத்தரித்தற்கு இளைத்து. எ - று. (௩௩)

நிற்பதல வாக்கையெனத் தேறிநில நீர்நெருப்பு
மற்றுமறு மென்றே மதித்து.

இ - ள். ஆக்கை நிற்பது அல எனத் தேறி - அந்தச்சரீரம் நிலையுடைத்தன்றென்று தெளிந்து—நிலம் நீர் நெருப்பு மற்

றும் அறும் என்றே மதித்து - அதற்குக் காரணமாகியபிருதிவி அப்புத் தேயு வாயு ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களும் அவ்வாறே அழியுமென்றறிந்து. எ - று. (௫௪)

அமலன் கமல மலரடிக்குற் றார்வந்
தமலமறுப் பாரசா தகர்.

இ - ள். அமலன் கமலமலா அடிக்கு ஆர்வம் உற்று - நிருமலராகிய சிவபெருமானுடையசெந்தாமரைமலர்போலுந் திருவடிகளிலே அன்பு பொருந்தி—தம் மலம் அறுப்பார சாதகா- தமமோடு சகசமாயுள்ள ஆணவமுதலிய மும்மலங்களையும் நீக்குவோரே சாதகர். எ - று.

சாதகரெனபது இம்மைக்கணணே சித்தியையும மறுமைக கண்ணே போகததையும் மோக்ஷததையும சாதிததடைதலாற பெற்ற பெயர். (௫௫)

மாணாக்கர் ஞானசாரியரையடையும் முறைமை யுணாத்துகின்றார்.

ஆய்ந்துகிரி யாவிதிவீ டாயாக் குரவனைவிட்
டாய்ந்தறிக வாய்ந்தவற்கா ளாய்

இ - ள். கிரியாவிதி ஆய்ந்து வீடு ஆயாக் குரவனை விட்டு - கிரியாகாண்டத்தைமாத்திரம் ஆராய்ந்து ஞானகாண்டத்தை ஆராயாத ஆசாரியனை விட்டு—ஆய்ந்தவற்கு ஆளாய் ஆய்ந்து அறிக - அந்தஞானகாண்டததை ஆராய்ந்த ஆசாரியரைத் தேடி அடைந்து அவருக்கடிமையாகி அவரிடத்திலே ஆராய்ந்து அறியக்கடவன். எ - று.

வண்டுகள் தாம் அடைந்த பூவினிடத்தே மதுவில்லையாகில் அதனை விட்டு மதுவுள்ள பூவைத் தேடியடையுமாறு போல மாணாக்கர்கள் தாம் அடைந்த ஆசாரியரிடத்திலே சிவ

ஞானமில்லையாகில் அவரை விட்டுச் சிவஞானமுள்ள ஆசாரியனைத் தேடியடையலாமென்று சிவாகமஞ்செப்புகையால், இவ்வாறு கூறினர். அது "விட்டுவிட் டொணறை யொன்று விரைமலா வண்டு தேடி—மட்டுமெட் டுண்டு தாமபின் மகிழ்தல் போற் குருக்க டம்மை—விட்டுவிட் டாகி லுமபோய் வியன் குரு மெய்யா னத்த—மட்டமட் டுணடு தாந்தம் வடிவுகாண் பனவு மென்றே" என்னுஞ் செய்யுளாலறிக. (௯௬)

இருவகையாசாரியரையுந் தியானிக்குமுறைமை யுணர்த்துகின்ருர.

மூந்திய தேசிகன்ருண முநதிநினை பிநதிநினை
சந்திதொறு மற்றையவன் ருள்.

இ - ள். சந்திதொறும - மூன்றுசநதியினும—மூந்திய தேசிகன் தாள முந்தி நினை - கிரியையுபதேசித்த முநதிய ஆசாரியருடைய பாதங்களை முனனே தியானமபண்ணு;—மற்றையவன் தாள் பிந்தி நினை - ஞானமுபதேசித்த பிநதிய ஆசாரியருடைய பாதங்களை அதற்குப் பினனே தியானம்பண்ணு. எ-று.

உரைத்ததிது உரைப்பதிதுவெனபதுணர்த்துகின்ருர்.

உரைத்தாம புதல்வ ரொருமூ வரையு
முரைப்பா மினிப்பொதுவு மோா.

இ - ள். புதலவர் ஒருமூவரையும உரைத்தாம் - மூவகைப் படும் மாணுக்கருடைய இலக்கணத்தையுஞ்சொன்னேம்,—இனிப் பொதுவும் உரைப்பாம் - இனிப் பொதுவிலக்கணத்தையுஞ்சொல்வாம்,—ஓர் - அதனையறி. எ - று. (௯௮)

மாணுக்கரிலக்கணமுற்றிற்று.

ஆ. திருக்குறள் - ௧௫௫.

மூன்றாவது

# பொதுவிலக்கணம்.

ஆசாரியருக்கு இன்றியமையாச் சைவாகமவுணர்ச்சி யுணர்த்துகின்றார்.

ஓதுகநா லேழுமிவற் றொன்று முணராதான்
போதகனே யல்லன் புவிக்கு.

இ - ள். நாலேழும் ஓதுக - ஆசாரியன் சைவாகமங்களிருபத்தெட்டையும் ஓதியுணரக்கடவன்;—இவற்று ஒன்றும் உணராதான் புவிக்குப் போதகனே அல்லன் - இவைகளுள் ஒன்றாயினும் ஓதியுணராதவன் ஆன்மாக்களுக்கு ஆசாரியனாவானே ஆகான். எ - று.

நாலேழுமென்பதன்கண் முற்றும்மையை "முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்" எனபதனால் எச்சவும்மையாக்கி, வழிநூலாகிய உபாகமங்களும் சார்புநூலாகிய பிரகரணங்களுமாகிய இவற்றையுங்கொள்க. (க)

ஒருதந் திரத்தினிரு காண்டத்தின் மூன்று
பொருளுமுணர்ந் தான்போ தகன்.

இ - ள். ஒரு தந்திரத்தின் - ஓராகமத்தின்கணுள்ள—இரு காண்டத்தின் - கிரியாகாண்டம் ஞானகாண்டம் என்னுமிரண்டு காண்டங்களையும் ஓதி—மூன்று பொருளும் உணர்ந்தான் போதகன் - அதன்பயனாகிய திரிபதார்த்தலக்ஷணத்தை யறிந்தவனே ஆசாரியனாவான். எ - று. (உ)

அல்லாற் சுலோக மொருகோடி மாராய
வல்லானுந் தேசிகனா வான்.

இ - ள். அல்லால் - அஃதன்றி,— சுலோகம் ஒரு நியுதம் ஆராய வல்லானும் தேசிகன் ஆவான் - சைவாகமங்களிலே கிரியாகாண்டம் ஞானகாண்டம் என்னுமிரண்டினும் ஒருலக்ஷங்கிரந்தமோதி உண்மைப்பொருளையுணரவல்லவனும் ஆசாரியனாவான். எ - று.

வல்லானும் என்பதன்கண் இறந்தது தழீஇய எச்சவும்மையை எதிரது தழீஇயவெச்சவும்மையாக்கி, ஒருலக்ஷங்கிரந்தம் ஓதமாட்டாதாரையின் ஐம்பதினாயிரங்கிரந்தமோதினவன் மததிமாசாரியனெனவும், இருபத்தையாயிரங்கிரந்தமோதினவன் கனிட்டாசாரியனெனவுங்கொள்க. விசேஷவித்தையாகிய சைவாகமத்தையோதல்வேண்டுமெனவே, அவவுணர்ச்சிக்கு இன்றியமையாக் கருவியாயுள்ள நிகண்டு காவியம வியாகரணம் தருக்கமுதலிய சாமானியவித்தைகளையும் கற்றுணர்தல் வேண்டுமெனக் கொள்க.

அன்றியும், தமிழ்வழங்குநிலத்தின்கண்ணே ஆசாரியராவோர் வடமொழிப்பயிற்சி பெரிதுடையராயினுங் கேட்போரெல்லார்க்கும் அஃதுண்மை கூடாமையால் தமிழினும் நிகண்டு கற்று இலக்கியவாராய்ச்சி செய்து பஞ்சலக்கணப் பயிற்சியுடையராய்த் தமிழ்ச்சித்தாந்தசாத்திரம்பதினான்கையுமுணர்ந்தாராகியும் தமிழ்வேதமாகிய தேவாரதிருவாசகங்களைப் பண்ணோடத்தியயனம்பண்ணி வல்லாராகியும் இருத்தல்வேண்டுமெனவுந்துணிக.

சித்தாந்தசாத்திரங்கள் பதினான்காவன திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்பனவாம். தமிழ்வேதங்களும் தமிழ்ச்சித்தாந்தங்களும் பசுகர

ணநீங்கிச சிவகரணமுறற உமைநாயன்மாாகளால அருளிச செயப்பட்டமையால் பதிவாகவெனவே துணியப்படும. இஃத றியாது பசுவாக்கென நினைப்பினும் நரகத்துன்பமெய்துதல் சத்தியமெனபது தெளிக. (ந.)

ஆசாரியனுக்குரிய கருமமுணாத்துகின்றூர்

இயற்றித்தா நித்தியாங கத்தினையு மென்று
மியற்றுவிப்பான தேசிகனென் றெண.

இ - ள். தேசிகன் - ஆசாரியனானவன —நித்தியாங்கத்தினை யும தான் என்றும் இயற்றி - நித்தியம் நித்தியாஙகம நைமித்தி கம நைமித்திகாங்கம் காமியம் காமியாங்கம என்னும் கா்மபே தஙகளனைத்தையும் தான் எப்பொழுதுஞ்செய்து—இயற்று விப்பான் என று எண - சாதகர் புத்திரகா சமயிகள் என்னும் மூவகைமாணக்கரையும அவரவரதிகாராநுகுணமாகிய கா்ம ங்களைச் செய்விப்பானென்றறி. எ - று.

உம்மையினலே ஒழிந்த காமங்களுங்கொள்ளப்பட்டன. ()

ஞானநுட்டானிகளுள் கிரியாநுட்டானத்தை விடுத்தற் குரியாரிவரென்பதும் உரியரல்லாதாரிவரென்பதும் உணர்த்துகின்றா.

போதகன கன்மம் புரிகவிம லங்கண்டுஞ்
சாதகர்விட் டாலுந தகும.

இ - ள். போதகன் விமலம் கண்டும் கன்மம் புரிக - ஆசாரி யன் ஞானநிட்டையைப் பொருந்தினனயினுங் கா்மாநுட்டா னத்தை விடாது செய்யக்கடவன்;—சாதகர் விட்டாலும் தகும் - சாதகாசாரியர் ஞானநிட்டையைப் பொருந்திற் கிரியா நுட்டானத்தை விடினுந்தகும். எ - று.

த்தியகருமமுதலியவற்றைப் பாலர்போல் அறவொழிவோம், உன்மத்தர்போல் ஒருகாற்செய்து ஒருகால் ஒழிவோமு, பிசாசர்போற் செயலிழப்பினின்று செய்வோருமென ஞானநிட்டையுடையோர் மூவியல்பினராவர். நித்தியகருமாதிகள் ஞானநிட்டையுடையோர்க்கு நித்திரை செய்வோர் கையிற பொருள்போலத் தாமே தவிரிற்குற்றமில்லை; அங்ஙனமன்றி அவர்தாமே அவற்றைத் தவிர்ப்பாராயின நரகத்து வீழ்தல் தப்பாதென்க. அது "ஞால நீதியு நான்மறை நீதியும்—பாலருன்மத்தா பிசாசரி லெனவு—முறங்கி னோனகை வெறும்பாக்கெனவுந்—தானே தவிரா தாளுற் புரியா—தொழிந்திடி னிரயத் தழுந்துத றிடமே." எனச் சங்கற்பநிராகரணத்திற் கூறியவாற்றானுமுணர்க. (ஈ)

ஆசாரியன் கிரியாநுட்டானத்தை விடலாகாமைக்குக் காரணமுணர்த்துகின்றார்.

விடினே குரவன் வினையினை யாரும
விடுவா வினையை விரைந்து.

இ - ள். குரவன் வினையினை விடின்—ஆசாரியன கிரியையை அநுட்டியாது விடின்,—யாருமே வினையை விரைந்து விடுவர்—மாணாக்கரெல்லாருங்கிரியையை உடனே விட்டுவிடுவர். எ-று.

மேற்கூறியவதனை வற்புறுத்துகின்றார்.

பெறினு மபேதம பிரமத் துலகத
துறுதியுனிச் செய்கவினை யும.

இ - ள். இப்படியிருத்தலால்—பிரமத்து அபேதம் பெறினும்—ஆசாரியன் சிவத்தோடு அத்துவிதமாயிருப்பினும்,—உலகத்து உறுதி உனி வினையும் செய்க—ஆன்மாக்களுக்கு உறுதியை நினைந்து கிரியையையும் விடாதநுட்டிக்கக்கடவன். எ-று.

அத்துவிதநிலையாவது ஆன்மபோதமும் கண்ணொளியும்போ லச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டற ஒற்றுமைப்பட்டு நிற்றல. பிரமமும் ஆன்மாவுமெனப் பொருளிரண்டில்லை ஒன்றேயெனக் கூறுவர் மாயாவாதிகள். சிவமும் ஆன்மாவும வேறுபொருளேனும், அவ்விருபொருளே இரண்டென வேறுமைப்படாது அத்துவிதமாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்குமெனவுங்கூறுவர் சைவசித்தாந்திகள். அத்துவிதமென்னுஞ் சொற்கு இரண்டின்மையெனப் பொருள் கொள்வர் மாயாவாதிகள்; இரண்டன்மையெனப் பொருள் கொள்வர் சைவசித்தாந்திகள். (௭)

சிவஞானிவிசிட்டம் இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

அநாதியமலன்சச்சி தானந்தன் சுத்த
னாதிசிவ னேகனுள னென்று

இ - ள். அநாதி அமலன் - இயல்பாகவே பாசங்களினீங்கி நின்றவனும் — சச்சிதானந்தன் - உண்மையறிவின்பவடிவின னுமாய சுத்தன் - பரிசுத்தனும் — என. ஆதி - எனக்கு முதலவனாகிய — சிவன் ஏகன் உளன் என்று - சிவனென்னும் ஒருவனென்று. எ - று. (௮)

இங்ஙனந்தே யுயிரா லயத்தி னபேத
முன் றோர்ந்தான் மெய்ஞ் ஞானிமல மற்று

இ - ள். அறிந்து - இப்படிச் சிவனை அனுசந்தானம்பண்ணி — மலம் அற்று - மலவாசனை நீங்கி — உயிர் ஆலயத்தின் அபேதம் அறிந்தானே மெய்ஞ்ஞானி - அந்தச்சிவன் ஆன்மா வாகிய ஆலயத்தினுள்ளே எள்ளினுளெண்ணெய்போல இரண்டறவியாபித்து நிற்குமுறைமையை உணர்ந்தவனே சத்திய ஞானி. எ - று. (௯)

சிவஞானிக்குச் சிவனநுக்கிரகஞ்செய்யுமுறைமை யுணர்த்துகின்றார்.

அறுபபனா மலத்தின் வலியனைத்து மெல்லா
மறுக்குநாண ஞானிக் கரன.

இ - ள். அரன் - சிவபெருமான்—எல்லாம் அறுக்கு நாள - சாவசஙகாரகாலததிலே—ஞானிக்கு மலத்தின் வலி அனைத தும் அறுப்பன் - அந்தசிவஞானிக்கு மலமாயாகாமஙகளின வலியனைததையுஙகெடுததது அவனைச சுவாநுபூதிமா னுக்குவா. எ - று. (௯0)

சிவனுககு அரனெனனும் பெயா வந்தமைககுக் காரணமுணாததுகின்றா.

உயிாககுண் மலமொடுக்க லாலே யுயிரு
ளுயிாக்கு மரனெனுமபே ருணடு

இ - ள். உயிாககுள மலம் ஒடுக்கலால் - ஆணமாயோடு சக சமாகிய மலத்தைப் பக்குவமறிந்து சங்கரிததலால்,—உயிருள உயிர்க்கும அரன் எனும பேர் உண்டு - உயிாக்குயிராயை சிவபெருமானுக்கும அரனென்னுந் திருநாமமுணடு. எவர் - உம்மையால் பஞ்சகிருததியஞ்செய்தல்பறறி முதலாய அனந்தேசுராமுதலாயினோககும அப்பெயருணடெ. எ - று.

நிறுதத முறையானே நித்தியாங்கம் பத்துத்திரு குறளாலுணர்த்துகின்றா.

பதினொன் கி ருநான்கு பஞ்சதசி தையின்
முதனாள் சயித்திரத்தின் முன்.

இ - ள். பதினொன்கு - கிருஷ்ணசதுர்த்தசி சுக்கிலசதுர்த்தசி யும்—இருநான்கு - கிருஷ்ணாட்டமி சுக்கிலாட்டமியும்—

சதசி - அமாவாசை பௌர்ணிமையும்—தையின் முதல் நாள்-தைமாசப்பிறப்பும்—சயித்திரத்தின் முன் - சித்திரைமாசப்பிறப்பும். எ - று. (கஉ)

ஆடிமுத னாளைப் பசிமுதனாள் பேரொளியைக்
கூடியர வங்கொள்ளு நாள்.

இ - ள். ஆடி முதல் நாள் - ஆடிமாசப்பிறப்பும்—ஐப்பசி முதல் நாள் - ஐப்பசிமாசப்பிறப்பும்—பேரொளியைக் கூடி அரவம் கொள்ளும் நாள் - சூரியசந்திரகிரகணங்களும். எ-று. ()

ஆறைந்தின் மாதத் ததிகநாள் குன்றுநாள்
கூறுசட சீதி முகம்.

இ - ள். மாதத்து ஆறைந்தின் அதிக நாள் குன்று நாள - பன்னிரண்டுமாதத்தும முப்பதுநாளினதிகப்பட்ட நாளும் குறைந்த நாளும்—கூறு சடசீதிமுகம - சொல்லப்படும் சடசீதிமுகமென்னுங காலவிசேடமும. எ - று.

மாததேதிவரையறை "கன்னியே ரூடு சிங்கங் கடகமே முப்பத் தொன்று—மன்னிய தண்டெண் ணான்கு மகரமே
'த் தொன்பான—சொன்னமீ னிறைசால் வில்லுச்சோர
முப்ப தாகு—மன்னமென னடையி னாளே யாதித்த
ரெங்கு நாளே." என்னுஞ் செய்யுளாலறிக. (க௩)

ஆனி முதனா ளசீதிபுரட் டாதிமுத
லேனையவிற் பங்குனியு மே.

இ - ள். அசீதி - சடசீதிமுகமாவது—ஆனி முதல் நாள் ஆனிமாசப்பிறப்பும்—புரட்டாதி முதல் - புரட்டாதிமாசப்பிறப்பும்—ஏனைய வில முதல் - மற்றைமார்கழிமாசப்பிறப்பும்—பங்குனி முதலும் - பங்குனிமாசப்பிறப்புமாகிய இந்நான்கு. எ - று.

சடசீதியென்பது அசீதியெனத் தலைக்குறைந்து நின்றது.()

என்ற விவற்றி னிருகுணிதஞ் செய்திடுக
வன்றைக் கடனனைத்து மார்ந்து.

இ - ள். என்ற இவற்றின் - என்று சொல்லப்பட்ட இப்புண்ணியகாலங்களிலே—அன்றைக் கடன் அனைத்தும - நீராடல் சிவபூசை ஓமம செபம் தியானம முதலாகிய நித்தியகாமங்களெல்லாவற்றையும்—ஆர்ந்து - அன்பு பொருந்தி—இருகுணிதம செய்திடுக - இருமடங்கு செய்க எ - று.

சடசீதிமுகநான்கிலும மாசம பிறந்த பதினாறுநாழிகை புணணியகாலம. கார்த்திகை மாசி வைகாசி ஆவணி என்னும் இநநான்கு மாசசங்கிரமமும விட்டுணுபதியெனபபடும. இவைகளிலே மாசம் பிறககுமுன பதினாறுநாழிகை புண்ணியகாலம. தக்ஷிணாயனமாகிய ஆடிமாசசங்கிரமத்திலே மாசம்பிறக்குமுன பதினாறுநாழிகை புண்ணியகாலம. உத்தராயணமாகிய தைமாசசங்கிரமத்திலே மாசம் பிறந்தபின் பதினாறுநாழிகை புண்ணியகாலம். சித்திரைவிஷு ஐப்பசிவிஷு என்னும் இரண்டினும் மாசம் பிறததறகு முனனெட்டுநாழிகையும் பின்னெட்டுநாழிகையும் புண்ணியகாலம. சூரியகிரகணத்திலே பு... லம புணணியகாலம்; சந்திரகிரகணத்திலே விமோசனம் புண்ணியகாலம.

உரையிறகோடலால், வியதிபாதம், சிவராத்திரி, அர்... தயம், மகோதயம் முதலாகிய பிற புண்ணியகாலங்க கொள்க.

பதினன் கிருநான்கிற் பட்டினி யுற்றே
விதியனைத்துஞ் செய்கவிரதத் தன்.

இ - ள். விரதத்தன் - விரதத்துனைவன்—பதினன்கு இ ன்கில் - மேற்கூறப்பட்ட சதுர்த்தசியிலும் அட்டமியிலு

பட்டினி உற்றே விதி அனைத்தும் செய்க - உபவாசியாயிருந்தே சிவபூசை முதலிய கருமங்களெல்லாவற்றையுஞ் செய்யக்கடவன். எ - று.

விரதத்தனென்றது பிரமசாரியையும் சந்நியாசியையும். (௧௭)

புசிக்க பயற்றினையு மில்வாழ்வான் போனம
புசிக்கலுமா நத்தமெனும போது.

இ - ள். இல்வாழ்வான் பயறறினையும் புசிக்க - இல்வாழ்வானானவன் அவ்விரண்டு திதியினும பயற்றைப் புசித்திருக்கக்கடவன்;—நத்தம் எனும் போது போனம புசிக்கலும ஆம் - அது கூடாதாகில் நத்தமெனனுங்காலத்திலே அன்னம புசித்தலுந் தகும். எ - று.

இல்வாழ்வானென்றது இல்வாழ்வானையும் வானப்பி-ததனையும். (௧௮)

உப்பு மிளகு மொழித்துண பதுதானே
யப்பொழுதைக் கேயருக மாம்.

இ - ள். அப்பொழுதைக்கு-அக்காலத்திலே—உப்பும மிளகும் ஒழித்து உணடுன அருகம ஆம - உப்பும் மிளகுங் கூட்டாமல் அவிசாக்கிட் புசித்தலே தகுதியாம். எ-று.

அட்டமியிற் பூசை யவிதி யாலியற்றி
முட்டா ததனை முடி.

இ - ள். அட்டமியில் பூசை - அட்டமிவிரதத்தை—அறிந்து-சிவாகமவிதியையுணர்ந்தபால் முட்டாது இயற்றி - அவ்விதிப்படி தவறாமல் அநு—அதனை முடி - [illegible]றுவருஷம் சென்றபின் அதனையுத்தி பண்ணு. எ - று.

ஒருநாளிலே அறுபதுநாழிகையுமிருக்கும் அட்டமி உத்தமம். அட்டமியோடு சிலநாழிகை நவமியும் வந்து கூடில், அது அபரவித்தை மத்திமம். சிலநாழிகை சத்தமிநின்று அதன்மேல் அட்டமி வந்து கூடில், அது பூர்வவித்தை அதமம். பிரதோஷகாலத்திலே கலைமாத்திரம அட்டமி வந்து கூடில், அன்று கொள்க. இந்தக்கிருஷ்ணாட்டமி ஒருமாதத்திலே இரண்டுபிரகாரம வரில், அவவிரண்டினும பூசிக்க. இவவட்டமி விரதத்திலே சூதகம் வரில், அன்றைக்கு உபவாசியாயிருந்து அடுத்த மாதத்து அட்டமியில் முன்னையமாதத்திற்பூசையும அம்மாதத்திறபூசையுமாகிய இரண்டும் ஒருங்கு நிறைவேற்றுக ஒருமாதத்திலே கிருஷ்ணாட்டமி வராதொழியில், மறறமாதத்திலே முந்திய அட்டமியில் அமமாதத்துப் பூசையும் பிந்திய அட்டமியிலே பூாவத்திலட்டமியில்லா மாதத்துப் பூசையும செய்க. பெண்கள் இருதுவாகில் தாமுபவாசிகளாயிருந்து நாயகரைக் கொண்டாயினும புததிரரைக் கொண்டாயினும பூசை செய்விக்க. (உ0)

அத்தமயத் தின்முன பதிறு றடிநிழலை
நத்தமெனுங் காலமென நாடு.

இ - ள். அத்தமயததின முன் பநறு அடி நிழலை - சூரியாஸ்தமயனத்துக்குமுன் கிழக்கேதிறுறடிநிழலாயின் அதனை—நத்தம் எனும காலம் எ நாடு - நத்தகாலமென்றறி. எ - று. (உக)

நித்தியாங்கததா வரும்பயனுணர்த்துகின்றூர்.

நித்திய வங்க மிற் கழித்தப் பாவமறும்
வைத்தபரி காரஞ்செய் வார்க்கு.

இ - ள். வைத்த பிரகாரம் செய்வார்க்கு - சிவாகமத்தில் விதிக்கப்பட்ட பிராயசித்தஞ்செய்துகொள்ளவேண்டினோ

க்கு—நித்தியவங்கம் இவை நிகழ்த்தப் பாவம் அறும் - இந்தநித்தியாங்கங்களை அனுட்டிக்கவே பாவம் நீங்கும். எ - று.

நித்தியாங்கங்களாவன நித்தியகர்மலோபம் வந்தபோது அதற்குப் பரிகாரஞ்செய்தலும், அட்டபந்தனசலனம் வந்தால் மீளவும் அவ்வட்டபந்தனஞ்சாத்தலும், மார்கழிமாதத்திற் கிருதாபிஷேகமுதலாகப் பனனிரண்டுமாசத்திலும் மாதபூசை பண்ணுதலும், சாம்வற்சரிகப்பிராயச்சித்தமாகப் பவித்திரஞ்சாத்தலுமுதலாயின. (உஉ)

நிறுத்தமுறையானே நித்தியகருமமுணர்த்தத் தொடங்கிச் சிவத்தியானமுணர்த்துகின்றார்.

எழுக வருணனெழு முன்கடிகை யைந்திற்
றெழுகசிவன் றாளைத் துதித்து.

இ - ள். அருணன் எழுமுன் கடிகை ஐந்தில் எழுக - சூரியனுதிக்குமுன் ஐந்துநாழிகையுண்டென்னுங் காலமாகிய பிராமீமுகூர்த்தத்திலே நித்திரைவிட்டெழுந்து,—சிவன் தாளைத் துதித்துத் தொழுக - இயன்ற சரீரசுத்தி செய்து விபூதி தரித்துக்கொண்டு தத்தமக்கு அதிகாரானுகுணமாகச் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துத் துதித்து வணங்கக்கடவர். எ - று.

இவைவந்துநாழிகை உத்தமமெனவும், மூன்றேழுக்கால் நாழிகை மத்திமமெனவும், உதயம் அதமமெனவுமறிக. இச்சந்தியாகாலத்தில் நித்திரை செய்தவன் அசுத்தன், அவன் ஒரு கருமத்துக்கும் யோக்கியனாகான், அவன் தான் செய்த புண்ணியத்தையிழப்பன், அவன் வீடு மயானத்துக்கொக்கும்.

அதிகாரானுகுணமாகத் தியானித்தலாவது, சரியாவான் உருத்திரமூர்த்தியையும், கிரியாவான் சதாசிவமூர்த்தியையும், யோகி

நாதத்தையும் விந்துவையுந் தியானித்தல். ஞானி சிவோகம் பாவனை பண்ணுக. (௨௫)

அவசியகருமமுணர்த்துகின்றார்.

மோசித் திரவியெழு முன்மலத்தைக் கொம்பினால
வாய்சுத்தி செய்கை வழக்கு.

இ - ள். இரவி எழுமுன் மலத்தை மோசித்து - சூரியனுதிக்குமுன் மலவிசர்க்கம்பண்ணிச் சௌசாசமனங்கள் செய்து— கொம்பினால் வாய் சுத்தி செய்கை வழக்கு - தந்தகாஷ்டத்தினாலே தந்தசுத்தி பண்ணுதல் முறைமையாம். எ - று.

மலமோசனவிதி:—தண்டு கமண்டலங்களை அகத்திலேனும் நீர்க்கரையிலேனும் வைத்துவிட்டு, திருக்கோயிலெல்லைக்கு நூறுவிற்கிடைதூரத்தினதாய், ஈசானதிக்கொழிந்த திக்கின் கண்ணதாய், வழி குழி நீர்நிலை கோமயவிடம் சாம்பரிடம் சுடலை பூந்தோட்டம் உழுதநிலம் அறுகம்பூமி மரநிழல் நாற்சந்தி முச்சந்தி களர்நிலம் கடற்கரை நதிக்கரை பசுமந்தை நிற்குமிடம் இடிவீழிடம் காற்றுச்சுழலிடம் புற்று அருவிபாயுமிடம் மலை என்னும் இவைகளல்லாததாய் உள்ள ஓரேகாந்தத் தலத்தையடைந்து, மௌனம் பொருந்தி, உபவீதத்தை வலக்காதிலே சேர்த்து, தலையையும் காதையும் வஸ்திரத்தினாலே சுற்றிச் சரீரத்தை அரையளவும் போர்த்து, பகலிலும் சந்தியாகாலங்களிலும் வடக்கையும் இரவிலே தெற்கையும் நோக்கி, புல் விரிந்த நிலத்திலே அவ்விடத்துள்ள தேவர் முனிவர் கணர் முதலியோரை அப்பாற் போகும்படி சொல்லி அவர்கள் போகும்பொருட்டு மூன்றுதரங்கைதட்டி யாகத்துக்காகாத புல்லிட்டு, தேவாலயத்தையும் சூரியனையும் சந்திரனையும் அக்கினியையும் பசுவையும் பிராமணரையும் சிவசின்னதாரிகளையும் ஸ்திரீகளையும் ஆண்குறியையும் கட்டத்தையும் பாராமல்,

நாசிநுனியைப் பார்த்துக்கொண்டிருந்து, கொட்டாவி தும்மல் உமிழ்தல் செய்யாது, மலசலமோசிக்க.

சலபாத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு சலமலவிசாக்கஞ்செய்யின் அந்தச்சலம் மூத்திரத்துக்குச் சமமாகும்; அந்நூற் சௌசஞ்செய்யிற் சாந்திராயணவிரதமநுட்டிக்க. உபவீதத்தைக் காதில் வைத்துக்கொள்ளாது விசாக்கஞ்செய்யிற் சௌசாசமனஞ்செய்தபின்பு ஸ்நானஞ்செய்து புனஸ்நானம்பண்ணி முன்பு தரித்த உபவீதத்தைக் களைந்துவிட்டுப் புதிய உபவீதந்தரிக்க. ஈரவஸ்திரத்தோடு விசர்க்கஞ்செய்யிற் புனஸ்நானஞ்செய்து மூன்றுபிராணாயாமம் பண்ணுக. சலமிருக்கு மிடத்தைப் பாராது விசர்க்கஞ்செய்யிற்சலமகப்பட்டபின்பு சௌசஞ்செய்து சசேலஸ்நானம்பண்ணுக. உத்தரீயத்தைத் தலையிற்கட்டிக்கொள்ளாது சலமலவிசாக்கஞ்செய்வோனுடைய தலை நூறாக வெடிக்கக்கடவதென்று தேவர்கள் சபிக்கின்றனர்.

சௌசவிதி:—ஓமத்துக்காகாத கோலினாலாதல் ஓடு துரும்பு முதலியவற்றினாலாதல் இடக்கையாற் குதத்தைத் துடைத்து, இடக்கையினாலே குறியைப் பிடித்துக்கொண்டு, வலக்கையிலே புற்றுமண்ணையேனும் சுத்தநிலத்துமிருத்துவாகிய மண்ணையேனுந் தரித்துக்கொண்டு, சிவதீர்த்தமலலாத நீர்க்கரையையடைந்து, நீருக்கு ஒருசாணுக்கு இப்பால் இருந்துகொண்டு, மண்ணை நீரிலே நனைத்துக் கரையிலே வலப்புறத்தில் வைத்துக்கொண்டு, மூன்றுவிரலாலள்ளிய மண்ணினாலும நீரினாலும் குறியை ஒருதரமும், குதத்தை ஐந்துதரமும், * இடக்கையை இடையிடையே ஒவ்வொருதரமும், பின்னும் இடக்கையைப் பத்துதரமும், இருகையையுஞ்சேர்த்து ஏழுதரமுஞ் சுத்திசெ

* ஐந்துதரஞ் சுத்திசெய்தலாலே அருவருப்பொழிவாகிய மனச்சுத்தி யுண்டாகாதாயின், மனச்சுத்தி யடையுமளவும் அவ்வாறே செய்க.

ய்து, சகனத்தைத் துடைத்து, கைகளையும் கால்களையும் முழங்கை முழங்கால் வரையும் ஒவ்வொருதரம் மண்ணினாற்கழுவிச் சுத்திசெய்து, சௌசஞ்செய்த இடத்தைச் சலத்தினால் அலம்பிவிட்டு, அவ்விடத்தினின்று நீங்கி, வேறோர் துறையிற் போய், வாயையும் கண்களையும் நாசியையும் காதுகளையும் கை கால்களின் நகங்களையுஞ் சுத்திசெய்து, எட்டுத்தரம் நீர் வாயிற்கொண்டு இடப்புறத்திற் கொப்பளித்து, வேட்டியை அரையிலுடுத்து, தலைக்கட்டின்றி, உபவீதத்தை முன்புபோலத் தரித்து, குடுமியை முடித்து, கிழக்கையேனும் வடக்கையேனும் நோக்கிக் குக்குடாசனமாக இருந்து, இரண்டு முழங்கால்களுக்கும் இடையே கைகளை வைத்துக்கொண்டு, மந்திரங்களுச்சரியாமல் ஒருதரமும் மந்திரங்களுச்சரித்து ஒருதரமுமாக இரண்டுதரம் ஆசமனம்பண்ணுக. குக்குடாசனமாவது இரண்டு பாதங்களையும் கீழே வைத்துக் குந்திக்கொண்டிருத்தல். மேற்கூறிய சௌசம் கிருகத்தன் செய்க; அதினிரண்டுமடங்கு பிரமசாரியும், மூன்றுமடங்கு வானப்பிரத்தனும், நான்குமடங்கு சந்நியாசியுஞ்செய்க.

சலவிசர்க்கஞ்செய்யின், மண்ணினாலும், நீரினாலும், குறியை ஒருதரமும், இடக்கையை ஐந்துதரமும், இரண்டுகைகளையுஞ் சேர்த்து மூன்றுதரமும், இரண்டுகால்களையும் ஒவ்வொருதரமும் சுத்திசெய்து, நாலுதரங் கொப்பளிக்க.

சிரித்துக்கொண்டும், பேசிக்கொண்டும், நின்றுகொண்டும், பக்கத்தைப் பார்த்துக்கொண்டும், குடுமியை அவிழ்த்துக்கொண்டும், குனிந்துகொண்டும், படுத்துக்கொண்டும், காலை நீட்டிக்கொண்டும், முழங்காலுக்கு வெளியே கையை வைத்துக்கொண்டும், தலையில் வேட்டியைக் கட்டிக்கொண்டும், காதில் உபவீதத்தை வைத்துக்கொண்டும், காலிற் பாதுகையை இட்டுக்கொண்டும், மேற்குத்திக்கையேனும் தெற்குத்திக்கையே

னும் பார்த்துக்கொண்டும் ஆசமனம் பண்ணலாகாது. தடாக
முதலியவற்றில் ஆசமனஞ்செய்யின, முழங்காலளவினதாகிய
சலத்திலே நின்று இடக்கையினாலே சலத்தைத் தொட்டுக்
கொண்டு வலக்கையினாலே ஆசமனம் பண்ணுக. முழங்கால
ளவினதாகிய சலந்திறகுறைந்தால் கரையையலம்பி அதிலி
ருந்துகொண்டு ஆசமனம் பண்ணுக.

வேதாத்தியயனம் தேவபூசை பிதிர்காரியம் ஓமம் செபம்
ஸ்நானம் போசனம் பானம் என்பவைகளுக்கு முன்னும் பின்
னும் ஆசமனம் பண்ணுக. சலமலவிசர்க்கஞ்செய்து சௌசம்
பண்ணினும், தூங்கினும், தும்மினும், எச்சிலுமிழினும், மூக்கு
நீர் சிந்தினும், புதிதாக உபவீதந் தரிக்கினும், எண்ணெயாயி
னும் நெய்யாயினுங் கலந்த மருந்துட்கொள்ளினும், மனைவி
யோடு கூடினும், எச்சில படினும், தன்னிற்றாழ்ந்தவரைத்
தீண்டினும், பூனை எலி பெருச்சாளி முதலியவற்றைத் தொடி
னும், அசுத்தப்பொருள்களைப் பார்க்கினும், சண்டாளர் முதலா
யினாரோடு பேசினும், வஸ்திரந் தரித்துக்கொள்ளினும், கோப
ங்கொள்ளினும், கொடுமொழி பேசினும், பொய் கூறினும்,
'திக்குப் போய் வரினும், பதிதன் பாசமயி முதலாயினோ
ரப்பார்க்கினும், ஆசமனம் பண்ணுக. (உச)

செய்யினு தித்தபின் றேவர் முகம்பாரார்
செய்கபரி காரந் தெளிந்து.

இ - ள். உதித்தபின் செய்யின் தேவர் முகம் பாரார் - சூரி
யனுதித்தபின் தந்தசுத்தி பண்ணில், தேவரும் முனிவரும்
பிதிரரும் அவன் செய்யுங் கன்மத்தைப் பிரசன்னராய்க்
கைக்கொள்ளாமற்பராமுகராயிருப்பார்கள்;—பரிகாரம் தெளி
ந்து செய்க - ஆதலால் அக்குற்றந்தீரும்படி பிராயச்சித்தத்தை
யறிந்து செய்க. எ - று. (உரு)

முத்திகாமிக்குத் தந்தகாட்டமுந் திக்குநியமமும் இரண்டு திருக்குறளாலுணாததுகின்றார்.

பெருவாகை நொச்சி பெருங்குமிழ் புன்கு
மிருநால் விரலுயர மெண்.

கருங்காலி யாயின் மருதுமிலங் கைத்தார்
பரிந்து வடதிசையைப் பார்த்து

இ - ள். இலம் கைத்தார் - இல்லறத்தை வெறுத்த முத்திகாமிகள்—பெருவாகை - பெருவாகையும்—நொச்சி - நொச்சியும்—பெருங்குமிழ் - பெருங்குமிழும்—புன்கு - புன்கும்—கருங்காலி - கருங்காலியும—ஆயில - ஆயிலும—மருதும் - மருதுமாகிய இவைகளிலொன்றை—இருநாலவிரல் உயரம் என் - எட்டங்குலமுள்ளதாகக் கொண்டு,—பரிந்து வடதிசையைப் பார்த்து - அன்பினோடு வடக்குத்திக்கை நோக்கியிருந்து—தந்த சுத்தி பண்ணிடுக - தந்தசுத்தியைப பண்ணக்கடவர். எ - று.

இல்லமெனபது இலமென இடைக்குறைந்து நின்றது. மேல்வருந் திருக்குறளிலுள்ள பண்ணிடுகதந்தசுத்தியென்ப இங்கே சேர்த்துப் பொருளுரைக்கப்பட்டது. (உசா) (உ௭

போககாமிக்குத திக்குநியமமுணர்த்துகின்றார்.

பணணிடுக தந்தசுத்தி பூர்வதிசை யைப்பார்த்தே
பண்ணிடுக விலலினிருப பார.

இ - ள். இல்லின இருப்பார் - இல்லறததிருக்கும போககாமிகள்—பூர்வதிசையைப் பார்த்தே பண்ணிடுக - கிழக்குத்திக்கை நோக்கியிருந்து தந்தசுத்தியைப் பண்ணக்கடவர்கள். எ-று.

தந்தகாட்டத்தை இருதயமந்திரத்தினாலே கழுவி, மௌனம் பொருந்திக் குக்குடாசனமாக இருந்துகொண்டு, மேல்வாய்ப்

பல்லின் நடுதொடங்கி இடப்புறத்தை முன்னே சுத்திசெய்து, பின் அந்தச்சேடத்தையும் முறையே சுத்திசெய்து, கீழ் வாய்ப்பல்லை வலப்புறந்தொடங்கி இடப்புறமீறாகச் சுத்திசெய்து முடிக்க. அதன்பின் வேறொருகழியை அளவிற்பிளந்து, பிளப்ப மூன்றாக ஆறுபிடகாம உணறுவளவாகவோட்டி நாக்கை வழித்து இடப்புறத்தில் எறிந்துவிடப் பனனிருதரங் கொப்பளிக்க. தந்ததாவனம பண்ணும்போது, சரியாவான் ஆதிரமந்திரத்தைச் சிந்தித்துக்கொண்டும், கிரியாவான் பாசுபதாத்திரமந்திரத்தைச் சிந்தித்துக்கொண்டும், யோகி அசபாமந்திரத்தைச் சிந்தித்துக்கொண்டும, ஞானி உள்ளதென்று தியானித்துக்கொண்டும பண்ணுக (உ-அ)

போககாமிக்குத தந்தகாட்டவிதி மூன்றுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

மருதிறலி மாச்சாதி சமபுமகி ழாத்தி
கிருகிக் குரித்தின்னுங் கேள்.

இ - ள். கிருகிக்கு - இல்வாழ்வானுக்கு—மருது-மருதும்—இறலி - இத்தியும—மா - மாவும்—சாதி-தேக்கும்—சம்பு-நாவலும—மகிழ் - மகிழும்—ஆத்தி-ஆத்தியும்—உரித்து - உரியனவாம்;—இன்னும் கேள் - இன்னுங்கேட்பாயாக. எ - று. ()

கடம்புவிளா நாயுருவி பிணடிகுருக் கத்தி
படர்ந்தெழுபூல் வேல்சம் பகம்.

இ - ள். கடம்பு - கடம்பும்—விளா - விளாவும்—நாயுருவி-நாயுருவியும்—பிண்டி - அசோகும்—குருக்கத்தி - குருக்கத்தியும்—படர்ந்து எழு பூல் - படர்ந்து எழுகின்ற பூலும்—வேல்-வேலும்—சம்பகம் - சண்பகமும் உரியனவாம். எ - று. (௩௦)

பன்னிரண் டங்குல நீளம் பருமைதா
னுன்னிற் சிறுவிரல்போ லும.

இ - ள். பன்னிரண்டு அங்குலம் நீளம் - இவைகள் பன்னிரண்டங்குலநீளம் உளவாதல்வேண்டும்,—பருமைதான் உன்னில் சிறுவிரல் போலும் - இருவருக்கும் கூறிய தந்தகாட்டங்களுக்குப் பருமை ஆராயுங்காற் சிறுவிரலளவாம். எ - று.

தந்தகாட்டம் நேரியதாய்த் தோலோடு பசப்புள்ளதாய்க் கணுவும் துளையும் இடைமுறிதலும் இல்லாததாயிருத்தல்வேண்டுமெனவறிக. (௩௧)

தந்தசுத்தி செய்யும்போது பாாத்தற்காகாதவை
யுணர்த்துகின்றூா.

இட்டமுடன் றந்த மிலக்கிடும்போ திற்பாரேல
கட்டநாய் நீசர் கரம.

இ - ள். இட்டமுடன தந்தம இலக்கிடும் போதில - பிரீதியோடு சந்தசுததி செய்யுமபோது—கட்டம் நாய் நீசர் கரம பாரேல் - மலத்தையும் நாயையும் நீசரையும் கழுதையையும பாராதே. எ - று.

இன்னும் எலும்பையும் ஆட்டையும இருதுமதியையும கருப்பவதியையும பார்க்கலாகாதென்க. (௩௨

பெண்களுக்குத் தந்தகாட்டவிலக்கணமும் தந்தகாட்ட
மாகாதன இவையென்பதும் இரண்டு
திருக்குறளாலுணர்த்துகின்றூர்.

நாலங் குலநீள நாரியர்க்கெல் லாமருகம்
பாலுளகா லாதியெலாம் பாற்று.

(1284) (6184)

இ - ள். நாரியாக்கு எல்லாம நாலங்குலம் நீளம் அருக்கு நானகுவருணைததுப் பெண்களுக்கும் இல்வாழ்வானுக்குக் கூறிய தந்தகாட்டங்கள் நாலங்குலநீளமுள்ளனவாய்த் தந்த சுத்தி செய்தற்குரியனவாம்;—பால் உள நால் ஆதி எலாம பாற்று - நாற்பான்மரங்கணமுதலாயின வெல்லாவற்றையும் தந்தசுததி செய்தற்குக் கருவியாகாவெனத தள்ளு. எ - று. ()

அத்தி பராய்திலலே யாலுமபா லுள்ளமரஞ்
சுத்தமல வென்றே துணி.

இ - ள். அத்தி பராய் தில்லை ஆலும் பால் உள்ள மரம் - அததியும் பராயும் தில்லையும் ஆலும பாலுளள மரங்களாய;— சுததம அல என்றே துணி - இவைகள் சுத்தமுடையனவல்ல வென்று துணி. எ - று.

இன்னும் தந்தசுததிக்குக் கருவியாகதன யவம, அரசு, நறு விலி, நாவஞ்சி, தருப்பை, நெல்லி, ஆவிரை, நாணல், முரு ஙகை, ஆமணக்கு, நகம, வேமபு, பேயத்தி, பட்டமரம், கை விரல், செஙகல், சாமபல், மணல், என்பனவாம். (௩௪)

போககாமி தந்தசுததி செய்யலாகாத நாட்கள்
இரண்டு திருக்குறளாலுணர்ததுகின்றா.

சங்கிரமத் தின்னுபரா கம்விதிபா தாதியினுந்
தங்குமவ ரில்லந் தனில.

மூந்து திதியாறு மும்மூன்று மைமமூன்றூந
தநதசுத்தி செய்யாமை சால்பு.

இ - ள். இல்லந்தனில் தங்குமவா - இல்லறத்திருப்பவர் கள்—சங்கிரமத்தின்-பன்னிரண்டுமாசசங்கிரமத்திலும்—உப ராகம்-சந்திரசூரியகிரகணங்களிலும்—விதிபாதம் ஆதியினும்-

விதிபாதம் முதலிய யோகங்களிலும்—முந்து திதி - பிரதமையினும்—ஆறு - சட்டியிலும்—மும்மூன்று - நவமியிலும்—ஐம்மூன்று - பதினைந்தாந் திதியாகிய அமாவாசை பௌர்ணிமைகளிலும்—தந்தசுத்தி செய்யாமை சால்பு - தந்தசுத்தி பண்ணுமை முறைமையாம். எ - று. (௧௫) (௧௬)

விலக்கிய நாட்களிற்றந்தசுத்தி செய்த வழிப்படுவ
குற்றமுணர்த்துகின்றார்.

விலக்கியநா ளிற்பல் விளக்கிற் குலமே
ழுலகக ணுறு மென்றே யறி.

இ - ள். விலக்கிய நாளில் பல் விளக்கில் - போககாமியானவன் மேல் விலக்கிய நாட்களிலே தந்தசுத்தி பண்ணுவானாயின்,—குலம் ஏழ் அலகண் உறும் என்றே அறி - அவனுடைய வமிசத்திலே உள்ளவர்கள் ஏழுதலைமுறை நரகத்திலே கிடந்து துயருறுவார்களென்றறி. எ - று. (௧௭)

விலக்கிய நாட்களிலே தந்தசுத்தி செய்யுமுறைமை
யுணர்த்துகின்றார்.

துய்யவிலை யாற்றந்த சுத்திசெய்து நாவழித்துத்
துய்யபுன லாற்சுத்தி செய்.

இ - ள். துய்ய இலையால் தந்தசுத்தி செய்து நா வழித்து - பரிசுத்தமாகிய அம்மரத்துப் பழுப்பிலைகளினாலே தந்தசுத்தி பண்ணி நாக்கை வழித்து,—துய்ய புனலால் சுத்தி செய் - சுத்தமாகிய சலத்தினாலே வாயைச் சுத்திபண்ணு. எ - று. (௧௮)

அவ்விலக்குக்குரியரல்லாரையுணர்த்துகின்றார்.

துறவிதா னெந்நாளுந் தந்தசுத்தி செய்க
மறுவிதனா லேவாரா து.

இ - ள். துறவிதான் எந்நாளும் தந்தசுத்தி செய்க - முத்தி காமி எந்நாட்களிலுந் தந்தகாட்டங்கொண்டு தந்தசுத்தி செய்யக்கடவன்;—இதனாலே மறு வாராது - இதனால் அவனுக்குக் குற்றமுண்டாகாது. (௩௯)

வாய்சுத்திசெய்யுமுறைமையுணர்த்துகின்றார்.

மலமோசித் தாற்சுத்தி வாயினுக் கெணகாற்
சலமோசித் தாற்பாதி தான்.

இ - ள். மலம் மோசித்தால் சுத்தி வாயினுக்கு எண்கால மலங்கழித்தால கை கால் சுத்திபண்ணிய பின்னர் எட்டுத்தரங்கொப்பளித்தால வாய்க்குச் சுத்தியாகும்;—சலம் மோசித்தால்பாதிதான - சலங்கழித்தால்நான்குதரங்கொப்பளித்தால சுத்தியாம். எ - று. (௪0)

அதோவாயுவை மோசிக்குமுறைமை யுணர்த்துகின்றார்.

விளையேல விசாக்கம் வினைபுரியுங் காலைக்
களைகபுறத் தெல்லை கலந்து.

இ - ள். வினை புரியும காலை விசாக்கம் விளையேல் - அநுட்டானம முதலிய கருமங்களைச் செய்யும்போது அதோவாயுவைக் கழியாதே;—புறத்து எல்லை கலந்து களைக - புறத்தெல்லையிலே போய்க் கழி. எ - று. (௪௧)

சுத்திசெய்யும் முறைமையுணர்த்துகின்றார்.

மண்ணாலு நீராலும வாய்க்கவே சுத்தியினைப்
பண்ணியபி னாசமனம பண்.

இ - ள். மண்ணாலும் நீராலும் வாய்க்கவே சுத்தியினைப் பண்ணிய பின் - மண்ணினாலும் நீரினாலும் வாய்க்கும்படி மூன்றுதரஞ் சுத்திசெய்த பின்னர்—ஆசமனம பண - ஆசமனம பண்ணு. எ - று.

வேட்டியுங் கௌபீனமும் கீழே விழுந்தால் அவைகளைத் தோய்க்க. (சுஉ)

ஸ்நானம்பண்ணுமுறைமை இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

ஒப்பரே நாயினுக்கங் கூனுடலின் மண்பூசி
முப்பொழுது மூழ்கார முயன்று.

இ - ள். ஊன் உடலின் முப்பொழுதும் முயன்று மண் பூசி மூழ்கார - தசை பொருந்திய சரீரத்திலே நவத்துவாரத்தி னும் புறப்படுவன மலமாதலால் அதனைச் சுத்திசெய்தற்பொ ருட்டு விதிப்படி சந்தியாகாலமூன்றினும் முயன்று மண் பூசி ஸ்நானம் பண்ணாதவர்கள்—நாயினுக்கு ஒப்பர் - நாயினுக்கு ஒப்பாவார்கள். எ - று.

மலையருகு, ஆற்றங்கரை, புண்ணியபூமி, பிரமவிருக்ஷத்தி னடி, தருப்பையினடி முதலிய சுத்தஸ்தானத்திலே எட்டங்கு லவளவின்கீழே அஸ்திரமந்திரத்தினாலே கிரகித்துக்கொண்ட மிருத்திகையே ஸ்நானமுதலியவற்றிற்குரித்து. (சுங)

நிசிதனினீ ராடற்க நீராடலு மாஞ்
சசிதனைச்சார்ப் பம்பரிசித் தால.

இ - ள். நிசிதனில் நீர் ஆடற்க - இரவிலே வாருணஸ்நா னம பண்ணொழிக;—சசிதனைச் சாப்பம் பரிசித்தால் நீ ஆடலும் ஆம் - சந்திரகிரகணம் வரின் வாருணஸ்நானம் பண் ணுதலுமாம். எ - று.

யஞ்ஞும் மாசப்பிறப்பு மகப்பேறென்பனவற்றிலும் இரா த்திரிஸ்நானஞ்செயற்பாலதென்றறிக. (சுச)

இரவிலே நீரெடுக்குமுறைமை மூன்றுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

பகலெடுத்த நீர்நிசியிற் பானதிக் காகும்
பகலெடா தார்க்குரைப்பாம பாங்கு

இ - ள். பகல் எடுத்த நீர் நிசியில் பானம் ஆதிக்கு ஆகும் - பகலிலெடுத்தநீரே இரவிலே பானம்பண்ணுதல் பாகபண்ணுதல் சிவபூசை முதலியவைகளுக்கு உரித்தாகும்;—பகல் எடாதார்க்குப் பாங்கு உரைப்பாம் - பகலிலெடாதவர்களுக்கு உபாயஞ்சொல்வாம. எ - று. (உரு)

காட்டிப புனன்முன் கனலினைநீ கொள்செமபொன் .
காட்டியுங்கொள் பொன்னுமிலாக் கால.

இ - ள். புனல் முன் கனலினைக் காட்டி நீ கொள் - இரவிலே சலசமீபத்தில் விளக்கைக் காட்டி அவ்வொளியின்சந்நிதியிலே நீரெடு;—பொன் காட்டியும் கொள் - விளக்கில்லையாயில் பொன்னைக் காட்டியுமெடு. எ - று.

பொன்னுமிலாக்கால் என்பது மேல்வருந்திருக்குறளோடு சேர்த்துப் பொருளுரைக்கப்படும். (உசா)

ஆயாமஞ் செய்தொருமூன் றன்னீர் கொளலுமாம
வாயாற் சொலிமந் திரம.

இ - ள். பொன்னும் இலாக்கால - பொன்னுமில்லையானால்,—மந்திரம் வாயால் சொலி ஒருமூன்று ஆயாமம் செய்து தொருமந்திரங்களையும் வாயினாலே உச்சரித்து மூன்றும் பிராணாயாமம் பண்ணி—அந்நீர் கொளலும் ஆம - இரவிலே சலமெடுக்கலுமாம. எ - று.

பிராணயாமமென்பது ஆயாமமெனத் தலைக்குறைந்து நின்றது. பிராணவாயுக்களைத் தடுத்தலே பிராணாயாமம். ஆயா

மம் - தடுத்தல். அது இரேசகம், பூரகம், கும்பகம் என மூன்றுபகுதியை உடைத்து. அவற்றுள் இரேசகமாவது அகத்துள்ள அசுத்தவாயுவைப் புறத்தே கழித்தல். பூரகமாவது புறத்துள்ள சுத்தவாயுவினாலே இயன்றமட்டுஞ் சரீரத்தை நிறைவித்தல். கும்பகமாவது கழித்தலையும் உட்கொள்ளலையும் ஒழித்து உள்ளே உள்ள வாயுவைத் தடுத்து நிறுத்தல். (௪௭)

அப்படியெடாதவழிப்படுங்குற்றமுணர்த்துகின்றார்.

இந்தமுறை யிற்கொளா நீரிரத்த மீசனுக்கு
மந்தணர்க்கு மாகா தது.

இ - ள். இந்த முறையில் கொளா நீர் இரத்தம - இரவிலே நதியும் நதி பாய்ந்த குளமுதலியனவும் விருத்திராசுரனுடைய இரத்தமாமென்று ஆகமஞ்சொல்லுகையினால், இந்த விதிப்படியெடாதசலம் இரத்தமாம்;—அது ஈசனுக்கும் அந்தணர்க்கும் ஆகாது - ஆகையால் அது சிவபெருமானுக்கும் பிராமணருக்குமாகாது. எ - று.

எனவே, இந்தவிதிப்படியெடுக்குஞ்சலம் இரத்தமாகாது சுசிபெறுமென்றதாயிற்று. விருத்திராசுரனுடைய இரத்தமாயிருத்தல் பொழுதடங்குதல் தொடங்கி விடியவைந்தேகால் நாழிகை வரைக்குமென்றறிக. (௪௮)

ஸ்நானஞ்செய்தற்கு அஞ்சியவழிப்படுங்குற்றம்
உணர்த்துகின்றார்.

போர்க்கஞ்சும பூபதிபோற் கீழ்ப்புகுவ ரேகுளிர்ந்த
நீர்க்கஞ்சு மாதவரு நெக்கு.

இ - ள். போர்க்கு அஞ்சும் பூபதிபோல் - யுத்தஞ்செய்தற்கு அஞ்சுகின்ற அரசனைப்போல—குளிர்ந்த நீர்க்கு அஞ்சும் மா தவரும் - சீதளசலத்தினாலே ஸ்நானம்பண்ணுதற்கஞ்சு

கின்ற பெருந்தவத்தினரும்—ஙெக்குக் கீழ்ப் புகுவர் - நரகத்திலே விழுந்துருகுவர்கள். எ - று. (௪௬)

வியாதியாளர் ஸ்நானம்பண்ணுமுறைமை இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

பொன்னினைவெந்நீரதனிற்போட்டதனின்மூழ்கவுடற்
கின்னலுடை யாபிணிக ளெய்ந்து.

இ - ள். உடற்குப் பிணிகள் எய்ந்து இன்னல உடையார - சரீரத்திலே வியாதிகள் பொருந்தப்பெற்று அதனாலே துன்பத்தையனுபவிக்கின்றவர்கள்—வெந்நீரதனில் பொன்னினை போட்டு அதனில் *மூழ்க - உட்டணசலத்திலே பொனனைப போட்டு அதிலே ஸ்நானம்பண்ணக்கடவர்கள். எ - று. (௫0)

மந்திரிக்க வேகா தசமந்தி ரந்தனைப்பின்
சந்தியினைச் செய்கதவ றாது.

இ - ள். ஏகாதச மந்திரந்தனை மந்திரிக்க - அதன்பின பதினொருமந்திரங்களையுமுச்சரித்து,—பின் சந்தியினைத் தவறாது செய்க - பின் சந்தியாவந்தனத்தைத் தவறாது பண்ணக்கடவர்கள். எ - று.

ஒருகாலத்தும் சந்தியாவந்தனம் விடலாகாதாதலால், தவறாது என்றார். (௫௧)

ஸ்நானஞ்செய்தற்கு அஞ்சலாகாதென்பதனை மேலும் வற்புறுத்துகின்றார்.

ஆதலினாற் சீதத்துக் கஞ்சாதே நீராடன்
மாதவர்க் கென்றும் வரம்.

இ - ள். ஆதலினல் - இப்படி வியாதியாளருக்குமாத்திரமே உட்டணசலஸ்நானம் விதிக்கையால்,—என்றும் சீதத்து

க்கு அஞ்சாது நீர் ஆடலே மா தவர்க்கு வரம் - எக்காலத்தும் குளிருக்கஞ்சாமல் நீராடுதலே பெருந்தவத்தினருக்குச் சிறந்ததாம். எ - று. (௫௨)

ஈரந்துவட்டுமுறைமையுணர்த்துகின்றார்.

மாற்றுகமெய்ந் நீருலர்ந்த வத்திரத்தி ரத்துகிலான்
மாற்றுத லென்றும வழு.

இ - ள். மெய் நீர் உலர்ந்த வத்திரத்து மாற்றுக - ஸ்நானம்பண்ணியபின் சரீரத்திலுள்ள ஈரத்தைத் தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினாலே துவட்டக்கடவர்;—ஈரத் துகிலால் மாற்றுதல் என்றும வழு - ஈரவஸ்திரத்தினாலே துவட்டுதல் எப்போதுங்குற்றமாம. எ - று. (௫௩)

அப்படித்துவட்டாவழிப்படுங்குற்றமுணர்த்துகின்றார்.

ஈரத் துகிலுடுபி னுவுங் கிணையுடலி
னீரத்தை மாற்று மிடத்து.

இ - ள். உடலின் ஈரத்தை மாற்றும் இடத்து - சரீரத்திலுள்ள ஈரத்தைத் துவட்டுமிடத்து—ஈரத் துகில் நாயின் நாக்கு இணை - ஈரவஸ்திரம் நாயினது நாக்குக்கொப்பாம. எ-று.

ஈரவஸ்திரந்தரித்துக்கொண்டு சந்தியாவந்தனம சிவபூசை முதலிய கருமஞ்செய்யினுங்குற்றமாம். இக்குற்றங்கள் மீளவும் ஸ்நானம்பண்ணில் நீங்குமெனறறிக. அது "ஈரத்துகிலுடுத்துச் செய்கரும நிட்பலமே—வாரியினமூழ் கிற்சுசியா வா" "காய்ந்ததோர் கோவணங்கைக்கொண்டு தரித்திடுக—காய்ந்தகலிங் கத்திணையுமே" என்னும் நித்தியகருமநெறித்திருக்குறள்களானுணர்க. நைட்டிகனும் சந்நியாசியும், மூற்றும் யாசகராய் வேறுவஸ்திரமில்லாதிருக்கில், ஈரவஸ்திரத்தைச் சூரியகுரூர மந்திரத்தினாலே உலர்ந்ததாக அபிமந்திரித்துப் பஞ்சாக்ஷரத்

திறலே புரோக்ஷித்துக் கவசத்திறலே தலையிற்போட்டு மகா முத்திரையும் தேனுமுத்திரையுங்காட்டி அத்திரத்திறலே தலையையும் இருதயத்திறலே மற்றையங்கங்களையுந் துவட்டிற் குற்றமில்லையென்றறிக. (ருச)

காபிலஸ்நானம் இதுவென்பதுணர்த்துகின்றார்.

காபிலமா நானந் தலைதொடங்கிக் காலளவு
மீரவுடை யாற்றுவட்டி னே.

இ - ள். தலை தொடங்கிக் கால் அளவும் ஈர உடையால் துவட்டின் - வியாதியிறலே ஸ்நானம்பண்ணமாட்டாதார தலை தொடங்கிக் கால் வரைக்கும் ஈரவஸ்திரத்திறலே துவட்டில்,—காபிலம் ஆம் நானம் - அது காபிலஸ்நானமென்று சொல்லப்படும். எ - று. (ருரு)

ஒருவஸ்திரந்தரிக்கலாகாக் காலங்களுணாததுகின்றார்.

நீராடுதலி னியதியிற் பூசனையி
லோராடை யாகாதென் றோர்.

இ - ள். நீர் ஆடுதலின - நீராடும்போதும்—நியதியில் - ந்தியாவந்தனஞ் செய்யும்போதும்—பூசனையில் - சிவபூசை செய்யுமபோதும்—ஓராடை ஆகாது எனறு ஓர் - ஒருவஸ்திரந் தரிக்கலாகாதென்றறி. எ - று.

எனவே, இரண்டுவஸ்திரந் தரித்தல்வேண்டுமென்றாயிற்று. மொழிந்தபொருளோடொனற வவவயின்மொழியாததனை முட்டின்றுமுடித்தலென்னுமுத்தியால் போசனம் பண்ணும் போதும் யோகம் புரியும்போதும் இரண்டுவஸ்திரமே தரித்தல் வேண்டுமெனக்கொள்க. வஸ்திரமிரண்டும் சுத்தமாய்க் கிழி பாதனவாய் வெள்ளியனவாய் உலர்ந்தனவாயிருத்தல் வேண்டும். நக்கினனும் கௌபீனமாத்திரமுடையனும் ஒருகரு

மழுஞ்செய்யலாகாது. கௌபீனந்தரித்துக்கொள்ளாது செய்யுங் கருமங்கள் பயன்படாவாம். (௫௬)

கூர்மாதனஞ்செய்யுமுறைமை நான்கு திருக்குறளா லுணர்த்துகின்றார்.

இருப்பைகருங் காலிவில வாதியினாற் செய்க
தருப்பணம்போற் கூர்மா தனம.

இ - ள். இருப்பை கருங்காலி வில்வம் ஆதியினால் - இருப்பை கருங்காலி வில்வமுதலிய மரங்களினாலே—கூர்மாதனம் தருப்பணம்போல் செய்க - கூர்மாதனத்தைக் கண்ணாடி போலச் செய்யக்கடவர். எ - று. (௫௭)

உன்னத நாலங் குலமென் றுணர்ந்திடுக
பன்னிரண்டென வேவிரிவைப் பார்.

இ - ள். உன்னதம் நால் அங்குலம் என்று உணர்ந்திடுக அவ்வாசனத்துக்கு உயரம் நாலங்குலமென்றறி;—விரிவை பன்னிரண்டு என்று பார் - விசாலம் பன்னிரண்டங்குலமென்றறி. எ - று. (௫அ)

முகமும் பதநான்கு முட்டியள விற்செய்
யகமதனுக் குக்குழிபோ லாக்கு.

இ - ள். முகமும் பதம்நான்கும் முட்டி அளவில் செய் அவ்வாசனத்தின் முகத்தையும் கால்களுன்கையும் ஒவ்வொன்றும் முட்டியாகப் பிடித்தால் எவ்வளவுண்டு அவ்வளவினதாகச் செய்;—அதனுக்கு அகம் குழிபோல் ஆக்கு - அதனுள்ளே குழிபோலத் தோண்டு. எ - று. (௫௯)

பருமைதா னேழங் குலம்பகாந்த முட்டிக்
குரிமைமா னுங்குலமென் றோர்.

இ - ள். பகாந்த முட்டிக்குப் பருமைதான் ஏழ் அங்குலம் - சொல்லப்பட்ட முட்டியளவாகச செய்யப்படும் ஐந்துறுப்புக் களுக்கும் சுற்றுப்பருமை ஏழங்குலமாம்;—உரிமை மானுங் குலம் என்று ஓ - இதற்குரிய அங்குலம் மானுங்குலமெ ன்றறி. எ - று.

மானுங்குலம் உத்தமம, மத்திமம், அதமம் என மூவகைப்ப டும. எட்டுநெல்லுக் குறுக்கே கொண்டது உத்தமம். ஏழு கொண்டது மததிமம. ஆறு கொண்டது அதமம். (சுO)

அநுஷ்டானத்துககுத திக்கு நியமம் இரண்டுதிருக் குறளாலுணாததுகின்றார்.

இருந்துகம டாதனத்தி லேவடபா னோக்கித்
திருந்தியிட வேநியதி செய்

இ - ள். கமடாதனத்திலே வடபால நோக்கி இருந்து - இந் தக்கூர்மாதனததிலே வடக்குநோக்கியிருந்து—நியதி திருந்தி யிடவே செய - அநுட்டானத்தை விதிப்படி பண்ணு. எ - று.

ஐ
எ
ஷ பூர்வதிசை நோக்கிப புரியலுமா மற்றிரண்டா
லாரவமுறச் செய்கைவிதி யன்று.

இ - ள். பூாவதிசை நோக்கிப் புரியலும் ஆம் - கிழக்கு நோக்கியிருந்து செய்தலுந்தகும;—ஆர்வம் உற மற்று இரண் டால் செய்கை விதி அன்று - விருப்பம் பொருந்தத் தெற்கும் மேற்குமாகிய மற்றையிரண்டுதிக்கை நோக்கிச் செய்தல் விதி தமன்று. எ - று.

தெற்கு நோக்கி ஆசமனஞ்செய்யில் மீளவும் நீராடிற் சுத்தி யாம். மேற்கு நோக்கி ஆசமனஞ்செய்யில் மீளவும் சுத்தாசம னம்பண்ணிற் சுத்தியாம். (சுஉ)

அநுஷ்டானத்துக்குரிய சலமுணர்த்துகின்றார்.

நுரை குமிழி நுண்புழுவு மில்லாத நீராற்
கருமம் புரிகை கடன்.

இ - ள். நுரை குமிழி நுண் புழுவும் இல்லாத நீரால் நுரையும குமிழியும் நுண்ணிய புழுவுமில்லாத சலத்தினாலே—கருமம புரிகை கடன - அநுட்டானம்பண்ணுதல்முறைமையாம். எ - று.

உம்மையால், வடித்தெடாதநீர், இழிகுலத்தார் தீண்டியநீர், கலங்கனீர், பாசிநீர், உவர்நீர், வெந்நீர், பழநீர், சேற்றுநீர், கூவனீர் முதலியனவும் ஆகாவெனக் கொள்க. (சுங)

ஆசமனவிதி இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

ஆசமனஞ் செய்க பவித்திரம்பூண் டங்கையினு
லாசமன முச்சிட்ட மன்று

இ - ள். பவித்திரம் பூண்டு அம் கையினுல் ஆசமனம் செய்க - தருப்பையினுலே செய்யப்பட்ட பவித்திரத்தையிட்ட அழகிய கையினுலே சுத்தாசமனம்பண்ணுக;—ஆசமனம் உச்சிட்டம் அன்று - அவ்வாசமனத்தினுலே அந்தப்பவித்திர உச்சிட்டதோஷமடையாது. எ - று.

பவித்திரம் அநாமிகையின் முதலிறைக்கும் இரண்டா இறைக்கும் நடுவே தரிக்க; இரண்டாமிறைக்கு மேற்படத் தக்கலாகாது. பவித்திரந்தரியாது செய்யும் கருமங்களெல்லா அசுத்தமாகும். பவித்திரந்தரித்துக்கொண்டு செய்யுங்கருமங் ளெல்லாம் ஒன்று ஆயிரமடங்காகப் பயன்படும். கரும நிறைவேறியபின் பவித்திரத்தை அவிழ்த்துக்கீழே போடுக முடிச்சோடு கீழேபோட்டால் உபவாசஞ்செய்க. பொன்னு லாயினும் ஒன்றாகச் சேர்க்கப்பட்ட பொன் வெள்ளி தாமிர

என்னும் மூன்றினுலுமாயினும் பவித்திரஞ்செய்து எப்போதும் அநாமிகையிற்றரித்துக்கொள்க. பவித்திரத்துடனேபோசனம்பண்ணில் அது உச்சிட்டதோஷமடையுமென்றறிக. ()

செய்பிரம தீர்த்தத்தா லாசமனஞ் செப்பியே
யுய்யவந்த தத்துவமூன் றும்.

இ - ள். வந்த தத்துவம் மூன்றும் உய்ய - தோன்றிய ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் எனனும் மூவித தத்துவங்களும் சுத்தியாகும்பொருட்டு—செப்பிப் பிரம தீர்த்தத்தால் ஆசமனம் செய் - அம்மந்திரங்களையுச்சரித்துப் பிரம தீர்த்தமாகிய அங்குட்டத்தினடி அதரத்திலே படும்படி ஆசமனம் பண்ணு. எ - று. (கூரு)

ஒப்பின்முடித்தலாற் பஞ்சதீர்த்தமுணர்த்துகின்றார்.

பஞ்சவித தீர்த்தத்தைப் பாங்காக வேயறிந்
தெஞ்சாதே கன்ம மியற்று

இ - ள். பஞ்ச வித தீர்த்தத்தைப் பாங்காகவே அறிந்து - ஐந்துவகைப்பட்ட தீர்த்தத்தைப் பகுத்துணர்ந்து—கன்மம் எஞ்சாதே இயற்று - அதனிலே செய்யப்படுங் கருமத்தை வழுவாதே செய். எ - று.

பஞ்சதீர்த்தங்களாவன தேவதீர்த்தம், ஆரிடதீர்த்தம், மானுடதீர்த்தம், பூததீர்த்தம், பிதிர்தீர்த்தம் என்பனவாம். அவற்றுள், தேவதீர்த்தமாவது கைந்நுதி. ஆரிடதீர்த்தமாவது விரல்களினிறைச்சந்தி. மானுடதீர்த்தமாவது கனிட்டிகைமூலம். பூததீர்த்தமாவது மணிக்கட்டு. பிதிர்தீர்த்தமாவது தர்ச்சனி அங்குட்டங்களினடு. தேவதீர்த்தத்தினுலே தேவர்களுக்கும், ஆரிடதீர்த்தத்தினுலே இருடிகளுக்கும், மானுடதீர்த்தத்தினுலே மனுக்களுக்கும், பூததீர்த்தத்தினுலே பஞ்சபூதங்களுக்கும்,

பிதிர்தீர்த்தத்திஞலே பிதிர்களுக்கும் தருப்பணஞ்செய்க. தருப்பணம் - உவப்பித்தல். (௯௬)

அநுட்டானக்கிரமத்தையறிந்துசெய்கவென
வுணர்த்துகின்ருர்.

மற்றைய கன்மங்க ளெல்லாம் வழுவறச்செய்
பற்றறுக்கு மீசனுரை பார்த்து.

இ - ள். மற்றைய கன்மங்கள் எல்லாம் - மற்றையநுட்டானகருமங்களெல்லாவற்றையும்—பற்று அறுக்கும ஈசன் உரை பார்த்து - உட்பற்றுப் புறபபற்றுக்களைநீக்கும் சிவபெருமானருளிச்செய்த சைவாகமத்திலே ஆராய்ந்தறிந்து—வழு அறச் செய் - குற்றமறச் செய. எ - று. (௯௭)

சந்தியாகாலங்களை நான்கு திருக்குறளாலுணர்த்துகின்ருர்.

உத்தமமாந் தாரகைவா னென்றவுத கங்கொடுக்கை
மத்திமமவா னத்துமறை யின்.

இ - ள். தாரகை வான ஒன்ற உதகம கொடுக்கை உத்தமமாம - பிராதக்காலசந்திக்கு ஆகாசத்திலே நக்ஷத்திரங்கள் தோன்றும்போதே தருப்பணஞ்செய்தல் உத்தமமாம்;—வானத்து மறையின் மத்திமம - அவைகள ஆகாயத்திலே மறைந்தபின் தருப்பணம்செய்தல் மத்திமமாம். எ - று. (௯

கனிட்டம கதிருதிக்குங் காலமந்திக் கந்தக்
கனிட்டம விசிட்டமெனக் காண.

இ - ள். கதிர் உதிக்கும காலம் கனிட்டம - சூரியன் பாதயஞ்செய்யும்போது தருப்பணஞ்செய்தல் கனிட்டமாம்;—அந்திக்கு அந்தக் கனிட்டம் விசிட்டம் எனக் காண் - சாயகாலசந்திக்கு அந்தக்கனிட்டகாலமே உத்தமமென்றறி. எ-று

அந்திக்கந்தக்கனிட்டமென்றது சூரியன் பாதி அஸ்தமயன ஞ்செய்யுங்காலத்தை. (சுகூ)

இடைதா ரகைவிண ணிலங்காத போது
கடையா முடுவிளங்குங் கால்.

இ - ள். தாரகை விண இலங்காத போது இடை - அஸ்தமயமானபின் ஆகாயத்திலே நக்ஷத்திரங்கள்தோன்றுமுன் தருப்பணஞ்செய்தல் மத்திமமாம்;—உடு விளங்கும் கால் கடை - நக்ஷத்திரங்கள் தோன்றும்போது தருப்பணஞ்செய்தல் கனிட்டமாம். எ - று. (எO)

உச்சிக்கு முன்மத் திமமுத்த மமுச்சி
யுச்சிக்குப் பின்கனிட்ட மோர்.

இ - ள். உச்சிக்கு முன் மத்திமம் - மத்தியானசந்திக்கு மத்தியானத்துக்குமுன் ஒருநாழிகையிலே தருப்பணஞ்செய்தல் மத்திமமாம்;—உச்சி உத்தமம் - பதினைந்தாநாழிகையாகிய மத்தியானத்திலே தருப்பணஞ்செய்தல் உத்தமமாம்;—உச்சிக்குப் பின் கனிட்டம் ஓர் - மத்தியானத்துக்குப்பின ஒருநாழிகையிலே தருப்பணஞ்செய்தல் கனிட்டமாமென்றறி. எ-று.

சந்திகளை அதிகாரபேதத்தினாலே பிரித்து மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்.

சந்திதா னொன்றே சமயிக்குப புத்திரற்குச்
சந்தியிரண் டந்தியொடு தான்.

இ - ள். சமயிக்குச் சந்திதான் ஒன்றே - சமயிக்குப் பிராதக்காலசந்தியொன்றே உரியது;—புத்திரற்கு அந்தியொடு தி இரண்டு - புத்திரனுக்குக் கீழ்ப்போன பிராதக்காலசந்தியன்றிச் சாயங்காலசந்தியுங்கூட இரண்டுசந்திகளுரியனம். எ - று. (எஉ)

சந்தியொரு மூன்றாகுஞ் சாதகற்குத் தேசிகற்குச்
சந்தியொரு நான்கெனவே தான்.

இ - ள். சாதகற்குச் சந்தி ஒருமூன்று ஆகும் - சாதகனுக்குக் கீழ்ப்போன அயவி ணடு சந்திகளேயன்றி மத்தியானசந்தியோடு மூன்றுசந்திகளுரியனவாம்;—தேசிகற்குச் சந்தி ஒரு நான்கு எனவே தான்-ஆசாரியனுக்குக்கீழ்ப்போன மூன்றுசந்திகளேயன்றி அர்த்தராத்திரிசந்தியோடும் நான்குசந்திகளுரியனவாம். எ - று. (எஉ)

நள்ளிருளி னர்ச்சிக்க நான்கா வதுசந்தி
யுள்ளத் தமலனடி யோர்ந்து.

இ - ள். நள் இருளில் நான்காவது சந்தி - ஆசாரியன் அர்த்தராத்திரியிலே நான்காஞ்சந்தியை முடித்து—உள்ளத்து அமலன் அடி ஓர்ந்து அர்ச்சிக்க - மனசிலே சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துப் பூசைசெய்து பின்புநித்திரைபண்ணக்கடவன. எ - று.

சந்திதோறுந் தியானிக்கற்பாலராகிய சந்தியாசத்திகளைச் சொல்வாம். சந்தியா என்பது செவ்வே தியானிக்கப்படுமெனப் பொருள்படும். சம் - செவ்வே. தியா தியானித்தல். கினியோடு உட்டணம்போலச் சிவத்தோடு அபினனையாய், சகலகருமசா..ிணியாயிருக்கும்சிவசத்தியே சந்தியை எப்பெயர்பெறும். அச்சிவசத்தி அபரை, பராபரை, பரை என மூத்திறப்படும். அபரை பிராமி, வைஷ்ணவி, ரௌத்திரி என மூன்றுவிதப்படும். பிராமி நூறுகோடியோசனைவிசாலங்கொண்ட இரத்தமண்டலத்திலே சகலலோகங்களையுஞ் சிருட்டித்தல் காரணமாகவிருப்பள். வைஷ்ணவி இரண்டுகோடியோசனை விசாலங்கொண்ட சுவேதமண்டலத்திலே சகலலோகங்களையும் இரட்சித்தல் காரணமாகவிருப்பள். ரௌத்திரி மூ

றுகோடி யோசனைவிசாலங்கொண்ட விந்துமண்டலத்திலே சங்கரித்தல் காரணமாகவிருப்பள். பராபரை ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி என மூவிதப்படும். பரை இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருஷ்ணை என நான்குவிதப்படும். சமயி பிராதக்காலத்திலே பிராமியை இருதயத்திற்றியானிக்க. புத்திரன பிராதக்காலத்திலே பிராமியை இருதயத்திலும், சாயங்காலத்திலே ரௌத்திரியைப் பிரமரந்திரத்திலுந் தியானிக்க. நிருவாணதீக்ஷை பெற்றுச் சாதகாபிடேகமில்லாதிருக்கும் புத்திரன் பிராதக்காலத்திலே பிராமியை இருதயத்திலும், மத்தியானகாலத்திலே வைஷ்ணவியை விந்துவிலும், சாயங்காலத்திலே ரௌத்திரியைப் பிரமரந்திரத்திலுந் தியானிக்க. சாதகாசாரியன் பிராதக்கால முதலியமூன்றிலும் பராபரையின் பேதமாகிய ஞானசத்தி கிரியாசத்தி இச்சாசத்திகளை முறையே இருதயம் விந்து பிரமரந்திரங்களிலே தியானிக்க. ஆசாரியன் பிராதக்காலமுதல் அர்த்தராத்திரியீறாகிய நான்குகாலங்களிலும் பரையின் பேதமாகிய இரத்தை சுக்கிலை அசிதை கிருஷ்ணை என்னுநால்வரையும் முறையே இருதயம் விந்து பிரமரந்திரம் துவாதசாந்தங்களிலே தியானிக்க. சந்தியைகளெனப்படும் சிவசத்திகளைத் தியானித்தபின்னர் அவைகளினுடைய வர்ணகிரணமண்டலத்தினுள்ளே தமதான்மாவுஞ் சரீரமும்பொருந்தி அந்தர்ப்பவித்தனவாகச் சிந்தித்து அதனைமேற்செயப்படுங் கருமம் சந்தியாவந்தனமெனப்படும். (௭௪)

சிவபூசை செய்தபின்னன்றி யாதொருகாரியமுஞ்
செய்யலாகாதென்பதுணர்த்துகின்றார்.

**சிவபூசை செய்யுமுன் மற்றொன்றுஞ் செய்யேல்**
**சிவபூசை செய்தபின் செய்.**

இ - ள். மற்றொன்றும் - யாதொருகாரியத்தையும்—சிவபூசை செய்யுமுன் செய்யேல் - சிவபூசை செய்யுமுன் பண்ணாதே;—சிவபூசை செய்தபின் செய் - சிவபூசை செய்தபின் பண்ணு. எ - று.

அரிபிரமேந்திராதிதேவர்கள் முன்பு சிவபெருமானைப் பூசித்தே பின்பு தங்கள் தங்கள் அதிகாரகிருத்தியங்களைச் செய்வர்களெனவறிக. (எரு)

பரார்த்தபூசைக்குக் காலவரையறை
யுணர்த்துகின்றார்.

அல்லும் பகலுமருச் சிக்கயா மந்தோறும்
வல்லாரல லாரியன்ற வாறு.

இ - ள். வல்லார் அல்லும் பகலும் யாமந்தோறும் அருச்சிக்க - உத்தமபூசை செய்ய வல்லவர்கள் இரவினும் பகலினும் சந்தி உபசந்திகளின் பேதத்தையறிந்து பரார்த்தபூசை செய்யக்கடவர்கள்;—அல்லார் இயன்றவாறு அருச்சிக்க - உத்தமபூசைசெய்ய வல்லவரல்லாதவர்கள் தங்கள் தங்களாலியன்றபடி மத்திமபூசையேனும் கனிட்டபூசையேனுஞ் செய்யக்கடவர்கள். எ - று. (எசு)

ஆன்மார்த்தபூசைக்குக் காலவரையறையுணர்த்துகின்றார்.

திரிகாலத் துமபூசை செய்கவிட்ட லிங்கத
தொருகா லிருகாலத் தும்.

இ - ள். இட்டலிங்கத்துப் பூசை-இட்டலிங்க பூசையை—திரிகாலத்தும் - மூன்றுகாலத்தினும்—இருகாலத்தும் - அது கூடாதாயின் இரண்டுகாலத்தினும்—ஒருகால்-அதுவுங் கூடாதாயின் ஒருகாலத்தினும்—செய்க - பண்ணக்கடவர். எ - று.

சிவபூசாதிகளுக்குச் சைவர் கொள்ளவேண்டுஞ்
சாத்திரவிதி இதுவென்பதுணர்த்துகின்றார்.

கொள்க சிவாகமத்திற் கூறுநெறி பூசாதி
கொள்ளலபுற நூல்விதியெல லாம்.

இ - ள். பூசாதி சிவாகமத்தில் கூறும் நெறி கொள்க - சைவர்கள்சிவபூசை முதலிய கருமங்களுக்குச் சைவாகமத்தில விதித்த விதியையே கைக்கொள்ளக்கடவர்கள்;—புற நூல் விதி எல்லாம் கொள்ளல் - அதற்கன்னியமாகிய வைதிகசாத்திரவிதிகளனைத்தையும் கொள்ளாதொழியக்கடவர்கள். எ-று.

மேலெய்தியதொருமருங்கு விலக்கிச் சிறப்புவிதி
யுணர்த்துகின்றார்.

அன்னிய நூலின் விதியவி ரோதமே
லுன்னேல் பழுதென் றுளத்து.

இ - ள். அன்னிய நூலின் விதி அவிரோதமேல் - அன்னியமாகிய வைதிகசாத்திரவிதிகள் சைவாகமத்துக்கு விரோதமாகாதனவும் அதிற்சொல்லப்படாதனவுமாயிருப்பின்,—பழுது என்று உளத்து உன்னேல் - அவைகளைக் குற்றமென்று மனத்திலே நினையாமற் கைக்கொள். எ - று. (எக)

சிவலிங்கபேதம் இரண்டுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

மண்சுட்ட மண்மரங்கல் வண்செம் பெழுவாயு
மொண்மை யிரத்தினந்தா னும்.

இ - ள். மண் - பச்சைமண்ணாலாகிய இலிங்கமும்,—சுட்ட மண் - சுட்டமண்ணாலாகிய இலிங்கமும்,—மரம் - மரத்தாலாகிய இலிங்கமும்,—கல் - சிலையாலாகிய இலிங்கமும்,—வண் செம்பு எழுவாயும் - அழகிய செம்பு முதலிய உலோகங

களாலாகிய இலிங்கமும்,—ஒண்மை இரத்தினந்தானும் - ஒளி பொருந்திய இரத்தினத்தாலாகிய இலிங்கமும். எ - று. (௮0)

மணிவாண லிங்கமிர தஞ்சுயம்பு தானு
மெணிலிவையொன் றுக்கொன்றேற் றம.

இ - ள். மணி - மணிலிங்கமும்,—வாணலிங்கம - வாணலிங்கமும்,—இரதம் - இரசலிங்கமும்,—சுயம்புதானும - சுயம்புலிங்கமுமாகிய—இவை - இவ்விலிங்கங்கள்—எணில ஒன்றுக்கு ஒன்று ஏற்றம - ஆராயுங்காலத்து உத்தரோத்தரவிசிட்டமாம. எ - று.

பசைமண்ணிலிங்கத்தினும் சுட்டமண்ணிலிங்கம் பதினமடங்கதிகம், அதினும் தாருலிங்கம் பதினமடங்கதிகம், அதினும் சைலலிங்கம பதினமடங்கதிகம், அதினும் உலோகஜலிங்கம நூறுமடங்கதிகம், அதினும் இரத்தினலிங்கம அனந்தமடங்கதிகம், அதினும் மணிலிங்கம இலக்ஷமடங்கதிகம், அதினும் வாணலிங்கம் கோடிமடங்கதிகம, அதினும் இரசலிங்கம கோடிமடங்கதிகம், அதினுமதிகம சுயம்புலிங்கம.

ஆயிரஞ்சாளக்கிராமத்துக்குச் சமம் ஒரு சிவநாபம, ஆயிரஞ்சிவநாபத்துக்குச் சமம ஒரு படிகலிங்கம பன்னிரண்டிலக்ஷம் படிகலிங்கத்துக்குச் சமம் ஒருவாணலிங்கம. (௮௧)

வாணலிங்கவிலக்கணம மூன்றுதிருக்குறளா
லுணர்த்துகின்றார்.

நன்மதை கங்கை யமுனை யெனநவிலு
மின்னவித நன்னதியி லேய்ந்து.

இ-ள். நன்மதை கங்கை யமுனை என நவிலும்-நருமதை கங்கை யமுனையென்று சொல்லப்படும்--இன்னவித நல்நதியில் ஏய்ந்து-இவ்விதமாகிய புண்ணியநதிகளிலே தோன்றி. எ று.

அயனரியு மண்டரு மற்றசுரர் தாமும்
பயனடையப் பூசைபண்ணி னார்.

இ-ள். அயன் அரியும் அண்டரும் மற்று அசுரர் தாமும் — [illegible] விஷ்ணுவும் தேவர்களும் அசுரர்களும் — பயன் அடையப் பூசை பண்ணினர் — இஷ்டசித்திகளைப் பெறும்பொருட்டு அச்சிவலிங்கங்களைப் [illegible] ஸ்தாபித்துப் பூசித்தார்கள் என்றவாறு. [illegible]

சிவலிங்கர் தம்மனைவர் சென்றமுறை பற்ற
சிவலிங்கர் [illegible]

இ-ள். சிவலிங்கத் தன்னில் அவர் [illegible] அவரவர் பூசிக்கப்பட்ட சிவலிங்கத்திலே அவரவருடைய ஆன்மத்தினை அடையாளம் வைத்து:— அந்த அந்த சிவலிங்கத்தினிலே [illegible] அவ்வவர் ஆன்மசிவலிங்கத்திலே [illegible] என்றவாறு.

[illegible] லிங்கம் [illegible] பெயர்க் காரணம் [illegible]
[illegible]
[illegible] லிங்கமாது [illegible]

[illegible]

[illegible] அதனாலே அவர்கள் பூசித்த தானங்களாவன இடங்கள் [illegible] கிரி, காளிகாஸ்த்தம், ஸ்ரீசைலம், காஞ்சிகாமகோடி, [illegible] [illegible] அஷ்டோத்தர முதலியனவாம்.

வாணலிங்கத்தைப் பரீக்ஷிக்குமுறைமை
யுணர்த்துகின்றார்.

துலையினிறுத் தான்முக்காற் பேதித்துத் தோன்றி
னிலையையம் வாணலிங்க மென்.

இ - ள். துலையில் முக்கால் நிறுத்தால் பேதித்துத் தோன்
றின் - துலைத்தட்டிலிட்டு மூன்றுதரம் நிறுத்தாற் சமமாயி
ராமற் பேதித்துத் தோன்றுமாயின்,—வாணலிங்கம் என
அதுவாணலிங்கமென்றறி;—ஐயம் இலை - அதற்குச் சந்தேக
மிலலை. எ - று.

எனவே, சமமாயிருக்கில் வாணலிங்கமன்றென்பதாயிற்று.
இங்ஙனமன்றியும நருமதையிலே முழுகியெடுத்த இலிங்கத்
தைத் திரும்பப் போட்டெடுக்கப் பின்னும அதுவே வரினும
வாணலிங்கமென்றறிக. (௮௬)

வாணலிங்கபேதத்தை இரண்டுதிருக்குறளா
லுணர்த்துகின்றா.

உத்தமமே நீர்க்குமிழிக் கொத்தெழுந்த வாணலிங்க
மத்திமமண் டத்திணையா வந்து.

இ - ள். நீர்க்குமிழிக்கு ஒத்து எழுந்த வாணலிங்கம உத்த
மம்-நீர்க்குமிழியைப்போலெழுந்த வாணலிங்கம் உத்தமம்;—
அண்டத்து இணையா வந்து எழுந்த வாணலிங்கம் மத்திமம்-மு
ட்டையைப்போல் வந்தெழுந்த வாணலிங்கம் மத்திமம். எ-று.

நுனியுமடியும் உருண்டு சிறுகியிருத்தலால் முட்டையையு
வமித்தார். (௮௭)

ஏற்றின்குட் டேறற் கனிட்ட மிடையெழுவா
யேற்றங் கனிட்டமிழுக் கீங்கு.

இ - ள். ஏற்றின் குட்டேறேல் கனிட்டம் - இடபத்தினது குட்டேற்றைப்போலெழுந்ததாயின் அது கனிட்டமாம்;—ஈங்கு - இங்கே சொல்லப்பட்ட மூன்றினுள்ளும்—எழுவாய் இடை ஏற்றம் - உத்தமலிங்கமும் மத்திமலிங்கமுஞ் சிறப்புடையனவாம்;—கனிட்டம் இழுக்கு - கனிட்டலிங்கஞ்சிறப்பில்லாததாம். எ - று. (௩௮)

நான்குவருணத்தார்க்கும் அதிகாராநுகுணமாக வாணலிங்கபேதமுணர்த்துகின்றார்.

வெண்மை சிவப்பு விளங்கியிடும் பொன்கருமை
யென்னுமிவை யந்தணர்முன் னெண்.

இ - ள். வெண்மை சிவப்பு விளங்கியிடும் பொன் கருமை எனனும் இவை - வெண்ணிறவிலிங்கம், செந்நிறவிலிங்கம், விளங்காநின்ற பொன்னிறவிலிங்கம், கருநிறவிலிங்கம் என னும இந்நான்கும்—அந்தணர் முன் எண் - முறையே பிராமணர்முதலிய நான்குவருணத்தார்க்கும் உரியனவாமென்றறி. எ - று. (௩௯)

விதிப்படி கிடையாவழிக் கொளளுமுறைமை யுணர்த்துகின்றார்.

அரிதேற்பொன் னந்த மனைவாக்கு மாகுங்
கரியசிவ லிங்கமெனக் காண்.

இ - ள். பொன் அந்தம் அரிதேல் - வெண்ணிறவிலிங்கமுதற் பொன்னிறவிலிங்கமிறுதியாகிய மூன்றினுள் ஒன்றாயினுங்கிடைத்திலதாயில்,—கரிய சிவலிங்கம் அனைவர்க்கும் ஆகும் எனக் காண் - கருநிறவிலிங்கமே சகலருக்குமுரித்தாமென்றறி. எ - று. (௪0)

நான்குவருணத்தார்க்கும் இலிங்கபீடபேத முணர்த்துகின்றார்.

எட்டிருமூன் றீரிரண்டு கோணமந்த ணாதியர்க்கு
வட்டமுறும் பீடமுழ வர்க்கு.

இ - ள். எட்டு இருமூன்று ஈரிரண்டு கோணம் அந்தணாதியர்க்கு - அட்டகோணபீடமும சட்கோணபீடமும சதுட்கோணபீடமும முறையே பிராமணா முதல் மூவருக்குமுரியனவாம்;—வட்டம உறும் பீடம் உழவர்கரு - வட்டமாகிய பீடம் சூத்திரருக்குரித்தாம். எ - று. (கக)

விதிப்படி கிடையாவழிக் கொள்ளுமுறைமை யுணர்த்துகினறா.

கிட்டாதேற் கோணங் கிழமை யனைவர்க்கும
வட்டமுறும் பீடம் வரம்.

இ - ள். கிழமை கோணம் கிட்டாதேல் - பிராமணர் முதலிய மூவர்க்கும் உரிமையாகிய கோணபீடங்கள் மூன்றினுள் ஒன்றாயினுங்கிடையாதாயின்,— வட்டம் உறும் பீடம் அனைவர்க்கும் வரம் - வட்டமாகிய பீடமே எல்லாருக்கு முரித்தாம். எ - று. (கஉ)

வாணலிங்கமகிமையுணாத்துகின்றார்.

நீங்காதே வாணலிங்கந் தன்னிலுறு நின்மலன்றன்
பாங்காகப் பூசையினைப் பண்.

இ - ள். நின்மலன் வாணலிங்கந் தன்னில் நீங்காதே உறும - நிருமலராகிய சிவபெருமான மற்றவிலிங்கங்களிற் போல வாணலிங்கத்தில் ஆவாகனாதி வேண்டாமல் அனவரதமும் நீங்காதேயிருப்பர்;—பாங்கு ஆகப் பூசையினைப் பண் -

ஆதலால் அவ்வாணலிங்கத்திலே சிவபெருமானை உரிமை யோடு பூசைசெய். எ - று. (கரு)

நான்குவருணத்தார்க்குஞ் சிவலிங்கபரிமாணம்
நான்குதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

பன்னிரண்டு பத்தொன்று பத்தங் குலவிலிங்க
மன்னுமறை யோர்க்கருக மாம்.

இ - ள். பன்னிரண்டு பத்தொன்று பத்து அங்குல இலிங்கம் - பன்னிரண்டும் பதினொன்றும் பத்துமாகிய மூவிதவங்குலவுயரத்தையுடைய இலிங்கம்—மன்னும மறையோர்க்கு அருகம் ஆம் - நிலைபெற்ற பிராமணர்க்குரியதாகும். எ - று. (கச)

ஒன்பானெட் டேழரையர்க் கோராறைந் தீரிரண்டு
மன்பார் வசியர்க்கே யாம்.

இ - ள். ஒன்பான் எட்டு ஏழ் அரையர்க்கு - ஒன்பதும் எட்டும் ஏழுமாகிய மூவகையங்குலவுயரத்தையுடைய இலிங்கம் அரசர்க்கு உரித்தாகும்;—ஓராறு ஐந்து ஈரிரண்டும் அன்பார் வசியர்க்கே ஆம் - ஆறும் ஐந்தும் நான்குமாகிய மூவகையங்குலவுயரத்தையுடைய இலிங்கம் அன்பு பொருந்திய வைசியருக்கு உரித்தாம். எ - று. (கரு)

சூத்திரர்க்குமூன்றிரண்டோரங்குலம்பீடந்தொடங்கிப்
பார்த்தளக்கை யெவ்விடத்தும் பாங்கு.

இ - ள். மூன்று இரண்டு ஓரங்குலம் சூத்திரர்க்கு - மூன்றும் இரண்டும் ஒன்றுமாகிய மூவகையங்குலவுயரத்தையுடைய இலிங்கம் சூத்திரருக்கு உரித்தாம்;—எவ்விடத்தும் பீடம் தொடங்கிப் பார்த்து அளக்கை பாங்கு - இங்ஙனங்கூறிய நான்கிடத்தினும் இலிங்கத்தைப் பீடந்தொடங்கிப் பார்த்தளத்தலே விதி. எ - று. (கசு)

முந்தியநான் குத்தமமே மூன்றொன்று மத்திமகள்
ளந்தியத்து நான்குமத மம்.

இ - ள். முந்திய நான்கு உத்தமமே - நான்குவருணத்தாக்கும முறையே முதற்கட்கூறிய பன்னிரண்டு ஒன்பது ஆறு மூன்று என்னும் நான்கும் உத்தமமாம்;—கள் மூன்று ஒன்று மத்திமம் - இடைக்கட்கூறிய பதினொன்று எட்டு ஐந்து இரண்டு என்னும் நான்கும் மத்திமமாம்;—அந்தியத்து நான்கும் அதமம் - கடைக்கட்கூறிய பத்து ஏழு நானகு ஒன்று என னும் நான்கும் அதமமாம். எ - று.

இவற்றின் மேறபட்ட இலிங்கத்தைப் பரார்த்தமாகத் தாபித்துப் பூசிக்க. (கஎ)

பூசித்த இட்டலிங்கத்தை விடுத்தவழிப்படுங்குற்றம்
இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

கைக்கொண்ட லிங்கத்தைக் கைத்தழகு கூரிலிங்கங
கைக்கொள்ளேல் வேண்டிற் கதி.

இ - ள். கதி வேண்டின்-முத்திபெறவேண்டுவையாகில்,—கைக்கொண்ட இலிங்கத்தைக் கைத்து - நீ ஆசாரியரிடத்திலே எழுந்தருளப்பண்ணிய இலிங்கத்தை வெறுததுவிட்டு—அழகு கூர் இலிங்கம் கைக்கொள்ளேல் - அழகுபொருந்திய வேறிலிங்கத்தை எழுந்தருளப்பண்ணுதே. எ - று. (கஅ)

கொண்டானை விட்டுருவங் கூர்ந்தானைக் கூடியிடு
மொண்டொடிக்குண் டோமே லுலகு.

இ - ள். கொண்டானை விட்டு - தன்னை விவாகஞ்செய்த நாயகனை அழகிலியென்று வெறுத்துவிட்டு—உருவம் கூர்ந்தானைக் கூடியிடும் ஒண் தொடிக்கு - அழகு பொருந்திய வே

ஒருவனைப் புணரும் பெண்ணுக்கு—மேலுலகு உண்டோ - மேலுலகங் கிடைக்குமோ கிடையாது. எ - று.

தான்கைக்கொண்ட இலிங்கத்தைச் சிறப்புடையதன்றென்று வெறுத்துவிட்டுச் சிறப்புடைய வேறிலிங்கத்தைப் பூசிப்பவனுக்கு முத்தி கிடைக்குமோ கிடையாது என்னும் பொருளபட நிறகையால், இது பிறிதுமொழிதலென்னுமணி. (கக)

பூசித்த இலிங்கத்தை விடாது வேறிலிங்கமும்

பூசிக்கு முறைமையுணர்த்துகின்றார்.

மற்றையொருலிங்கத்தின் வாஞ்சையுறின்முன்னிலங்க
பற்றொழியேன் மூன்றிலிங்கம் பாங்கு. [ப்

இ - ள். மற்றை ஒரு லிங்கத்தின் வாஞ்சை உறில்-சிறப்பினையுடைய வேறிலிங்கத்திலே விருப்பமுண்டாயின்,—முன் இலிங்கப் பற்று ஒழியேல் - முன்னேயெழுந்தருளப்பண்ணிய இலிங்கததை விட்டுவிடாதே;—மூன்று இலிங்கம் பாங்கு - அவ்விலிங்கத்தோடு விரும்பிய இலிங்கத்தையும் வேறொரிலிங்கத்தையுங்கூட்டி அமமூன்றிலிங்கத்தையும் பூசித்தலேதகுதி. எ - று. (௧00)

பூசிக்கலாகும் இலிங்கததொகையும் ஆகாத இலிங்கத்

தொகையுமுணர்த்துகின்றார்.

ஒன்றுமூன் றைந்து முரித்தர்ச் சனைக்குநான்
கென்றுமிரண டெடபிணிக்கு மேது.

இ - ள். அர்ச்சனைக்கு ஒன்று மூன்று ஐந்தும் உரித்து - சிவபூசைக்கு ஓரிலிங்கமும மூன்றிலிங்கமும் ஐந்துலிங்கமும் உரித்தாம்;—நான்கு இரண்டு என்றும் பிணிக்கும் ஏது - நான்கிலிங்கமும் இரண்டிலிங்கமும் எப்போதும் வியாதிக்குக் காரணமாம். எ - று.

ஒரிலிங்கம் பூசிக்கில் முத்தியுண்டாம். இரண்டிலிங்கம் பூசிக்கில் வியாதியுண்டாம். மூன்றிலிங்கம் பூசிக்கிற் புத்தி முததி இரண்டுமுண்டாம். நான்கிலிங்கம் பூசிக்கில் ஆயுவும் செல்வமும் கீர்த்தியும் நசிக்கும். ஐந்திலிங்கம் பூசிக்கிற் பஞ்சமகாபாதகம் நீங்கும். ஆறிலிங்கம் பூசிக்கில் மரணமுண்டாம். ஏழிலிங்கம பூசிக்கிற் பவநாசமாம். எட்டிலிங்கம் பூசிக்கில் வியாதியும் சததுருவுமுண்டாம். ஒன்பதிலிங்கம் பூசிக்கின் இட்டமும் சிவலோகமும் உண்டாம். (௪0௩)

ஆசாரியனையும் சிவலிங்கத்தையும் ஆராயுங்காலமுணர்த்துகின்றார்.

தேசிகன் றன்னைச் சிவலிங்கந் தன்னையுமுன்
னாசறவா ராய்ந்ததன்பின் கொள்.

இ - ள். முன் - தீக்ஷை பெறுதற்கு முன்னும் சிவபூசையெழுந்தருளப்பண்ணிக்கொள்ளுதற்கு முன்னும்—தேசிகன றன்னைச் சிவலிங்கந்தன்னையும் - ஆசாரியனையும் சிவலிங்கத்தையும—ஆசு அற ஆராய்ந்து - குணங்குற்றங்களைப் பெரியோர்கள் பலருடனே சந்தேகவிபரீதமற ஆராய்ந்துகொண்டே—அதனபின் கொள் - அதன்பின்பு சற்குருவென்று துணியப்பட்டவனிடத்திலே தீக்ஷைபெற்று நல்லிலிங்கமென்று துணியப்பட்ட உடையவரை எழுந்தருளப்பண்ணிக்கொள். எ-று.

கொண்டபின் இகழ்ந்தவழிப்படுங்குற்றமுணர்த்துகின்றார்.

கொண்டதன்பி னாய்ந்துருவ மின்மைகுண மின்மையுங்
கண்டுவிடு வார்க்குண்டோ கற்பு.

இ - ள். கொண்டதன்பின் ஆய்ந்து - சிவலிங்கத்தையும் ஆசாரியனையும் முன்னர் ஆராய்ந்துகொள்ளாமற் கொண்ட

தனபின்பு ஆராய்ந்து—உருவம் இன்மை குணம் இன்மையும் கண்டு - அங்கதினத்துவத்தையும் குணமில்லாமையையுங் கண்டு—விடுவார்க்குக் கற்பு உண்டோ - இகழ்ந்து தள்ளுவார்க்குக் கதியுண்டோ இல்லை. எ - று.

சுயம்புலிங்கம் சின்னபின்னப்படினும் அதனையே வைத்துப் பூசிக்குமாறுபோல ஆசாரியன எப்படியிருப்பினும் அவனையே இகழாது வழிபடுக. கட்டுத்தறியினையும் சிவபெருமானேயென்றுகொண்டு பத்தியோடு பூசித்தாற்போல இலிங்கம் எப்படியிருப்பினும் அதனையே இகழாது பூசிக்க. தான் பூசித்துவந்த சிவலிங்கம் அக்கினியினாலே பழுதுபடின் அதனையிகழாமல் மனநொந்து கைவிட்டு வேறொருசிவலிங்கத்தைக் கைக்கொள்ளுமாறுபோலத் தன்னுடைய ஆசாரியன் சிவலிங்கத்தை சிவத்திரவியாபகாரம் கொலை களவு பிறர்மனையயத்தல் முதலிய பெரும்பவங்களைச் செய்து கெடுவானாயின் அவனையிகழாது மனநொந்து கைவிட்டு வேறோராசாரியனை அடைந்து வழிபடுக. உடையாத ஓடமேயன்றி உடைந்த ஓடம் யாதொன்றினையுங் கரையேற்றமாட்டாதவாறுபோலச் சற்குருவேயன்றி அசற்குருயாவரொருவரையும் முத்தியடைவிக்கமாட்டான். (கOரு)

இலிங்கக்குற்றங்களையும் அவற்றைப் பூசித்த
வழிப்படுங் குற்றத்தையும் ஆறுதிருக்
குறளாலுணர்த்துகின்றார்.

சரசரத்த வாணலிங்கந் தாரத்தைக் கொல்லு
முருகவுளம புத்திரரை யும்.

இ - ள். சரசரத்த வாணலிங்கம் - சரசரத்த திருமேனியையுடைய வாணலிங்கமானது—உள்ளம் உருகத் தாரத்தைப் புத்திரரையும் கொல்லும் - மனமுருகும்படி மனைவியையும் புத்திரரையும் நாசமாக்கும். எ - று. (கOசு)

உச்சிக் குழியி லொடுக்குமுடியி ரைக்கோணி
லிச்சையுறு மில்லிழப் பிக்கும்.

இ-ள். உச்சிக் குழியில் உயிரை ஒடுக்கும் - உச்சியிலே குழிந்ததாயில் உயிரைப் போக்கும்;—கோணில் இச்சை உறும் இல் இழப்பிக்கும் - முடி வளைந்ததாகில் விருப்பம் பொருந்திய வீட்டினையிழப்பிக்கும். எ - று. (கO௫)

களங்கங் கயரோகங் காட்டுங்காக் கைக்கால
களைந்துவிடு மேகழுத்தைக் காய்ந்து.

இ - ள். களங்கம் கயரோகம் காட்டும் - களங்கமுள்ள இலிங்கம் கயரோகவியாதியையுண்டாக்கும்;—காக்கைக் கால் கழுத்தைக் காய்ந்து களைந்துவிடும் - காக்கைக்கால்போலுங் கீற்றினையுடைய இலிங்கமானது கழுத்தைக் கோபித்துப் போக்குவிக்கும். எ - று.

அக்களங்கம் மயினிறமும், கறுத்த அப்பிரகக்கன்னிறமும், நீலக்கன்னிறமும் என மூவிதமாம. (கOசு)

இட்டங் கெடுக்கும்விந் துத்தா னிரேகைதான்
வெட்டுவிக்கும் வாளால விரைந்து.

இ - ள். விந்துத்தான் இட்டம் கெடுக்கும - விந்துவினையுடைய இலிங்கம் அபீட்டத்தைக் கெடுக்கும்;—இரேகைதான் விரைந்து வாளால் வெட்டுவிக்கும - இரேகையினையுடைய இலிங்கம் விரைந்து வாளினுலே வெட்டுவிக்கும். எ - று.

அவ்விந்துவானது இளம்பெண்களுடைய முலைக்கண்ணிறத்தையுடையதும், நாவற்பழநிறத்தையுடையதும் என இரண்டுவிதமாம். இரேகையானது ஆகாயத்தினின்று விழும் மழைத்துளித்தாரை போன்றதும், பூமியிலெற்றிய கயிறு போன்ற

தும், பலவாகச் சிதறிய சூரியகிரணம் போன்றதும் என மூன்றுவிதமாம். (க0எ)

அதிதூல லிங்கத் தருச்சனை செய்யே
லதிநுண்மை யுஞ்சிறந்த தன்று.

இ - ள். அதி தூல லிங்கத்து அருச்சனை செய்யேல் - மேலே சொல்லப்படும் பஞ்சசூத்திரத்துக்கு ஒவ்வாமல் மிகப் பருத்திருக்கும் சிவலிங்கத்திலே பூசைசெய்யாதே;—அதி நுண்மையும் சிறந்தது அன்று - மிகச் சிறுத்திருக்கும் இலிங்கமும் சிறப்புடையதன்று. எ - று.

இக்குற்றங்களெல்லாம் போககாமிக்கேயன்றி முத்திகாமிக்கில்லையென் றுணர்க. (க0அ)

ஆயு வழியு மதிக மிலிங்கமெனின்
வீயுநிதி பீட மிகின்.

இ - ள். இலிங்கம் அதிகம் எனின் ஆயு அழியும் - சிவலிங்கம் அதிகமாகில் வயது குன்றும்;—பீடம் மிகின் நிதி வீயும் - பீடம் அதிகமாகில் திரவியங்குன்றும். எ - று. (க0கூ)

பஞ்சசூத்திரவிதி மூன்றுதிருக்குறளா
லுணர்த்துகின்றார்.

லிங்கத்தைச் சூழ்ந்துபுடை யிற்பருமை யெண்ணிடுக
வங்கதுபீ டத்தினக லம.

இ - ள். லிங்கத்தைச் சூழ்ந்து புடையில் பருமை எண்ணிடுக - முதற்கண்ணே சிவலிங்கத்தைச் சுற்றி அதனது சுற்றுப் பருமையையளக்க;—அங்கது பீடத்தின் அகலம் - அது எவ்வளவோ அவ்வளவே பீடத்தினகலங்கொள்க எ-று. (கக0)

ஐந்துகூ றாக்கவத னைப்பீடத் துன்னதநான்
கொன்றுசிவ லிங்கோன் னதம்.

இ - ள். அதனை ஐந்து கூறு ஆக்க-அந்தச்சுற்றுப்பருமையை ஐந்து கூறாக்குக;—நான்கு பீடத்து உன்னதம் - அவற்றுள் நான்குகூறு பீடத்தினுயரமும்;—ஒன்று சிவலிங்க உன்னதம்- ஒருகூறு சிவலிங்கத்தினது உயரமுமாகக் கொள்க. எ - று. ()

ஐந்துகூற் றிற்பாதி கோமுகைகண் டப்பருமை
யைந்துமதன் பாதியுமே யாம.

இ - ள். கோமுகை ஐந்து கூற்றில்பாதி - பீடத்தின் வட்டத்தை விட்டுக் கோமுகையினீளம் இரண்டரைக்கூறும்—கண்டப் பருமை ஐந்தும் அதன்பாதியுமே ஆம் - பீடத்தினது கண்டத்தின் சுற்றுப்பருமை ஏழரைக்கூறுமாகக் கொள்க. எ - று.

பஞ்சசூத்திரவிதி பாராவழிப்படுங்குற்ற
முணர்த்துகின்றார்.

பஞ்சவித சூத்திரத்தைப் பார்த்திலிங்கத்தாச்சனைசெய்
யெஞ்சலதி கமபழுதென் றெண்.

இ - ள். இலிங்கத்துப் பஞ்சவித சூத்திரத்தைப் பார்த்துஅர்ச்சனை செய் - சிவலிங்கத்திலே இங்ஙனங்கூறிய பஞ்சசூத்திரங்களை முன்னே பார்த்து அவைகள் ஒத்திருக்குமாகில்அதிலே பூசைபண்ணு;—எஞ்சல் அதிகம் பழுது என்று எண் - அவைகள் குறையினும் மிகினுங் குற்றமுண்டாமென்றறி. எ - று.

குறையில் வியாதியும், மிகிற் சத்துருபீடையும் உண்டாமென்றுணர்க. (கக௩)

வாணலிங்கத்துக்கு அடி முடி வரையறுத்
துணர்த்துகின்றார்.

மூடிதூல மாமுக முன்னதமாஞ் சூக்க
மடிவாண லிங்கத்தென் றார்.

இ - ள். வாணலிங்கத்து - வாணலிங்கத்திலே,—தூலம் முடி ஆம் - தூலமாயிருக்குமிடம் முடியென்றும்,—உன்னதம் முகம் ஆம் - யாதாயினுமொருபக்கத்திலே உயர்ந்திருக்குமிடம் முகமென்றும்,—சூக்கம் அடி என்றார் - குவிந்திருக்குமிடம் அடியென்றும் நூலோர்கள் கூறினார்கள். எ - று.

இங்ஙனம் பகுத்துணர்ந்த இலிங்கத்தை ஐந்து கூறுபண்ணி, மேலே மூன்றுகூறு நிற்கக் கீழிரண்டு கூற்றையும் உள்ளே பதித்து, அட்டபந்தனஞ்சாத்துக. இடவிதாயிருந்தாலும் குவிந்திருந்தாலும் எவ்விடம் அழகு பெற்றிருந்தது அதுவே திருமுடியெனக் கொள்ளலுமாம். (கக௪)

படிகலிங்கவிலக்கணம் மூன்றிருக்குறளா லுணர்த்துகின்றார்.

சூரியகாந் தந்தன்னைச் சூழ்ந்துறும் பஞ்சினைத்தான்
சூரியன் முன்னே சுடும்.

இ - ள். சூரியகாந்தம் - சூரியகாந்தமானது,—சூரியன்முன் தனனைச் சூழ்ந்து உறும் பஞ்சினை - மத்தியானத்திலே சூரியனுக்கு முன்னே தன்னைப் பிடித்துத் தன்னிலே பஞ்சைவைக்கில்,—சுடும் - அதனிடத்தே அக்கினியைப் பிறப்பிக்கும். எ-று.

சந்திரகாந் தந்தனைச்சூழ் பஞ்சுதனிற் றண்புனலைச்
சந்திரன் முன்னே தரும்.

இ - ள். சந்திரகாந்தம் - சந்திரகாந்தமானது,—சந்திரன் முன் தனைச் சூழ் பஞ்சுதனில் - சந்திரனுக்கு முன்னே தன்னைப் பிடித்துத் தன்னிலே பஞ்சை வைக்கில்,—தண் புனலைத்தரும் - அதனிடத்தே குளிர்ந்த சலத்தைத் தரும். எ - று.()

இவ்விரண்டு மல்லா ததுபடிக மென்றெணுக
வவ்விரண்டி னேடொன்றே யாம்.

இ - ள். இவ்விரண்டும் அல்லாதது படிகம் என்று எணுக - இவவிரண்டுவிதமுமல்லாதது படிகமென்றறிக,—அவவிரண டினேடு ஒன்றே ஆம் - அவவிரண்டோடும் இவ்வொன்றுங் கூட மூவிரமாம். எ - று. (ககஎ)

அவவியத்தமுதலிய இலிங்கங்களின் பெயருந்
தொகையுமுணர்த்துகின்ருர்.

அவ்வியத்த மற்றை வியத்தம்வியத் தாவ்வியத்த
மிவ்விதத்தான் மூன்றிலிங்க மென.

இ - ள். இலிங்கம் - சிவலிங்கமானது—அவவியத்தம் - அவ வியத்தலிங்கமும்,—மற்றை வியத்தம - அதற்கு மாருகிய விய ததலிங்கமும,—வியததாவவியத்தம் - வியத்தாவவியத்தலிஙக முமென—இவவிதத்தான் மூன்று என் - இந்தப்பிரகாரமாக மூவகைப்படுமெனறறி. எ - று. (ககஅ)

அவவியத்தலிங்கமும் வியத்தலிங்கமு
முணர்த்துகின்ருா.

அவ்வியத்தம் பீடலிஙக மங்கமனைத் தும்விளஙகு
மவ்விலிங்க மேவியத்த மாம்.

இ - ள். பீடலிங்கம் அவவியததம் - பீடமுஞ்சிவலிஙகமு மாயிருப்பது அவவியத்தலிங்கமாம்;—அங்கம் அனைததும விளங்கும் அவவிலிஙகமே வியத்தம் ஆம் - கரசரணுதியவயவ ங்களெல்லாம் விளங்கும் இருபத்தைந்து விக்கிரகபேதஙகளுமய வியத்தலிங்கமாம். எ - று.

அவவியத்தலிங்கம் சருவதோபத்திரம்,வாகுத்தமானம்,ஸச வாதிகம், ஸ்ரீராசிகம் என நான்குவகைப்படும். அவை ஒவ வொன்று நந்நான்காய்ப் பதினுரும். அவை ஒவ்வொன்று நந நான்காய் அறுபத்துநான்காம். இருபத்தைந்து விக்கிரகங்களா

1244 (6144)

வன சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர் என்பனவாம். (கக௬)

வியத்தாவியத்தலிங்கமுணர்த்துகின்றூர்.

விளங்கின் முகமே வியத்தாவ் வியத்த
மிலிங்கந் தனிலென்றே யெண.

இ - ள். இலிங்கந்தனில் முகம் விளங்கில் - இலிங்கத்திலே முகமுந்தோள்களும் விளங்கில்,—வியத்தாவியத்தம் என்றே எண் - அது வியத்தாவியத்தலிங்கமென்றறி. எ - று.

வியத்தம் எல்லாவுறுப்புக்களும் வெளிப்பட்டிருப்பது. அவ்வியத்தம் அவை வெளிப்படாதிருப்பது. வியத்தாவியத்தம் சிலவுறுப்புக்கள் வெளிப்பட்டும் மற்றவை வெளிப்படாமலுமிருப்பது. வியத்தாவியத்தலிங்கஞ்செய்யுமிடத்து உருத்திரபாகத்தை மூன்றுகூறாகப் பிரித்து நடுக்கூற்றில் ஒருமுகமேனும் மூன்றுமுகமேனும் நான்குமுகமேனுஞ்செய்க. மேற்கூற்றிலே திருமுடியுங் கீழ்க்கூற்றிலே கழுத்துந் தோண்முலைமட்டுஞ்செய்க. கீழுள்ள கைகள் செய்யலாகாது. முகமொன்றாயின் வியாதியை நீக்கும்; மூன்றாயிற் சாந்தியைப் பண்ணும்; நான்காயிற் சுகத்தைக் கொடுக்கும்; இரண்டாயினும் ஐந்தாயினும் அரிட்டங்கொடுக்கும். (க௨0)

அசலமுதலிய இலிங்கங்களின் பெயரும் தொகையு
முணர்த்துகின்றூர்.

அசலஞ் சலனஞ் சலாசல மற்றை
யசலசல மென்றொருநான் காம்.

இ - ள். சிவலிங்கமானது—அசலம் - அசலலிங்கமெனவும்,—சலனம் - சலனலிங்கமெனவும்,—சலாசலம்- சலாசலலிங்கமெனவும்,—மற்றை அசலசலம் என்று-அசலசலலிங்கமெனவும்,—ஒருநான்காம் - நான்குவகைப்படும். எ - று. ()

அசலலிங்கமுஞ் சலனலிங்கமு முணர்த்துகின்றார்.

கோபுர மாதி யசலங் குறிப்பினுள்ளே
தாபிதலிங் கஞ்சலனந் தான்.

இ - ள். கோபுரம் ஆதி அசலம் - கோபுரமுதலாயின அசலலிங்கமாம்;—குறிப்பின் உள்ளே தாபிதலிங்கம் சலனந்தான் - தனக்கு வேண்டியதொருநிறத்திலே இருதயத்திற கற்பித்துப் பூசிக்கப்படுஞ் சிவலிங்கம் சலனலிங்கமாம் எ - று.

ஆதியென்றதனால் விமானமுதலியனவுங்கொள்க. போக்குவரவின்மையால் அசலமெனவும், போககுவரவுண்மையாற சலனமெனவுஞ் சொல்லப்பட்டன. (கஉஉ)

சலாசலலிங்கமும் அசலசலலிங்கமுய
உணர்த்துகின்றார்.

வாணலிங்க மற்றுஞ் சலாசலமே மண்டலமும்
காணி னசலசலங் காண.

இ - ள். வாணலிங்கம் மற்றும சலாசலமே - வாணலிங்கமும் இரத்தினலிங்கமுதலியனவும் சலாசலலிங்கமாம்;—மண்டலமும் காணின் அசலசலம் காண் - வேதிகையிலே மண்டலமிட்டுப் பூசிக்கின் அது அசலசலலிங்கமாமென்றறி. எ - று.

வாணலிங்கமுதலாயின இட்டலிங்கமாகவும் பரார்த்தத்திலே சிவசமானிதியல் அங்கலிங்கமாகவும் பூசிக்கப்படிற் சலமெனவும், பரார்த்தமாகத் தாபிக்கப்படின் அசலமெனவும்,நிற்றலாற் சலாசலமெனப்பட்டன. அநந்தவிசயமுதலிய தொண்

ஞூற்ரூறு மண்டலலிங்கங்களுள் யாதொன்று தீக்ஷைக்குச் சொல்லியபடி வேதிகையிலிட்டுப் பூசிக்கப்படின் அசலமெனவும், இட்டலிங்கமாக நாடோறுமிட்டுப் பூசிக்கப்படிற் சலமெனவும், நிற்றலால் அசலசலமெனப்பட்டன. (கஉ௩)

சிவபூசைக்கு அருகரல்லாதார்க்குப் பூசாவிதி மூன்று திருக்குறளாலுணர்த்துகின்ருர்.

உயர்ந்தகுலத் தோருட் பழுதுறுப்பி னேரு
முயர்ந்தாரை யலலாதா ரும.

இ - ள். உயர்ந்த குலத்தோருள் உறுப்புப் பழுதினேரும - உயர்வாகிய நான்குவருணத்தாருள் உறுப்புக்குறைந்தவாகளும—உயாந்தாரை அல்லாதாரும் - நான்குவருணத்தாரல லாத சங்கரசாதியாரும். எ - று. (கஉச)

குறித்து மறுமை குரவன் பதத்தைக்
குறித்தவன்செய் தீக்கைதகக் கொண்டு.

இ - ள. மறுமை குறித்து - மறுமையின்பத்தை விருமபி— குரவன் பதத்தைக் குறிதது - ஆசாரியருடைய திருவடிகளை யடைந்து—தக அவன் செய் தீக்கை கொண்டு - தங்கள் தஙகள அதிகாரா நுகுணமாக அவா பண்ணிய தீக்ஷையைப் பெறறு. எ - று. (கஉரு)

குறித்துச் சிவனெனக் கோபுரத்தைப் பூவும்
பறித்தருச்சித் தேத்துகபாங் கால்.

இ - ள். கோபுரத்தைச சிவன் எனக் குறித்து - திருக்கோபுரதறைச் சிவபெருமானுகப் பாவித்து—பூவும் பறித்து - பத்திரபுஷ்பங்களைப் பறித்து—பாங்கால் அருச்சித்து எத்துக - விதிப்படி பூசித்துத் துதிக்கக்கடவர். எ - று.

தூபியையும் அவவாறே அருச்சிக்க. அது "தூபியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டுதொழு—பாபமறும்வாய்த்து றுமின் பம்." என்னுந் திருக்குறளானுணர்க. (கஉசு)

தூலமுதலிய மூவிதலிங்கங்களையுணர்த்துகின்றார்.

தூலலிங்க மாந்தூபி சூக்குமமா முள்ளிலிங்க
மேலும் பலிபத் திரம்.

இ-ள். தூபி தூலலிங்கம் ஆம்-சிகரந்தூலலிங்கமாம்;—உள் இலிஙகம சூக்குமம ஆம்-விமானததுள எழுந்தருளியிருக்குஞ் சிவலிங்கஞ் சூக்குமலிங்கமாம;—ஏலும் பலி பத்திரம - அத ற்கு முன்னே பொருந்திய பலிபீடம பததிரலிஙகமாம். எ-று.

அந்தரியாகபூசை யுணர்த்துகின்றார்.

தம்முள்ளத் துற்ற சலனசிவ லிங்கத்துந்
தம்மன்பா லாச்சிக்க தாம.

இ - ள். தம் உள்ளத்து உற்ற சலன சிவலிங்கத்தும் - தம் முடைய இருதயததை எட்டிதழ்ததாமரையாகக் கருதி அதை ஆசனமாக்கி அதில் எட்டங்குலவுயரமும் தமக்கு வேண்டிய தொரு நிறமுமுள்ளதாகக் கற்பிக்கப்பட்ட சிவலிங்கத்திலும்— தம் அன்பால் தாம அர்ச்சிக்க - புறப்பூசை செய்யுமாறுபோல அகப்பூசையைக் கொல்லாமை முதலிய அட்டபுட்பங்கொ ண்டு அன்பினோடு செய்யக்கடவர். எ - று.

அட்டபுட்பங்களாவன கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன வாம். உட்பூசையினுயர்வு "உள்ளேவல் செய்வானைக் காந் தன் மிகவுகப்ப—னுள்ளேசெய் பூசை யுகந்து" "அலலாக் கைக்கில்லை யருவருப்பு மில்லை--கொலையுமி லையுட்பூசை கூடு" என்னுந் திருக்குறள்களானுணர்க. (கஉஅ)

இம்முறை செய்யமாட்டாதார்க்கு வேறொருவிதி யுணர்த்துகின்றார்.

இரவியுளத் தென்று மிலங்கு மமலன்
கரமலரா லர்ச்சிக்க கண்டு.

இ - ள். அமலன் இரவி உளத்து என்றும் இலங்கும் எனக் கண்டு - நிருமலராகிய சதாசிவமூர்த்தி ஆதித்தமண்டலத்தின் கண் அனவரதமும் எழுந்தருளியிருப்பரெனக் கருதி,—கரம் மலரால் அர்ச்சிக்க - ஆசனமூர்த்திமூலமந்திரங்களை உச்சரித்து அவருக்கெதிராகக் கைகளினாலே புட்பங்களைத் தூவி அருச்சனைசெய்யக்கடவர். எ - று. (கஉக)

பூசைசெய்யாதார்க்குக் கதியில்லையென்ப துணர்த்துகின்றார்.

தமக்கருக மோருருவிற் பூசை சமையாரா
தமக்குத் துணையாரோ தான்.

இ - ள். தமக்கு அருகம ஒருருவில் பூசை சமையார் தமக்கு - தங்கள் தங்கள் வருணத்துக்கு அருகமாகிய ஒருருவினிடத்தே சிவபூசை செய்யாதவருக்கு—யாது துணை - யாது துணையுண்டு. எ - று.

தத்தமக்கு அருகமல்லாத பூசைகளைச் செய்தார் உலகத்துக்கும் அரசனுக்குந் தீங்கு விளைத்துத் தாம் நரகத்தின் மூழ்குவரெனச் சிவாகமஞ் செப்புமென்றுணர்க. சிவபூசை செய்யாதாரிழிவு "திருக்கோயி லில்லாத திருவி லூருந் திருவெண்ணீறணியாத திருவி லூரும்—பருக்கோடிப் பததிமையாற் பாடாவூரும் பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்—விருப்போடு வெண்சங்க மூதா வூரும் விதானமும் வெண்கொடியு மில்லா வூரு—மருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரு மவையெல்லா

பூரல்ல வடலி காடே." எ-ம். "திருநாம மஞ்செழுத்துஞ்செப்பா ராகிற் றீவண்ணர் திறமொருகாற் பேசா ராகி—லொருகாலுந் திருக்கோயில் சூழா ராகி லுணபதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகி—லருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகி லளிபற்றா ர் பிறந்தவா றேதோ வென்னிற்—பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே." எ-ம. வருந் திருநாவுக்கரசுநாயனார் தேவாரங்களினுலறிக. (கஙO)

சிவபூசைக்கின் றியமையாச் சிவசின்ன
முணர்த்துகின் றார்.

பூணுமற் கண்டிசிவ பூசைபுரி வார்பலத்தைக்
காணுர்பூ ணுய்கணடி கை.

இ - ள். கண்டி பூணுமல் சிவபூசை புரிவார் பலத்தைக் காணுர்-உருத்திராக்ஷந் தரியாமற் சிவபூசை செய்வோர் அதனுலவரும பயனைப் பெறுர்;—கண்டிகை பூணுய் - ஆகையால் உருத்திராக்ஷந்தரித்துகொணடே சிவபூசை செய். எ - று.

சிவபூசையைக் கூறவே சிவமந்திரசெபம் சிவாலயசேவை முதலிய பிறபுண்ணியங்கள் செய்யும்போதும் உருத்திராக்ஷந் தரித்தல்வேண்டுமென்பது தானே பெறப்படும. (கஙக)

உருத்திராக்ஷந்தரிக்கக் கூசியவழிப்படுங்குற்ற
முணர்த்துகின் றார்.

பூணபதற்குக் கணடியினைக் கூசியிடும புல்லியரைக்
காணபதற்குக் கூசுமரன் கைத்து.

இ - ள். கண்டியினைப் பூண்பதற்குக் கூசியிடும் புல்லியரை-உருத்திராக்ஷத்தைத் தரிப்பதற்குக் கூசுகின்ற கீழ்மக்களை—

அரன் கைத்துக் காண்பதற்குக் கூசும் - சிவபெருமான் வெறுத்துப் பார்க்கக் கூசுவர். எ - று. (கங௨)

உருத்திராக்ஷத்தின் விசிட்டமுணர்த்துகின்றார்.

உண்டு மணிகள் பலவு மவற்றுள்ளுங்
கண்டி விசிட்டமெனக் காண்.

இ - ள். மணிகள் பலவும் உண்டு - உருத்திராக்ஷமணி தாமரைமணி பளிங்குமணி புத்திரதீபமணி சங்குமணி எனப் பலவகைமணிகளுண்டு;—அவற்றுள்ளும் கண்டி விசிட்டம் எனக் காண் - அவைகளெல்லாவற்றுள்ளும் உருத்திராக்ஷமே விசிட்டமென்றறி. எ - று.

உருத்திரனது கண்ணிற்றோன்றினமையால் உருத்திராக்ஷமெனப் பெயர் பெற்றது. தேவர்கள் திரிபுரதத்சுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ்செய்துகொண்டபொழுது திருக்கைலாசபதி ஆயிரந்தேவவருடம் தம்முடைய மூன்று திருக்கண்களையும் மலர்த்திக்கொண்டிருப்ப, அவைகளினின்றும் நீர் பொழிந்தன. சூரியரூபமாகிய வலக்கண்பொழிந்த நீரிலே பன்னிரண்டுருத்திராக்ஷமரமும், சந்திரரூபமாகிய இடக்கண்பொழிந்த நீரிலே பதினாறுருத்திராக்ஷமரமும், அக்கினிரூபமாகிய நெற்றிக்கண் பொழிந்த நீரிலே பத்துருத்திராக்ஷமரமும் உதித்தன. வலக்கண்ணீரினின்று கபிலநிறவுருத்திராக்ஷமும், அதினின்று செந்நிறவுருத்திராக்ஷமும் அதினின்று பொன்னிறவுருத்திராக்ஷமுந்தோன்றின. இடக்கண்ணினின்று வெண்ணிறவுருத்திராக்ஷந்தோன்றிற்று. நெற்றிக்கண்ணினின்றும் கருநிறவுருத்திராக்ஷந் தோன்றிற்று. வெண்ணிறமணி பிராமணராலும், கபிலநிறமணியும் செந்நிறமணியும் க்ஷத்திரியராலும், பொன்னிறமணி வைசியராலும், கருநிறமணி சூத்திரராலும் தரிக்கற்பாலனவாம். (கங௩)

உருத்திராக்ஷத்துக்கு முகங்களையுணர்த்துகின்றார்.

ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறே ழெட்டொன்பா
னென்றோன்பான் மற்றுமுக முண்டு.

இ - ள். ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு எட்டு ஒன்பான் ஒனறோன்பான் மற்றுமுகம் உண்டு - அவ்வுருத்திராக்ஷத்திலே ஒருமுகமணியும், இரண்டுமுகமணியும், மூன்றுமுகமணியும், நான்குமுகமணியும், ஐந்துமுகமணியும், ஆறுமுகமணியும், ஏழுமுகமணியும், எட்டுமுகமணியும், ஒன்பதுமுகமணியும், பத்துமுகமணியும், அதற்குமேற்பட்ட முகமணிகளும உண்டு. எ - று.

பதினாறுமுகம்வரைக்கும் உண்டெனவறிக. ஒருமுகமணி தரிக்கிற் சிவனுக்கும், இரண்டுமுகமணி தரிக்கிற் சத்திக்கும், மூன்றுமுகமணி தரிக்கில் திரிமூர்த்திகளுக்கும்,நான்குமுகமணி தரிக்கிற் பிரமாவுக்கும், ஐந்துமுகமணி தரிக்கிற் சதாசிவமூர்த்திக்கும், ஆறுமுகமணி தரிக்கிற் சுப்பிரமணியருக்கும், ஏழுமுகமணி தரிக்கிற் சத்தமாதர்களுக்கும், எட்டுமுகமணி தரிக்கில் அட்டவித்தியேசுரர்களுக்கும், ஒன்பதுமுகமணி தரிக்கிற் கங்கை முதலிய நவதீர்த்தங்களுக்கும், பத்துமுகமணி தரிக்கிற் பத்துத்திக்குபாலர்களுக்கும், பதினொருமுகமணி தரிக்கிற் பதினோருருத்திரர்களுக்கும், பன்னிரண்டுமுகமணி தரிக்கில் விட்டுணுமூர்த்தியாகிய வாசுதேவர் முதலிய பன்னிருவர்களுக்கும், பதின்மூன்றுமுகமணி தரிக்கிற் சதருத்திரர்களுக்கும், பதினான்குமுகமணி தரிக்கில் அசுவினிதேவதைகளுக்கும், அட்டவசுக்களுக்கும், பதினைந்துமுகமணி தரிக்கிற் சந்திரன வருணன் முதலியவர்களுக்கும், பதினாறுமுகமணி தரிக்கில் முப்பத்துமுக்கோடிதேவர்கள் பிரமா விஷ்ணு சிவன் எல்லாருக்கும், பிரீதியாமென்றுணர்க.

இந்தப்பிரகாரமன்றி மற்றொருபிரகாரம் சிவாகமத்திற் கூறப்படும் ஒருமுகமணிக்கு அதிதேவதை பரசிவன்; அது பிரமகத்தியைப்போக்கும். இரண்டுமுகமணிக்கு அதிதேவதை ஸ்ரீகண்டபரமசிவன்; அது கோகத்தியைப் போக்கும். மூன்றுமுகமணிக்கு அதிதேவதை அக்கினி, அது ஸ்ரீகத்தியைப்போக்கும். நான்குமுகமணிக்கு அதிதேவதை பிரமா; அது நரகத்தியைப் போக்கும். ஐந்துமுகமணிக்கு அதிதேவதை காலாக்கினிருத்திரர்; அது புணர்தற்பாலரல்லாதாரைப் புணர்ந்த பாவத்தையும் புசிக்கற்பாலனவல்லாதனவற்றைப் புசித்தபாவத்தையும் போக்கும். ஆறுமுகமணிக்கு அதிதேவதை சுப்பிரமணியக்கடவுள்; அது பிரமகத்தி முதலிய பாவங்களைப் போக்கும். ஏழுமுகமணிக்கு அதிதேவதை ஆதிசேடன்; அது கோகத்தியையும் பொற்களவையும் போக்கும். எட்டுமுகமணிக்கு அதிதேவதை விநாயகக்கடவுள்; அது குருபன்னியைப் புணர்ந்த பாவத்தையும் பொற்களவையும் துலாதானமுதலிய தானங்கள் வாங்கிய பாவத்தையும் பிறரன்னத்தைக் கவர்ந்துண்ட பாவத்தையும் போக்கும். ஒன்பதுமுகமணிக்கு அதிதேவதை வைரவக்கடவுள்; அது ஆயிரம் பிராணகத்தியையும நூறு பிரமகத்தியையும் பூதம் பிசாசம் சர்ப்பமுதலியவற்றாலாகும் விக்கினங்களையும் போக்கிச் சித்திமுத்திகளைக் கொடுக்கும். பத்துமுகமணிக்கு அதிதேவதை விட்டுணு; அது நாள் கோள் பேய் பூதம் பிரமராக்கதமுதலியவற்றாலுண்டாகிய தீங்குகளெல்லாவற்றையும் போக்கும். பதினொருமுகமணிக்கு அதிதேவதைகள் பதினோருருத்திரர்; அது ஆயிரம் அசுவமேதபலத்தையும் நூறு வாசபேயபலத்தையும் இலக்ஷங்கோமேதபலத்தையும கொடுக்கும். பன்னிரண்டுமுகமணிக்கு அதிதேவதைகள் பன்னிரண்டாதித்தர்; அது கோமேதபலத்தையும் அசுவமேதபலத்தையும் சுவர்ணதானபலத்தையும்கொடுக்கும். பதின்மூன்றுமுகமணிக்கு அதிதேவதை சுப்பிரமணியக்கட

வுள்; அது சர்வாபீட்டத்தையும் சர்வசித்தியையும் கொடுக்கும், பிதாவையும் மாதாவையும் சகோதரரையும் புத்திரரையும் கருவையுங்கொன்ற பாவங்களைப் போக்கும். பதினன்கு முகமணிக்கு அதிதேவதைகள் சிவமும் சத்தியும்; அது தன்னைத்தரித்தோர்க்குத் தேவர் முனிவர் முதலாயினோரெல்லாரையும் வசப்படுத்துச் சிவபதத்தைக் கொடுக்கும்; அது கிடைப்பதரிது. ஆறுமுகமணி வலப்புயத்தினும், ஒன்பதுமுகமணி இடப்புயத்தினும், பதினொருமுகமணி சிகையினும், பன்னிரண்டுமுகமணி காதுகளினும், பதினன்குமுகமணி சிரசினுந் தரிப்பது உத்தமம். (கங௪)

செபமாலைக்கு மணி கொள்ளுமாறுணர்த்துகின்றார்.

ஒருவிதமே கோவைக் குறுதியஃ தன்றிப்
பலவிதத்தா மாலை பழுது.

இ - ள். கோவைக்கு ஒருவிதமே உறுதி - செபமாலைக்கு உருத்திராக்ஷமணி கொள்ளுமிடத்து எல்லாம ஓரேவிதமான முகங்களையுடையனவாகக் கொள்ளுதலே தகுதி;—அஃது அன்றிப் பலவிதத்து ஆம் மாலை பழுது - அவ்வாறன்றிப் பலவிதமாகிய முகமணிகளையுங் கலந்து கோத்த செபமாலை குற்றமுடைத்து. எ - று.

செபமாலைக்கு இரண்டுமுகமணியும் மூன்றுமுகமணியும் பன்னிரண்டுமுகமணியும் பதின்மூன்றுமுகமணியும் ஆகாவாம். ()

செபமாலைப்பிரதிட்டை ஐந்து திருக்குறளா லுணர்த்துகின்றார்.

சத்தியோ சாதத் தபிடேகஞ் சாதிக்க
வுத்தரத்தான் மத்திக்க வோர்ந்து.

இ - ள். ஓர்ந்து - விதியை ஆராய்ந்து,—சத்தியோசாதத்து அபிடேகம் சாதிக்க - சத்தியோசாதமந்திரத்தினலே வண்

ணெய்க்காப்பு முதலியவற்றால் அபிடேகம்பண்ணி,—உத்தர
த்தால் மத்திக்க - வாமதேவமந்திரத்தினாலே குச்சுப்புல்லுச்
சாத்தி, இருதயமந்திரத்தினாலே கந்தபுஷ்பஞ் சாத்துக. எ-று.
உத்தரதிசையை நோக்கும் வாமதேவத்தை உத்தரமென்றார்.

கொடுத்திடுக தூப மகோரமனுக் கூறித்
துடைத்திடுக தற்புருடஞ் சூழ்ந்து.

இ - ள். அகோரமனுக் கூறித் தூபம் கொடுத்திடுக-அகோ
ரமந்திரதகை உச்சரித்துத் தூபதீபங்கொடுத்து,—தற்புருடம்
சூழ்ந்து துடைத்திடுக-தற்புருடமந்திரத்தை உச்சரித்துத் திரு
வொற்றாடை சாத்துக. எ - று. (கநஎ)

தனித்தனியே யீசானத் தாலே சதக
மெணிக்குறையா மேசெபிக்க வேய்ந்து.

இ - ள். தனித்தனியே ஏய்ந்து - ஒவ்வொருமணியையுந்
தொட்டு,—ஈசானத்தாலே சதகம் எணிக் குறையாதே செபி
க்க - ஈசானமந்திரத்தினாலே நூறுநூறுருவிற் குறையாமல
அபிமந்திரிக்க. எ - று. (கநஅ)

நாயகத்தைத் தொட்டு நவில்க பிரமமெலா
மேய சதங்குறையா தே.

இ - ள். நாயகத்தைத் தொட்டு - நாயகமணியைத் தொட்
டு,—பிரமம் எலாம் ஏய சதம் குறையாது நவில்க - பஞ்சப்
பிரமத்தினாலே பொருந்திய நூறுருவிற்குறையாமல் அபிமந்
திரிக்க. எ - று.

பஞ்சப்பிரமமாவன ஈசானம், தற்புருடம், அகோரம், வாம
தேவம், சத்தியோசாதம் என்பனவாம். (கநக)

பரமசிவ னைப்பூசை பண்ணுமுறை போலப்
பரமமா நாயகத்திற் பண்

இ - ள். பரமசிவனைப் பூசை பண்ணும் முறைபோல - நித்தியகர்மத்திலே பரமசிவனைப் பூசிக்குமுறைமைபோல—பரமம் ஆம் நாயகத்தில் பண் - சத்தியாதிசத்திபரியந்தமாக மேலாகிய நாயகமணியிலே பூசைபண்ணு. எ - று.

இப்படிப் பிரதிட்டை செயப்பட்டசெபமாலைகொண்டு செபிக்கினன்றிப் பெரும்பயனெய்தாதெனச் சிவாகமங்கள் கூறுமெனவறிக. (கசㅇ)

உருத்திராக்ஷந்தரிக்குமுறைமை மூன்றுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

சிரத்தி னுரத்திற் றிணிதோ டிரண்ட
கரத்தினும்பூ ணுய்கண்டி கை.

இ - ள். கண்டிகை - உருத்திராக்ஷமாலையை—சிரத்தின் - தலையினும்,—உரத்திரன் - மார்பினும்,—திணி தோள் - திண்மைகொண்ட புயங்களினும்,—திரண்ட கரத்தினும்- திரண்ட கைகளினும்—பூணுய் - அதற்குச் சொல்லிய மந்திரங்கொண்டுதரி. எ - று.

உம்மையால் காது கழுத்துச் சிகை உபவீதங்களினுமெனக்கொள்க. சிகையிலும், சிரசிலும், ஈசானமந்திரத்தினலும், காதுகளிற் றற்புருடமந்திரத்தினலும், கழுத்தில் அகோரமந்திரத்தினலும், மார்பில் வியோமவியாபினிமந்திரத்தினலும்,புயங்களிலும் கைகளிலும், பிராசாதமந்திரத்தினலுந் தரிக்க. சயனத்தினும், மலசலமோசனத்தினும், புணர்ச்சியினும்,நோயினும், சனனசௌசமரணசௌசங்களினும் உருத்திராக்ஷதாரணங்கூடாது. சிகையினும் காதுகளினும் உபவீதத்தினும் எப்போதும் உருத்திராக்ஷந் தரித்துக்கொள்ளலாம். உருத்திராக்ஷந்தரித்துக்கொண்டு மாமிசபோசனம் மதுபானம் முதலானவை செய்தவர் தப்பாது நரகத்தில் வீழ்ந்து வருந்துவர். (கசக)

கரத்தி னளவுகர மாலைசிர மாலை
சிரத்தி னளவென்றே தேறு.

இ - ள். கரமாலை கரத்தின் அளவு - கைம்மாலை கைப்பரு மையளவினதாகவும்,—சிரமாலை சிரத்தின் அளவு என்றே தேறு - தலைமாலை தலைப்பருமையளவினதாகவும் இருத்தல் வேண்டுமென்றறி. எ - று. (கசஉ)

உரமாலை நாபியந்த மென்றுணர்க வன்றி
யுரமாலை யுஞ்செயலா கும.

இ - ள். உரமாலை நாபி அந்தம் என்று உணர்க - மார்பு மாலை பிடர் முதற்கொப்பூழ் வரையினதாக இருத்தல்வேண்டு மெனவறிக;—அன்றி உரமாலையும் செயல் ஆகும் - அவவா றன்றிப் பிடர் முதல் மார்புவரையினதாகவும மார்புமாலை செய்யலாம். எ - று.

வெவவேறு தானங்களிற்றரிக்கப்படும் உருத்திராக்ஷமாலை களுக்கு மணியளவு எண்ணளவெனவும் எல்லையளவெனவும் இருவகைப்படும். அவற்றுள் இந்நூலிற்கூறப்பட்டது எல்லை யளவு. உரையிற்கோடலென்னுமுத்தியினால் எண்ணளவு சிவாகமத்திற்கண்டபடி கூறுதும்:—சிகையிலே ஒருமணியும், தலையிலே முப்பத்தாறுமணியும், காதுகளிலே ஒவவொருமணி அல்லது அவ்வாறுமணியும், கழுத்திலே முப்பத்திரண்டுமணி யும், புயங்களிலே தனித்தனி பதினாறுமணியும், கைகளிலே தனித்தனி பன்னிரண்டுமணியும், மார்பிலே நூற்றெட்டுமணி யுங்கொண்ட மாலை தரிக்கலாமென்றுணர்க. உருத்திராக்ஷங் களை வெள்ளி பொன் முத்துப் பவளம் முதலியவற்றை இடை யிடையே இட்டு முகத்தோடு முகமும் அடியோடு அடியும் பொருந்தக்கோத்துத் தரிக்க. (கசஙு)

செபமாலையிலக்கணம் நான்குதிருக்குறளா
லுணர்த்துகின்றார்.

செய்கசெப மாலைநூற் றெட்டினாற் பாதியுறச்
செய்யலுமாம் பாதத்துஞ் செய்.

இ - ள். செபமாலை நூற்றெட்டினால் செய்க - செபமாலையை நூற்றெட்டுமணியினாலே செய்;—பாதி உறச் செய்யலும் ஆம் - அதிற்பாதியாகிய ஐம்பத்திநான்குமணியினாலே செய்தலுமாம்;—பாதத்தும் செய் - காற்பங்காகிய இருபத்தேழுமணியினாலுஞ்செய். எ - று.

போககாமி இம்மூவகைச் செபமாலைகளுள் ஒன்றினாற்செபிக்க. முத்திகாமி இருபத்தைந்துமணி கொண்ட செபமாலையினாற் செபிக்க. செபதத்துக்கு விரலினும் விரலிறை எட்டுமடங்கதிகம்; அதினும் புத்திரதீபமணிமாலை பத்துமடங்கதிகம்; அதினும் சங்குமணிமாலை நூறுமடங்கதிகம்; அதினும் பவளமணிமாலை ஆயிரமடங்கதிகம்; அதினும் படிகமணிமாலை பதினாயிரமடங்கதிகம்; அதினும் முத்துமாலை இலக்ஷமடங்கதிகம்; அதினும் தாமரைமணிமாலை பத்திலக்ஷமடங்கதிகம்; அதினும் பொன்மணிமாலை கோடிமடங்கதிகம்; அதினும் தருப்பைப்பவித்திரமுடிச்சுமாலை பத்துக்கோடிமடங்கதிகம்; அதினும் உருத்திராக்ஷமாலை அநந்தமடங்கதிகம். உருத்திராக்ஷமணியைத் தரிசித்தவருக்கு இலக்ஷமடங்குபலம்; பரிசித்தவருக்குக் கோடிமடங்கு பலம்; சரீரத்திலே தரித்தவருக்கு ஆயிரகோடிமடங்கு பலம்; கையிற்கொண்டு செபித்தவருக்கு அநந்தமடங்கு பலம். (கசச)

இடையின் முடிக முகமுகத்தை யெய்த
வடியடியை யொன்றச்செய் தாய்ந்து.

இ - ள். ஆய்ந்து - ஆராய்ந்து—முகம் முகத்தை எய்த அடி அடியை ஒன்றச் செய்து - மணிகளை ஒன்றோடொன்று கூடாமல முகம் முகத்தைப் பொருந்தவும அடி அடியைப் பொருந்தவும் வெண்பட்டிலேனும் பருத்தியிலேனும் இருபத்தேழிழையினுலாக்கிய சூத்திரத்தினுலே கோத்து,—இடையில் முடிக-இடையிடையே நாகபாசம் பிரமக்கிரந்தி சாவித்திரி என்பவைகளுள் இயன்றதொருமுடிச்சை இடுக. எ - று. (கசாடு)

ஒன்றியுற நாயகந்தா னுச்சிதனிற் செய்திடுக
வென்றும் வரமே யிது.

இ - ள். ஒன்றியுற நாயகந்தான் உச்சிதனில் செய்திடுக - செபமாலைவட நுனியிரண்டையும ஒன்ருகக் கூட்டி அதிலே நாயகமணியை ஏறிட்டுக் கோத்து முடிக;—இது என்றும் வரம் - இது எக்காலத்தினுஞ் சிறப்புடையது. எ - று.

நாயகமெனினும் மேருவெனினுமொக்கும். (கசசு)

இலங்கியா தேநா யகமேற்றிச் சொலக
விலங்கிற்றேற் பாவமுறு மே.

இ - ள். நாயகம் இலங்கியாது ஏற்றிச் சொல்க - செபிக்கும்போது நாயகமணிக்கு அடுதத முகமேனேக்கிய மணியை முதலாகத் தொட்டுச் செபித்துப் பின்பு நாயகமணி கைப்பட்டதாகில் அதனைக் கடவாமல் திரும்ப மறித்து வாங்கி அதனைத் திரும்பக் கரத்திலேயிட்டுச் செபிக்க;—இலங்கிற்றேல் பாவம் உறும் - நாயகமணியைக் கடந்து செபிக்கிற பாவமுண்டாம. எ - று. (கசஎ)

நாயகமின்றியுஞ்செபமாலை செய்யுமுறைமை யுணர்த்துகின்ருர்.

பாவமு மில்லை பலனு மதிகமில்லை
கோவையினை மேருவறக் கொள்.

இ - ள். கோவையினை மேரு அறக் கொள் - செபமாலையை நாயகமணியின்றியுஞ் செய்துகொள்க;—பாவமும் இல்லை பலனும் அதிகம் இலை - அதனாலே பாவமுமில்லை பயனுமதிகமில்லை. எ - று. (கசஅ)

செபமாலைகொண்டு செபிக்கு முறைமை இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

பரர்பார்வைப் பட்டாற் பலியா செபங்கள்
பரர்பாரா வண்ணம் பரி.

இ - ள். பரர் பார்வைப் பட்டால் செபங்கள் பலியா - செபிக்கும்போது செபமாலை பிறர்கண்ணுக்குப் புலப்படிற் செபங்கள் பயன்படாவாம்;—பரர் பாராவண்ணம் பரி - ஆதலாற செபமாலையைப் பிறர் காணுவண்ணம் பரிவட்டத்தால் மூடிக்கொண்டு செபி. எ - று.

"வத்திரததினாலே மறைக்க வலக்கரத்தின்—வைத்தசெபமாலைதனை வாய்க்கவர—மெய்த்தலையிற்—பாதமலர் வைத்தாண்ட பண்டிதன்றான் பார்த்திடினுஞ்—சேதப் படுஞ்செய் செபம்." என்னும் உருத்திராக்கவிசிட்டத் திருவெண்பாவானும் அறிக. (கசகூ)

ஓசையுறிற் பாவ முறுமதனான் மாலைதனி
லோசையுறா மற்செபிக்க வோர்ந்து.

இ - ள். மாலைதனில் ஓசை உறில் பாவம் உறும் - செபிக்கும்போது செபமாலையில் மணிகள் ஒன்றோடொன்று ஓசைப்படிற் பாவமுண்டாம்;—அதனால் ஓர்ந்து ஓசை உறாமல் செபிக்க - ஆதலால் அதனையறிந்து ஒன்றோடொன்று ஓசைப்படாமற் செபிக்க. (கரு௦)

மந்திரோச்சாரணபேதம் இரண்டுதிருக்
குறளாலுணர்த்துகின்றார்.

மானத மந்தமுரை யென்னவொரு மூன்றாகு
மானதநெஞ் சிற்செபிக்கு மாறு.

இ - ள். மானதம் மந்தம் உரை என்ன ஒருமூன்று ஆகும்- மந்திரோச்சாரணமானது மானதமெனவும மந்தமெனவும ஒலியெனவும் மூவகைப்படும்;—மானதம் நெஞ்சில் செபிக்கும் ஆறு - அவற்றுள், மானதமாவது,நாநுனி இதழைத் தீண டாமல் ஒருமை பொருந்தி மனசினாலே செபித்தலாம்.எ - று.

மந்தந் தனதுசெவி கேட்கச் சொலுமாற்ற
மந்தம் பிறாசெவிக்கு மாம்.

இ - ள். மந்தம் தனது செவி கேட்கச் சொலும் மாற்றம் - மந்தமாவது தன் காதுமாத்திரங்கேட்கும்படி நாநுனி இதழைத் தீண்ட மந்தமாகச் செபித்தலாம்;—அந்தம் பிறர் செவிக்கும் ஆம்-இறுதியிற்கூறிய ஒலியாவது அருகிலிருக்கும் பிறா செவிக்குங் கேட்கும்படி செபித்தலாம். எ - று.

மந்தத்தை உபாஞ்சு எனவும் ஒலியை வாசகமெனவுங் கூறுவர். (கரு௨)

மந்திரோச்சாரணங்களுக்கு விரணியமம் இரண்டு
திருக்குறளாலுணர்த்துகின்றார்.

தர்ச்சனி யாதி தனிற்செறிக்க மாலையினை
முற்றுமொலி யாதி மொழிக்கு.

இ - ள். முற்றும் ஒலி ஆதி மொழிக்கு - முடிக்கின்ற ஒலி மந்தம் மானதம் என்னும் மூவிதச்செபங்களையுஞ் செய்யுமிடத்து—மாலையினைத் தர்ச்சனி ஆதிதனில் செறிக்க - செபமா

லைய முறையே நாசசனி மததிமை அநாமிகை என்னும மூவிரலகளினும வைததுச செபிகக. எ - று (௧௫௭)

அங்குட்டத தாலே யனைததும்ியறறிடுக
வெங்கும பொதுவென றெணி

இ - ள். எங்குமபொது என்று எணி மூவிரலினுஞ் செபமாலையைத தளளுதறகு இதுவே பொதுவென்று நினைதது— அனைததும அங்குட்டததாலே இயறறிடுக மூவிதசெபங்களையுஞ் செபமாலையைப பெருவி விரலிலே தளளிச செபிகக எ-று

செபபலமுணாததுகின்றார.

முறறு மொழியின முநூாறபல மநதவொலி
மறறைமன மேலாய வரம

இ ள் முறறும ஒலியின முதாநத பலம மநதவொலியாகச செபிததலினும அதிகமாகிய பலம மநதமாகச செபிததலினுண்டாகும,—மறறை மனம மேலாம வரம மானத செபமே எலலாவறறினும மேலாகிய பலனைத தரும எ று

வாசகம நூறுமடங்குபலமும, மநதம பதினாயிரமடங்குபலமும, மானதம கோடிமடங்குபலமும தருமெனறறிக (௧௫௮)

செபகாலததிலே தியானமும வேணடுமெனப
துணாததுகின்றா

உன்னிச செபிகக வுளததுள ளமலனடி
யன்னிய மூநதாழநதபல மாம

இ - ள். அமலன அடி உளததுள உன்னிச செபிகக - மசபஞ்செயயுமபோது சிவபெருமானுடைய திருவடிகளை மனசிலே தியானிததுககொணடு செபிகக;—அன்னியமும தாழநத பலம ஆம - அபபடித தியானமினறிச செயயபபடுஞ்செபம அதனினுந்தாழநத பலததைத தரும எ - று (௧௫௯)

புத்திமுத்தியடையும்பொருட்டுச் செபிக்குமுறைமை யுணர்த்துகின்றார்.

வெறுத்தா னுடன்மாலை மேற்புரிக போகம்
பொறுத்தான்கீழ் நோக்கிப் புரி.

இ - ள். உடல் வெறுத்தான் மாலை மேல் புரிக-சரீராதிகளை வெறுத்த முத்திகாமி செபமாலையை மேனோக்கித் தள்ளிச செபிக்க;—போகம் பொறுத்தான் கீழ் நோக்கிப் புரி - போக காமி கீழ்நோக்கித் தள்ளிச் செபிக்க. எ - று. (கருஎ)

வாயுவசத்தாற்செபிக்குமுறைமையுணர்த்துகின்றார்.

சுழுனையிற்சொல் லாமிரண்டுஞ் சுத்ததனு வாமத்
தழிவில்லா முத்திவலத் தாம்.

இ - ள். சுழுனையில் சொல் இரண்டும் ஆம் - பிராணவாயு வானது சுழுமுனைநாடியில் ஓடும்போது செபிக்கிற் புத்திமு த்தி இரண்டுமுண்டாம்;—வாமத்துச் சுத்த தனு - இடைநாடி யில் ஓடும்போது செபிக்கிற் சுத்தமாயாபோகமுண்டாம்;—வலத்து அழிவு இல்லா முத்தி ஆம் - பிங்கலைநாடியில் ஓடும் போது செபிக்கில் எப்போதுமழியாதமோக்ஷமுண்டாம்.எ-று.

வீட்டினிருந்து செபிக்கின் ஒருரு ஒருருவேயாம்; பசுக்கோ ட்டத்தினிருந்து செபிக்கின் ஒன்று நூறாகும்; திருநந்தனவ னத்திலிருந்து செபிக்கின் ஒன்று ஆயிரமாகும்; பருவதத்தின் மேலிருந்து செபிக்கின் ஒன்று பதினாயிரமாகும்; நதிக்கரையி னிருந்து செபிக்கின் ஒன்று இலக்ஷமாகும்; சிவாலயத்தினிரு ந்து செபிக்கின் ஒன்று கோடியாகும்; சிவசந்நிதியினிருந்து செபிக்கின் ஒன்று அநந்தமாகும். மரப்பலகை, வஸ்திரம், கம் பளம், மான்றோல், புலித்தோல், தருப்பை என்னும் ஆசனங்க ளுள் இயன்றதொன்றிலே முழந்தாளிரண்டையும் மடக்கிக்

காலோடு காலையடக்கி இடத்தொடையினுள்ளே வலப்புறங் காலை வைத்து இரண்டுகண்களும் நாசிநுனியைப் பொருந்த இருந்துகொண்டுசெபிக்க. சட்டையிட்டுக்கொண்டும், சிரசில் வேட்டி கட்டிக்கொண்டும். போர்த்துக்கொண்டும், குடுமியை விரித்துக்கொண்டும், கௌபீனந்தரியாதும், விரலிலே பவித் திரந்தரியாதும், பேசிக்கொண்டும், இருளிலிருந்துகொண்டும், நாய் கழுதை பன்றி முதலியவற்றையும் புலையா முதலாயினோ ரையும் பார்த்துக்கொண்டும், செபிக்கலாகாது. செபஞ்செய் யும்போது கோபம், களிப்பு, கொட்டாவி, தும்மல், நித்திரை, சோம்பல், வாதம் முதலியவை ஆகாவாம். (கருஅ)

ஒப்பின்முடித்தலென்னுமுத்தியினால் அருந்தல்
பொருந்தல்களுக்குங் கால
முணர்த்துகின்றார்.

அருந்திடுக பிங்கலையி லோடி லனிலன்
பொருந்துகவேய்த் தோளியையப் போது.

இ - ள். அனிலன் பிங்கலையில் ஓடில் அருந்திடுக - பிராண வாயுப் பிங்கலைநாடியிலியங்கும்போது போசனம்பண்ணுக;— அப்போது வேய்த்தோளியைப் பொருந்துக - அக்காலத் திற்றானே மூங்கில்போன்றதோளினையுடைய பெண்ணைக் கூடுக. எ - று. (கருகூ)

காலமறிந்து கூடியவழிப்படும் பயனுணர்த்துகின்றார்.

கற்புடையா டோள்கணவன் காலமறிந் தேபுணரிற்
சற்புத் திரனுதிப்பன் றான்.

இ - ள். கணவன் கற்பு உடையாள் தோள் காலம் அறிந்தே புணரில் - நாயகன் கற்பினையுடைய மனைவியினது தோள்க

ளைக் காலமறிந்து சேரில்—சற்புத்திரன் உதிப்பன் - சற்புத்தி ரன் பிறப்பான். எ - று. (கசு0)

சகலவினைக்குஞ்சிறந்தகாலமுணர்த்துகின்றூர்.

எல்லா வினைக்கு மினிது சுழுனையெனச்
சொல்லாய்வார் கொள்க துணிந்து.

இ - ள். சொல் ஆய்வார் - சிவாகமங்களை ஆராய்வோர்— எல்லாவினைக்கும் இனிது சுழுனை எனத் துணிந்து கொள்க - சபஸ்தகர்மங்களுக்குஞ் சிறந்த காலம் சுழுமுனைநாடியிலே பிராணவாயு இயங்குங்காலமென்று துணிந்துகொள்ளக்க டவர். எ - று. (கசுக)

சிவசின்னங்களிவையென்பதுணர்த்துகின்றூர்.

பரம சிவனமலன் பத்தர்க்குச் சின்ன
முருவுடலிற் கண்டியுநீ றும்.

இ - ள். அமலன் பரமசிவன் பத்தர்க்குச் சின்னம் - நிருமலராகிய சிவபெருமானுடைய அடியார்களுக்குரிய அடையாளங்களாவன—உரு உடலில் கண்டியும் நீறும்-உருவாகிய சரீரத்திலே தரிக்கப்படும் உருத்திராக்ஷமும் விபூதியுமாம்.எ - று.

விபூதி இத்தனைவகைப்படுமென்பதுணர்த்துகின்றூர்.

கற்பமநு கற்பமுப கற்ப மெனும்விதத்தா
லற்புதநீ றெண்ணிடின்மூன் றும்.

இ - ள். அற்புத நீறு - ஆச்சரியகரமாகிய விபூதியானது— எண்ணிடில் - ஆராயுங்கால்—கற்பம் அநுகற்பம் உபகற்பம் எனும்விதத்தால் மூன்று ஆம்-கற்பமும் அநுகற்பமும் உபகற்பமும் என்று சொல்லப்படும் பேதத்தினலே மூன்றாகும். எ-று.

இம்மூன்றுமல்லாதது அகற்பமெனப்படும். (கசுஉ)

நிறுத்தமுறையானே கற்பவிலக்கணமுணர்த்தத் தொடங்கி
அதற்குக் காரணமாகிய பசுவிலக்கணம் மூன்று
திருக்குறளாலுணர்த்துகின்றார்.

பிறந்திளைய கன்றுபெறாக் கன்னி பிணியா
விறந்தகன்று மாகா விழுக்கு.

இ - ள். பிறந்து இளைய கன்று - கன்றுபிரசவித்துப் பத்து நாட்குறைதகமுடைய பசுவும்—பெறாக் கன்னி - கன்று பிரசவியாததாகிய கிடாரியும்—பிணி ஆ - வியாதியையுடைய பசுவும்—இறந்த கன்றும் - தன் கன்று சாவப்பெற்ற பசுவுமாகிய இவற்றின் கோமயம்—இழுக்கு - குற்றமுடையனவாம்;—ஆகா - ஆதலால் அவை விபூதிக்கு ஆகாவாம். எ - று. (கசுச)

மூப்பு மலடு முடைமலந் தின்பதெனு
மாத்தானுந் தூய்தலவா கா.

இ - ள். மூப்பும் - கிழப்பசுவும்—மலடும்-மலட்டுப்பசுவும்—முடை மலம் தின்பது எனும் ஆத்தானும் - துர்க்கந்தம் பொருந்திய மலத்தைத் தின்னும் பசுவும்—தூய்து அல - விபூதிக்குச் சுத்தமுடையனவல்ல;—ஆகா - ஆதலால் அவ்வ ஆகாவாம். எ - று. (கசுரு)

சொன்னவிவை யல்லாச் சுரபி விதமெல்லா
நல்லனவே யென்றுளத்து ணாடு.

இ - ள். சொன்ன இவை அல்லாச் சுரபி விதம் எல்லாம் - சொல்லப்பட்ட இவைகளல்லாதமற்றைப்பசுக்களெல்லாம்—நல்லனவே என்று உளத்துள் நாடு - கோமயங்கொள்ளுதற்கு நல்லவைகளென்று மனசிலே நினை. எ - று.

பிராமணர் முதலிய நான்குவருணத்தாரும் முறையே வெள்ளை சிவப்புப் பொன்மை கறுப்பு என்னும் நிறங்களையுடைய பசுக்களின் கோமயத்தைக் கொள்க. (கசுசு)

கோமயங்கொள்ளுதற்குக் காலம் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.

பங்குனி மாதம் பசானத்தாண் மேய்ந்தபசு
மங்கலமாங் கொள்கோ மயம்.

இ - ள். பங்குனிமாதம் பசானத் தாள் மேய்ந்த பசு மங்கலம் ஆம் - பங்குனிமாதத்திலே பசானமென்னும் நெல்லினது தாளை மேய்ந்த பசுக்களே நல்லனவாகும்;—கோமயம் கொள்- அவைகளின் கோமயங்களைக் கொள்க. எ - று. (கசுஎ)

இருநான்கு பஞ்சதசி யேழிரண்டு தன்னில்
வரமாகுங் கொள்கோ மயம்.

இ - ள். இருநான்கு - அட்டமியிலேனும்—பஞ்சதசி-அமாவாசை பௌர்ணிமையிலேனும்—ஏழிரண்டுதன்னில்-சதுர்த்தசியிலேனும்—கோமயம் கொள்-கோமயத்தைக் கொள்க;— வரம் ஆகும் - இதுவே உத்தமமாம். எ - று.

பசுக்களையடைந்து வணங்கிக் கோசாவித்திரி முதலிய தோத்திரங்களைச் செய்து அதன்பின்பேகோமயங் கொள்ளல் வேண்டுமென்க. (கசுஅ)

கற்பவிதி பத்துத்திருக்குறளா லுணர்த்துகின்றார்.

ஏற்றிடுக சாதத்தா லானின் மரையிலையின்
மாற்றிடுக மேலே வழும்பு.

இ - ள். ஆனின் சாதத்தால் மரை இலையில் ஏற்றிடுக - கோமயத்தைப் பூமியிலே விழுமுன் சத்தியோசாதமந்திரத்

தினாலே தாமரையிலையிலேற்று—மேலே வழும்பு மாற்றிடுக- மேலுள்ள வழும்புகளை நீக்கி நடுவின் மயத்தைக் கொள்க. எ-று.

கோமயங்கொள்ளுதல் சாந்திகம், பௌட்டிகம், காமதம் என மூவகைப்படும். கோமயமிடும்போது பசுவின் பிற்றட்டிலே கை வைத்தேற்பது சாந்திகம். பூமியிலே விழுமுன் தாமரையிலையிலேற்பது பௌட்டிகம். பூமியில் விழுந்தபின் எடுப்பது காமதம். இம்மூன்றினுள் இந்நூலிற் கூறப்பட்டது பௌட்டிகம். (கசுகூ)

பெய்ததனிற் கவ்வியத்தை வாமத்தி னாற்பிசைக
யைய வகோரம் பகர்ந்து.

இ - ள். அதனில் கவ்வியத்தை வாமத்தினால் பெய்து-அந்தக்கோமயத்திலே பஞ்சகவ்வியத்தை வாமமந்திரத்தினாலே வார்த்து—யைய அகோரம் பகர்ந்துபிசைக - மெல்லஅகோரமந்திரத்தையுச்சரித்துப் பிசைக. எ - று. (கஎo)

உருட்டிப் புருடத்தோ மாங்கிதனில் வைக்க
திரட்டிப் பதர்மேற் செறித்து.

இ - ள். உருட்டி - அவ்வகோரமந்திரத்தினாற்றானே உண்டைபண்ணி,—பதர் திரட்டி மேல் புருடத்துச்செறித்து - பதரை விரித்து அதன்மேல் தற்புருடமந்திரத்தினாலே வைத்து,—ஓமாங்கிதனில் வைக்க - சிவாக்கினியைக் கற்பித்து அதினாலே தகனம் பண்ணுக. எ - று.

நித்தியாக்கினி செய்பவர்களாகில் அவ்வக்கினியினாற்றானே விளைவிக்க. (கஎக)

அன்றெடுத் தன்றுருட்டி யன்றழலின் வைத்திடுக
வன்றியுலர்த் திச்சுடலு மாம்.

இ - ள். அன்று எடுத்து அன்று உருட்டி அன்று அழலின் வைத்திடுக - அன்றைக்கேயெடுத்து அன்றைக்கே உண்டை பண்ணி அன்றைக்கே சிவாக்கினியினாலே தகனம்பண்ணுக;- அன்றி உலர்த்திச் சுடலும் ஆம் - இங்ஙனமன்றி உலர வைத்துத் தகனம்பண்ணுதலுமாகும். எ - று. (கஎஉ)

விளைந்த துணர்ந்து விளம்பியீ சான
மளைந்தே யெடுக்கவவை யாய்ந்து.

இ - ள். அவை விளைந்தது உணர்ந்து - அவ்விபூதி நன்றாக விளைந்ததையறிந்து,—ஆய்ந்து அளைந்து ஈசானம் விளம்பி எடுக்க - ஆராய்ந்து அதிலே கருகல் முதலியவற்றைத் தள்ளி நல்லதைப் பார்த்து ஈசானமந்திரத்தையுச்சரித்தெடுக்க. எ-று.

கறுப்புச் சிவப்புக் கடியதொரு தூமம்
வெறுப்புடனே பீதம் விடு.

இ - ள். கறுப்பு - கருநிறவிபூதியையும்—சிவப்பு - செந்நிற விபூதியையும்—கடியதொரு தூமம் - கடுமையாகிய புகைநிற விபூதியையும்—பீதம் - பொன்னிறவிபூதியையும்—வெறுப்புடனே விடு - வெறுப்புடனே தள்ளுக. எ - று.

கருநிறவிபூதி வியாதியையுண்டாக்கும். செந்நிறவிபூதி கீர்த்தியைப் போக்கும். புகைநிறவிபூதி ஆயுளைக் குறைக்கும். பொன்னிறவிபூதி சம்பத்தைக் கெடுக்கும். வெண்ணிறவிபூதி அளவில்லாத புண்ணியத்தை விளைக்கும். (கஎச)

வடித்திடுக தூயநவ வத்திரத்தி னாலே
யெடுக்கநவ கும்பத் தினிது.

இ - ள். தூய நவ வத்திரத்தினாலே வடித்திடுக - அவ்விபூதியைப் பரிசுத்தமாகிய புதுவஸ்திரத்தினாலே வடித்து,—நவ

கும்பத்து இனிது எடுக்க - நவபாண்டத்திலே நன்றாக எடுத்து வைக்க. எ - று. (களரு)

திருநீற்றின் காயத் திரிமந் திரத்தால்
வரமான பூதலத்தில் வை.

இ - ள். திருநீற்றின் காயத்திரி மந்திரத்தால் - அந்தப்பாண்டத்தை விபூதிகாயத்திரி மந்திரத்தையுச்சரித்து—வரம் ஆன பூதலத்தில் வை - சுத்தபூமியிலே கொண்டுபோய் வை.எ-று.

கந்தமலர் பெய்துவாய் கட்டிநவ வத்திரத்தா
லெந்தனமீ தென்றே யெணி.

இ - ள். கந்த மலர் பெய்து - மல்லிகை முல்லை பாதிரி சிறு சண்பகமுதலிய சுகந்தபுஷ்பங்களையெடுத்துச் சத்தியோசாத மந்திரத்தினாலே அதினுள்ளே போட்டு, நவவத்திரத்தால் வாய் கட்டி - புதுவஸ்திரத்தினாலே அதன்வாயைக் கட்டி,—ஈது எம் தனம் என்று எணி - இதுவே நம்முடைய திரவியமென்று கருதி. எ - று. (களஎ)

அணிக தினமு மறையு முறையி
னெணுகவிது தான்கற்ப மென்று.

இ - ள். தினமும் அறையும் முறையின் அணிக - நாடோறும் சிவாகமத்திலே விதித்தபடி சிவமந்திரத்தினாலேயெடுத்துத் தரிக்க,—இதுதான் கற்பம் என்று எணுக - இதுவே கற்பமென்னும் விபூதியென்றறிக. எ - று.

பிராமணர் முதலிய நான்குவருணத்தாரும் முறையே ஒருகழஞ்சு ஒன்றரைக்கழஞ்சு இரண்டுகழஞ்சு இரண்டரைக்கழஞ்சுவிபூதி கொள்க. (களஅ)

அநுகற்பவிதி நான்குதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

கட்டுரைத்தாங் கற்ப மினியநுகற் பந்தனையு
மிட்டமுறக் கூறுவங்கே ளீங்கு.

இ - ள். கற்பம் கட்டுரைத்தாம் - கற்பவிதியைச் சொன்னோம்;—இனி அநுகற்பந்தனையும் ஈங்கு இட்டம் உறக் கூறுவம் கேள் - இனி அநுகற்பவிதியையும் நன்மையுண்டாகும்படி இங்கே சொல்வோங்கேள். எ - று. (௧௭௧)

வனந்தனிற் சித்திரை மாதத்திற் சென்றே
யுலர்ந்தமயங் கொண்டோ ரிடத்து.

இ - ள். சித்திரைமாதத்தில் வனந்தனில் சென்று - சித்திரைமாதத்திலே பசுக்கள் நின்ற மந்தையிலே போய்;—உலர்ந்த மயம் ஓரிடத்துக் கொண்டு - உலர்ந்து கிடந்த கோமயங்களை எடுத்து ஓரிடத்திலே குவித்து. எ - று. (௧௭௦)

வைத்திடித்துத் தூளாக்கிவார்த்ததனிற்கோசலத்தைக்
கைத்தலத்தி னாலே கலந்து.

இ - ள். வைத்து இடித்துத் தூள் ஆக்கி - உரலிலே போட்டு இடித்துத் தூளாக்கி,—அதனில் கோசலத்தை வார்த்துக் கைத்தலத்தினாலே கலந்து-அதிலே கோசலத்தை வாமதேவமந்திரத்தினாலே வார்த்துக் கையினாலே கலந்து. எ - று. ()

அள்ளிப் பிசைந்துருட்டி யங்கிதனில் வைத்தெடுத்துக்
கொள்கமுனஞ் சொன்னமனுக் கொண்டு.

இ - ள். முனம் சொன்ன மனுக் கொண்டு - அகோரமந்திரத்தினாலே—அள்ளிப் பிசைந்து உருட்டி - அள்ளி நன்றாகப் பிசைந்து உண்டைபண்ணி,—அங்கிதனில் வைத்து - பதரை விரித்து அதன்மேலே தற்புருடமந்திரத்தினாலே வைத்துச்

சிவாக்கினியினாலே தகனம்பண்ணி,—எடுத்துக்கொள்க - ஈசானமந்திரத்தினாலே எடுத்துக்கொள்க. எ - று. (கஅஉ)

உபகற்பவிதி நான்கு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

இதுதா னநுகற்ப மென்பருப கற்ப
மதுதனையுஞ் சொலவா மறி.

இ - ள். இதுதான் அநுகற்பம் என்பர் - இதுவே அநுகற்பமென்னும் விபூதியென்று சொல்லுவார்கள்;—உபகற்பம் அதுதனையும் சொல்வாம் அறி - இனி உபகற்பவிதியையுஞ் சொல்வாம் அறிந்துகொள். எ - று. (கஅங)

வன்னிவனந் தன்னி லுறவியல்பாய் வாய்த்தபொடி
தன்னை யெடுத்திடுக தான்.

இ - ள். வனந்தன்னில் வன்னி உற இயல்பாய் வாய்த்த பொடி தன்னை எடுத்திடுக - வனத்தின்கண்ணே மரத்தோடு மரம் இணைந்து தானேயுண்டாகிய அக்கினியினாலே வெந்து விளைந்த சாம்பலை எடுக்க. எ - று.

செயற்கையுள்ள செங்கற்சூளை குயவன்சூளை முதலியவற்றின் சாம்பலையும் எடுக்கலாமெனவறிக. (கஅச)

வார்த்திடுக வானைந்து மற்றதனிற் கையாலே
சேர்த்திடுக பாகந் தெரிந்து.

இ - ள். மற்றதனில் ஆன் ஐந்தும் வார்த்திடுக - அதிலே பஞ்சகவ்வியத்தை வாமதேவமந்திரத்தினாலே வார்த்து,— பாகம் தெரிந்து கையாலே சேர்த்திடுக - பாகமறிந்து கையினாலே கலந்து. எ - று. (கஅரு)

அள்ளிப் பிசைந்துருட்டி யங்கிதனில் வைத்தெடுத்துக்
கொள்கமுனஞ் சொன்னமனுக் கொண்டு.

இ - ள். முனம் சொன்ன மனுக் கொண்டு - அகோரமந்திரத்தினாலே—அள்ளிப் பிசைந்து உருட்டி - அள்ளி நன்றாகப் பிசைந்து உண்டைபண்ணி,—அங்கிதனில் வைத்து - பதரை விரித்து அதன்மேலே தற்புருடமந்திரத்தினாலே வைத்துச் சிவாக்கினியினாலே தகனம்பண்ணி,—எடுத்துக் கொள்க - ஈசானமந்திரத்தினாலே எடுத்துக்கொள்க. எ - று.

இடி விழுந்தவிடத்தில் உண்டாகிய திருநீறும் மலையுச்சியிலும் பூமியிலும் யாதொருகாரணத்தினால் விளைந்த திருநீறும் அகற்பமெனப்படும். அதனை மூலமந்திரம் கலாமந்திரங்களினாலே சுத்தி செய்து தரிக்கலாம். (கஅகூ)

விபூதிப்பையினதிலக்கணம் இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

வததிரத்தி னற்புலித்தோன் மான்றோலி னாலுமாம்
பத்தரணி யுமபூதிப் பை.

இ - ள். பத்தர் அணியும் பூதிப் பை - அன்பர்களணியும் விபூதி வைக்கும் பை—வத்திரத்தினால் புலித்தோல் மான்றோலினாலும் ஆம் - வஸ்திரத்தினாலும் புலித்தோலினாலும் மான்றோலினாலுஞ் செய்யலாம். எ - று.

இவற்றுள், தோலிரண்டும் நைட்டிகப்பிரமசாரிக்கும் சந்நியாசிக்குமாமெனவறிக. பையினன்றி வில்வக்குடுக்கை சுரைக்குடுக்கைகளினும் விபூதி வைத்துத் தரிக்கலாம். குடுக்கைகளினன்றிப் பிறவற்றில் உள்ள விபூதியைக் கவிழ்க்கலாகாது. கவிழ்த்தவர் ரௌரவநரகத்தின் வீழ்வர். (கஅஎ)

எட்டங் குலமகல மீரா றுயரமாம்
வட்டம்பூ திப்பைக்கு வாய்.

இ - ள். பூதிப் பைக்கு - விபூதிப்பைக்கு—அகலம் எட்டு அங்குலம் உயரம் ஈராறு - அகலம் எட்டங்குலமும் உயரம் பன்னிரண்டங்குலமும்—வாய் வட்டம் ஆம் - வாய் வட்டமுமாயிருத்தல்வேண்டும். எ - று. (கஅஅ)

திருநீறு தரித்தற்கு விரனியமம் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

அங்குட்ட மத்திமைய நாமிகையா னீறணிக
தங்காது மாபா தகம்.

இ-ள். அங்குட்டம் மத்திமை அநாமிகையால் நீறு அணிக-பெருவிரல் நடுவிரல் ஆழிவிரல் என்னும் மூன்றுவிரலினாலும் அநுலோமப் பிரதிலோமமாக விபூதி தரிக்க;—மாபாதகம் தங்காது - இப்படித் தரிக்கின் மாபாதகஞ்சேராது. எ - று.

அநுலோமப் பிரதிலோமமாகத் தரித்தலாவது நடுவிரல் ஆழிவிரல்களினால் இடப்பக்கந் தொடுத்திழுத்துப் பெருவிரலினால் வலப்பக்கந்தொடுத்திழுத்தலாம். உத்தூளனஞ்செய்தன்றித் திரிபுண்டரஞ்சாத்தலாகாது. (கஅக)

அணியலுமா குங்கனிட்டை யங்குட்ட மின்றி
யெணுமூன்றி னாலுமென வெண்.

இ - ள். கனிட்டை அங்குட்டம் இன்றி - சிறுவிரலையும் பெருவிரலையுமொழித்து—எணும் மூன்றினாலும் அணியலும் ஆகும் என எண் - எண்ணப்பட்ட நடுவிரன்மூன்றினாலுந் தரித்தலுமாகுமென்றறி. எ - று.

நடுவிரன்மூன்றுங்கூடிற் றிருநீற்றுமுத்திரையெனப்படுமென்றறிக. (கக0)

திருநீறு தரிக்குந்தானங்கள் இரண்டிருக்குறளா லுணர்த்துகின்றார்.

சிரநெற்றி காது திரண்ட கழுத்தி
னுரந்தோளி னுந்தனி லும்.

இ - ள். சிரம் - உச்சியிலும்—நெற்றி - நெற்றியிலும்—காது - காதுகளிலும்—திரண்ட கழுத்தின் - திரண்ட கழுத்திலும்—உரம் - மார்பிலும்—தோளின் - புயங்களிலும்—நாபிதனிலும் - உந்தியிலும். எ - று. (கசக)

இரண்டுமுழங் கையி னிரண்டுமணி பந்தத்
திரண்டுமுழந் தாண்முதுகி னும்.

இ - ள். இரண்டு முழங்கையின் - முழங்கைகளிரண்டிலும்—இரண்டு மணிபந்தத்து - மணிக்கட்டுகளிரண்டிலும்—இரண்டு முழந்தாள்—முழந்தாள்களிரண்டிலும்—முதுகினும்-முதுகிலும் விபூதி தரிக்கப்படும். எ - று. (கசஉ)

அதற்குப் பரிமாணம் வரையறுத்துணர்த்துகின்றார்.

நெற்றியுரந் தோளணிக நீறிருமூன் றங்குலத்தின்
மற்றவற்றொன் றென்றே மதி.

இ - ள். நீறு நெற்றி உரம் தோள் இருமூன்று அங்குலத்தின் அணிக - விபூதியைத் திரிபுண்டரமாக நெற்றியிலும் மார்பிலும் புயங்களிலும் அவ்வாறங்குலநீளம் பொருந்தத் தரிக்க;—மற்றவற்று ஒன்று என்றே மதி - மற்றையுறுப்புக்களில் ஒவ்வோரங்குலநீளம் பொருந்தத் தரிக்க. எ - று.

திரிபுண்டரமாவது முக்குறித்தொகுதி. முக்குறிகளினிடைவெளி ஒவ்வோரங்குலவளவினதாய் இருத்தல்வேண்டும். அவை, ஒன்றை ஒன்று தீண்டினும், மிகவகலினும், வளையினும்,

இடையறினும், குற்றமாமென்றறிக. திரிபுண்டரம் விதித்த நீளத்திற்குறையின் ஆயுக்குன்றும்; மிகிற்றவங்கெடும். (கககூ)

அதற்கு மந்திரம் வரையறுத்துணர்த்துகின்றார.

தரிக்கதலை யாதியந்தஞ் சானுவீ சாதி
தரிக்கமற்றெல் லாஞ்சாதத் தால்.

இ - ள். தலை ஆதி சானு அந்தம் ஈசாதி தரிக்க - தலை நெற்றி மார்பு நாபி முழந்தாள் என்னுந்தானஙகளின முறையே ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் மந்திரங்களினாலே தரிக்க;—மற்றெல்லாம் சாததநால் தரிக்க - மற்றையுறுப்புக்களெல்லாவற்றிலும் சத்தியோசாதமந்திரத்தினாலே தரிக்க. எ - று.

விபூதியை இடக்கையில் வைத்துச் சங்கிதாமந்திரத்தால் அபிமந்திரித்து வலக்கைப்பெருவிரல் அணிவிரல்களினாலே சலத்தையள்ளி வார்த்துக் குழைத்துத் தரிக்க. தோண்முதலிய தானங்களிலே முன்னர் வலப்பக்கத்திலும் பின்னர் இடப்பக்கத்திலுந்தரிக்க. (ககச)

விபூதி தரித்தற்கு வேறோர்சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.

திரிசூலத் தாலுந் திருநீ றணிவா
ரொருவார் சிவலோகத் துற்று.

இ - ள். திரிசூலத்தாலும் திருநீறு அணிவார்-செம்பு முதலியவற்றினாலே திரிசூலஞ்செய்து அதினாலே தோண் முதலிய தானங்களிலே விபூதி தரிப்பவர்கள்—சிவலோகத்து உற்று ஒருவார் - சிவலோகத்திலே ஒருகாலும் நீங்காது வாழ்ந்திருப்பர்கள். எ - று

உம்மையால் இடபமுங்கொள்க. இவ்விரண்டாலும் பொறி த்தல் "பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யு—மென்னாவி காப்பதற் கிச்சையுண்டே லிருங் கூற்றகல—மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவு கொண்ட—றுன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க் கொழுந்தே." எ-ம். "கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலை யுற்றான்—படவுந் திருவிர லொன்றுவைத் தாய்பனி மால்வ ரைபோ—லிடபம் பொறித்தென்னை யேன்றுகொள்ளாயி ருஞ் சோலைதிங்க—டடவுங் கடந்தையுட் டூங்கானை மாடத் தெந் தத்துவனே." எ-ம். வருந் திருநாவுக்கரசுநாயனார் தேவா ரங்களாலறிக. (ககரு)

விபூதி தரிக்குமுறைமை இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

நீருடனே சந்திதொறு நீறணிக தீக்கையுளார்
நீரறவே பூசுகவெண் ணீறு.

இ-ள். தீக்கை உளார் சந்திதொறும் நீருடனே நீறு அணிக - சிவதீக்ஷையுள்ளவர்கள் முக்காலமும் சலங்கூட்டித் திருநீறு தரிக்கக்கடவாகள்;—நீர் அறவே வெண்ணீறு பூசுக- மற்றைக்காலங்களிற் சலங்கூட்டாமலே திருவெண்ணீறு தரி க்கக்கடவர்கள். எ-று.

மற்றைக்காலங்களிலே நீர் கூட்டித் தரிக்கின் அந்நீர் பனை நீரையொக்குமென்றாகமங்கூறுமெனவறிக. (ககசு)

மாதரும தீக்கிதரு மத்தியா ஹ்னத்தரத்தில்
வேதியர்தம் முள்விரத்த ரும்.

இ-ள். அதீக்கிதரும்-சிவதீக்ஷையில்லாத ஆடவர்களும்— மாதரும்-சிவதீக்ஷையில்லாத பெண்களும்—வேதியர்தம்முள்

விரத்தரும் - வைதிகவழியொழுகும் சங்கியாசிகளும்—மத்தியான உத்தரத்தில் - மத்தியானத்துக்குப் பின்—நீர் அற வெண்ணீறு பூசுக - சலங்கூட்டாமல் விபூதி தரிக்கக்கடவர்கள். எ - று.

விரத்தருமென்ற உம்மையாற் பிரமசாரியும் வானப்பிரத்தனும் கன்னிகையுங்கொள்க. அது "மங்கையர் சங்கியாசி மறைவானப் பிரத்தன் றேவி—தங்கிய பிரமசாரி சலத்தினிற குழைக்க லாகா—வங்குப தேச மில்லா னந்த நீர் குழைக்க லாகா—துங்கவெண் ணீற்றை யள்ளித் துகிலினால் வடித்துக் கொள்வான்." என்னுஞ் செய்யுளாலறிக. (கசுஎ)

இவ்வருணத்தார்க்கு இவவிபூதியாமென்பது
மூன்றுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

அந்தணர்முன் மூவர்க்கு மாஞ்சிவயா கந்தன்னில
வெந்துவிளங் குந்திருவெண் ணீறு.

இ - ள். சிவயாகந்தன்னில் வெந்து விளங்கும் திருவெண்ணீறு - சிவபெருமானது யாகசாலையிலே உற்சவமுதலிய காலங்களில் வெந்து விளங்கிய திருவெண்ணீறு—அந்தணர் முன் மூவர்க்கும் ஆம் - பிராமணர் முதலிய மூன்றுவருணத்தாருக்குந் தரித்தற்கு உரியதாம். எ - று. (கசுஅ)

திருமடைப் பள்ளி தனிற்பாகஞ் செய்த
திருநீறே சூத்திரர்க்குத் தேறு.

இ - ள். திருமடைப்பள்ளிதனில் பாகம் செய்த திருநீறு - திருக்கோயிலினும் திருமடத்திலுமுள்ள திருமடைப்பள்ளியிலே பாகஞ்செய்ததனாலுண்டாகிய திருநீறு—சூத்திரர்க்குத் தேறு - சாமானியசூத்திரருக்குத் தரித்தற்குரியதாமென்றறி. எ - று. (கசுகூ)

மற்றையருக் கெல்லாம் வனத்தினியல் பாய்விளைந்த
நற்றிருநீ றாகுமென நாடு.

இ - ள். வனத்தின் இயல்பாய் விளைந்த நல் திருநீறு - காட்டுத்தீயினாலே இயல்பாய் விளைந்த நல்ல திருநீறு—மற்றையருக்கு எல்லாம் ஆகும் என நாடு - நான்குவருணத்தாரல்லாத மற்றையனைவருக்குந் தரித்தற்கு உரியது என்றறி. எ - று. ()

நான்குவருணத்தாருந் திருநீறு தரிக்குமுறைமை
இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

பண்ணுகபா தாந்தம்பார்ப் பாருத்தூ ளம்மரையர்
வெண்ணீறு நாபிக்கு மேல்.

இ - ள். வெண்ணீறு பார்ப்பார் பாதம் அந்தம் உத்தூளம் பண்ணுக - வெண்மையாகிய விபூதியைப் பிராமணர் தலை தொடங்கிக் காலளவும் நீருடனே உத்தூளனம்பண்ணக்கடவர்;—அரையர் நாபிக்கு மேல் - அரசர் கொப்பூழுக்கு மேலே அப்படி உத்தூளனம்பண்ணக்கடவர். எ - று. (௨௦௧)

பட்டம்போ னீறணிக பாரவசியர் மூன்றுவிர
லிட்டெழுதல் சூத்திரர்க்கா மீங்கு.

இ - ள். பாரவசியர் நீறு பட்டம்போல் அணிக - பூமியிலுள்ள வைசியர்கள் விபூதியைப் பட்டமாகத் தரிக்கக்கடவர்;—சூத்திரர்க்கு மூன்று விரல் இட்டு எழுதல் ஆம் - சூத்திரருக்கு மூன்றுவிரலினாலே திரிபுண்டரமாகத் தரித்தலுரியதாம். எ - று.

ஈங்கு என்ற மிகையினால், அநுலோமர் வைசியரைப்போலவும், பிரதிலோமர் சூத்திரரைப்போலவும் தரித்தல்வேண்டுமெனக் கொள்க. (௨௦௨)

திருநீற்றுக்குள்ள பெயரும் அப்பெயர்க்காரணமும் இரண்டுதிருக்குறளாலுணர்த்துகின்றா.

பூதியினைத் தான்கொடுக்கை யாற்பூதி யென்னும்பே
ரோதுவர்வெண் ணீற்றினுக்கென் றோர்.

இ - ள். பூதியினைத் தான் கொடுக்கையால - தன்னைத தரி த்தவர்களுக்கு ஐசுவரியத்தைக் கொடுத்தலினாலே,—வெண ணீற்றினுக்குப் பூதி என்னும பேர் ஓதுவா எனறு ஓ - திரு வெண்ணீற்றுக்குப் பூதியெனனும பெயரைச சொல்வாாக ளென்றறி. எ - று. (உ0ா)

இரக்கிக்கை யாலே யுயிரினை யெலலா
மிரக்கையெனும் பேரா மிதற்கு.

இ - ள். உயிரினை எல்லாம் இரக்கிக்கையாலே - தன்னைத் தரித்த ஆன்மாக்களெல்லாவற்றையும் இரக்ஷித்தலால்,—இத ற்கு இரக்கை எனும் பேர் ஆம - இந்ததிருநீற்றுக்கு இரக்கை யென்னும் பெயருண்டாம். எ - று.

இவ்விரண்டேயன்றிப் பசிதம், பசுமம், க்ஷாரம் என்னும் பெயர்களுமுண்டு. சிவத்துவத்தை விளக்கலாற் பசிதமெனவும், பாவங்களை நீறுக்கலாற் பசுமமெனவும், உயிாகளது மலத தைக் கழுவுதலால் க்ஷாரமெனவுமபெயர் பெற்றது. (உ0எ)

விபூதியைத் தரையில் வீழ்த்தவழிப் படுங்குற்ற முணர்த்துகின்றா.

பூதியணு மாத்திரம்வீழ்த் தாரபூ தலந்தன்னில்
வாதைநர கத்துளுறு வார்.

இ - ள். பூதி அணு மாததிரம் பூதலந்தன்னில் வீழ்த்தார் - விபூதியை எடுக்கும்போதேனுந் தரிக்கும்போதேனுங் கைதவறியேனும் பரமாணுவளவாயினுந் தரையிலே சிந்தினவர்

கள்—நரகத்துள் வாதை உறுவார் - நரகத்தில் விழுந்து துய ருறுவார்கள். எ - று.

விபூதி சிந்தில் அதனையெடுத்து அந்தத்தலத்தைச் சுத்தி செய்து தாளத்திரயம்பண்ணிச் சங்காரமுத்திரையினாலே அத னைத் தன்னிடத்தொடுக்கல்வேண்டுமென்க. (உ0ரு)

விபூதி தரிக்கலாகா இடங்களுணர்த்துகின்றார்.

அணியற்க நின்மலன் முன்னழலின் முன்னு
முணர்வுதவுந் தேசிகன்முன் னும.

இ - ள். நின்மலன் முன் - சிவபெருமான்முன்னும்—அழ லின் முன்னும் - சிவாக்கினிமுன்னும்—உணர்வு உதவும் தேசி கன முன்னும் - அறிவைத தருஞ்சற்குருவின்முன்னும்—அணி யற்க - விபூதி தரியாதொழிக. எ - று.

இவ்விடங்களிலே முகத்தை மாறியிட்டுக்கொள்க. இங்ஙனமன்றிச் சண்டாளாமுன்னும் பாவிகண்முன்னும் அசுத்தநில த்தும் வழிநடக்கும்போதும் தரிக்கலாகாதெனவுணர்க. ஒரு கையால் வாங்கிய விபூதியும், விலைக்குக்கொண்ட விபூதியும், சிவதீக்ஷையில்லாதார் தந்த விபூதியும் தரிக்கலாகாது. வாயங் காந்துகொண்டும், தலைநடுக்கிக்கொண்டும், கவிழ்ந்துகொண் டும், தரிக்கலாகாது. ஒருவிரலாலேனும் ஒருகையாலேனும் தரிக்கலாகாது. வடக்கு நோக்கியாயினும் கிழக்கு நோக்கியா யினும் இருந்து மௌனம் பொருந்திச் சிவபெருமானையும் ஆசாரியரையுஞ்சிந்தித்து அண்ணாந்து மூன்றுவிரலினாலே விபூதி தரிக்க. மலசலமோசனம்பண்ணிச் சௌசஞ்செய்து ஆசமித்தபின்னும், பானஞ்செய்து ஆசமித்தபின்னும், போச னம் பிக்ஷை நித்திரை என்னும் மூன்றுக்கும் முன்னும் பின் னும், சந்தியாகாலங்களினும் விபூதி தரிக்க. விபூதிதரியாதார் முகம் சுடுகாட்டுக்கொக்கும். விபூதியணிந்தே புறத்திற்புறப்ப

டுக. விபூதியணியாதொழிந்தபோது அற்றைக்கு உபவசியாயி ருந்து பஞ்சகவவியத்தை உட்கொண்டு அகோரமந்திரத்தை இருநூறுதரஞ்செபிக்க. (உ0சு)

சிவபெருமான் முதலாயினோரைச் சேவிக்கப் போமிடத்து ஓர்சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.

இயன்றதே தேனு மிவாதிருமுன் வைத்துப
பயந்துபணிந் தேத்தவறும பற்று.

இ - ள். இயன்றது ஏதேனும் இவா திருமுன வைதது - சிவபெருமான் ஆசாரியன சேட்டாசாரியன் சிவாக்கினியென னும் இவாகளை யாவனொருவன் சேவிக்கப்போமிடதது வெறுங்கையுடனே போகாமல் தன்னாலே கொடுத்தற்கியன்ற பதாாததததை இவாகள் சநநிதியிலவைதது—பயந்து பணிந்து ஏத்தப் பற்று அறும் - பயந்து வணங்கித் துதிக்க இருவகைப்பற்றுக்களும் நீங்கும் . எ - று. (உ0எ)

யாதொருகாரியததுக்கும் ஆசாரியனை ஏவவொணணா தென்ப துணர்ததுகின்றாா.

தேசிகனை யேவற்க தேசிகனறன் காரியத்து
மீசன் பணிதன் னிலும.

இ - ள். தேசிகனறன் காரியததும் - ஆசாரியனுடைய காரியத்திலேனும்—ஈசன பணிதன்னிலும -சிவபெருமானுடைய காரியததிலேனும்—தேசிகனை ஏவற்க - ஆசாரியனை ஏவாதொழிக. எ - று. (உ0அ)

ஆசாரியனிடத்திலே விணணப்பஞ்செய்யுமுறைமை யுணர்த்துகின்றார்.

கைகுவித்து மெய்வளைத்துக் கணணியருங் காரியமும்
பையப் பகர்க பயந்து.

இ - ள். கை குவித்து மெய் வளைத்து - ஆசாரியனுக்கு முன்னே கைகளைக் குவித்துச் சரீரத்தைச் சற்றேவளைத்து வாய் புதைத்து நின்று,—அருங் காரியமும் கண்ணிப் பயந்து பையப் பகர்க - தனக்குச் செய்யவேண்டுஞ்சாந்தி முதலிய காரியங்களைத் தன்மனசிலே கருதிப் பயந்து மெல்ல விண்ணப்பம் பண்ணுக. எ - று. (உ0௯)

ஆசாரியனை வணங்குமுறைமையுணர்த்துகின்றார்.

ஒருகையி னாலே தொழுகை யொழிக
விருகையுங் கூப்பி லினிது.

இ - ள். ஒருகையினாலே தொழுகை ஒழிக - ஒருகையினால் அஞ்சலிபண்ணுதொழிக;—இருகையும் கூப்பில் இனிது - இரண்டுகைகளையுங்குவித்து வணங்கில் நன்று. எ - று.

ஒருகையினால் அஞ்சலி செய்யின் முன்செய்த புண்ணியங்களெல்லாம் போய்விடுமென்றறிக. திருப்பள்ளித்தாமங் கையிலிருந்தால் வலக்கையை முட்டியாகப் பிடித்துத் தலையிலே வைக்கின் இரண்டங்கமாமாதலாற் குற்றமில்லையெனக் கொள்க. (உக0)

தேவர்களை வணங்குமுறைமையுணர்த்துகின்றார்.

தேவரடி முன்றொழுக சென்னிமிசை கைகுவித்துப்
பாவவினை தன்னையறுப் பார்.

இ - ள். பாவ வினை தன்னை அறுப்பார் - தாங்கள் செய்த பாவகருமங்களை நீக்க விரும்புவோர்கள்—தேவர் அடி முன் கை சென்னி மிசை குவித்துத் தொழுக - தேவர்களுடைய பாதங்களை அவர்கள் சந்நிதானத்திலே இரண்டுகைகளையுஞ் சிரசின்மேலே குவித்து வணங்கக்கடவர்கள். எ - று.

இங்ஙனஞ்செய்வது திரயாங்கநமஸ்காரமெனப் பெயர் பெறும். (உகக)

ஆசாரியர்முதலாயினோரை அஞ்சலிபண்ணுமுறைமை யுணர்த்துகின்றார்.

குளத்திற் குவிகை யிணைகுரவற் கன்பாக்
குரத்திற் குவிகை யுகந்து.

இ - ள். குரவற்குக் கை இணை குளத்தில் குவி - ஆசாரியனுக்கு வணக்கஞ்செய்யுமிடத்து இரண்டுகைகளையுங்கூட்டி நெற்றியிலே அஞ்சலிபண்ணு;—அன்பாக்கு உகந்து கை உரத்தில் குவி - சாதகர் முதலிய சிவபத்தர்களுக்கு வணக்கஞ்செய்யுமிடத்து மனமகிழ்ந்து மார்பிலே அஞ்சலிபண்ணு. எ - று.

ஒருவன் தன்னைப் பிறர் வணங்கும் வணக்கத்தைப் புத்தி பண்ணுமுறைமையுணர்த்துகின்றார்.

உன்னை வணங்கி லொருவரெம துள்ளுறையு
நின்மலனுக் கென்றே நினை.

இ - ள். ஒருவர் உன்னை வணங்கில் - யாராயினுமொருவர் உன்னை வணங்கும்போது—எமது உள் உறையும் நின்மலனுக்கு என்றே நினை - இவ்வணக்கம் ஆன்மாவாகிய நமக்கன்று நமமிடத்திலிருக்கும் நிருமலராகிய சிவபெருமானுக்கேயாமென்று புத்திபண்ணு. எ - று. (௨௧௯)

ஒருவன் தான் பிறரை வணங்கும்போது அதனைப் புத்திபண்ணுமுறைமையுணர்த்துகின்றார்.

மற்றொருவர் தம்மை வணங்கும் பொழுதவரு
ணிர்க்குணனைப் பார்பரிந்து நீ.

இ - ள். நீ மற்றொருவர்தம்மை வணங்கும் பொழுது - நீ உன்னையொத்தாராயேனும் உன்னினுயர்ந்தாராயேனும் உள்ள மற்றொருவரை வணங்கும்போது—அவருள் நிர்க்குணனைப் பரிந்து பார் - அவ்வணக்கம் அவருக்கென்று புத்திபண்ணுமல்

அவரிடத்திலிருக்கும் சிவபெருமானுக்கேயாமென்று புத்திப ணணி அன்பினோடு வணங்கு. எ - று. (உகசு)

எவ்வுயிரினும் அன்புசெய்தற்குக் காரண முணர்த்துகின்றார்.

எவ்வுயிரு நீங்கா துறையு மிறைசிவனென்
றெவ்வுயிர்க்கு மன்பா யிரு.

இ - ள். இறை சிவன் எவ்வுயிரும் நீங்காது உறையும் என்று - பதியாகிய சிவபெருமான் சரமசரமென்னும் எவ்வுயிர்களினும் நீங்காமல் வியாபித்திருப்பரென்று துணிந்து—எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு - ஒருயிருக்கும் வாதை செய்யாமல் எவ்வுயிர்களினும் அன்புடையவனாயிரு. எ - று. (உகரு)

பெரியோர்கண்முன் பேசுமுறைமை யுணர்த்துகின்றார்.

குதர்க்கவுரை கூறேல் குணத்தார்முன் னென்றும்
விதர்க்கம் விரும்பி விளம்பு.

இ - ள். குணத்தார் முன் என்றும் குதர்க்கவுரை கூறேல் - ஆசாரியர் முதலிய பெரியோர்களுக்கு முன்னே ஒருகாலமும ஒழுங்கில்லாத தருக்கவார்த்தைகளைப் பேசாதே;—விதர்க்கம் விரும்பி விளம்பு - உண்மைப்பொருளையாராய்தற்குரிய தருக்கவார்த்தைகளை விரும்பிப் பேசு. எ - று. (உகசு)

பெரியோரிடத்துக் கொடுக்கும் முறைமையும் வாங்கும் முறைமையும் உணர்த்துகின்றார்.

தன்னிருகை யாலுங் கொடுத்திடுக தாழ்ந்தேற்க
தன்னிற் பெரியோர்கைத் தான்.

இ - ள். தன்னில் பெரியோர் கைத்தான் - ஒருவன் தன்னிலும் பெரியோர்களுடைய கையிலே—தன் இரு கையாலும கொடுத்திடுக - ஒன்றைக் கொடுக்கும்போது தன்னுடைய இரண்டுகைகளினாலுங் கொடுக்கக்கடவன்;—தாழ்ந்து ஏற்க - ஒன்றை வாங்கும்போது பணிந்து இரண்டுகைகளினாலுமே வாங்கக்கடவன். எ - று. (உகஎ)

இடக்கையினாலே செய்யலாகாதவை இரண்டுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

இடக்கையி னாலேது மிட்டருந்தேல் யார்க்கு
மிடக்கையா லீயேலே லேல்.

இ - ள். ஏதும் இடக்கையினால் இட்டு அருந்தேல் - போசனம்பண்ணும்போது யாதாயினும் இடக்கையினால் இட்டுப் புசியாதே;—யார்க்கும் இடக்கையால் ஈயேல் ஏலேல் - யாவருக்காயினும் இடக்கையினாலே கொடாதே; யாவரிடத்தாயினும் இடக்கையினாலே வாங்காதே. எ - று. (உகஅ)

தீண்டே லிடக்கையி னாலே சிவலிங்கந்
தீண்டற்க நின்முகமுஞ் சேர்த்து.

இ - ள். சிவலிங்கம் இடக்கையினாலே தீண்டேல் - சிவலிங்கத்தை இடக்கையினாலே தீண்டாதே;—நின் முகமும் சேர்த்துத் தீண்டற்க - உன்முகத்தையும் இடக்கையினாலே தீண்டாதே. எ - று. (உகக)

தீண்டலாகாத்தானமுணர்த்துகின்றார்.

கடிக்கீழ்த் தொடிற்கை கழுவுக பாத
மிடக்கையா லன்றித்தீண் டேல்.

இ - ள். கடிக் கீழ்த் தொடில் கை கழுவுக - அரையின் கீழே தீண்டிற் கையைக் கழுவுக;— பாதம் இடக்கையால்

அன்றித் தீண்டேல் - கால்களை இடக்கையினாலன்றி வலக் கையினாலே தீண்டாதே. எ - று. (உஉ0)

தலைசொறியுமுறைமையுணர்த்துகின்றார்.

இருகையி னாலுந் தலைசொறியே லென்று
மொருகை சொறிகை யொழுங்கு.

இ - ள். என்றும் இருகையினாலும் தலைசொறியேல் - ஒருபோதும் இரண்டுகையினாலுந் தலை சொறியாதே;—ஒரு கை சொறிகை ஒழுங்கு - ஒருகையினாலே தலை சொறிதல் முறைமையாம். எ - று.

தலை உத்தமாங்கமாதலானும், அதனை இடக்கையினாலே சொறியின் வறுமையுண்டாமென வசனமுண்மையானும், வலக்கையினாற் சொறிதல்வேண்டுமென்க. (உஉக)

போசனகாலத்திற்றரித்த ஆடையுடன் சந்திசெய்ய லாகாதென்பதுணர்த்துகின்றார்.

அருந்திய வாடையுட னாடுகநீர் பின்னைத்
திருந்தவே சாயானஞ் செய்.

இ - ள். அருந்திய ஆடையுடன் நீர் ஆடுக - போசனம் பண்ணியபோது தரித்திருந்த வஸ்திரங்களிரண்டோடும் ஸ்நானம் பண்ணி,—பின்னைத் திருந்தவே சாயானம் செய் - பின்பு விதிப்படி சாயங்காலசந்தியைப் பண்ணு. எ - று

இங்கே ஸ்நானமென்றது சிரஸ்நானம் கண்டஸ்நானம் கடி ஸ்நானம் என்னும் மூன்றினுள் இயன்றதொன்றை. (உஉஉ)

பெண்களைப் புணர்தலாகாக் காலம் நான்குதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

ஆடையற நீராடு மாயிழையா ரைப்பாரேல்
கூடேல் பகலவர்தோள் கூர்ந்து.

இ - ள். ஆடை அற நீர் ஆடும் ஆயிழையாரைப் பாரேல் - வஸ்திரமின்றி நீராடுகின்ற பெண்களைப் பாராதே;—அவர் தோள் சேர்ந்து பகல் கூடேல் - அவர்களுடைய தோள்களை விரும்பிப் பகற்காலத்திற் புணராதே. எ - று.

பிறர்மனைவியரை இச்சித்துப் பார்த்த கண்களிலே யமதூதர்கள் முளையடித்து வருத்தஞ்செய்வார்களென்று சிவதருமோத்தரஞ்செப்புதலறிக. பகற்புணர்ச்சி செய்தாருக்கு வயசு குன்றுமென்க. (உஉ௩)

மிகத்தெளிந்தா ரோதி விதிநிசித்த மெல்லாம்
பகற்பொழுது பாரார பகம.

இ - ள். விதி நிசித்தம் எல்லாம் ஓதி மிகத் தெளிந்தார் - சாத்திரவிதிவிலக்குக்களெல்லாவற்றையும் படித்து மிகத் தெளிந்தவர்கள்—பகம பகற்பொழுது பாரார - யோனியைப் பகற்காலத்திற் பாரார்கள். எ - று. (உஉ௪)

அட்டமி சட்டி பதினன்கைம் மூன்றினுந்
தொட்டிடே லில்லவள்வேய்த் தோள்.

இ - ள். இல்லவள் வேய்த் தோள் - மனைவியினுடைய மூங்கில்போலுந்தோள்களை,—அட்டமி - அட்டமியிலும்—சட்டி - சட்டியிலும்—பதினன்கு - சதுர்த்தசியிலும்—ஐம்மூன்றினும் - அமாவாசை பௌணர்மைகளிலும்,—தொட்டிடேல் - புணராதே. எ - று. (உஉ௫)

சென்மமொரு மூன்றுந் திருவா திரையோண
மென்னுமிவை தம்மினுந்தீண் டேல்.

இ - ள். சென்மம் ஒருமூன்றும்-சென்மத்திரயங்களிலும்—திருவாதிரை ஓணம் என்னும் இவைதம்மினும் - திருவாதிரை

திருவோணமென்னும் இந்நக்ஷத்திரங்களிலும்—நீண்டேல் - புணராதே. எ - று.

சென்மத்திரயங்களாவன பிறந்த நக்ஷத்திரமும், அதற்குப் பத்தாநக்ஷத்திரமும், அதற்குப் பத்தாநக்ஷத்திரமுமாம். ஏகாதசி, திரயோதசி, மகம், மூலம், விதிபாதயோகம், மாசப்பிறப்பு, விரததினம், சிராத்ததினம், சிராத்ததினத்துக்கு முதற்றினம், சிராத்ததினத்துக்கு மற்றைத்தினம், சந்தியாகாலங்கள், அர்த்தராத்திரி என்பவைகளும் புணர்ச்சிக்கு விலக்கப்பட்டனவென்க.

பிரமசாரியும் வானப்பிரத்தனும் சந்நியாசியும் புணர்ச்சியை நினைத்தலுமாகாது. இல்வாழ்வான் மாசத்துக்கு ஒருநாள் இராத்திரிகாலத்திலே தன் மனைவியோடுமாத்திரங்கூடல்வேண்டும். இப்படிக் கூடினால், தாய்க்குந் தந்தைக்கும் அவருக்கு உற்பவிக்குங் குழந்தைக்கும் சரீரம் திடமாயிருக்கும்; வியாதி வாராது, வந்தாலும சூரியனைக் கணட பனிபோல நீங்கிவிடும். வயசினாலே தன்னின் மூத்தவளோடும், பிறன்மனைவியோடும், பொதுப்பெண்ணோடுங் கூடினும், தன்மனைவியோடு மாசத்துக்கொருதரமன்றிப் பலதரங்கூடினும், வியாதி உண்டாகும். மாசத்துக்கு ஒருநாளென்றதும் ருதுகாலத்துட்பட்டதாயும், விலக்கப்பட்ட நாளல்லாததாயும் இருத்தல்வேண்டும்.

பெண்கள் வீட்டுக்கு விலக்காகுநாண்முதற் பதினாறுநாள் வரையும் உள்ள காலம் ருதுகாலமெனப்படும். அக்காலத்தில் ஐந்தாநாண்முதற் பதினாறுநாள்வரையும் உள்ள பன்னிரண்டு நாளுமே கருத்தரிக்குங்காலம். இந்தப்பன்னிரண்டு நாளினுள்ளும் புணர்ச்சிக்கு ஆகாவென விலக்கப்பட்ட நாட்களை ஒழித்து மற்றைநாட்களிலே மனைவியோடு கூடல்வேண்டும். இரட்டித்த நாட்களிற்கூடிற் புத்திரனும், ஒற்றித்த நாட்களிற்கூ

டிற் புத்திரியும் பிறப்பர்: ஆதலினாலே, புத்திரவிருப்பமுடையவன் இரட்டித்த நாட்களிற் கூடல்வேண்டும்.

கருத்தரிக்குங் காலத்துள் விதித்த நாளிலே புணராதவன் கருச்சிதைத்தபாவத்தையடைவன். காமமிகுதியினால் ஆகாத நாட்களிலே கூடினானாயின், அவன் செய்த சந்தியாவந்தனம் செபம் பூசை முதலிய கருமங்கள் அவனுக்குப் பலங்கொடாவாம்: பிதா நரகத்தை அடைவன், பிள்ளை கயரோகமுதலிய வியாதிகளை அடையும்.

புணர்ச்சி செய்தவர் குறியை ஒன்பதுதரமும், இடக்கையைப் பதினைந்துதரமும், இரண்டுகைகளையுஞ்சேர்த்து ஒன்பது தரமும், இரண்டுகால்களையும் மும்மூன்றுதரமும், மண்ணும் நீருங்கொண்டு சௌசஞ்செய்து நீர் வாயிற்கொண்டு முப்பதிரண்டுதரங்கொப்பளித்து, ஆசமனஞ்செய்து, ஸ்நானம் பண்ணுக. (உஉகூ)

சயனநியமம் இரண்டுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

சிரந்துயிலிற் றென்றிசையிற் சேர்க்கவிரத் தன்றான்
வரம்பூர்வ திக்கில்வாழ் வாற்கு.

இ - ள். துயிலில் - நித்திரைசெய்யும்போது,—விரத்தன் சிரம் தென்றிசையில் சேர்க்க - முத்திகாமன் சிரத்தைத் தெற்குத்திக்கிலே வைக்கக்கடவன்;—இல் வாழ்வாற்குப் பூர்வ திக்கு வரம் - புத்திகாமனுக்குக் கிழக்குத்திக்கில் வைத்தலே சிறப்பாம். எ - று. (உஉஎ)

வடதிசையில் வையேற் றலைமற்றை யூரிற்
குடதிசையில் வைக்கை குணம்.

இ - ள். வடதிசையில் தலை வையேல் - ஒருபோதும் வடக்குத்திக்கிலே தலை வையாதே;—மற்றையூரில் குடதிசையில்

வைக்கை குணம் - பிறவூரிலே போனால் மேற்குத்திக்கிலே தலை வைத்து நித்திரைசெய்தல் முறைமையாம். எ - று.

வடக்கே தலை வைத்துச் சயனித்தால் வியாதியுண்டாம. புத்திகாமன் சயனத்தானத்திலே தான தலை வைக்குந்திக்கிலே சோமாஸ்கந்தர் முதலிய விக்கிரங்களுள் ஒன்றைச் சித்திர மாக எழுதி அவரை நமஸ்கரிக்கும் பாவனையிற் சயனிக்க. முத்திகாமன் சிவத்தோடு இரண்டறக் கலக்கும் உண்மைநிலையைச் சிந்தித்துக்கொண்டு சயனிக்க. (உஉஅ)

இருக்கலாகாத நிழல்களுணர்த்துகின்றார.

எருக்குக் களிதான்றி யேரண்டத் தின்கீ
ழிருக்கை யினைவழுவென் றெண்.

இ - ள். எருக்குக் களி தான்றி ஏரண்டதின் கீழ் இருக்கையினை - எருக்குங் கள்ளியுந் தான்றியும் ஆமணக்குமாகிய இம்மரங்களினிழலிலே இருத்தலை—வழு என்று எண - குற்றமென்று நினை. எ - று.

இந்நிழல்களிலே இருத்தல் பகற்காலத்தும், விளாநிழலிலும அரசநிழலிலும் இருததல் இராக்காலத்தும, ஆகாவெனவறிக. இன்னும் நீசர்நிழலும் விளக்கு நிழலும் ஆகாவென்க. (உஉக)

சைவாசாரத்தை அநுட்டித்தோா பெறுமபய னுணர்த்துகின்றார்.

சரித்தார்க்குச் சைவ சமய நெறியி
னுரித்தாங்கு புத்திமுத்தி யும்.

இ - ள். சைவசமய நெறியில் சரித்தார்க்கு - தீக்ஷை செய்யும்போது தங்கள் தங்கள் அதிகாரானுகுணமாக ஆசாரியரா லே போதிக்கப்பட்ட சைவசமயாசாரங்களை வழுவற அநு

ட்டித்த மாணாக்காகளுக்கு—ஊங்கு புத்தி முத்தியும் உரித்து - மேற்பட்ட போகமும் மோக்ஷமுமுரியனவாம். எ - று.

அப்படி அநுட்டியாதோர் பெறும் பயனுணர்த்துகின்றூா.

இந்தநெறி தன்னி லியங்கார் பிசாசாவ
ரந்தவினை போமபரிகா ரத்து.

இ - ள். இந்த நெறிதன்னில் இயங்கார் பிசாசு ஆவர் - இந்தப்பிரகாரம் அநுட்டியாதவாகள் புதஇதத்துவத்திற பைசாச புவனததிற் பிசாசுகளாய் அங்குள்ள போகங்களை நூறு இருடிவருஷம் புசிப்பாகள்;—அநத வினை பரிகாரத்துப் போம - தீக்ஷை பெற்றபின ஆசாரததில் வழுவிய பாவங்களுட் புத்திபூாவமாகச செய்த பாவம் பிராயச்சித்தத்தினாலும் அபுத்திபூர்வமாகச் செய்த பாவம் அந்தியேட்டி முதலிய கிரியைகளினாலும நீங்கும். எ - று.

அந்தியேட்டி முதலிய கிரியைகளாவன அந்தியேட்டி, பாஷாணஸ்தாபனம், உதகதானம், பிண்டதானம், நக்கினப்பிரச்சாதனம், ஏகோத்தரவிருததிபோசனம், நவசிராத்தம, ஏகோத்திட்டம், பஞ்சதசசிராததம், சோதகும்பசிராத்தம, சபிண்டீகரணம் என்பனவாம். இக்கிரியைகள் செய்யாவழி அப்பாவங்கள் புசித்தே தீரவேண்டுமென்றறிக. சமயாசாரத்தில் வாஞ்சையுற்றும் பற்றற்றுமிருக்கும் நைட்டிகனும் சந்நியாசியும் சமயாசாரத்திலே சிலலோபம் வரின் அந்தியத்திற் பஞ்சாக்ஷரத்திலே பதினாறுயிரமுருச் செபிக்க. அன்றேல் ஒருசிவஞானிக்குப் பூசை செய்க. (உநக)

ஆசாரியர் முதலாயினோரை வழிபடுமுறைமை ஐந்து திருக்குறளாலுணர்த்துகின்றூர்.

தேசிகர் தம்மைச் சிவநேசர் தம்மையு
மீசனென வேயுளத்து ளெண.

இ - ள். தேசிகர் தம்மைச் சிவநேசர் தம்மையும் - ஆசாரிய ரையும் சாதகர் முதலிய சிவபத்தர்களையும்—ஈசன் எனவே உளத்துள் எண் - மானுடரெனக் கருதாது சிவபெருமானென் றே மனசிலே கருதி வழிபடு. எ - று.

சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சமஸ்காரதீக்ஷையினாலே வாகீசுவர வாகீசுவரிகளிடத்துத் தோன்றினமையால், அவர்களை மானுடர்களெனக் கருதலாகாதென்க. சமயிகளை நிந்தித்தவன பிரமதினம் பதினைந்து செல்லுமவரையும் நரகத்திற்கிடப்பன். புத்திரகரை நிந்தித்தவன் விட்டுணுதினம் ஐந்து செல்லும்வரையும் நரகத்திற்கிடப்பன். சாதகரை நிந்தித்தவன் உருத்திர தினம் மூன்று செல்லும்வரையும் நரகத்திற்கிடப்பன். ஆசாரியரை நிந்தித்தவன் சாதாக்கிய தத்துவவருடம் மூன்று செல்லும்வரையும் நரகத்திற்கிடப்பன. சாதகருள் நைட்டிகரைப் பரமபொருளென்றும், சந்நியாசியைத் தக்ஷிணாமூர்த்தியென்றும, வானப்பிரத்தரை உருத்திரனென்றும, இல்வாழ்வானை மகேசுரனென்றும், ஏனையரைப் பொதுவிற் சிவனென்றும், வழிபடுக. (உகூஉ)

ஆதனந் தன்னைச் சிவாயவென வங்குதவு
மாதவர்வந் தாலுன் மனைக்கு.

இ - ள். மாதவர் உன் மனைக்கு வந்தால் - அந்தப்பெரியோர்கள் உன் வீட்டுக்கு வந்தார்களாயின்,—ஆதனந்தன்னைச் சிவாய என அங்கு உதவு - நீ சீக்கிரம் எழுந்து எதிர்கொண்டு சிவபெருமானே வடிவு கொண்டு எழுந்தருளி வந்தாரென்று கருதி அவர்களை அழைத்து வந்து அவர்களுக்குச் சிவாயவென்று சொல்லி ஆதனத்தைக் கொடுத்து அதிலே அவர்களை இருத்திப் பூசைபண்ணு. எ - று. (உகூகூ)

அன்புட னீகசிறிதேனு மதுபயனா
மன்பிலா ரென்பெறுவா ராங்கு.

இ - ள். சிறிது ஏனும் அன்புடன் ஈக - உன்னாலியன்றதேனும் அற்பமாயினும் அன்புடனே கொடு;—அது பயன் ஆம் - அதுவே பயனைத் தரும்;—அன்பு இலார் என் பெறுவார்-அன்புடனே கொடாதவர்கள் யாது பயனைப் பெறுவார்கள். எ-று. ஆங்கு—அசை. (உ௱ச)

போம்பொழுது பின்னே பதினறடி போக
நாம்பெற்றோ மென்றெண்ணி நன்று

இ - ள். நாம் நன்று பெற்றோம் என்று எண்ணி - இவர் நமது கிருகத்துக்கு எழுந்தருளிவருகையால் நாம் நன்மையைப் பெற்றோமென்று நினைந்து,—போம்பொழுது பின்னே பதினறடி போக - அவர்கள் போம்பொழுது அவர்களுக்குப் பின் பதினறடி போய் வழிவிடுக. எ - று.

சுற்றத்தாரையும் உளப்படுத்தற்கு நாம் பெற்றோமெனப் பன்மையாற்கூறினர். (உ௱ரு)

ஓடே லியங்கிடினு மொற்றியடி வைத்திடுக
வீடுமுயிர் கீடவித மென்று

இ - ள். ஓடேல் - வழிவிடச் செல்லும்போது விரைவாக நடவாதே;—இயங்கிடினும் கீடவிதம் உயிர் வீடும் என்று ஒற்றி அடி வைத்திடுக - மெல்ல நடக்கினுங் கீடமுதலிய செந்துக்கள் மரிக்குமென்று நினைத்து மெல்ல அடியை வைத்துப் பின் செல். எ - று.

இராக்காலத்தினும் பயமுள்ளவிடத்தினும் அவர்களுக்கு முன் செல்லல்வேண்டுமென்றறிக. (உ௱சு)

இரவிலே செய்யலாகாதவையுணர்த்துகின்றார்.

இரவிற் றனித்தூரப் புறத்தியங்கேல் செல்க
விருவராருந தற்கவிருட் டின்.

இ - ள். இரவில் தனித்து ஊர்ப் புறத்து இயங்கேல் - இராக்காலத்திலே ஊருககுப்புறத்தில் ஒருபோதுந் தனித்துப் போகாதே;—இருவர செல்க - போகவேண்டின் ஒருவரைக் கூட்டிக்கொண்டு போ;—இருட்டின் அருந்தற்க - இருளிலே போசனஞ்செய்யாதே. எ - று.

இருளிலே புசிககலாகாதெனவே, விளக்கிலே புசிக்கலா மென்றாயிற்று. (உ௩எ)

போசனகாலத்தில் விளக்கவியிற் பரிகாரம்
மூன்றுதிருககுறளாலுணர்த்துகின்றார்.

அருந்தேல விளககவியி லங்கையிற்றொட் டன்னந
திருநதவுரை காயத் திரி.

இ - ள். விளககு அவியில் அருந்தேல் - இரவிலே போசனம்பண்ணும்போது விளககவியிற் போசனமபண்ணுமல,—அன்னம் அங்கையின் தொட்டுக் காயததிரி திருந்த உரை - அவ்வன்னத்தை வலக்கையினாலே மூடி விளக்கேற்றி வருமளவு ம் சிவகாயததிரியை விதிப்படி உசசரிததுக்கொண்டிரு. எ - று. ()

அருகரலர் காயத் திரிக்கஞ் செழுதனை
யுரைசெய்க வீசனைக்கண டுள்.

இ - ள். காயத்திரிக்கு அருகர் அலர் - சிவகாயத்திரிககு உரியரல்லாதவர்—ஈசனை உள் கண்டு அஞ்சு எழுத்தை உரை செய்க - சிவபெருமானை இருதயததிலே தியானித்துப் பஞ்சாக்ஷரத்தைச் செபிக்கக்கடவர். எ - று. (உ௩௯)

ஆக்கிவிளக் குண்ணாந்த வன்னம் பினைப்பெய்யே
லாக்கியபாண் டத்தோ தனம்.

இ - ள். விளக்கு ஆக்கி - விளககேற்றுவித்து,—பினை ஆக்கிய பாண்டத்து ஓதனம் பெய்யேல - பினபு பானையில் அன்னத்தை இடுவித்துககொள்ளாமல—அந்த அன்னம் உண் - அவவன்னத்தையே புசித்து எழுந்திரு. எ - று. (உச0)

புசிக்கலாகாத அனனம எட்டுத்திருக்குறளா
லுணாத்துகின்றா.

அருந்த லதிபாத காதிய ரன்ன
மருந்தவத்தார் வந்தியன மாசு.

இ - ள். அதிபாதக ஆதியர் அன்னம் - அதிபாதகமுதலிய பாதகஙகளைச் செய்பவாகளுடைய அனனமும்—வந்தி அனம் - மலடிகளுடைய அன்னமும—ஆசு - குற்றமுடையனவாம்;—அருந்தவததா அருந்தல - ஆதலால் அவைகளை அருமையாகிய தவத்தினையுடையவாகள் புசியாதொழியக்கடவர்கள். எ - று.

அதிபாதகங்களாவன சிவநிந்தை, சிவத்திரவியம் புசித்தல், கூலிக்குப் பூசித்தல், குருநிந்தை, குருத்திரவியம புசித்தல், சிவனடியாாநிந்தை, வேதாகமநிந்தை என்பனவாம். ஆதியென்றதனாற் பஞ்சமகாபாதகமும் உபபாதகமுங்கொள்க. அவைகளைச சிவதருமோத்தரததிற்காணக.

மலடிகள் சென்மமலடி, வழிமலடி, காமமலடி, மிருதமலடி என நால்வகையர். இவருள், பிள்ளைபெற்றுச் சாவக்கொடுத்தவள வழிமலடி; இவளனனமாத்திரங் குற்றமுடையதன்று. மலடிகள் காமமலடி, கன்னிகாமலடி, சூதிகாமலடி, மிருதமலடி, சென்மமலடி என ஐவகையரெனக் கூறலுமொன்று.

அவர்களுள், சொப்பனங்கண்டு கருப்பம் நசிக்கப்பெறுமவள காமமலடி. பெற்ற ஆண்பிள்ளைகள் இறந்துபோகப் பெண்பிள்ளைகளெல்லாம் இருக்கப்பெறுமவள் கன்னிகாமலடி. மூன்று நாழிகை மூன்றுநாள் மூன்றுமாதம் மூன்றுவருடம் என்னு மிவைகளுள் ஒன்றிலே கருப்பம் நசிக்கப்பெறுமவள் சூதிகா மலடி. பிறந்த பிள்ளைகளெல்லாஞ் சாவக்கொடுப்பவள் மிருத மலடி. ஒருக்காலும் பிள்ளைப்பெறாதவள் சென்மமலடி. இன்னும் பிள்ளைபெறுமுன் கணவனை இழந்தவளன்னமும் பிள்ளைப்பெற்றுக் கணவனைக்குறித்தது விதவாவிரதத்தை அநுட்டியாது பலவுங்கொண்டு விற்பவளன்னமும குற்றமுடையன வென்றறிக். (உசக)

அருந்தல் பதித ரனங்கொள்ளு மன்ன
மருந்தற்க வேசியரான னம்.

இ - ள். பதிதர் அனம கொள்ளும் அன்னம் அருந்தல்-விரதபஙகருடைய அனனத்தையும் விலைக்குக் கொண்ட அன்னத்தையும் புசியாதொழிக;—வேசியர் அன்னம் அருந்தற்க - வேசியர்களுடைய அனனத்தையும் புசியாதொழிக. எ-று. ()

உண்ணே லுடலிலுறுப் பற்றார்சோ றங்தியசா
வண்ணார் முதலோர் மனை.

இ - ள். உடலில் உறுப்பு அற்றார் - அங்கீனரும்—அந்தியசர் - புலையரும்—வண்ணார் முதலோா - வண்ணருமெனறு சொல்லப்படும் இவர் முதலாயினருடைய—மனைச் சோறு உண்ணேல் - வீட்டிலன்னத்தைப் புசியாதொழிக. எ - று.

முதலோரென்றதனால், ஆட்டுவாணிகன், எண்ணெய்வாணிகன், கழைக்கூத்தாடி, பூவிற்பான், எண்ணெய் கொண்டு விற்பான், தச்சன், சொக்கிடுவான் என்பவர்களுடைய அன்னமுங் குற்றமுடையனவெனவறிக. (உசரு)

மணத்திஞ லாநாள்சீ மந்தா தியினு
முணற்கசிராத் தந்தன்னி லும்.

இ - ள். மணத்தின் - விவாகத்தினும்—நாலாம் நாள் - நாலாநீர்ச்சடங்கினும்—சீமந்த ஆதியினும் - சீமந்தம் பும்சவனம முட்டுக்கல்யாணம் முதலியவைகளினும்—சிராத்தந்தன்னிலும் - சிராத்ததினும்—உணற்க - அவவக்கோத்திரத்தாரல்லாதவர் புசியாதொழியக்கடவர். எ - று.

இழவு சபிண்டீகரணமுமகொள்க. (உசச)

அருந்தேல் விடலி பதிமனையி லன்ன
மருந்தேல் கணிகைகணுன் னம்.

இ - ள். விடலிபதி மனையில் அன்னம் அருந்தேல் - விடலிபதியினுடைய வீட்டிலன்னததைப் புசியாதொழிக;—கணிகை கணன அன்னம் அருந்தேல் - கணிகையுங் கணனுமென்று சொல்லப்படும் இவர்களுடைய அன்னததையும புசியாதொழிக. எ - று. (உசரு)

மனைவி பிறர்முகம் பார்க்கவுமவாஞ் சிக்கும்
பனவன் விடலி பதி.

இ - ள். மனைவி பிறா முகம் பார்க்கவும் - தன்னுடைய பாரியானவள் சோரநாயகரோடு கூடுதலை அறிந்திருந்தும்—வாஞ்சிக்கும் பனவன் விடலிபதி - அவளைத் தள்ளாது இச்சித்துப் புணரும் பார்ப்பானே விடலிபதியென்று சொல்லப்படுவன். எ - று. (உசசா)

மரித்திடலுங் காந்தன்பின் மற்றையனுல் வாய்தத
கருத்தனைமாய்த் தாள்கணிகை காண.

இ - ள். காந்தன் மரித்திடலும் - தன்னுடைய கணவனிறக்கவும்—பின் மற்றையனுல் வாய்த்த கருத்தனை மாய்த்தாள் கணிகை காண் - பின்பு வேறொருபுருஷனுல் உண்டாகிய கருப்பத்தைச் சிதைத்தவளே கணிகையென்று சொல்லப்படுவள். எ - று. (உசஎ)

கணனந் தணர்முதலோர் தம்பொருள்கைக்கொள்வான்
மணிமுதலெல் லாந்திருடு வான்.

இ - ள். அந்தணர் முதலோர்தம் பொருள் கைக் கொள்வான் - பிராமணர் முதலியோருடைய பொருள்களைக் கைக்கொள்வானுகி—மணி முதல் எல்லாம் திருடுவான் கணன் - இரத்தினுதிகளெல்லாவற்றையும் திருடுவோன் கணன் என்று சொல்லப்படுவோன். எ - று. (உசஅ)

புசித்தற்கேற்ற அன்னமுணர்த்துகின்ருர்.

அருந்துக தக்கா ரனமவர் வாஞ்சித்
தருந்துவிப்பார் நல்லதத னுல்.

இ - ள். தக்கார் வாஞ்சித்து அருந்துவிப்பார் - நூல்வழி வழுவாதொழுகுந் தகைமையையுடையோர் அன்புகொண்டு புசிப்பிப்பர்;—அதனுல் அவர் அனம் நல்லது - அதனுல் அவரன்னமே நன்மையையுடையது;—அருந்துக - ஆகையால் அவ்வன்னத்தையே புசிக்கக்கடவர். எ - று. (உசக)

புத்திகாமன் முத்திகாமன் இருவருக்கும் போசனகாலம்
வரையறுத்துணர்த்துகின்ருர்.

ஐம்மூன்று நாழிகைமே லல்லருந்த லில்வாழ்வா
ரையாறுண் முத்தரருந் தார்.

இ - ள். இல் வாழ்வார் அல் ஐம்மூன்று நாழிகை மேல் அருந்தல் - கிருகத்தர் இராத்திரியில் எட்டுநாழிகைக்குமேலே

புசியாதொழியக்கடவர்;—முத்தர் ஐயாறுள் அருந்தார் - முத்திகாமர் இராத்திரி முப்பதுநாழிகையுள்ளும் புசியார். எ - று.

ஐம்மூன்று என்பது உம்மைதொகை. ஒருகத்தர் எட்டு நாழிகையினுள்ளே புசிக்கின் உத்தமம்; பதினொருநாழிகையளவேல் மத்திமம்; பதினான்கு நாழிகையளவேல் அதமம்; அதற்குமேற் புசியாதொழிக. (௨௫0)

சிவபூசை செய்யாதுண்டவழிப்படுங் குற்ற
முணாததுமின்முர்.

அலரிணைச்சூட் டாதமலன் முளினருந் தன்ன
மலமாம் பிணமுமா மாசு.

இ - ள். அமலன் தாளின் அலரிணைச் சூட்டாது அருந்து அன்னம் - சிவபெருமானுடைய பாததத்திலே பூவைச் சூட்டாமற் புசிக்கும் அன்னம்—மலம் ஆம் பிணமும் ஆம் மாசு - மலமுமாம் பிணமுமாம் பெரும்பாவமுமாம். எ - று.

"பூசையி லாதா னுண்டி புழுப்பிணம் புலையன் கட்ட—மாசுள பாவ மொக்கும் வானினிற் றீயில் வீழ்ந்து—நாசமாவதுவே நன்று நற்குலம் பிறந்தா னேனுந்—தேசுளா ரவனைத் தீண்டிற் றெரிசிக்கி னினைக்கிற் பாவம்." எனப் பிறரும் இவவாறு கூறுதல் காண்க. பூசை பண்ணுது புசிக்கிற் செயற்பாலது இதுவென்பது "ஆக்கையினு ளான்மாவிங் குறைவளவும் பூசையினை யாற்றி யல்லா—லேக்கறவா லருந்தவொண்ணு தருந்திலவை யெதிரெடுத்தங் கெறிநீர் மூழ்கிப்—பூக்கமழுங் குழலுமையோ டிறைமுதலை யிருமுறைதான் பூசை செய்து—நாக்குநசை யாலற்றை நாண்முழுது மொன்றுமருந் தாது நண்ணி. அஞ்செழுத்தை யோர்பதினு யிரமுருத்தானேதிப்பின் னடுத்த நாளின்—மஞ்சுறழுங் கருங்கூந்தல் பாக

னுக்கு மாபூசை வகுத்து வாரி—நஞ்சுபொதி மிடற்றிறைக்கு மவனடியார் தமக்குமுறு பொருள்க ணல்கி—விஞ்சியவெம் பசியினு லருந்தியவெவ வினைகள்கெட விளங்க வேண்டும்" என்னும் வாயுசங்கிதைச் செய்யுள்களானறிக. (உருக)

ஆசௌசத்திற் பூசிக்குமுறைமையுணர்த்துகின்றூர்.

சென்னமர ணத்தாசௌ சத்தினுஞ்செய் பூசை
யுனியரனை யீரவுடை யோடு.

இ - ள். சென்ன மரணத்து ஆசௌசத்தினும் - சனனு சௌசத்தினும் மரணுசௌசத்தினும்—ஈர உடையோடு - ஈர வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு—அரனை உனிப் பூசை செய் - நாடோறும் வழுவாது சிவபெருமானைத் தியானித்துப் பூசைசெய். எ - று.

இங்ஙனஞ் செய்வது திடபத்தியினுலே பாசத்தாரோடு கூடாது தனியே பாகஞ்செய்து புசித்துக்கொண்டிருப்பினெ ன்க. இதனைச் சிவதருமோத்தரவுரையிற்காண்க. உம்மை இழிவுசிறப்பு. ஸ்நானஞ்செய்தமை முதற்பூசாந்தமவரையும் தாமரையிலையில் நீர்போல் இவரை ஆசௌசஞ்சாராதென்ற றிக. திடபத்தியில்லாதவர் ஆசௌசம் நீங்கும்வரையும் தம்மு டைய ஆசாரியரைக்கொண்டாயினும் தம்மோடொத்தாரைக் கொண்டாயினும் பூசிப்பித்துப் பூசாந்தத்திலே தாம்புறமண்ட பத்தினின்று புட்பாஞ்சலித்திரயஞ்செய்து நமஸ்காரம்பண் ணக்கடவர். (உருஉ)

பூசை செய்தற்கு இயலாவழிச் செய்யுமுறைமை உணர்த்துகின்றூர்.

செய்விக்க தன்னேடொத் தாராற் சிவபூசை
கைகால் செயலற்றக் கால்.

இ - ள். கை கால் செயல் அற்றக்கால்—ஒருவன் வியாதியினாலே தன் கை கால்கள் தனவசமாகாதிருப்பின்—தன்னோடு ஒத்தாரால் சிவபூசை செய்விக்க - அப்பொழுது தன்னோடொத்த தீக்ஷையும் ஆசாரமும் வருணமுமுடையவரைக் கொண்டு விதிப்படி சிவபூசை செய்விக்கக்கடவன். எ - று.()

இராசபயமுதலியவற்றாற் பூசை தவறிற் செயற்பாலது இதுவென்பது இரண்டுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

அரசர்பயத் தாற்சோர ராலருநோ யாலு
மொருவிற் சிவபூசை யும்.

இ - ள். அரசர் பயத்தால் - இராசபயத்தினாலும்—சோரரால் - சோரபயத்தினாலும்—அரு நோயாலும் - பெரியவியாதியினாலும்—சிவபூசையும் ஒருவின் - சிவபூசையும் அநுட்டானசெபங்களும் தவறின். எ - று. (உ௫௪)

ஆகுமே பாவமென் றஞ்சேல்பின் றேசிகனா
லாகுமுறை யாற்பூசை யாக்கு.

இ - ள். பாவம் ஆகும் என்று அஞ்சேல் - பாவம் வருமென்று அஞ்சாதே;—பின் தேசிகனால் ஆகும் முறையால் பூசை ஆக்கு - பின்பு ஆசாரியனைக்கொண்டு ஒருகாலபூசை முதலியவை தவறின் அதற்கேற்ற பரிகாரஞ்செய்வி. எ - று.

சிவலிங்கங்காணாவிடத்து அந்தரியாகபூசை செய்து பால்பழமுதலியவற்றை உண்டு நாற்பதுநாளிருக்க. அவ்விலிங்கம் வாராதொழியின் வேறோரிலிங்கத்தை ஆசாரியர் தரக் கைக்கொண்டு பூசை செய்க. அதன்பின் வந்ததாயின் அவ்விலிங்கத்தையும் விடாது பூசை செய்க. அங்கவீனனாயேனும் வியாதியுடையனாயேனுமிருப்பின், நாற்பதுநாளினுள்வந்த தில்லையா

யின், வேறொரிலிங்கத்தைக் கைக்கொள்ளாது மரணபரிய ந்தம் 'அந்தரியாகமே ஆசாரியனாலே அநுமதி பெற்றுக்கொ ண்டு செய்க. (உருரு)

சிவபெருமானுக்கு நிவேதித்தே புசித்தல்வேண்டுமென் றுணர்த்துகின்றார்.

மருந்தற லாதிநிவே தித்துயிர்மா தேவற்
கருந்திடுக சுத்தமவை யாம்.

இ - ள். மருந்து அறல் ஆதி - மருந்து தண்ணீர் முதலிய பதாரத்தங்களை உண்ணுமிடத்து—உயிர் மாதேவற்கு நிவேதித்து அருந்திடுக - ஆன்மநாயகராகிய சிவபெருமானுக்கு நிவேதித்தே உண்ணுக;—அவை சுத்தம் ஆம் - நிவேதிக்கப்படிற் றன் அவைகள் சுத்தமாம். எ - று.

நிவேதியாதுண்ணிற் பாவமேறுமென்றறிக. (உருசு)

இனிப் போசனவிதியை உணர்த்தத் தொடங்கிப் பிச்சைவகையுணர்த்துகின்றார்.

சாந்தா னிகபிச்சை தக்ககண மாதுகரி
யாய்ந்தார்க் கயாசகமு மாம்.

இ - ள். ஆய்ந்தார்க்குப் பிச்சை - சிவாகமங்களை ஆராய்ந்த பெரியோர்களுக்குரிய பிச்சையானது—சாந்தானிகபிச்சை - சாந்தானிகபிச்சையும்,—தக்க கணம்-தக்க கணபிச்சையும்,— மாதுகரி - மாதுகரிபிச்சையும்,—அயாசகமும் ஆம் - அயாசக பிச்சையுமென நால்வகைப்படும். எ - று.

ஆசாரியர் முதலாயினோர் பத்தரிடத்தாயினும் சீடரிடத்தாயி னும் மடம் மடப்புறமுதலியவற்றைச் சந்தானபரம்பரையாக அநுபவிக்கும்படி வாங்குவது சாந்தானிகபிச்சை. இல்வாழ்

வான் தெருவிலே புறப்பட்டு வீடுதோறுந் தண்டுலபிச்சை வாங்குவது கணபிச்சை. வண்டானது ஒருபூவை வாதைபண்ணுது பலபூக்களினுஞ் சென்று மதுவை வாங்குமாறுபோல விரத்தனானவன் ஒருவரை வாதைபண்ணுது பலரிடத்துஞ் சென்று எளிதாக அன்னபிச்சை வாங்குவது மாதுகரிபிச்சை. விரத்தியின் முதிர்ச்சியினாலே நமக்குள்ள பிராரத்தத்தை நாம் எங்கேயிருப்பினுஞ் சிவபெருமான் புசிப்பிப்பா என்று துணிந்து இருந்தவிடத்திற்றானே ஒருவன் தானாகக் கொண்டுவந்து தந்ததை வாங்கிப் புசிப்பது அயாசகபிச்சை. (௨௫௭)

நிறுத்தமுறையானே சாந்தானிகபிச்சாபோசன
விதியை அறுபத்தேழுதிருக்குறளா
லுணர்த்துகினறார்.

தக்கோர் கருணையுடன் றாமே தருந்தனமுந்
தக்கதென வன்பாற் றரித்து.

இ - ள். தக்கோர் கருணையுடன் தாமே தரும் தனமும் - ஆசாரியன் தகுதியையுடையவர்களாகிய மாணாக்கர் அரசர் முதலாயினோர் அன்பினோடு தாமே தரும் பூமி முதலிய தனங்களை—தக்கது என அன்பால் தரித்து - தக்கதென்று அவர் கண்மேல் வைதத அன்பினாலே வாங்கி. எ - று. (௨௫௮)

தாங்கி யுபயோகந் தன்னையுந்தா னேசமைக்க
பாங்குறவீ சற்கென்றன் பால்.

இ - ள். உபயோகந்தன்னையும் தாங்கி - அதற்கு வேண்டுங் கிருகமுதலிய உபயோகங்களையும் வாங்கி—ஈசற்கு என்று பாங்கு உற அன்பால் தானே சமைக்க - சிவபெருமான் முதலாயினருக்கென்று உரிமை பொருந்த அன்பினாலே தானே பாகம் பண்ணக்கடவன். எ - று.

மனைவி புத்திரரும் சமைத்தற்குரியர். அங்ஙனமாயின்,இங்கே சொல்லாததென்னையெனின்;—மனைவி கணவனுடைய சரீரத்திற் பாதியெனவும், புத்திரன் பிதாவின் உருவமேயெனவும், சுருதி கூறுகையால், பிரித்துக் கூறாது ஒற்றுமைபற்றித் தானேயென்றார். எட்டுப்படி சமைப்பது உத்தமம். (உ௬௯)

அன்னந் தனைக்குறித்தே யாக்குமவ னந்தணன்
றன்னைவதைத் தானுக்கொத் தான்.

இ - ள். தனைக் குறித்தே அன்னம் ஆக்குமவன் - தனக்கெனக் குறித்து அன்னத்தைப் பாகம்பண்ணுவோன்—அந்தணன்றன்னை வதைத்தானுக்கு ஒத்தான - பிராமணனைக்கொன்றவனுக்கு ஒப்பாவன். எ - று. (உ௭0)

தேவ ரதிதியன றேசிகர்க்கென் றட்டவனந்
தேவருல கத்திலமிர தென்.

இ - ள். தேவர் அதிதி அனல் தேசிகர்க்கு என்று அட்ட அனம் - தனக்கெனக் குறியாது தேவர்களுக்கும் அதிதிகளுக்கும் சிவாக்கினிக்கும் ஆசாரியருக்கும் எனக் குறித்துப் பாகம் பண்ணப்பட்ட அன்னம்—தேவர் உலகத்தில் அமிர்து என் - தேவருலகத்திலுள்ள அமிர்தம்போலுமென்றறி. எ - று.

"உலகினிற் பாவ பேத முண்டுமழ வாதி யைந்தா—லலகிடன் முதலைந் தாலு மவவினை யறுமெம் மாதிக்—கிலகிய வெரிக்கு நூலை யிசைத்தருள் குரவர்க் கென்று—நிலைமைய தவர்க்குப் பூசை நித்தலு நிகழ்த்து வார்க்கே. அட்டவை தம்மைச் சொன்ன நால்வரு மருந்த வன்பா—விட்டுமிக்க தனையுண்கை யமிர்தமீ யாதே யுண்கை—கட்டமுங் கடுவு மாவி கழிந்தவூன் காயந் தானு—மொட்டியே யுடலிற் றோன்றும் புழுவுமென் றெழிக வோர்ந்தே. தலத்துழல் கூலி வேலை சந்தையிற் கொண்டு விற்கை—குலைத்தசொற் கூட்டுங் கோபமசத்தி

யங் கூற வுள்ளு—மலக்கிடன் மெழுக லங்கி யாக்கனீ ரரிசி யென்றே—யிலக்கணத் தியம்பும் பத்துந் தமக்கெனிற் பாவ மீட்டும். தேசுறு சிவாதி பூசைக் கெனவிவை தம்மைச் செய் யி—ஞசமாம் பாவ பேதந் தம்மையே நாடிச் செய்யிற்—பாச மாய் நரக பேதப் படுகுழிப் படுத்தி யென்று—மூசல்போ லுழல்வித்தாக்குந் துயரினுக் களவு முண்டோ" என்னுஞ் சிவ தருமோத்தரத் திருவிருத்தங்களாலறிக. (உ௬௧)

தன்னுடனே யொத்தசுத்த சைவர் தகச்சமைத்த
வன்னந்தா னும்பரிசுத் தம்.

இ - ள். தன்னுடனே ஒத்த சுத்தசைவர் தகச் சமைத்த அன்னந்தானும் பரிசுத்தம் - தன்னோடொத்த சுத்தசைவர்கள் தகும்படி சமைத்த அன்னமும் பரிசுத்தமாம். எ - று.

சுத்தசைவராவார் உயர்ந்த வருணத்தாராய்ச் சிவதீக்ஷை பெற்றோராய்ச் சைவாசாரமுடையராயுள்ளவர். சுத்தசைவ ரென்றமையால், மிச்சிரசைவரும் அசுத்தசைவரும் உண்டெ னவறிக. உம்மை இறந்ததுதழீஇயவெச்சவும்மை. (உ௬உ.)

பரமசிவ னுக்கதனிற் பாதிநிவே திக்க
வுரிமையினோ டிட்டலிங்கத் துள்.

இ - ள். அதனில் பாதி - சமைத்த அன்னத்திற்பாதியை— இட்டலிங்கத்துள் பரமசிவனுக்கு - தான் பூசிக்கும் இட்ட லிங்கத்தினுள் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானுக்கு— உரிமையினோடு நிவேதிக்க - உரிமையோடும் நிவேதிக்கக்க டவன். எ - று.

மற்றப்பாதியை இரண்டு கூறாக்கிப் பலியோமத்துக்கு ஒரு கூறும் தான் புசித்தற்கு ஒருகூறுங்கொள்க. (உ௬௩.)

முறைமையுற வேயிரண்டாஞ் சந்திமுடித் துள்ளத்
திறைவனடி கண்டேற் றெழுந்து.

இ - ள். முறைமை உறவே இரண்டாம் சந்தி முடித்து - விதிப்படி இரண்டாஞ்சந்தியாகிய மத்தியானசந்தியை நிறைவேற்றி,—இறைவன் அடி உள்ளத்துக் கண்டேற்று எழுந்து - சிவபெருமானுடைய திருவடிகளை இருதயத்திலே தியானித்து எழுந்து. எ - று. (உகூச)

கழுவியே நீரினாற் கால்கரமும் வாயு
மழகிய வெண்ணீ றணிந்து.

இ - ள். வாயும் கால் கரமும் நீரினால் கழுவி - வாயையுங் கால்கையையுந் தண்ணீரினாலே சுத்திபண்ணிச் சுததாசமனஞ் செய்து,—அழகிய வெண்ணீறு அணிந்து - அழகிய திருவெண்ணீற்றைத தரித்து. எ - று. (உகூரு)

சுல்லி யுரலுலக்கை யம்மி சுளகலகு
வல்வாள்வாய் தற்பலிகள் வைத்து

இ - ள். சுல்லி உரல் உலக்கை அம்மி சுளகு அலகு வல் வாள் வாய்தல் பலிகள் வைத்து - அடுப்பினும் உரலினும உலக்கையினும் அம்மியினும் சுளகினும் திருவலகினும் வலிய அரிவாண்மணையினும் வாயிலினும் அவ்வவற்றிற்குரிய அதிதேவதைகளை நமோந்தமாகப் பூசித்துச் சுவாகாந்தமாகப் பலியிட்டு. எ - று. (உகூசு)

அகத்தின் புறத்துற் றதிதியர் தம்மை
யுகப்போ டெதிர்கொண் டுளத்து.

இ - ள். அகத்தின் புறத்து உற்று - வீட்டின் புறத்திலே போய்,—அதிதியர்தம்மை உளத்து உகப்போடு எதிர்கொண்டு - அதிதிகளை மனமகிழ்ச்சியோடும் எதிர்கொண்டு. எ - று.

பரமசிவனும் பார்ப்பதியம்மையும் முருகக்கடவுளும் விஷ்ணுவும் பிரமாவும் தருமதேவதையுமாகிய சகலருங்கூடி ஒருவடிவுகொண்டு அதிதிரூபமாய் வருதலால், அவர்களைப்பூசித்தல் வேண்டுமென்றறிக. (உசுஎ)

இருத்தியே யாதனத்தி னிட்டப் படியே
யருத்துகவன் னுதி யவர்க்கு.

இ - ள். ஆதனத்தில் இருத்தி - வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து ஆதனத்தில் இருத்தி—அவர்க்கு இட்டப்படியே அன்னாதி அருத்துக - பூசைபண்ணி அவர்களுக்குப் பிரீதிப்படி அன்னமுதலியவற்றையூட்டுக. எ - று.

அது "ஆர மென்பு புனைந்த வையர்த மன்ப ரென்பதோர் தன்மையா—னேர வந்தவர் யாவ ராயினு நித்த மாகிய பத்திமுன்—கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்—தீர மென்மது ரப்ப தமபரி வெய்த முன்னுரை செய்தபின்." "கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே—மண்டு காதலி னாத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்—னுண்டி நாலு விதத்திலாறு சுவைத்தி றத்தன வொப்பிலா—வணடர் நாயகர் தொண்ட ரிச்சையி னமுது செய்ய வளித்துளார்." என்னும் பெரியபுராணத்திருவிருத்தங்களாலறிக. (உசுஅ)

தேசிகர் பூர்வ திசைநோக் குகவடதிக்
காசறுக்குஞ் சாதகர்க்கே யாம்.

இ - ள். தேசிகர் பூர்வதிசை நோக்குக - போசனஞ்செய்யும்போது ஆசாரியர் கிழக்குத்திக்கை நோக்கியிருக்கக்கடவர்;—ஆசு அறுக்கும் சாதகர்க்கு வடதிக்கே ஆம் - குற்றத்தை நீக்குஞ் சாதகர்க்கு வடக்குத் திக்கை நோக்கியிருத்தல் உரித்தாம். எ - று. (உசுகூ)

மற்றையர்க்குப் பச்சிமமே மாண்புபொதுப் பூருவந்
தெற்கருந்த லாகாத திக்கு.

இ - ள். மற்றையாக்குப் பச்சிமமே மாண்பு - புத்திரகர் சமயிகள் என்னும் மற்றையிருவருக்கும மேற்குத்திக்கை நோக்கியிருத்தலே சிறப்பு;—பொதுப் பூருவம - மேற்கூறிய நால்வருக்கும் பொதுக்கிழக்குததிக்காம்;—தெற்கு அருந்தல் ஆகாத திக்கு - தெற்குத்திக்கு ஒருவரும நோக்கியிருந்து புசிக்கலாகாத திக்காம். எ - று.

சாதகர் தெற்கு நோக்கியும் சமயிகள் வடக்கு நோக்கியும் இருந்து புசிக்க எனச் சிலவாகமங்கள் கூறுமெனக. இருக்கும் போது சமானவருணரும் தீக்ஷிதரும் பந்திபாவனருமாகிய சனங்களோடன்றிப் பிறரோடிருக்கலாகாதென்றறிக. (உஎ0)

ஆகும் பிணிதென் றிசைபார்த் தருந்தினார்க்
காகந் தனிலென் றறி.

இ - ள். தென்றிசை பார்த்து அருந்தினாக்கு - தெற்குத்திக்கை நோக்கியிருந்து புசித்தவருக்கு—ஆகந்தனில் பிணி ஆகும் என்று அறி - சரீரத்திலே நோயுண்டாமென்றறி. எ-று.

முடக்கியிரு காலு முழந்தாண் மிசையே
யிடக்கர மூன்றி யிரு.

இ - ள். இருகாலும் முடக்கி - இரண்டுகால்களையும் முடக்கி—முழந்தாள் மிசையே இடக்கரம் ஊன்றி இரு-இடமுழந்தாளின்மேலே இடக்கையை ஊன்றிக்கொண்டிரு. எ - று.

அன்றியே வீரா தனமும்பாங் காமிடக்கா
றென்றொடைமே லொன்றச் செறி.

இ - ள். அன்றியே வீராதனமும் பாங்கு ஆம் - அஃதன்றி வீராதனமும் உரித்தாம்;—இடக்கால் தென்றொடைமேல் ஒன்றச் செறி - இடக்காற்பரட்டை வலத்தொடையிலே பொருந்த வைததிரு இதுவே வீராசனமாம். எ - று. (உஎக)

தலத்தை மெழுகியது தன்னி லிரேகை
யிலக்குகநேர் நான்காதி யெண்.

இ - ள். தலததை மெழுகி - போசனசாலையிலே திருமெழுக்கினலே ஒவ்வொருவருக்கும் ஒவவொருமுழவளவை சதுரச்சிரமாகப் புள்ளியின்றி மெழுகி,—அது தன்னில் நேர நாலு ஆதி எண இரேகை இலக்குக - அதன்மேல் விபூதியினலேனும் வெண்பொடியினலேனும் ஆசாரியர் முதலிய நால்வருக்கும முறையே நான்கு முதலிய எண் கொண்ட இரேகைகளை அடையாளமாகக் கீறுக. எ - று.

எனவே, ஆசாரியருக்கு நானகிரேகையும்,சாதகருக்கு மூனறிரேகையும் புததிரகருக்கு இரண்டிரேகையும், சமயிகளுக்கு ஓரிரேகையுமாமெனக் கொள்க. அவரவர் இருக்கும் ஆதனபலகைக்கும் இவவாறே அடையாளமிடுக.

வைதிகப்பிராமணர்மாததிரமன்றிச் சைவப்பிராமணரேயாயினும் வாகீசுவரிவாகீசுவரரிடததில் உற்பவிக்குஞ் சிவதீக்ஷையுஞ் சமயாசாரமுமுடையரல்லராயின், அவர் கான இந் நால்வரும் புசிக்கலாகாதெனவறிக. (உஎச)

சுத்திபண்ணுந் தானத்திற் சோற்றினிர தங்கொண்டு
துய்க்கும் பிசாசாதி சூழ்ந்து.

இ - ள். சுத்திபண்ணுந் தானத்தில் சோற்றின் இரதம் - சுத்திபண்ணுதவிடத்திலே புசிக்கப்படும் அன்னத்தின் சுவையை—பிசாசு ஆதி சூழ்ந்துகொண்டு துய்க்கும் - பிசாசு முதலியவைகள் சூழ்ந்து வந்து புசிக்கும். எ - று.

புள்ளியின்றிச் சுத்தி செய்த மண்டலத்திலன்னத்தை ஆதித்தன் உருத்திரன் பிரமன் முதலிய தேவர்கள் புசிப்பரெனவறிக. (உளரு)

அருங்கனக பாத்திரத்தை வைக்க வதன்மே
லுரமபெறுமொள் வெள்ளிமுத லும்.

இ-ள். அதன்மேல் அருங்கனக பாத்திரத்தை - அதனமேல அருமையாகிய பொற்பாத்திரத்தையேனும்—உரம் பெறும் ஒள் வெள்ளி முதலும் வைக்க - வலிமை பொருந்திய ஒள்ளிய வெள்ளி முதலியவற்றினுற்செய்த பாத்திரத்தையேனும் வைக்கக்கடவர். எ-று.

முதலென்றதனுல் வெணகலமுங்கொள்க. (உளசு)

கதலிபலாப புன்னை கமுகுமாத் துமபி
மதுகம பலாசம வரம

இ-ள். கதலி - வாழையிலையும—பலா - பலாவிலையும—புன்னை - புன்னையிலையும—கமுகு - கமுகமடலும்—மா - மாவிலையும்—துமபி - சுரையிலையும—மதுகம - இருப்பையிலையும—பலாசம் - பலாசிலையும—வரம - போசனஞ்செய்தறகு விசிட்டபாத்திரங்களாம. எ-று (உளஎ)

பாதிரியுஞ் சண்பகமவெட் பாலைபது மந்தானுங்
கோதிலாப் பாத்திரமாங் கொள்.

இ-ள். பாதிரியும - பாதிரியிலையும்—சண்பகம - சண்பகவிலையும—வெட்பாலை - வெட்பாலையிலையும்—பதுமந்தானும்-தாமரையிலையும்—கோது இலாப் பாததிரம் ஆம் கொள்-குறறமில்லாத பாத்திரங்களாமாதலின் அவற்றையுங்கொள். எ-று.

இவற்றுட் பலாசுந்தாமரையும் வைதிகருக்காகாவென்றறிக.

அரம்பையிலை தண்டுரியே லாதிவலப் பாலிற
பொருந்தியிடப் பூமிதனிற் போடு.

இ - ள். அரம்பை இலை தண்டு உரியேல்-வாழையிலையைத தண்டுரிததுப் போடாதே;—ஆதி வலப்பாலில் பொருந்தியிடப் பூமிதனில் போடு - அதனடி வலப்பக்கத்திலே பொருந்தியபடி பூமியிற்போடு. எ - று. (உஎஅ)

தருச்சேக் கவிரா மணக்கத்தி தான்றி
யெருக்கரசா லாதியிலுண் ணேல்.

இ - ள். சேத்தரு - செங்கொட்டைமரத்திலையும்—கவிர - முருக்கிலையும்—ஆமணக்கு - ஆமணக்கிலையும்—அத்தி - அத்தியிலையும்—தான்றி - தான்றியிலையும்—எருக்கு - எருக்கிலையும்—அரசு - அரசிலையும்—ஆல் - ஆலிலையுமாகிய—ஆதியில உண்ணேல் - இவை முதலிய இலைகளிலே புசியாதே. எ - று.

ஆதியென்றதனால் இறலி, தாழை, வேங்கை, தேக்கு என்பனவும் ஆகாவெனக் கொள்க. (உஅ0)

தனித்தனியே தைத்துச் சமைத்துறுங் கல்லை
தனித்தனியே போடுகமுன் ருன்.

இ - ள். தனித்தனியே தைத்துச் சமைத்து உறும் கல்லை-விதித்த மரங்களில் ஒருமரத்தினிலை கொண்டே ஒருகல்லைமுழுதுந்தைததது அப்படித தைக்கப்பட்ட கல்லைகளை—முனதனித்தனியே போடுக - ஆசாரியர் முதலிய நால்வருமுன்னுந் தனித்தனியே போடுக. எ - று. (உஅக)

அருகமல் லாத விலையி லருந்தி
னுரைமூல மந்திர நூ ருோர்ந்து.

இ - ள். அருகம் அல்லாத இலையில் அருந்தின் - போசன த்துக்கு உரியனவல்லாத இலைகளிலே புசிக்கின்,—மூலமந்தி ரம் ஓர்ந்து நூறு உரை - அக்குற்றம் போம்படி மூலமந்திரத் தின் பகுதியை அறிந்து நூறுருச் செபி. எ - று. (உ௪உ)

செய்து புனிதஞ் சிறந்த பரிகலத்திற்
பெய்திடுக வன்னம் பிற.

இ - ள். சிறந்த பரிகலத்தில் புனிதம் செய்து - சிறந்த பரி கலத்திலே நெய்யினலே புரோக்ஷித்துச் சுத்திபண்ணி,—அன் னம் பிற பெய்திடுக - அன்னத்தையும் கறி முதலிய பிறவற் றையும் ஒருகாலே படைக்க. எ - று.

பின்பு படைக்கப்படும் அன்னங்கறிமுதலியவற்றுள் ஒவ் வோரன்னத்துக்கு ஒவ்வொருபாவமும் கறி முதலியவற்றுள் ஒவ்வொரு கழஞ்சுக்கு ஒவ்வொருபாவமும் அமுது செய்விப் பானுக்கு உண்டென்றறிக. (உ௪ங)

சலத்தின் மிருத்துஞ் சயத்தைச் செபிக்க
வலக்கை யிணையதன்மேல் வைத்து.

இ - ள். வலக்கையிணைச் சலத்தில் வைத்து - வலக்கை யைச் சலபாத்திரத்தின்மேலே வைத்து—அதன்மேல் மிருத் துஞ்சயத்தைச் செபிக்க - சலத்திலே மிருத்தியுஞ்சயமந்திர த்தை வௌஷடந்தமாக ஏழுதரம அபிமந்திரிக்க. எ - று. ()

வளைத்திடுக பாத்திரத்தை மந்திரித்த நீரா
லுளத்தாற் கவச முரைத்து.

இ - ள். மந்திரித்த நீரால் - அபிமந்திரிக்கப்பட்ட சலத்தை வலக்கையில் வாங்கி அதினலே—உளத்தால் கவசம் உரைத் துப் பாத்திரத்தை வளைத்திடுக - மனப்பூர்வமாகக் கவசமந்தி ரத்தை உச்சரித்து அன்னபாத்திரத்தை வளைக்க. எ - று. ()

அத்திரத்தா லங்கீ ரமிர்திற் புரோக்கிக்க
வத்தத் தநாமிகையி னால்.

இ - ள். அங்கீர் - அப்பாத்திரசலத்தை—அத்தத்து அநாமிகையினால்-வலக்கையினாழிவிரலினாலே தொட்டு,—அமிர்தில அத்திரத்தால் புரோக்கிக்க - அவவன்னஞ்சுத்தியாகும்பொருட்டு அதன்மேல் அத்திரமந்திரத்தினாலே புரோக்கிக்க. எ-று.

செபிக்க மிருத்துஞ் செயமேழு வார
மவிக்கருக மாமோ தனம்.

இ - ள். மிருத்துஞ்செயம் ஏழுவாரம் செபிக்க - அவ்வன்னத்தைத் தொட்டு மிருத்தியுஞ்சயமந்திரத்தினால் ஏழுதரம் அபிமந்திரிக்க;—ஓதனம அவிக்கு அருகம் ஆம் - அங்ஙனம் அபிமந்திரிக்கப்பட்ட அன்னம் பிராணாக்கினிகாரியஞ்செய்தற்கு உரித்தாம். எ - று. (உஅஎ)

வலப்பான் மெழுகியே வைத்திடுக வந்தத
தலத்திற் சிறிதோ தனம்.

இ - ள். வலப்பால் மெழுகி - வலப்பக்கத்திலே மண்டலமாக மெழுகி—சிறிது ஓதனம் அந்தத் தலத்தில் வைத்திடுக - அரைப்பிடியன்னமள்ளி அந்தத்தலத்திலே நாகாதிபஞ்சவாயுக்களுக்கும் ஒருங்கே வைக்க. எ - று.

இவ்வாறன்றித் தான்றிக்காயளவு அன்னமாக அள்ளி நடுவினும் நான்குகோணத்தினும் பஞ்சவாயுக்களுக்குந் தனித்தனியே பலியிடுதலே சிறப்பாம். (உஅஅ)

ஏற்றுச் சலங்கை யிறங்கச் சிறுவிரலா
லூற்றுகநா காதி யுரைத்து.

இ - ள். கைச் சலம் ஏற்று-வலவுள்ளங்கையிலே சலத்தை ஒருவர் வார்க்க வாங்கி அப்பாத்திரத்தை ஈசானமந்திரத்தினா

லே சுற்றி,—நாகாதி உரைத்து இறங்கச் சிறுவிரலால் யாற் றுக - முன்பலியிட்ட இடத்திலே நாகாதிபஞ்சவாயுமந்திரத தாற் சிறுவிரனுனியினாலே அச்சலத்தை விடுக. எ - று.

பஞ்சவாயுக்களாவன நாகன், கூர்மன், கிருகரன், தேவதத் தன், தனஞ்சயன் என்பனவாம். (உஅக)

உழுந்தமிழ்ந்து நீர்வைத் துளங்கையி லோமென்
றெழுந்தவொலி யாதி யிசைத்து.

இ - ள். உளங்கையில் உழுந்து அமிழ்ந்து நீர் வைதது - எல்லாச்சலத்தையும்விட்டுவிடாது உள்ளங்கையிலே உழுந்த மிழ்ந்தத்தக்க சலத்தை வைத்து,—ஓம் என்று எழுந்த ஒலி ஆதி இசைத்து - பிரணவமுதலாகவுடைய பத்ததியில் விதித்த மந்திரத்தைச் சுவாகாந்தமாக உச்சரித்து உட்கொள்க. எ-று.

அம்மந்திரத்துக்கு அருகரல்லாதவர் தற்புருடமந்திரத்தை உச்சரிக்க. (உகO)

அருந்தும்போ தந்நீ ரனபாத் திரத்தைத்
திருந்தவிடக் கையாலே தீண்டு.

இ - ள். அந்நீர் அருந்தும் போது - அந்தச்சலத்தை உட் கொள்ளும்பொழுது—அன பாத்திரத்தைத் திருந்த இடக்கை யாலே தீண்டு - அன்னபாத்திரத்தைத் திருத்தமாக இடக்கை யினாலே தொட்டுக்கொள். எ - று.

சலபானமுடிந்தவுடனே அதை விடல்வேண்டுமென்றறிக.

அங்குட்டத் தான்மத் திமையா லநாமிகையாற்
றங்க வமிர்தந் தரித்து.

இ - ள். அங்குட்டத்தால் மத்திமையால் அநாமிகையால் - பெருவிரலினாலும் நடுவிரலினாலும் ஆழிவிரலினாலும்—தங்க

அமிர்தம் தரித்து-பொருந்தும்படி அவவன்னத்திற்சிறிதள்ளி. எ - று.

இம்மூன்றுவிரலுங்கூடின் மிருகமுத்திரையெனப்படும். ()

பலவிற் படாதே பலியிடுக செந்தழலி
னெல்லைப் பிராணதிக் கு.

இ - ள். செந்தழலின் - அத்திரமந்திரத்தினாலே உதரத்தி லுள்ள சாடராக்கினியைச் சொலித்ததாகப் பாவித்து அவ்வக் கினியினிடத்தே—பிராணதிக்கு பல்லில் படாதே பலி இடுக- பிராணதி பஞ்சவாயுக்களுக்கும் பல்லிலே படாமல் உள்ளே அம்முத்திரையினாலே தனித்தனியே சடிதியிற்பலியிடுக.எ-று

ஆன்மாவினிடத்துப் பிராணனும், பூதயோனிகளிடத்து அபானனும், தேவர்களிடத்து உதானனும், பிதிர்களிடத்துச் சமானனும், மானுடரிடத்து வியானனும், விசேடித்திருக்கை யால், இப்பஞ்சவாயுக்களுக்கும் பலியிடிற் பஞ்சமகாயஞ்ஞஞ் செய்ததாமென்றறிக. (உகூரு)

பருகிடுக நாபியழற் குண்டத்திற் பாய
வெரியத் திரத்திலக்கி யே.

இ - ள். நாபி அழல் குண்டத்தில் பாய எரி - குண்டத்தான மாகிய நாபியிலே பொருந்திய உதராக்கினியை—அத்திரத்து இலக்கிப் பருகிடுக - அத்திரமந்திரத்தினாலே சொலிப்பித்துப் பிராணாக்கினிகோத்தரஞ்செய்க. எ - று. (உகூசு)

சேடித்த வன்னஞ் சிவனுக்கு மூலத்தைப்
பாடித்தே யாகுதியைப் பண். .

இ - ள். சிவனுக்கு மூலத்தைப் பாடித்து - நாபிகுண்டத்தி லிருக்குஞ் சிவபெருமானுக்கு மூலமந்திரத்தைச் சுவாகாந்த

மாக உச்சரித்து,—சேடித்த அன்னம் ஆகுதியைப் பண்-முன்னே பலியிட்டு எஞ்சிய அன்னத்தைப் பசி தீருமளவும் புசித்தலாகிய ஆகுதியைப் பண்ணு. எ - று. (உகரு)

உள்ளிவெள் ளுள்ளி யுதும்பரஞ் செம்முருங்கை
வள்ளிபச ளைமமதுக்கோ வை.

இ - ள். உள்ளி - உள்ளியும்—வெள்ளுள்ளி - வெள்ளுள்ளியும்—உதும்பரம் - அத்தியும—செம்முருங்கை - செம்முருங்கையும்—வள்ளி - வள்ளியும்—பசளை - பசளையும்—மது - மதுவும்—கோவை - கொவவையும். எ - று. (உகசு)

வெண்கத் தரிக்காய்தேற் றுங்காய்வில் வக்காயு
முணபதல கொமமடிக்கா யும.

இ - ள். வெண்கததரிக்காய் - கோழிமுட்டையைப்போல் வதாகிய வெண்கததரிக்காயும்—தேற்றுஙகாய் - தேற்றுங்காயும்—வில்வக்காய் - வில்வக்காயும்—கொம்மடிக்காய் - கொம்மடிக்காயும்—உண்பது அல - உண்ணலாகாத பதார்த்தங்களாம். எ - று. (உகஎ)

ணெணெய்ப்பிண் ணுக்குப பெரும்பீர்க் கெனுமிவையு
மூணணே லுருண்டசுரை யும்.

இ - ள். எண்ணெய்ப் பிண்ணுக்குப் பெரும்பீர்க்கு எனும் இவையும் - எண்ணெய்ப் பிண்ணுக்குப் பெரும்பீர்க்கென்று சொல்லப்படும் இவைகளையும்—உருண்ட சுரையும் உண்ணேல் - உருண்ட சுரைக்காயையும் உண்ணுதே. எ - று.

எட்பொடிகூட்டிற் குற்றமில்லையென்றறிக. (உகஅ)

என்னு மிவைமுதலா மெல்லா மொழித்தருந்து
மன்ன மமுதமே யாம்.

இ - ள். என்னும் இவை முதலாம் எல்லாம் ஒழித்து அருந்தும் அன்னம் - இங்கே சொல்லப்பட்ட இவை முதலாகிய பதார்த்தங்களெல்லாவற்றையும் நீக்கிப் புசிக்கும் அன்னமானது—அமுதமே ஆம் - அமுதமேயாம். எ - று. (உகூகூ)

பாலினொடுப் புப்படினு நெய்படினு முச்சிட்டத்
தேல விருதயநூ றெண்.

இ - ள். பாலினொடு உப்புப் படினும் - அறியாமையினாலே பாலினோடு உப்புக் கூடினும்,—உச்சிட்டத்து நெய் படினும் - எச்சிலிலே நெய் வார்க்கப்படினும்,—ஏல இருதயம் நூறு எண் - புசித்தபின் அக்குற்றம் போம்படி இருதயமந்திரத்தை நூறுதரஞ்செபிக்க. எ - று. (கூ00)

அன்னங் கறியுப்பு நெய்யகப்பை யாலிடுக
வின்னவை கையா லிடேல்.

இ - ள். அன்னம் கறி உப்பு நெய் அகப்பையால் இடுக - அன்னத்தையும் கறியையும் உப்பையும் நெய்யையும் அததற்குரிய அகப்பையினால் இடுக;—இன்னவை கையால் இடேல்- இவைகளை ஒருபோதுங் கையினால் இடாதே. எ - று. (கூ0க)

கையினா லூறுகா யாதியிடு சேடநீர்
சைவ ரருந்துவரோ தான்.

இ - ள். ஊறுகாய் ஆதி கையினால் இடு - ஊறுகாய் முதலியவைகளைக் கையினாற்றானே பரிமாறுக;—சைவர் சேடநீர் அருந்துவரோ தான் - சைவர்களாயினோர் ஒருவர் குடித்திருந்த சலத்தை ஒருபோதுங்குடியார். எ - று.

ஆதியென்றதனால், பச்சடி, வற்றல், வடகம், பணியாரமுதலியன கொள்க. (கூ0உ)

அருந்திஞ லற்றைக் குபவசியாய்ப் பின்ஞ
ளருந்திடுக பஞ்சகவ்வி யம.

இ - ள். அருந்திஞல் - மிகுந்த சலத்தை ஒருவன குடிப்பாஞயின்,—அற்றைக்கு உபவசியாய் - அன்றைக்கு உபவசியாயிருந்து—பின்ஞள் பஞ்சகவ்வியம் அருந்திடுக - மற்றைநாளிலே விதிப்படி தாபித்துச் சிவபெருமாஞக்கு ஆட்டிப் பாத்திரத்திலே சேடித்த பஞ்சகவ்வியத்தை உட்கொள்க. எ - று.

போசனத்தின்பின் குடித்தாஞயின், மற்றைநாள் உபவசியாயிருந்து மூன்ருநாளிலே கவ்வியம் உட்கொள்க. (கOக)

தண்ணீ ரருந்தேன் முகந்தாழ்த்தள் ளிக்கையா
லுண்ணேலங் நீரை யுகந்து.

இ - ள். முகம் தாழ்த்துத் தண்ணீர் அருந்தேல்-முகத்தைத் தாழ்த்துத் தண்ணீர் குடியாதே;—அந்நீரைக் கையால் அள்ளி உகந்து உண்ணேல் - ஆறு குளமுதலியவற்றிற் சென்று அந்நீரைக் கையாலள்ளி மகிழ்ந்து பானம்பண்ணுதே. எ - று.

சலத்தை ஒருபாத்திரத்தில் வார்த்து இருந்துகொண்டு வலக்கையிஞலெடுத்து மேஞேக்கிக் குடிக்க. விரதன் புசிக்கும்போது அவ்விடத்தில் ஒருவருமில்லையாயிற் சலபாத்திரத்தை இடக்கையிஞலெடுத்து வலக்கையிலுள்ள அன்னமெல்லாவற்றையும் பரிகலத்தில் உகுத்துவிட்டு முன்கையிஞலே தாங்கிப் பானம்பண்ணுக. (கOச)

உரையே லசனத் துபயோக மல்ல
விரையதிக மாகவருந் தேல்.

இ - ள். அசனத்து உபயோகம் அல்ல உரையேல் - போசனம்பண்ணும்போது அதற்கு உபயோகமல்லாத பிறவார்த்

தைகளைப் பேசாதே;—அதிகம் ஆக இரை அருந்தேல் - முக்கால்வயிற்றுக்கு மேற்படப் போசனம்பண்ணாதே. எ - று.

கால்வயிற்றுக்குச் சலத்தையும் வாயுவையும் பூரிக்க.(கூ0௫)

மாற்றிமயிர் மற்றும் விரவிற் புறம்புனலா
னீற்றாலுஞ் சுத்தி நிறை.

இ - ள். மயிர் மற்றும் விரவில் புறம் மாற்றி - புசிக்கும்போது அன்னத்திலே மயிர் முதலியவை கிடக்கின் அவற்றைச் சிறிதன்னத்தோடு புறத்தே நீக்கிவிட்டு,—புனலால் நீற்றாலும் சுத்தி நிறை - கை கழுவிக்கொண்டு ஜலத்தினாலும் திருநீற்றினாலும் சுத்திபண்ணிப் புசி. எ - று.

மற்றும் என்றது ஈ எறும்பு கொசுகு நகமுதலியனவற்றை. பாகம்பண்ணும்போதே கூடிக் கிடந்து பாகம்பண்ணப்பட்டதெனின், மயிரொழிய மற்றவையாகிற் புசியாது பசுக்களுள் மலந்தின்னும் பசுக்களுக்கூட்டுக. (கூ0சு)

ஈனர் புலைய ரிருதுமதி நாய்பன்றி
யேனையவும் பாரா விடத்து.

இ - ள். ஈனர் - ஈனசாதியாரும்—புலையர்-புலையரும்—இருதுமதி - இருதுமதியும்—நாய் பன்றி ஏனையவும் பாரா இடத்து - நாயும் பன்றியும் பிறவும் பாராதவிடத்தில். எ - று.

ஏனையவுமென்ற உம்மையால், கோழி காகம் பருந்து கழுகு முதலாயின கொள்க. (கூ0எ)

இருந்தா குதிசெய் யிவற்றொன்று பார்க்கிற்
சொரிந்திடக்கக் குண்டகறி சோறு.

இ - ள். இருந்து ஆகுதி செய் - இருந்து போசனம் பண்ணு;—இவற்று ஒன்று பார்க்கின் - இவற்றுள் ஒன்று பார்க்கு

மாயின்,—உண்ட கறி சோறு சொரிந்திடக் கக்கு - உண்ட கறிசோற்றைச் சொரியும்படி கக்கு. எ - று.

பூனை எலி மூடிகம் பல்லி ஊராக்குருவி என்னுமிவற்றுள் ஒன்று பார்க்கின், அதனையோட்டித் திருநீற்றினாலுஞ் சலத்தினாலுஞ் சுத்திசெய்து புசிக்க. (௯0அ)

முரசாதி தன்னை முழக்க வவற்றி
னரவஞ் செவியினுறா மல்.

இ - ள். அவற்றின் அரவம் செவியின் உறாமல் - போசனஞ்செய்யும்போது முற்கூறிய உயர்திணை அஃறிணைப்பொருள்களின் சத்தங்கள் செவியிற்கேளாதபடி—முரசு ஆதிதன்னை முழக்க - முரசமுதலிய வாத்தியங்களை ஒலிப்பிக்க. எ - று. ()

முற்றியபின் னாகுதிதான் முன்னூன் முறையுறவே
சற்றுநீ ரங்கை தரித்து.

இ - ள். முன்னூல் முறை உறவே ஆகுதி முற்றிய பின் - முன்னூல் விதிப்படி பிராணாக்கினியாகுதி முடிந்தபின்னர்—சற்று நீர் அங்கை தரித்து - சிறிது சலத்தை உள்ளங்கையில் வாங்கி. எ - று. (௯௧0)

உச்சரித்தோ மாதிமனு வுண்க வதன்பின்னை
யெச்சில் சிறிதள்ளி யே.

இ - ள். ஓம் ஆதி மனு உச்சரித்து உண்க - பிரணவத்தை முதலாகவுடைய பத்ததியில் விதித்த மந்திரத்தைச் சுவாகாந்தமாக உச்சரித்து அச்சலத்தை உட்கொள்ளுக;—அதன்பின்னை எச்சில் சிறிது அள்ளி - அதன்பின் உச்சிட்டமான அன்னத்திலே சிறிதள்ளி. எ - று.

அம்மந்திரமுச்சரித்தற்கு அருகரல்லாதவர் தற்புருடமந்திரமுச்சரிக்க. (௯௧௧)

பெய்க நிலத்துப் பிரேதநர காயவென
வுய்வரது தன்னையவ ருண்டு.

இ - ள். பிரேதநரகாய என நிலத்துப் பெய்க - தமது கோத்திரத்தில் அந்தியேட்டி முதலிய கருமஞ்செய்து ஆசாரியனால் யோசிக்கப்படாது நரகத்திலே கிடப்பவர்களுக்குப் பிரேதநரகவாசிப்பியசுவாகா என்று உச்சரித்து அவவன்னதைத் தரையிலே பலியிட்டு அம்மந்திரத்தினாலே சுளுகோதகங்கொடுக்க;—அவர் அதுதன்னை உண்டு உய்வர் - அந்நரகவாசிகள் அதனையுண்டு பசிநோய் நீங்குவார்கள். எ - று.

இங்கே யமனுக்கும் சித்திரகுத்தருக்கும் பலியிடுகவென்பாருமுளர். (௩௧௨)

புசித்தமனை யுட்கை கழுவுகை தன்னை
நிசித்த மெனவே நினை.

இ - ள். புசித்த மனையுள் கை கழுவுகைதன்னை-புசித்தபோசனசாலையினுள்ளே கை கழுவிச் சுத்தாசமனஞ்செய்தலை—நிசித்தம் எனவே நினை - விலக்கப்பட்டதென்றறி. எ - று. ()

அங்ஙனஞ்செய்யின் அச்சலம் மூத்திரத்துக்கொக்குமென்றறிக. (௩௧௩)

புறத்திற் கழுவிக்கை கொப்பளிக்க வாமப்
புறத்தீரெண் கானீர் புரிந்து.

இ - ள். புறத்தில் கை கழுவி - வீட்டுக்குப் புறத்திலே போய் முன் வலக்கையைக் கழுவிக்கொண்டு—ஈரெண்கால் நீர் புரிந்து வாமப்புறத்துக் கொப்பளிக்க - பதினாறுதரந்தண்ணீர் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்பளிக்க. எ - று.

அன்னமலாப் பண்ட மருந்தினர்தாங் கொப்பளிக்க
கன்னீரா லெண்கா னயந்து.

இ - ள். அன்னம் அலாப்பணடம் அருந்தினர்தாம் - அன்னமலலாத பயறு பணியாரமுதலிய பண்டங்களைப் புசித்தவா—எண்கால் நன்னீரால் நயந்து கொப்பளிக்க - எட்டுதரந் தண்ணீர் வாயிற்கொண்டு கொப்பளிக்க. எ - று.

இங்ஙனமன்றித் தமக்குச் சுத்தியாகுமட்டுங் கொப்பளித்தலுமாகுமென்றறிக. (௩.க௫)

வலபபாலிற் கொப்பளித்தால் வன்னிநர கம்புக்
கலற்படுவ னென்றே யறி.

இ - ள். வலப்பாவில் கொப்பளித்தால் - அறியாமையாலேனும் விரைவினாலேனும் தேவர்கள் எப்பொழுதும் வசிக்கும் வலப்புறததிலே ஒருவன் கொப்பளித்தானாயின்,—வனனிநரகம் புக்கு அலற்படுவன் என்றே அறி - அக்கினிநரகததில் விழுநது துயருறுவனென்றறி. எ - று. (௩.க௬)

கழுவிப் பினுங்கையுங் காலும் புசித்த
வழுவறு மாறு மதித்து.

இ - ள். பினும - கொப்பளித்தபின்பு,—புசித்த வழு அறும் ஆறு மதித்து-புசித்தபொழுது கைகால்களில் எச்சில் தெறித்ததுறறம் போம்படி நினைதது,—கையும் காலும கழுவி - கைகாலகளை முழங்கை முழந்தாள்வரையுங் கழுவிக்கொண்டு. எ-று.

கழுவிச் சிறந்தவலக் கைமுட்டி யாக்கி
யொழுகப் பெருவிரனீ ருமட.

இ - ள். கழுவிச் சிறந்த வலக்கை முட்டி யாக்கி - இங்ஙனஞ் சுத்திசெய்யப்பட்டுச் சிறந்த வலக்கையை முட்டியாக்கிக் கீழ் நோக்கப் பிடித்து;—அப் பெருவிரல் ஒழுகு நீரும் - அதன்பெருவிரனுனியினின்று விழுகின்ற சலத்தை. எ - று.

பிரமதீர்த்த முதலிய சகலதீர்த்தங்களும் சகலதேவதைக ளும இடையறுதிருக்கையால், சிறந்த வலக்கையெனச் சிறப் பித்தார். (ங.கஅ)

வார்க்கவலக் காலங்குட் டத்திற்கா லாங்கிமனு
நாக்கி னுறவே நவின்று.

இ - ள். காலாங்கி மனு நாக்கின் உறவே நவின்று - காலா க்கினிருத்திரருடைய மந்திரத்தைச் சுவாகாந்தமாக நாவிலே பொருந்த உச்சரித்து,—வலக்கால் அங்குட்டத்தில் வார்க்க - வலக்காற்பெருவிரலிலே வார்க்க. எ - று.

காலாக்கினிருத்திரர் வலக்காற்பெருவிரலில் எப்பொழுதும் அக்கினியைச் சொலிப்பித்துக்கொண்டு எழுந்தருளியிருப்பர். அவ்வக்கினி சாந்தமாதற்பொருட்டு அபிஷேகஞ் செய்வதாகப் பாவித்தே வார்க்க. (ஙககூ)

தொடவலக்கை யங்குட்டந் துண்டங் கனிட்டை
தொடவிடக்கை யங்குட்டத் தோடு.

இ - ள். வலக்கை அங்குட்டம் துண்டம் தொட - வலக் கைப்பெருவிரல் மூக்கைத் தொட—கனிட்டை இடக்கை அங்குட்டத்தோடு தொட - பின்பு அதன்சிறுவிரல் இடக்கை ப்பெருவிரலைச் சாணளப்பதுபோலத் தொட. எ - று.(ஙஉ0)

வைக்ககனிட் டாக்கிரத்தை நாபியினூண் மாசுதனைக்
கைக்கும் பரிகையாங் காண்.

இ - ள். கனிட்டாக்கிரத்தை நாபியில் வைக்க - அவ்விடக் கைச்சிறுவிரனுனியை நாபியில் வைக்க;—ஊண் மாசுதனைக் கைக்கும் பரிகை ஆம் காண் - இது ஆகாரத்தால் வந்த குற்றத் தைப் போக்கும் பரிகையென்னுமுத்திரையாமென்றறி. எ-று

பரிகையெனு முத்திரையைப் பண்ணிடுக மெய்யிற்
றிருநீ றணிந்து சிறந்து.

இ - ள். பரிகை எனும் முத்திரையைப் பண்ணிடுக - இங்ஙனம பரிகாமுத்திரையைப் பண்ணி,—மெய்யில் திருநீறு சிறந்து அணிந்து - அதன்பின் சரீரததில் விபூதியைச் சிறப்புறத் தரிதது. எ - று. (௬உஉ)

பண்ணி நியாதம் பரம சிவன்பாத
முண்ணினைக தேசிகன்ற ளும.

இ - ள். நியாதம் பண்ணி - சகளீகரணம் பண்ணி,—பரம சிவன் பாதம் தேசிகன தாளும் உள் நினைக - பரமசிவனுடைய பாதங்களையும் ஆசாரியருடைய பாதங்களையும் உள்ளே தியானிக்க. எ - று. (௬உ௩)

உரைத்தே யகோர வுரையேழு வாரம்
விரைத்தே மவுனம விடு.

இ - ள். அகோரவுரை ஏழுவாரம் உரைதது - அகோரமந்திரத்தை ஏழுதரமுச்சரித்து,—மவுனம் விரைதது விடு - மௌனத்தைச் சடிதியில விடு. எ - று. (௬உ௪)

மௌனம்வேண்டுங்காலங்களுணாத்துகின்றா.

பிறரொடுபே சற்கநீ ராட னியதி
பொறியழலோம் பல்பூசை யில.

இ - ள். நீராடல் - ஸ்நானஞ்செய்யும்போதும்,—நியதி - அநுட்டானம் பண்ணும்போதும்,—பொறி அழல் ஓம்பல் - பொறி பொருந்திய அக்கினிகாரியஞ்செய்யும்போதும்,—பூசையில்-பூசைபண்ணும்போதும்,—பிறரொடு பேசற்க - பிறரோடு பேசாதொழிக. எ - று.

அன்றியும் செபகாலத்தும் மலசலமோசனகாலத்தும் யோகஞ்சாதிக்குங்காலத்தும் மௌனம் வேண்டுமெனக. (௧௨௫)

புனிதமுற வாக்குப் புசிக்கதாம் பூல
மினிமையுறத் தின்கை யிழுக்கு.

இ - ள். வாக்குப் புனிதம் உறத் தாம்பூலம் புசிக்க - கிருகத்தர் போசனஞ்செய்தபின்னர் வாக்குச்சுத்தியாகும்பொருட்டுத் தாம்பூலம் புசிக்கக்கடவர்;—இனிமை உறத் தின்கை இழுக்கு - அப்படியன்றி விருப்பம் வைத்துப் புசித்தல் குற்றமாம். எ - று.

விரதத்தராயினோர் கராம்பு ஏலம் கடுக்காய் சுக்கு அசமதாக முதலியவற்றுள் இயன்றதொன்றைப் புசிக்க. (௧௨௬)

சைவாகமாதிகளை ஆராயுமுறையுணர்த்துகின்றார்.

அதன்பி னமலா கமமாய்ந் தறிக
வதன்வழியுஞ் சார்புமா ராய்ந்து.

இ - ள். அதன்பின் அமல ஆகமம் ஆய்ந்து அறிக - அதன்பின்பு நிருமலராகிய சிவபெருமான் அருளிச்செய்த முதனூலாகிய சைவாகமங்களை ஆராய்ந்தறிக;—அதன் வழியும் சார்பும் ஆராய்ந்து அறிக - அன்றியும் அவற்றின் வழிநூலாகிய உபாகமங்களையும் சார்புநூலாகிய அட்டப்பிரகரணமுதலியவற்றையும் ஆராய்ந்தறிக. எ - று.

அட்டப்பிரகரணங்களாவன தத்துவப்பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரயநிர்ணயம், போககாரிகை, மோக்ஷகாரிகை, நாதகாரிகை, பரமோக்ஷநிராசகாரிகை, இரத்தினத்திரயம் என்பனவாம். (௧௨௭)

சைவாகமங்களினுற்பத்தி எட்டுத்திருக்குறளா

லுணர்த்துகின்றூர்.

சாதாக் கியமென்னுந தத்துவத்தில் வீற்றிருந்து

சாதா சிவனமலன் ருன்.

இ - ள். அமலனை சதாசிவன-நிருமலராகி அதிபரமாப்தராயு ள்ள சதாசிவமூா ததி--சாதாக்கியம் என்னும தததுவத்தில வீற் றிருந்து - சாதாககிய,ர த துவததில எழுநதருளியிருந்து. எ-று.

ஆப்தர் உள்ளது கூறுவோா. சாமானியமனுடரினும விசே டமனுடர் மேலாகிய ஆபதா; அவரினும இருடிகள் மேலாகிய ஆப்தா; அவரினும தேவாகளமேலாகிய ஆப்தா; அவரினும பிரமா மேலாகிய ஆபதா; அவரினும் விட்டுணு மேலாகிய ஆபதா; அவரினும உருத்திரா மேலாகிய ஆப்தா; அவரினும் மகேசரர் மேலாகிய ஆட்தா; அவரினும் சதாசிவா மேலாகிய ஆப்தா; அவரின்மேலாகிய ஆப்தரினமையால அவர் அதிபர மாப்தா எனப்படுவா. (௧ உ௮)

நயநதா ருயிரெலலா நண்ணவற மாதி

யியம்பினு னாகமநா லேழு.

இ - ள். ஆர் உயிா எல்லாம அறம ஆதி நயந்து நண்ண - நிறைநத ஆனமாக்களெல்லாம் அறம பொருள இனபம வீடு என்னும உறுதிப்பொருள் நானகையும விருமபியடையும பொருட்டு—நாலேழு ஆகமம் இயம்பினுன் - இருபதெட்டா கமங்களை அநுட்டுப்புச்சந்தசாக அருளிச்செய்தாா. எ - று. ()

இருக்கு மிவையெலலாஞ் சுத்தவித்தை தன்னிற்

பரக்குமுல கெங்குமெனப பார்.

இ - ள். இவை எல்லாம் சுத்தவிததைதன்னில் இருக்கும் - இவ்வாகமங்களெல்லாம் ஞானேதயத்துக்குக் காரணமாகிய

சுத்தவித்தியாதத்துவத்திலிருக்கும்;—உலகு எங்கும் பரக்கும் எனப் பார் - அதிலிருந்து பரம்பரையாக மகாமேருவில் வந்திறங்கி அதினின்றும் உலகமெங்கும் பரம்புமெனவறி. எ - று.

இவற்றின்றோற்றம் உற்பத்திக்கிரமமெனவும், சங்காரக்கிரமமெனவும், இருவகைப்படும். அவற்றுள் உற்பத்திக்கிரமமாவது ஈசானமுதற் சத்தியோசாதமீறாகக் கூறுவது. சங்காரக்கிரமமாவது சத்தியோசாதமுதல் ஈசானமீறாகக் கூறுவது.

இவை சதாசிவனால் அநந்தேசுரருக்கும், அநந்தேசுரரால் ஸ்ரீகண்டருக்கும், ஸ்ரீகண்டரால் தேவர்களுக்கும், தேவர்களால் முனிவருக்கும், முனிவர்களால் மனுடருக்கும், மனுடரால் மனுடருக்கும், உபதேசிக்கப்படும். இங்ஙனமுபதேசிக்கப்படுங்கால் உளவாகிய சம்பந்தம் ஆறும் முறையே பரசம்பந்தம், மகாசம்பந்தம், அந்தராளசம்பந்தம், திவ்வியசம்பந்தம், திவ்வியாதிவ்வியசம்பந்தம், அதிவ்வியசம்பந்தம் எனப் பெயர்பெறும். (௫௫0)

சத்தியோ சாதத்திற் காமிக மாதியைந்து
முற்பவித்து நீடுமென வோர்.

இ - ள். சத்தியோசாதத்தில் - சதாசிவமூர்த்தியுடைய ஐந்துமுகங்களுள்ளும் சத்தியோசாதமுகத்தினின்றும்—காமிகம் ஆதி ஐந்தும் உற்பவித்து நீடும் என ஓர் - காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம் என்னும் ஐந்தாகமங்களும் தோன்றி வழங்குமென்றறிக. எ - று.

இவை கௌசிகவிருடியின்பொருட்டுத் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை சிவமூர்த்தி. பூமியின்கண் இவ்விருடிகோத்திரம் சிவகோசரமெனப்படும். கோத்திரமெனினும் கோசரமெனினுமொக்கும். (௫௫௧)

*தீத்தமுத லைந்துந் திகழ்வாம வத்திரத்தில*
*வாய்த்தன வென்றே மதி.*

இ - ள். திகழ் வாமவத்திரத்தில் - விளங்காநின்ற வாமதே வமுகத்தினின்றும்—தீத்தம முதல் ஐந்தும் வாய்த்தன என றே மதி - தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபே தம் என்னும் ஐந்தாகமங்களுந் தோன்றினவென்றறி. எ - று.

இவை காசிபவிருடியின்பொருட்டுத் தோன்றின, இவற்றி ன்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை ஈசுரன். பூமியின்கண் இவ்விருடிகோத்திரம் சிகாகோசரமெனப்படும். (கக உ)

*விசயமுத லைந்தும விகிர்தவகோ ரத்தி*
*லிசையவுதித் தேயிலங்கு மென்.*

இ - ள். விகிர்த அகோரத்தில் - அச்சத்தைத் தரும அகோ ரமுகத்தினின்றும—விசயமுதல் ஐந்தும் இசைய உதித்தே இலங்கும் என் - விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கி னேயம, வீரம என்னும ஐந்தாகமங்களுந் பொருந்தத்தோ ன்றி விளங்குமென்றறி. எ - று.

இவை பாரத்துவாசவிருடியின்பொருட்டுத் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற் றிற்கு அதிதேவதை ஈசானன. பூமியின்கண் இவ்விருடிகோ த்திரஞ் சோதிகோசரமெனப்படும். (கக௩)

*தற்புருடத் தேரௌர வாதியைந்துஞ் சாதமா*
*யற்புதமாய் நீடு மறி.*

இ - ள். தற்புருடத்தே - தற்புருடமுகத்தினின்றும்—ரௌ ரவ ஆதி ஐந்தும் சாதம் ஆய் அற்புதம் ஆய் நீடும் அறி -

ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம் என்னும் ஐந்தாகமங்களுந்தோன்றி ஆச்சரியகரமாய் வழங்கு மென்றறி. எ - று.

இவை கௌதமவிருடியின்பொருட்டுத் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீக்ஷை செயப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை பிரமமூர்த்தி. பூமியின்கண் இவவிருடிகோத்திரம சாவித்திரிகோசரமெனப்படும். (கூகச)

ஈசானந் தன்னிற் புரோற்கீத மாதியெட்டுந
தேசார வேயுதிக்குந் தேறு

இ - ள். ஈசானந்தனனில்-ஈசானமுகத்தினின்றும்—புரோற்கீதம் ஆதி எட்டும தேசு ஆரவே உதிக்கும தேறு - புரோற்கீதம், இலளிதம், சித்தம, சநதானம், சருவோக்தம், பாரமேசுரம, கிரணம், வாதுளம எனனும் எட்டாகமங்களும் ஞானப்பிரகாசம் பொருந்தத் தோன்றினவென்றறி. எ - று.

இவை அகத்தியவிருடியினபொருட்டுத தோனறின. இவற்றின்படியே இவருக்குத தீக்ஷை செயப்பட்டது. இவற்றிறகு அதிதேவதை நடேசமூரத்தி. பூமியின்கண் இவவிருடி கோத்திரம் வியோமகோசரமெனப்படும்.

இவவிருபத்தெட்டாகமஙகளுளளும் காமிகமுதலிய பத்தும விஞ்ஞானகலருட் பரமசிவனது அநுக்கிரகத்தைப் பெற்ற பிரணவா முதலிய பததுச்சிவனகளுக்கும அருளிச்செயப்பட்டமையாற் சிவபேதமெனவும், விசயமுதலிய பதினெட்டும் இவவாறு பரமசிவன்பால் உபதேசம் பெற்ற அநாதிருத்திரர் முதலிய பதினெட்டுருத்திராகளுக்கும அருளிச்செயப்பட்டமையால் உருத்திரபேதமெனவும, சொல்லப்படும்.

இச்சிவாகமங்கள் சித்தாந்தமெனவும, மாந்திரமெனவும், தந்திரமெனவும் பெயர்பெறும.

இவ்வாகமங்களுக்குக் கிரந்தசங்கியை சொல்வாம்:—காமிகத்துக்குப் பரார்த்தம். யோகஜத்துக்கு இலக்ஷம். சிந்தியத்துக்கு இலக்ஷம். காரணத்துக்குக் கோடி. அசிதத்துக்கு நியுதம். தீப்ததத்துக்கு நியுதம். சூக்குமத்துக்குப் பதுமம். சகச்சிரத்துக்குச் சங்கம. அஞ்சுமானுக்கு ஐந்திலக்ஷம. சுப்பிரபேதத்துக்கு மூன்றுகோடி. விசயத்துக்கு மூன்றுகோடி. நிச்சுவாசத்துக்குக் கோடி. சுவாயம்புவத்துக்கு ஒன்றரைக்கோடி. ஆக்கினேயத்துக்கு முப்பதினுயிரம். வீரத்துக்கு நியுதம். ரௌரவத்துக்கு எட்டாப்புதம. மகுடததுககு இலக்ஷம். விமலத்துககு மூன்றிலக்ஷம. சந்திரஞானத்துக்கு மூன்றுகோடி. முகவிம்பத்துக்கு இலக்ஷம். புரோற்கீததுக்கு மூன்றிலக்ஷம். இலளிதத்துக்கு எண்ணுயிரம். சித்தத்துக்கு ஒன்றரைக் கோடி. சந்தானத்துக்கு ஆறுயிரம். சர்வோக்தத்துக்கு இரண்டிலக்ஷம். பாரமேசுரத்துக்குப் பன்னிரண்டிலக்ஷம். கிரணத்துக்கு ஐந்துகோடி. வாதுளததுக்கு இலக்ஷம்.

இவை ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என்று தனித்தனி நான்குபாதங்களுடையனவாயிருக்கும்.

இவற்றுள், ஞானபாதத்தில், பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலா பிரளயாகலர் சகலரென்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம் காமியம் மாயேயம் வைந்தவம் திரோதானசத்தியென்னும் பாசஙகளின் சொரூபமும், சத்தியின் சொரூபமும், சிவதத்துவமுதற் பிருதிவிததுவவரை முப்பத்தாறுதத்துவங்கள தோற்பததியும், இவை ஆன்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியாமுறைமையும், புவனங்கள் புவனேசர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப்பிரமாணங்களும், அதமப்பிரளயம் மத்தியமப்பிரளயம் மகாப்பிரளயங்களின் சொரூபமும், அந்தப்பிரளயங்களின்பின்னர்ச் சிருட்டியாமு

றைமையும், பாசுபதம் மகாவிரதங் காபாலமுதலிய மதங்க ளின் சொரூபமும் கூறப்படும்.

இனிக் கிரியாபாதத்தில், மந்திரங்களினுத்தாரணஞ் சந்தி யாவந்தனம் பூசை செபமோமங்களும், சமய விசேட நிரு வாண ஆசாரியாபிடேகங்களும், புத்திமுத்திகளுக்குபாயமா கிய தீக்கையுங்கூறப்படும்.

இனியோகபாதத்தில், இந்தமுப்பத்தாறு தத்துவங்களும தத்துவேசுரரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும் சகத்து க்குக் காரணமாகிய மாயை மகாமாயைகளைக் காணும் வல்ல மையும், அணிமாதிசித்திகளுண்டாமுறைமையும், இயமம் நிய மம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தியானம் தார ணம் சமாதிகளினுடைய முறைமையும், மூலாதாரமுதலிய ஆதாரங்களின் முறைமையும் கூறப்படும்.

இனிச் சரியாபாதத்தில், பிராயச்சித்தவிதியும், பவித்திரவி தியும், சிவலிங்கலக்கணமும், உமாமகேசுரமுதலிய வியத்தாவ வியத்தலிஙகங்களினிலக்கணமும், நந்தி முதலிய கணநாதரில க்கணமும், செபமாலை யோகபட்டம் தண்டம் கமண்டலமுத லியவற்றினிலக்கணமும், அந்தியேட்டி விதியும், சிராத்தவிதி யுங் கூறப்படும்.

சிவபெருமானுக்குக் காமிகம் திருவடிகளும், யோகசம் கணைக்கால்களும், சிந்தியம் திருவடிவிரல்களும், காரணம் கெ ண்டைக்கால்களும், அசிதம் முழந்தாள்களும், தீப்தம் தொ டைகளும், சூக்குமம் குய்யத்தானமும், சகச்சிரம் கடித்தான மும், அஞ்சுமான் முதுகும், சுப்பிரபேதம் கொப்பூழும், விசயம் உதரமும், நிச்சுவாசம் நாசியும், சுவாயம்புவம் முலைகளும், ஆக் கினேயம் கண்களும், வீரம் கழுத்தும், ரௌரவம் செவிகளும், மகுடம் திருமுடியும், விமலம் கைகளும், சந்திரஞானம் மார் பும், முகவிம்பம் திருமுகமும், புரோற்கீதம் திருநாக்கும்,

இலளிதம் கபோலங்களும், சித்தம் திருநெற்றியும், சந்தானம் குண்டலமும், சருவோத்தம் உபவீதமும், பாரமேசுவரம் ஆரமும், கிரணம் இரத்தினாபரணங்களும், வாதுளம் திருப்பரிவட்டமும், காலோத்தரம திருமேற்பூச்சும், மற்றை உபாகமங்களெல்லாம் பரிமளதிரவியங்களும புஷ்பங்களும், சைவசித்தாந்தம் நைவேத்தியமுமாம். (௧௧௫)

இருபது மெட்டுமே மூலமுப பேத
மிருநூறு மேழுமென வெண்.

இ - ள். இருபதும் எட்டுமே மூலம் - இவ்விருபத்தெட்டாகமங்களும் சிவபெருமானிடத்தினின்றும் முதற்றோன்றினமையால் மூலாகமமெனப்படும;—உபபேதம் இருநூறும் ஏழும் என எண் - இவற்றினவழித் தோன்றிய உபாகமங்கள் இருநூற்றேழாமென்றறி. எ - று.

காமிகத்துக்கு உபபேதம் மூன்று. யோகஜத்துக்கு உபபேதம் ஐந்து. சிந்தியத்துக்கு உபபேதம ஆறு. காரணத்துக்கு உபபேதம் ஏழு. அசிதத்துக்கு உபபேதம நான்கு. தீப்தத்துக்கு உபபேதம் ஒன்பது. சூக்குமத்துக்கு உபபேதம் ஒன்று. சகச்சிரத்துக்கு உபபேதம் பத்து. அஞ்சுமானுக்கு உபபேதம் பன்னிரண்டு. சுப்பிரபேதத்துக்கு உபபேதம ஒன்று. விசயத்துக்கு உபபேதம் எட்டு. நிச்சுவாசத்துக்கு உபபேதம எட்டு. சுவாயம்புவத்துக்கு உபபேதம் மூன்று. ஆக்கினேயத்துக்கு உபபேதம் ஒன்று. வீரத்துக்கு உபபேதம பதின்மூன்று. ரௌரவத்துக்கு உபபேதம் ஆறு. மகுடத்துக்கு உபபேதம் இரண்டு. விமலத்துக்கு உபபேதம் பதினாறு. சந்திரஞானத்துக்கு உபபேதம் பதினான்கு. முகவிம்பத்துக்கு உபபேதம பதினைந்து. புரோற்கீதத்துக்கு உபபேதம் பதினாறு. இலளிதத்துக்கு உபபேதம் மூன்று. சித்தத்துக்கு உபபேதம் நான்கு. சந்தானத்துக்கு உபபேதம் ஏழு. சர்வோத்தத்துக்கு உபபேதம் ஐந்து.

பாரமேசுவரத்துக்கு உபபேதம் ஏழு. கிரணத்துக்கு உபபேதம் ஒன்பது. வாதுளத்துக்கு உபபேதம் பனனிரண்டு. இவற்றின் பெயர்களைக் காமிகமுதலியவற்றிற் காண்க. (கூகசு)

மூலாகமங்களைத தனிததனி கேட்டவர்களது
தொகையையுணர்த்துகின்றார்.

அறுபத் தறுவர் பிரணவ ராதி
யறிவுறக்கேட் டாராக மம.

இ - ள். ஆகமம் அறிவு உறக் கேட்டார் - மூலாகமங்களை அறிவு பொருந்தக் கேட்டவர்கள்—பிரணவர் ஆதி அறுபத்தறுவர் - பிரணவர் முதலாக அறுபத்தறுவர்கள். எ - று.

சிவபேதம் பத்தையுங்கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவவோராகமத்துக்கு மும்மூன்றுபேராய் அனுசதாசிவருட்டேவராகிய பிரணவர் முதன் முப்பதின்மராவர். அவர்பெயர் வருமாறு:—காமிகங்கேட்டவர் பிரணவர், திரிகலர், ஹரர். யோகசங்கேட்டவர் சுதாக்கியர், பஸ்மர், விபு. சிந்தியங்கேட்டவர் சுதிப்தர், கோபதி, அம்பிகை. காரணங்கேட்டவர் காரணர், சர்வருத்திரர், பிரசேசர். அசிதங்கேட்டவர் சுசிவர், சிவர், அச்சுதர். தீப்தங்கேட்டவர் ஈசர், திரிமூர்த்தி, உதாசனர். சூக்குமங்கேட்டவர் சூக்குமர், வைச்சிரவணர், பிரபஞ்சனர். சகச்சிரங்கேட்டவர் காலர், வீமர், தருமர். அஞ்சுமான் கேட்டவர் அம்பு, உக்கிரர், ஆதித்தியர். சுப்பிரபேதங்கேட்டவர் தேசேசர், விக்கினேசர், சசி.

உருத்திரபேதம் பதினெட்டையுங்கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவவோராகமத்துக்கு இவவிரண்டுபேராய் அநாதிருத்திரர் முதன் முப்பத்தறுவராவர். அவர் பெயர் வருமாறு:—விசயங்கேட்டவர் அநாதிருத்திரர், பரமேசர். நிச்சுவாசங்கேட்டவர் தசாரணர், பார்ப்பதி சுவாயம்புவங்கேட்

வர் நிதனேசர், பத்மபூ. ஆக்கினேயங்கேட்டவர் வியோமர் உதாசனர். வீரங்கேட்டவர் தேசர், பிரசாபதி. ரௌரவங் கேட்டவர் பிரமேசர், நந்திகேசர். மகுடங்கேட்டவர் சிவர், மகாதேவர். விமலங்கேட்டவா சருவாத்மா, வீரபத்திரர். சந்திரஞானங்கேட்டவா அநந்தர்,பிருகஸ்பதி. முகவிம்பங்கேட்டவர் பிரசாந்தர், ததீசி. புரோற்கீதங்கேட்டவா குலி, கவசர். இலளிதங்கேட்டவா ஆலயேசா, இலளிதர். சித்தங்கேட்டவர் விந்து,சண்டேசர். சந்தானங்கேட்டவா சிவநிஷ்டா, அசம்பாதா. சருவோத்தங்கேட்டவா சோமதேவர், நிருசிங்கா. பாரமேசுரங்கேட்டவர் சிதேவி, உசனா. கிரணங்கேட்டவர் தேவவிபு, சம்வர்த்தர். வாதுளங்கேட்டவா சிவா, மகாகாளா.

சிவாகமோற்பத்தி சிலவாகமங்களிலே பேதித்துக்
கூறப்படுமென்பது இரண்டு திருக்குறளா

உதிக்கு முறைதன்னைப் பேதமுற வோது
மதித்தே சிலவாக மம்.

இ - ள். சில ஆகமம் - சிலவாகமங்கள்—உதிக்கும் முறைதன்னை மதித்துப் பேதம் உற ஓதும் - ஆகமங்கள் தோன்றிய முறைமையை ஆராய்ந்து பேதம் பொருந்தச் சொல்லும்.எ-று.

ஊர்த்துவமுகமாகிய ஈசானத்தினின்றும் காமிகமுதலிய சிவாகமமிருபத்தெட்டும், அதோமுகங்கனுள்ளும் தற்புருடத்தினின்றும் இருக்குவேதமும், அகோரமுகத்தினின்றும் யசுர்வேதமும், வாமதேவமுகத்தினின்றும் சாமவேதமும், சத்தியோசாதமுகத்தினின்றும் அதாவவேதமுந்தோன்றின. இருக்குவேதம் இருபத்தொருசாகையும், யசுர்வேதம் நூறுசாகையும், சாமவேதம் ஆயிரஞ்சாகையும், அதர்வவேதம் ஒன்பதுசாகையும் உடையனவாம். இவவேதநான்கும்

பிரமகாண்டமும் பிரமஞானத்திற்கு நிமித்தமாகிய கருமகாண்டமும் உணர்த்துவனவாம். பிரமகாண்டம் உபநிடதமெனவும், வேதாந்தமெனவும், வேதசிரசெனவும், பிரபலசுருதியெனவும் பெயர்பெறும்.

வேதசிவாகமமிரண்டும் சிவபெருமானிடத்தே தோன்றினமையால் முதனூலெனப்படும். வேதத்துக்கு வழிநூல் பதினெட்டுப்புராணங்களும் பதினெட்டுமிருதிகளுமாம். சார்பு நூல் சிக்ஷை கற்பசூத்திரமுதலிய வேதாங்கங்களாம்.

வேதம் யஞ்ஞாதி கருமங்களைச் செய்து புண்ணியலோகங்களை அடைய விரும்பும் உலகாகள்பொருட்டும், ஆகமம் சிவசாலோக்கிய சிவசாமீப்பிய சிவசாரூப்பிய சிவசாயுச்சியங்களை அடைய விரும்புஞ் சத்திநிபாதமுடையார்பொருட்டும், அருளிச்செயப்பட்டன.

இன்னும், சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்னும் ஐந்துமுகங்களினும், முறையே லௌகிகம், வைதிகம், அத்தியான்மகம், அதிமார்க்கம், மாந்திரம் என்னும் ஐந்தும் தோன்றினவெனச் சிவாகமங்கள் கூறும். லௌகிகநூல் ஆயுள்வேதமும் தண்டநீதியுமுதலாயின. வைதிகநூல் மீமாஞ்சையும், நியாயமும், வைசேடிகமுமாகிய மூன்றுமாம். அத்தியான்மகநூல் சாங்கியமும், பாதஞ்சலமும், வேதாந்தமுமாகிய மூன்றுமாம். அதிமார்க்கநூல் பாசுபதமும், காபாலமும், மகாவிரதமுமாகிய மூன்றுமாம். மாந்திரநூல் சிவாகமமாகிய சித்தாந்தசாத்திரமாம். லௌகிகத்தினுயர்ந்தது வைதிகம்; அதினுயர்ந்தது அத்தியான்மகம்; அதினுயர்ந்தது அதிமார்க்கம்; அதினுயர்ந்தது மாந்திரம். (௬உஅ)

பலவாஞ் சிருட்டி பகரா கமமும்
பலவிதமாய்த் தோன்றுமெனப் பார்.

இ - ள். சிருட்டி பல ஆம் - சிருட்டி பலபேதப்படுமாதலால்,—பகர் ஆகமமும் பல விதம் ஆய்த தோன்றும் எனப் பார் - சிவபெருமான் அருளிச்செய்த ஆகமங்களும பலவிதமாய்த தோன்றினவென்றறி. எ - று. (௩௩௧)

சிவாகமங்களைப் படிக்குமுறைமை மூன்று
திருக்குறளாலுணாத்துகின்றூா.

புனிததலத் திற்புனித னாகிப் படிக்க
வினிய வியலை யிருந்து.

இ - ள். இனிய இயலை - இனிமையாகிய சிவசாத்திரத்தை ஓத விரும்பினேன்—புனிதன ஆகிப் புனிததலத்தில் இருந்து படிக்க - சரீரசுததிபண்ணித திருமெழுக்கிறை சுததிசெய்த தலததிருந்து படிக்கக்கடவன். எ - று.

ஆசாரியர் கிழககுமுகமாகவாயினும வடக்குமுகமாகவாயினும் இருக்க. மாணுக்கர் அவருககெதிாமுகமாகவிருக்க. ()

அலர்சூட் டுகவாக மத்திற் குரவன்
மலரடிக்குஞ் சூட்டு மலர்.

இ - ள். ஆகமத்தில் அலர் சூட்டுக-படிக்கத்தொடங்குமுன் சைவாகமத்திருமுறையை விதிவழி செயப்பட்ட ஞானசனமாகிய சரஸ்வதிபீடததிலே பட்டுப்பரிவட்டம் விரிதது அதன் மேல் எழுந்தருளப்பண்ணிப் புஷ்பததினல் அருச்சித்து,— குரவன் மலா அடிக்கும் மலர் சூட்டு - பினபு ஆசாரியருடைய தாமரைமலர்போலும் பாதங்களிலும் பூச்சூட்டுக. எ - று.

உம்மையால், அருகே அறிவாலுயர்ந்த சேட்டாசாரியர் இருக்கின் அவரடியினும் பூசிததல்வேண்டுமென்றறிக. (௩௪௧)

படிக்கும் பொழுது பணிகுர வன்றாண்
முடிக்கும் பொழுது முயன்று.

இ - ள். படிக்கும் பொழுது - ஆசாரியரிடத்திலே நாடோறும் படிக்கத்தொடங்கும்பொழுதும்,—முடிக்கும் பொழுதும் - படித்து முடிக்கும்பொழுதும்,—குரவன் தாள் முயன்று பணிக - அவ்வாசாரியருடைய திருவடிகளை முயன்று வணங்குக. எ - று.

இங்ஙனஞ்செய்யாவழிப்படுங்குற்றம் "புத்த கத்தினைப் பூசை புரிகிலா—சித்தங் கூர்தரத தேசிகன் றன்னையு—மதத கைப்பல நீங்குவ ரன்றியுங்—கொதகை சேர்நர கக்குழி கூடுவார்" என்னுஞ் சிவதருமோத்தரச்செய்யுளாலறிக. (௲சஉ)

படிக்கலாகாத நாட்களை நான்குதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

பதினன் கிருநான்கிற் பஞ்சதசி தன்னிற்
பதிபகர்ந்த வாகமமபன் னேல்.

இ - ள். பதினன்கு - சதுர்த்தசியிலும்—இருநான்கில்-அட்டமியிலும்—பஞ்சதசிதன்னில் - அமாவாசை பௌர்ணிமைகளிலும்—பதி பகர்ந்த ஆகமம் பன்னேல் - சிவபெருமான் அருளிச்செய்த சைவாகமங்களைப் படியாதே. எ - று. (௲சங)

ஆதி திதியி லயன தியிலரவஞ்
சோதிதனைத் தீண்டினுஞ்சொல் லேல்.

இ - ள். ஆதி திதியில் - பிரதமையிலும்—அயன ஆதியில்-அயனமுதலிய காலங்களிலும்—அரவம் சோதிதனைத் தீண்டினும் - சந்திரசூரியகிரகணகாலங்களிலும்—சொல்லேல் - படியாதே. எ - று.

அயனாதியென்றதனால், விடுசங்கிரமங்களும்,ஆசாரியர் தன்னிடத்து எழுந்தருளிவந்த காலமும், உயர்ந்த சேட்டாசாரி

யர் எழுந்தருளிவந்த காலமும், பெரியோர்களுக்கு ஆபத்து வந்தகாலமும, ஒருவர் மரித்த காலமுங்கொளக. (௩௪௪)

சந்தியா காலந தனிற்சிறந்த காலத்து
மெந்தையரு ளாகமமோ தேல்.

இ - ள். சந்தியாகாலநதனில் - சந்தியாகாலஙகள் மூன்றி னும—சிறந்த காலததும் - இன்னும் நூல்களில் விதநத கால ஙகளினும்—எந்தை அருள் ஆகமம் ஓதேல் - நமது பிதா வாகிய சிவபெருமான் அருளிச்செய்த சைவாகமங்களைப் படி யாதே. எ - று.

இன்னும் நூல்களில விதநதகாலங்களாவன.—பூனை பாயபு காட்டேறுன் குறுக்கே போன காலமும, குறைகொள்ளி விழுந்தகாலமும, அக்கினி பட்ட காலமும, கொள்ளையென்ற காலமும, கள்ளரென்ற காலமும, இருவர் சணடையென்ற காலமும, ஒருவரை அடிக்குங்காலமும, படையென்ற கால மும், பரிவேடமிட்டகாலமும், பூமியதிர்ந்த காலமும, எரியு டைந்ததென்ற காலமும, ஓடமுடைந்து விழுந்ததென்ற கால மும், சிவாலயத்திறகுத தீங்கு செய்கின்றார்கள் தேசிகருக்குத தீங்கு செய்கின்றார்கள் சிவவேடத்தாருக்குத் தீங்கு செய்கின றார்களென்ற காலமுமாம. (௩௪௫)

உற்பத்தி நாசமெனு மாசௌசத் துஞ்சிவன்ற
னுற்சவ நதி னும்மியலோ தேல்.

இ - ள். உறபத்தி நாசம் எனும ஆசௌசததும் - சனனமர ணாசௌசங்களிலும்—சிவனறன் உற்சவத்தினும் - சிவபெரு மான் உற்சவநிமித்தம் புறப்பட்டருளுங் காலஙகளிலும்— இயல் ஓதேல் - சைவாகமங்களைப் படியாதே. எ - று.

மகோற்சவநாள் பத்தினுள், முதனாள்விழாத் தூலசிக்குதற் பொருட்டும், இரண்டாநாள்விழாத் தூலசூக்குமசீக்குதற்பொருட்டும், மூன்றாநாள்விழா மூவினையும் முப்புரதியும் முக்குணமும் மும்மனமும் முக்குற்றமும் முப்பிறப்பும் முப்பற்றும் நீக்குதற்பொருட்டும், நாலாநாளவிழா நாற்கரணமும் நால்வகைத தோற்றமும் நீக்குதற்பொருட்டும, ஐந்தாநாள்விழா ஐம்பொறியும் ஐந்தவதைதையும் ஐந்துமலமும் நீக்குதற்பொருட்டும், ஆறாநாள்விழாக் காமாதியாறும் கலையாதியாறும் வினைக்குணமாறும் பதமுத்தியாறும நீக்குதற்பொருட்டும், ஏழாநாள்விழா ஏழுவகைப்பிறப்பும கலாதிகளேழும மாயாமலகுணமேழும நீககுதற்பொருட்டும், எட்டாநாள்விழா எணகுணம் விளக்குதற்பொருட்டும, ஒன்பதாநாள்விழா மூன்றுருவும முததொழிலும மூன்றிடததுறைதலும இலையெனறபொருட்டும், பத்தாநாள்விழாப் பரானநதமாக்கடலில் அழுததுதற்பொருட்டுஞ செயப்படுதலால், சிவோற்சவகாலததுப் படிககலாகாதென்ருர். இவையெல்லாம விமபதந்திரத்திற் சிவோற்சவபடலத்திற்காண்க. உம்மையால், சிவவிரதகாலங்களும் சிவதீாததகாலங்களுங்கொள்க. சனனமரணசௌசமுடையானும் மூழ்காவியாதியாசௌசமுடையானும் ஒழியுமட்டும் ஓதாதொழிக.()

மற்றச்சந்தியிரண்டுமுடிக்கும் முறைமை
யுணர்த்துகின்ருர்.

அதன்பின்பு மூன்ற வதுசந்தி யாக்க
வதன்பின்பு நான்கா வதும்

இ - ள். அதன்பின்பு மூன்ருவது சந்தி ஆக்க - இப்படிச் சிவாகமங்களை ஓதியபின்பு உரிய காலத்திலே மூன்ருஞ்சந்தியைப் பண்ணுக,—அதன்பின்பு நான்காவதும் ஆக்க-ஆசாரியனயின் அதன்பின்பு நான்காஞ்சந்தியையும் பண்ணுக. எ-று.

கணபிச்சாவிதிக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.

உரைத்தாமே சாந்தா னிகபிச்சை யோர்க
வுரைப்பாங் கணபிச்சை யும்.

இ - ள். சாந்தானிகபிச்சை உரைத்தாம் - சாந்தானிகபிச்சாவிதியைச் சொன்னோம்;-கணபிச்சையும் உரைப்பாம் ஓர்க- கணபிச்சாவிதியையுஞ்சொல்வேம் அதனையறிக. எ - று.

அற்பமாக வீடுதோறும் வாங்குகையால், கணபிச்சையெனப்பட்டது. (௩௪௮)

கணபிச்சாவிதியை இருபததாறு திருக்குறளா லுணாததுகின்றா.

மூந்திய சநதி முடித்தமலன் றாளிணையுஞ்
சிந்தித்துத் தாழ்த்துச் சிரம்.

இ - ள். மூந்திய சந்தி முடித்து - சாதகர் புத்திரகா முதலாயினோா காலசந்தியை முடித்துக்கொண்டு—அமலன் தாள் இணையும் சிந்திததுச் சிரம தாழ்த்து - வறியவராயிற் சிவபெருமானுக்கு நைவேத்தியநிமித்தம் தண்டுலபிச்சை பணணப்புறப்படும்போது சிவபெருமானுடைய உபயபாதங்களையும் மனசினாலே தியானித்துத் தலையினால் வணங்கி. எ - று.

உம்மையாற் குருபாதங்களுங்கொள்க. (௩௪௯)

பாங்காகுஞ் செம்பிரும்பி னாற்பண்ணும் பாத்திரந்தா
னோங்குபலா சாதியிலை யும்.

இ - ள். செய்பு இரும்பினால் பண்ணும் பாத்திரம் பாங்கு ஆகும் - செம்பினாலேனும் இரும்பினாலேனும் செய்யப்பட்ட பாத்திரம் பிச்சை பண்ணுதற்கு உரியதாம்;—ஓங்கு பலாசு ஆதி இலையும் பாங்கு ஆகும் - அஃதன்றி வளர்ந்த பலாசு

முதலிய மரங்களாலேனும் அவற்றினிலைகளாலேனும் செய்யப்பட்ட பாத்திரமும் உரியதாம். எ - று.

ஆதியென்றதனால், மா இருப்பை கடம்பு முதலியன கொள்க. விரதத்தனாயின் மிருத்திகையினாற்பண்ணிய பாத்திரத்தை அமாவாசை பூரணைகளில் ஆறுகுளங்களிற்கொண்டுபோய் அமிழ்த்திவிட்டுப் புதுப்பாத்திரம் வாங்கிக்கொள்க. விரதத்தருக்கு மேற்கூறிய மரவிலைப்பாத்திரங்களும் சுரைப்பாத்திரமும் மாறுங்குலம் இருபத்தைந்துகொண்ட ஆடையுமாகுமென்றறிக.

ஆறிரண் டங்குல மாமகலம் பாத்திரத்துக்
காறுயிரண் டுமுயர மாம்

இ - ள். பாத்திரத்துக்கு அகலம் ஆறிரண்டு அங்குலமாம் - பிச்சாபாத்திரத்துக்கு அகலம் மாறுங்குலத்தினாலே பன்னிரண்டங்குலமாம்;—உயரம் ஆறும் இரண்டும் ஆம் - உயரமெட்டங்குலமாம். எ - று. (௩௫௧)

இன்னமுறை யாற்பயிக்கத் துக்கிசைத்த பாத்திரத்தி
னுண்ணியுளத் தத்திரத்தை யோது.

இ - ள். இன்ன முறையால் பயிக்கத்துக்கு இசைத்த பாத்திரத்தின் - இந்தப்பிரகாரம் பிச்சைபண்ணுதற்குச் செய்யப்பட்ட பாத்திரத்தைக் கழுவி அதன்பின்பே—உளத்து உன்னி - அத்திரஞ்சொலிப்பதாக மனசினாலே பாவித்து,—அத்திரத்தை ஓது - அதனைத் தொட்டு அவ்வத்திரமந்திரத்தை அபிமந்திரி. எ - று. (௩௫௨)

அதன்பி னிரீக்கண மாதிபுரிந் தாடை
யதன்வாயிற் சோகவசத் தால்.

இ - ள். அதன்பின் நிரீக்கணம் ஆதி புரிந்து - அதன்பின்பு நிரீக்கணமுதலாயின செய்து,—அதன் வாயில் கவசத்தால்

ஆடை சேர் - அப்பாத்திரத்தின் வாயிலே கவசமந்திரத்தினால் வஸ்திரத்தை இடு. எ - று. (௬௫௬)

நிரீக்கணாதி செய்யுமுறைமை இரண்டுதிருக்குறளாலுணாத்துகின்றார்.

புரிமூலத் தாலே நீரீக்கணமபு ரோக்கி
யருகமத்தி ரந்தா டனத்து.

இ - ள். மூலத்தாலே நிரீக்கணம் புரி - மூலமந்திரத்தினாலே நிரீக்கணஞ்செய்து,—புரோக்கி - அத்திரமந்திரத்தினாலே புரோக்கணம்பண்ணு;—தாடனத்து அத்திரம் அருகம - அதன்பின் செய்யப்படுந்தாடனத்துக்கும் அத்திரமந்திரமே உரித்தாம். எ - று.

இவற்றுள் நிரீக்கணம திவ்வியமுத்திரையினாலும, புரோக்கணம நிமிர்த்திய பதாகைமுத்திரையையுடைய கைத்தலத்தினாலும, தாடனம் சுட்டுவிரல் நீட்டிய கையினாலுஞ்செய்க. ()

அருகங் கவசந்தா னப்பியுக்க ணத்தென்
றுரைசெய்வர் முன்னூலோர் ந்தோர.

இ - ள். அப்பியுக்கணத்துக் கவசம அருகம் என்று உரைசெய்வா - அப்பியுக்கணத்துக்குக் கவசமந்திரமே உரியதென்று சொல்லுவர்—முன்னூல் ஓர்ந்தோர் - சைவாகமங்களை அறிந்தோர். எ - று.

அப்பியுக்கணம் கவிழ்ந்த பதாகை முத்திரையையுடைய கைத்தலத்தினாற்செய்க.

ஆதித்தன் அக்கினி சந்திரன் என்னும் மூவரும் முறையே வலக்கண்ணும் நெற்றிக்கண்ணும் இடக்கண்ணுமாவராதலால், வலக்கண்ணினாலே அதனை உலர்த்தினதாகவும், நெற்றிக்கண்

ணினாலே தகித்ததாகவும், இடக்கண்ணினாலே அமுதங்கொண்டு நனைப்பதாகவும் பாவிப்பது நிரீக்கணமாம். இங்ஙனம் நிரீக்கணஞ்செய்யப்பட்டது சுத்தியாதற்பொருட்டுத் தெளிப்பது புரோக்கணமாம். ஒருவன் கலலையடிக்கும்போது அதனிடத்துப் பொறி தோன்றுமாறுபோலச் சடமாகிய இந்தப் பதார்த்தத்தினிடத்துச் சித்துண்டாதற்பொருட்டுத் தட்டுவது தாடனமாம். அந்தப்பதார்த்தத்தினிடத்துத் தோன்றிய சித்தினது பிரகாசமானது தன்னுடைய தானத்தை விட்டு நீங்காமல் இருக்கும்பொருட்டு மூடுவது அப்பியுக்கணமாம். (௱௫௫)

தண்டினிலக்கணம் ஆறுதிருக்குறளா
லுணர்த்துகின்றார்.

வேணுப் பலாசலலால வேத்திரமுந் தண்டாக்கிக்
கோணுமறத் தன்னுயரங் கொள்.

இ - ள். வேணுப் பலாசு அல்லால் வேத்திரம் - பிராமணன் மூங்கில் பலாசு பிரம்பென்னும் இவைகளுள் ஒன்றை—கோணும் அறத் தண்டு ஆக்கி - கோணுதல் துளை முதலிய குற்றமின்றித் தண்டாக்கி—தன் உயரம கொள் - அதற்குயரந் தன்னுயரமாகக் கொளக. எ - று.

அரசன் கருங்காலித்தண்டை மார்பளவுயரமும், வைசியன் அத்தித்தண்டை அவ்வளவுயரமும், சூத்திரன் அந்தத்தண்டை நாபியளவுயரமுமாகக் கொள்க. (௱௫௬)

தேசிகரா திக்குச் சிரமே குளம்புருவ
நாசிவரை தண்டுயர நாடு.

இ - ள். தேசிகர் ஆதிக்குத் தண்டு உயரம் - ஆசாரியர் சாதகர் புத்திரகர் சமயிகள் என்னும் நால்வருக்கு உரிய தண்டுகளுக்கு உயரம்—சிரமே குளம் புருவம் நாசி வரை நாடு -

முறையே தலையும் நெற்றியும் புருவமும் நாசிநுனியுமாகிய இவற்றின் அளவினதாகக் கொள்க. எ - று. (கருஎ)

எட்டுக் கணுத்தண் டினிதேழு தீமையா
மிட்ட முறு மாறுகணு வேல்.

இ - ள். எட்டுக் கணுத் தண்டு இனிது - எட்டுக்கணுத தண்டு நன்மை தரும்;—ஏழு தீமையாம் - ஏழுகணுததணடு தீமை தரும்;—ஆறு கணுவேல இட்டம் உறும - ஆறுகணுத் தண்டு சாவசித்திகளையுந் தரும. எ - று.

மூன்றுகணுத்தண்டும் நனமை தருமென்றறிக. (கருஅ)

அடிக்கணுவிற் கீழிருநான் கங்குலங்கொ ளாறு
மடுக்குமே நான்குமூன் றுங்கு.

இ - ள். அடிக்கணுவிற் கீழ் இருநான்கு அங்குலம் கொள்- அந்தத்தண்டுக்கு அடிக்கணுவிற்கீழ் எட்டங்குலம் விட்டு நறுக்க;—ஆறும் அடுக்கும் - ஆறங்குலம் விட்டு நறுக்கினும் பொருந்தும்;—நான்கு மூனறு ஆங்கு - நான்கங்குலம் மூன்றங்குலம் விட்டு நறுக்கினும் பொருந்தும. எ - று.

எட்டங்குலமாயிற் றுணியமும், நாலங்குலமாயின் நல்லமாதரும், மூன்றங்குலமாயிற்றனமும், உண்டாமென்றறிக. ()

அடியிரட்டி யங்குல மாகு முடிக்க
ணடிக்கிருநான் கின்மிகையின் னாது.

இ - ள். முடிக்கு அடி இரட்டி அங்குலம் ஆகும் - நுனிக்கணுவின் மேலுயரம் அடியில் இருமடங்கங்குலமாயிருத்தல் வேண்டும்;—அடிக்கு இருநான்கின் மிகை இன்னாது - அடிக்கணுவின்கீழ் எட்டங்குலத்தின் மேற்படுதல் தீதாம். எ-று. ()

அங்குட்ட மன்ன பருமை யுறவதனை
யங்கையிற்றீண் டத்திரத்தி னால்.

இ - ள். அங்குட்டம் அன்ன பருமை உற - பெருவிரலுக்கொத்த பருமையுளதாகக் கொண்டு—அதனை அத்திரத்தினால் அங்கையில் தீண்டு - அந்தத்தண்டை அத்திரமந்திரத்தினாலே வலக்கையாறெட்டு ஏழுதரம் அபிமந்திரிக்க. எ - று. ()

பரிக்க வலக்கரத்திற் பாத்திரந் தண்டைத்
தரிக்க விடக்கரத்திற் றான்.

இ - ள். பாத்திரம் வலக்கரத்தில் பரிக்க - பிச்சாபாத்திரத்தை வலக்கையிலே தரிக்க;—தண்டை இடக்கரத்தில தரிக்க - தண்டை இடக்கையிலே தரிக்க. எ - று. (௩௬௨)

உன்னிச் சிவன்றா ளுளத்தெழுத் தோரைந்தும்
பன்னி மவுனம பரித்து.

இ - ள். சிவன் தாள் உன்னி - சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்து,—எழுத்து ஓரைந்தும் உளததுள் பன்னி - பஞ்சாக்ஷரத்தை மானதமாக உச்சரித்து,—மவுனம பரிதது - வேறொருவார்த்தையும் பேசாது மௌனம் பொருந்தி. எ - று. (௩௬௩)

சென்றூர்த் தெருவிற் சிறந்தா மனைதெரிந்து
முன்றிலொன்றித் தாழ்த்து முகம்.

இ - ள். ஊர்த் தெருவில் சென்று - தனதாச்சிரமத்தினின்று புறப்பட்டு ஊர்த்தெருவிலே போய்,—சிறந்தார் மனை தெரிந்து - சிறப்பினையுடைய பிராமணர் முதலிய நான்குவருணத்தார் வீடறிந்து—முன்றில் ஒன்றி முகம் தாழ்த்து - முற்றத்திற்சென்று முகத்தைத் தாழ்த்து. எ - று. (௩௬௪)

வலக்காற் பெருவிரலில் வைத்திருதன் கண்ணுந்
தலத்துறத்தண் டூன்றித் தரித்து.

இ - ள். தன் இரு கண்ணும் வலக்கால் பெருவிரலில் வைத்து - தனதிரண்டுகண்களையும் வலக்காற்பெருவிரலிலே தானே வைத்து,—தலத்து உறத் தண்டு ஊன்றித் தரித்து - பூமியிலே பொருந்தத் தண்டை ஊன்றிக்கொண்டு நின்று. எ - று. (௩௬௫)

திடகற் புளாயையந் தேகியெனச் செப்பி
யிடுமரிசி பாத்திரத்து ளேற்று.

இ - ள். திட கற்பு உளாய் ஐயம் தேகி எனச் செப்பி - திடமாகிய கற்பினையுடையவளே எனக்குப் பிச்சையிடுவாயாக என்று சொல்லி,—இடும் அரிசி பாத்திரத்துள் ஏற்று - அவள் கொண்டுவந்திடும் அரிசியை அத்திரஞ்சொலியாநிற்கும் பாத்திரத்துள் வாங்கி. எ - று. (௩௬௬)

இன்னமுறை யிற்றொறுஞ்சென் றையமிசைத் தேற்றி
தன்னதெலை தன்னைத்தான் சார்ந்து. [யங்கித்

இ - ள். இன்னமுறை இல் தொறும் சென்று - இந்தப்பிரகாரம் வீடுதோறும் போய்,—இசைத்து ஐயம் ஏற்று - முன் சொல்லியவாறே சொல்லிப் பிச்சை வாங்கி,—தன்னது எலை தன்னை இயங்கிச் சார்ந்து - தனதாச்சிரமத்தைச் சென்றடைந்து. எ - று. (௩௬௭)

பாத்திரமும் வைத்துப் பரம சிவன்பதமு
மேத்தியுளத் தெண்ணி யிருந்து.

இ - ள். பாத்திரமும் வைத்து - பாத்திரத்தையுந் தண்டையுந் தரையில் வையாது ஆதனத்தில் வைத்து,—இருந்து - கை கால்களைக் கழுவிக்கொண்டு வந்து பாத்திரத்துக்கருகே

இருந்து,—பரமசிவன் 'பதமும் உளத்து எண்ணி ஏத்தி - சிவ பெருமானுடைய திருவடிகளையும் குருவினுடைய திருவடிக ளையும் மனசிலே தியானித்துத் துதித்து. எ - று. (௩௬௮)

மத்தியானசந்திமுடிக்குமுறைமையுணர்த்துகின்றார்.

தண்புனலின் மூழ்கிச் சமைத்து நியதியினை
யெணபெருக நாமமெணி யே.

இ - ள். தண் புனலின் மூழ்கி நியதியினைச் சமைத்து - குளிர்ந்த சலத்திலே ஸ்நானம்பண்ணி மத்தியானசந்தியை முடித்து,—நாமம் எண் பெருக எணியே - பஞ்சாக்ஷரத்தில ஆயிரமுருச் செபித்து. எ - று.

மற்றைச்சந்திகளுக்கும் இவவாறே செபிக்க. (௩௬௯)

புக்கு மனையுட் சிவனுக் கெனப்போனம்
பக்குவம் பண்ணிப் பரிந்து.

இ - ள். மனையுள் புக்கு - மடைப்பள்ளியினுள்ளே புகு ந்து,—போனம் சிவனுக்கு எனப் பரிந்து பக்குவம் பண் ணி - சருவைச் சிவபெருமானுக்கென்று அன்பினுடனே சமைத்து. எ - று.

பாத்திரத்தில் அரிசியையிட்டு, வடித்தெடுத்த சலத்தை அவ வரிசிக்கு ஒன்றரைக்கூறு அப்பாத்திரத்தில் வார்த்து வார்த்து, சடங்கமந்திரங்களினால் ஆறுதரம் கழுவிக் கழுவி, சத்தியோ சாதமந்திரத்தினாற் கழுநீரை ஊற்றிவிட்டு, இருதயத்தினாற் கல் வாரி, அரிசியினிருமடங்கு சலம் பூரித்துக் கவசத்தினான் மூடி, பின்பு கோமயத்தினால் மெழுகப்பட்ட மடைப்பள்ளி யிலே தருமாதருமசொரூபமாகிய இரண்டுகைகளையுடைய அடுப்பை அரிகொண்டு இருதயத்தினால் அருச்சித்து, பின்பு அப்பாத்திரத்தை வாமதேவத்தினால் எடுத்து இருதயத்தினால்

1284(6124)

அடுப்பின்மேல் வைத்து, அகோரத்தினால் அக்கினியிட்டு, தற்புருடத்தினால் புழுக்கள் பூச்சிகள் எறும்புகள் இல்லாதனவும் பொறி பறவாதனவுமாகிய காட்டங்களிலே குழலைக் கொண்டேனும் தருப்பைப்புல்லைக்கொண்டேனும் வாயுவைக் கிளர்வித்து அக்கினியைச் சொலிப்பித்து,மயிர் உமி கன்முதலியவை கூடாமலும்,அபக்குவம் அதிபக்குவமாகாமலும், வேறுநிறமும் துர்க்கந்தமும் வாராமலும், நன்றாகச் சமைத்து, இருதயத்தினால் இறக்கி, முக்காலியில் வைத்து, பொங்கி வடிந்ததைச் சுற்று மந்திரத்தினாற் கழுவி, அன்னத்தினடுவே இருதயத்தினால் ஒரு பத்திரம் வைத்து ஈசானத்தினால் ஒருபுட்பஞ்சாத்தி, பாத்திரத்தின் கழுத்தடியிலே நான்குதிக்கினும் தற்புருடமுதலிய நான்கு மந்திரங்களினாலும் விபூதி சாத்துக. நைவேத்தியத்தில் உமி கிடந்தால் வறுமையும், கல்லுக்கிடந்தால் வியாதியும், மயிர் கிடந்தால் மரணமும் வரும். (கஎ0)

செய்துசிவ பூசை சிவனுக் கதன்பாதி
பெய்துநிவே தித்ததற்கு பின.

இ - ள். சிவபூசை செய்து - சிவபூசையைப் பண்ணி,— அதன் பாதி பெய்து சிவனுக்கு நிவேதித்ததற்குப் பின்-அவ்வன்னத்திற் பாதியை ஒருபாத்திரத்திலிட்டுச் சிவபெருமானுக்கு நிவேதித்ததற்குப் பின்பு. எ - று. (கஎக)

இயற்றியே மற்றை விதியினை யெல்லா
மயர்ச்சி மனத்தி லறுத்து

இ - ள். மற்றை விதியினை எல்லாம் - தூபதீபமுதலிய உபசாரங்களெல்லாவற்றையும்—மனத்தில் அயர்ச்சி அறுத்து இயற்றி - மனசிலே மறவியின்றிக் கொடுத்து. எ-று. (கஎஉ)

நிறைந்த வதன்பின் சமாதி நிலையி
னுறைந்துவிழித் தேகண் டலகு.

இ - ள். நிறைந்த அதன்பின் - பூசாகருமங்களெல்லாம் நிறைவேறியபின்னர்—சமாதிநிலையின் உறைந்து - சமாதிநிலையிலே பொருந்தியிருந்து,—விழித்தே உலகு கண்டு - அதன்பின் விழித்து உலகத்தைக் கண்டு. எ - று. (௩௭௩)

முன்னம் பகர்ந்த முறையி னருந்திடுக
வென்னதியா னென்கை யிழித்து

இ - ள். என்னது யான் என்கை இழித்து - எனது யானென்கின்ற சுட்டுப்போதத்தை ஞானாக்கினியினாலே வாட்டிச் சிவபெருமானே புசிப்பிக்கின்றாரென்று தெளிந்து,—முன்னம் பகர்ந்த முறையின் அருந்திடுக - நிவேதனசேடத்தை முற்கூறிய விதிப்படி புசிக்க. எ - று. (௩௭௪)

இழித்தாரே யானீ யிவனவனு மென்கை
கழித்தார் மலமமலங் கண்டு

இ - ள். யான் நீ இவன் அவனும் என்கை இழித்தாரே - இதமகிதங்கள் தம்மாலே பிறருக்குச் செய்யப்படும்வழியும் பிறராலே தமக்குச் செய்யப்படும்வழியும் நான் நீ இவன் அவன் என்று சுட்டுதலையொழித்துச் சிவபெருமானே தம்முணின்றும் அவருணின்றும் செய்கின்றாரென்று தெளிந்து அச்சிவபிரானருளையல்லது ஒன்றனையுங் கருதாராய்த் தம்மையிழந்து நின்றவரே—மலம் கழித்தார் அமலம் கண்டு - ஆணவமுதலிய மலங்களைப் போக்கி நிருமலராகிய சிவத்தைத் தரிசித்தவராவர். எ - று. (௩௭௫)

மாதுகரிபிச்சாவிதிக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.

உரைத்தாமில் லாளிகண் பிச்சை விரத்தற்
குரைப்பாமா தூகரியை யோர்.

கணபிச்சை உரைத்தாம் - கிருகத்தனுக்குரிய கணபிச்சாவிதியைச் சொனனோம்;—விரத்தற்கு மாதுகரியை உரைப்பாம் ஓர் - இனி விரத்தனுக்கு மாதுகரிபிச்சாவிதியைச் சொல்வாம் அதனையறிக. எ - று.

விரத்தர் ஒருகாலும் ஏகான்னம் புசிக்கலாகாதென்றறிக. ()

மாதுகரிபிச்சாவிதியை இருபத்தெட்டுத்
திருககுறளாலுணர்த்துகின்றார்.

முடித்திரு சந்தி முடையுடலின் கூலி
கொடுக்கு மதனைக் குறித்து.

இ - ள். இருசந்தி முடித்து - விரத்தன் காலசந்தியையும் மத்தியானசந்தியையும் முடித்து,—முடை உடலின் கூலி கொடுக்குமதனைக் குறித்து - முடைநாற்றத்தையுடைய சரீரத்துக்குச் சிவபூசை முதலிய கருமங்களைச் செய்யும்பொருட்டுக் கூலி கொடுக்க நினைந்து. எ - று. (௩எஎ)

ஆரியனைத் தான்வணங்கிப் பிச்சைக் கநுமதிபெற்
ருருயிருள் ளானடியு மார்ந்

இ - ள். ஆர் உயிர் உள்ளான் அடியும் - உயிர்க்குயிராகிய சிவபெருமானுடைய திருவடிகளையும்—ஆரியனை ஆர்ந்து வணங்கி - ஆசாரியரையும் அன்போடு வணங்கி,—பிச்சைக்கு அநுமதி பெற்று - பிச்சைக்குப் புறப்படுதற்கு அநுமதி பெற்று. எ - று. (௩எஅ)

வெண்கல மாதி விதங்கள் விரத்தனுக்
குண்கல மன்றென் றொழித்து.

இ - ள். வெண்கலம் ஆதி விதங்கள் - வெண்கலமுதலியவற்றினலே செய்யப்பட்ட பாத்திரங்கள்—விரத்தனுக்கு உண்

கலம் அன்று என்று ஒழித்து - விரத்தனுக்குப் போசனபாத்திரங்களாகாவென்று நீக்கி. எ - று.

புற்றுமட்கலம் சிலவாகமங்களில் ஆகுமென்றும், சிலவாகமங்களில் ஆகாதென்றுஞ் சொல்லப்படும். (௩எ௯)

பண்ணியுறத் தும்பிபலா சாதியிலைப் பாத்திரத்தைத்
திண்ணமுற முன்முறையுஞ் செய்து.

இ - ள். பாத்திரத்தை - பிச்சாபாத்திரத்தை—தும்பிபலாசு ஆதி இலை - சுரையிலை பலாசிலை முதலிய இலைகளினாலே— உறப் பண்ணி - முந்திய பிரமாணப்படி செய்து,—திண்ணம் உற முன் முறையும் செய்து - திண்ணம் பொருந்த முற்கூறிய முறைகளையும் பண்ணி. எ - று. (௩அ0)

பரிக்க வலக்கரத்திற் பாத்திரந் தண்டு
தரிக்க விடக்கரத்திற் றான்.

இ - ள். பாத்திரம் வலக்கரத்தில் பரிக்க - பிச்சாபாத்திரத்தை வலக்கையிலே தரிக்க;—தண்டு இடக்கரத்தில் தரிக்க - தண்டை இடக்கையிலே தரிக்க. எ - று. (௩அ௧)

முன்னம் பகர்ந்த முறையுறச்சென் றிற்றொறும்போ
யன்ன மிரக்கைதக வாம.

இ - ள். முன்னம் பகர்ந்த முறை உறச் சென்று - முன்னே சொல்லிய விதிப்படி புறப்பட்டு,—இல் தொறும் போய் அன்னம் இரக்கை தகவு ஆம் - வீடுதோறும் போய் அன்னமியாசிக்தல் தகுதியாம். எ - று. (௩அ௨)

பாகம் பணுமுன் பலிக்குச் செலேல்செல்லிற்
பாவமறு நூறுபக

இ - ள். பாகம் பணுமுன் பலிக்குச் செலேல் - மத்தியான மாவதற்கு முன்னே பிச்சைக்குப் புறப்படாதே;—செல்லின் நூறு பகரின் பாவம் அறும் - காலமறியாது புறப்படின், அகோரத்திலே நூறுருச் செபிக்கின் அக்குற்றம் போம். எ - று.

இருக்கையி லுமில்லையன மென்றான் புணியம்
பரிக்கை யதிதிக்குப் பாங்கு.

இ - ள். அன்னம் இருக்கையிலும் இல்லை என்றான் புணியம் பரிக்கை - அன்னம் பாகம்பண்ணப்பட்டிருக்கையிலும் பிச்சை இல்லை என்று சொன்னவனுடைய புண்ணியத்தைக் கவர்தல்—அதிதிக்குப் பாங்கு - பிச்சைக்கு வந்த அதிதிக்கு உரித்தாம். எ - று. (௩அச)

தனக்கென்னக் காசுதனந் தானியமுந் தீண்டான்
றனக்கன்ன மேற்கை தகும்.

இ - ள். தனக்கு என்னக் காசு தனம தானியமும் தீண்டான்றனக்கு - தனக்கென்று காசையும பணதையும் தானியத்தையுந் தீண்டாதவனுக்கே—அன்னம்ஏற்கை தகும் - இவவன்னபிச்சைபண்ணுதல் தகும். எ - று. (௩அ௫)

ஈட்டித் தனத்தையிரந் திற்றொறுஞ்சென் றுண்பானை
நாட்டிற் கிராதனென நாடு.

இ - ள். தனத்தை ஈட்டி - திரவியத்தைத் தேடியும் அதனைச் செலவழியாது வைத்துக்கொண்டு,—இல் தொறும் சென்று இரந்து உண்பானை - வீடுதோறும் போய்ப் பிச்சை வாங்கிப் புசிப்பவனை—நாட்டில் கிராதன் என நாடு - நாட்டினுள்ளிருக்கும் வேடனெனக் கருதுக. எ - று. (௩அ௬)

இரவே லதிபாத காதிய ரில்லத்
திரவே லிழிகுலத்தா ரில்.

இ - ள். அதிபாதக ஆகியர் இல்லத்து இரவேல் - அதிபாதகமுதலிய பாதகங்கள் செய்தவர்வீட்டிலே பிச்சை வாங்காதே;—இழி குலத்தார் இல் இரவேல் - இழிந்தவருணத்தார் வீட்டிலும் பிச்சை வாங்காதே. எ - று.

தீக்ஷைபெறாதார் வீட்டிலும், பெற்றுஞ் சமயாசாரம் அநுட்டியார் வீட்டிலும், இரக்கலாகாதென்க. பிறவும் "கன்னிகையை விற்பார்கள் பரதாரந் தன்னைக் காமுறுவார் மனைவி குறை கண்டிருந்துந் துறவார்—பொன்வினைசெய் கொல்லர் மரக் கொல்லாபொருட் பெண்டிர் புலைவினைஞர் மதுவிலைஞர் புரந்தாரை மறந்தார்—தென்னெனவே பாடுமவ ராடுமவா வாளாற் சேவிப்பார் பூவிற்பார் செக்கர்சொக் கிடுவா—ரென்னுமிவ ரெழுவாய ரன்னநதி யருந்தே விழுக்காய வனமுளத்தை யழுக்காக்கி யிடுமே." என்னுஞ் சிவதருமோத்தரச் செய்யுளாலறிக. (௩௮௭)

மலினவுடை யாண்மலடி கர்ப்பிணி தாதி
பலியிடிற் கொள்கை பழுது.

இ - ள். மலின உடையாள் மலடி கர்ப்பிணி தாதி பலி இடின் - அழுக்குப்புடைவையுடுத்தவளும் மலடியும் கருப்பிணியும் வெள்ளாட்டியும் பிச்சை தரின்,—கொள்கை பழுது - வாங்குதல் குற்றமாம். எ - று.

நற்குணமில்லாதவள், எண்ணெயிட்டுக்கொண்டவள், தாம்பூலந்தின்றவள், கணவனுக்கு முன்னுண்பவள், அருவருப்பானவள், உறுப்புக் குறைந்தவள், கருங்குட்டமுதலிய நோயுடையவள், விதிப்படி சௌசாதி செய்யாதவள் முதலியோர்களிடத்திலும் பிச்சை வாங்கலாகாதென்றறிக. (௩௮௮)

நீங்கிய பின்னழைக்கி னின்றேற்க சென்றேற்கை
பாங்கல்ல வென்றொழிகை பண்பு.

இ - ள். நீங்கிய பின் அழைக்கின் நின்று ஏற்க - பிச்சைக்குப் போனால் ஒரு பசுக்கறக்குநேரநிற்க, அதுகாறும் பிச்சை வாராதொழியின் மற்றைவீட்டுக்குச செல்லுக; செல்லும்போது பிச்சையிடக் கொண்டுவந்தவா அழைக்கின அவவிடத்திற்றனே நின்று வாங்குக;—சென்று ஏற்கை பாஙகு அல்ல என்று ஒழிகை பண்பு - திரும்பிப் போய் வாங்குதல் உரிமையன்றென்று விடுத்தலே தகுதி. எ - று. (௩அ௬)

உற்றுச் சிரமத்தை யூர்க்குச் சுபமுனியுட்
பொற்றுள் விளக்கிப் புகுநது.

இ - ள். ஆச்சிரமத்தை உற்று - தனதாச்சிரமத்தை அடைந்து,—ஊர்க்குச் சுபம் உனி - இந்தக்கிராமதுக்கு நன்மை உண்டாகுக என்று ஆசீர்வாதம்பண்ணி,—பொற்றுள் விளக்கி உள் புகுந்து - கால் கை கழுவி உள்ளே புகுந்து. எ - று. ()

பாத்திரமும வைத்துப் பரம சிவன்பதமு
மேத்தியுளத் தெண்ணி யிருந்து.

இ - ள். பாத்திரமும் வைத்து - பாததிரத்தையும் தணடையும் குடையையும் வைத்து,—இருந்து - அப்பாத்திரத்துக்கு அருகே இருந்துகொண்டு,—பரமசிவன் பதமும் உளத்து எண்ணி ஏத்தி - சிவபெருமானுடைய திருவடிகளையும் குருவினுடைய திருவடிகளையும் மனசிலே தியானித்துத் துதித்து. எ - று. (௩௯௧)

பாத்திரத்தி ென்னத்தி லுண்டேற் பழுதறலிற்
றேய்த்தெடுக்கச் சுத்தமுறுஞ் சோறு.

இ - ள். பாத்திரத்தில் அன்னத்தில் பழுது உண்டேல் - பிச்சாபாத்திரத்தன்னத்தில் ஈ முதலிய குற்றங்கள் உண்டாயின்,—அறலில் தோய்த்து எடுக்கச் சோறு சுத்தம் உறும் -

பாத்திரத்துடனே அன்னத்தைச் சலத்திலே தோய்த்தெடுக்கின் அது சுத்தியாகும். எ - று.

அதற்குமுன் மயிர் முதலியனவும், உள்ளி வெள்ளுள்ளி இங்கு முதலிய இட்ட கறிகளும், ஊறுகாய்களும், விலக்கிய பதார்த்தங்களும் இருந்தனவாயின் அவைகளை எடுத்துச் சலத்திற்போடுக. பிராமணருள் அதீக்ஷிதரொழிய மற்றைமூவருள் அதீக்ஷிதரும், நால்வருள்ளும் அதிபாதகமுதலிய பாதகங்களைச் செய்தவரும், பதிதரும், சமயாசாரமில்லாதவரும், பரிசித்தால், தான் தரித்த வஸ்திரத்தோடும் அன்னபாத்திரத்தோடும் முழுகிற்சுத்தியாம். சனனமரணசௌசமுடையாரும், இருதுவாயினாரும், இழிந்த வருணத்தாரும், நாய் பன்றி கோழி கழுதை முதலியனவுந்தீண்டினும், இட்டலிங்கநிர்மாலியம் பரார்த்தலிங்கநிர்மாலியம் இடப்படினும், பிறர்க்கு ஊட்டுவியாது வஸ்திரத்தோடுந் தண்டோடும் மார்பளவினதாகிய சலத்திலே வடக்கு நோக்கி நின்று முழுகி, இருந்துகொண்டு, தண்டை இடப்புறத்தில் ஊன்றி, இருகையினாலும் பெய்த பாத்திரம் மிருத்துவாயினும் இலையாயினும் அதனோடு வைக்க. பின் இடக்கையினாலே தண்டையும் பாத்திரத்தையும் ஒருங்கு பிடித்துக்கொண்டெழுந்து, கரையில் வந்து, தலை முதலியவற்றைத் துவட்டாது வடக்கு நோக்கி இருந்து சுத்தாசமனஞ்செய்து, கவிழ்ந்த முகத்தோடு தனதாச்சிரமத்தின்கண் வந்து, தலை முதலியவற்றைத் துவட்டி, உலர்ந்த வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு, வடக்கு நோக்கியிருந்து விபூதி தரித்து, அகோரத்தை ஆயிரந்தரஞ்செபித்து முடித்து, ஒருபசுக்கறக்குங்காலம் சமாதிபொருந்தி நீங்கி, பின்பு ஒருபடிசலத்தை நிவேதித்து, எஞ்சமற்குறையாமற் புசிக்க. அறியாது புசித்தாலும், புசிக்கும்போது அறிந்தாலும், மற்றதைப் புசியாது பூமியிற் புதைத்துவிட்டு, மற்றநாள் அகோரத்தை இரண்டாயிரந்தரஞ் செ

பித்து, அன்னத்துக்குள்ள பசுவின் கோசலத்தை ஒருபடிசம
ஞகப்புசிக்க. (௬௯௨)

தனக்கருக பாத்திரத்தைச் சாதித்துச் சுத்தி
யனத்தை யமைத்திடுக வாங்கு.

இ - ள். தனக்கு அருக பாத்திரத்தைச் சுத்தி சாதித்து - தனக்குத் தகுதியாகிய பாத்திரத்திலே தண்ணீர் தெளித்து மந்திரத்திஞலே சுத்திசெய்து,—அனத்தை ஆங்கு அமைத்திடுக - அன்னத்தை அதிலே படைக்க. எ - று. (௬௯௩)

ஆக்கிப் புனிதநீ ரந்நீரி ஞலவளைக்க
நாக்காலீ சான நவின்று.

இ - ள். நீர் புனிதம் ஆக்கி - முனபோலச் சலத்தை மந்திரத்திஞலே சுத்தி பண்ணி,—அந்நீரிஞல ஈசானம் நாக்கால் நவின்று வளைக்க - அச்சலத்திஞல் ஈசானமந்திரத்தை நாவிஞல் உச்சரித்துக்கொண்டு அன்னபாத்திரத்தைச சூழ வளைக்க. எ - று. (௬௯௪)

அத்திரத்தி ஞலே புரோக்கிக்க வன்னத்தைச்
சுத்திசெய்க முன்முறையுஞ் சூழ்ந்து.

இ - ள். அத்திரத்திஞலே அன்னத்தைப் புரோக்கிக்க - பெருவிரலணிவிரல்களிஞலே அச்சலத்தைக்கொண்டு அத்திரத்தை உச்சரித்து அன்னத்தைப்புரோக்ஷித்து,—முன் முறையும் சூழ்ந்து சுத்தி செய்க - முற்கூறிய விதியை அறிந்து சுத்தி பண்ணுக. எ - று. (௬௯௫)

இருகூறு செய்க விருகூற்றின் முந்து
மொருகூறு தன்னை யுகந்து.

இ - ள். இருகூறு செய்க - அவ்வன்னத்தை இரண்டுகூறு பண்ணுக;—இருகூற்றில் முந்தும் ஒருகூறுதன்னை உகந்து-அவ்விருகூற்றினுள்ளும் முந்திய ஒருகூற்றை மனமகிழ்ந்து.எ-று.

நின்மலன றன்னை நினைந்து நிவேதிக்க
வன்னியத்தை யாரியனுக் காக்கு.

இ - ள். நின்மலன்றன்னை நினைந்து நிவேதிக்க - நிருமலராகிய சிவபெருமானைக்குறித்து நிவேதனம பண்ணுக;—அன்னியத்தை ஆரியனுக்கு ஆக்கு - மற்றைக்கூற்றை ஆசாரியனுக்கு நிவேதனம் பண்ணுக. எ - று. (௬௬எ)

உள்ளங்கை தன்னி லுழுந்தமிழ்ந்து நீர்வார்த்தே
யுள்ளேகொ டற்புருட மோர்ந்து.

இ - ள். உள்ளஙகை தன்னில உழுந்து அமிழ்ந்து நீர் வார்த்தே - உள்ளஙகையில உமிழ்ந்தமிழ்ந்தத் தக்சலததை வார்த்து,—தற்புருடம் ஓர்ந்து உள்ளே கொள் - தற்புருடத்தை உச்சரித்து உட்கொள்க. எ - று. (௬௬அ)

குன்றாதே யேறாதே கொள்ளுள்ளே கொள்ளும்போ
தொன்றாதே லோசை யொழுங்கு.

இ - ள். குன்றாதே ஏறாதே உள்ளே கொள் - உழுந்தமிழ்ந்து நீரிலே குறையாமலும் கூடாமலும் உட்கொள்க;—கொள்ளும்போது ஓசை ஒன்றாதேல் ஒழுங்கு - உட்கொள்ளும் போது ஓசை உண்டாகாமையே முறைமையாம். எ - று.

கூறிய பிரமாணத்திற் குறையவாயினும் கூடவாயினும் உட்கொள்ளின், அந்நீர் கள்ளுக்கொக்குமென்க. (௬௬௯)

அருந்துக வந்த விருகூறும் பின்னு
மருந்துகநீர் முன்முறையா லாய்ந்து.

இ - ள். அந்த இருகூறும் அருந்துக - சிவபெருமானுக்கும் ஆசாரியருக்கும் நிவேதித்த அவ்விருகூற்றையும் புசிக்க;— பின்னும் நீர் முன் முறையால் ஆய்ந்து அருந்துக - பின்பும் சலத்தை ஒருவா வாக்கத் தற்புருடமந்திரத்தை உச்சரித்துப் பருகுக. எ - று. (௪௦௦)

முன்னம் பகர்ந்த முறையின் முடித்திடுக
வன்னிய மெல்லா மறிந்து.

இ - ள். அன்னியம் எல்லாம் - மற்றைக்கருமங்களெல்லா வற்றையும்—முன்னம் பகர்ந்த முறையின் அறிந்து முடித்திடுக - முற்கூறியவிதிப்படி அறிந்து முடிக்க. எ - று. (௪௦௧)

அறவெறுத்தா னாக்கையன் னங்கையேற் றுண்க
வுறவும் பகையு மொழித்து.

இ - ள். உறவும் பகையும் ஒழித்து ஆக்கை அற வெறுத்தான் - உறவையும் பகையையும் விட்டுச் சரீரத்தைச் சிறைச் சாலையாகக் கருதி மிக வெறுத்தவன்—அன்னம் அங்கை ஏற்று உண்க - இரண்டாஞ்சந்தி முடித்துச் சமாதிநிலையினீங்கியவு டனே குருவைத் தியானித்து அநுமதி பெற்றுக்கொண்டு நாபிகுண்டத்தில் அக்கினியைப் பஞ்சாக்கரத்தாற் சொலிப்பி த்து ஆகுதிநிமித்தம் வீடுதோறுஞ்சென்று வலக்கையே பாத்தி ரமாக அன்னம் வாங்கி வேண்டுமட்டும் புசிக்க. எ - று.

இருகையுங்கூட்டி வாங்குதலும் கையோடு கை தட்டலுமாகிய இவையிரண்டும் வைதிகருக்கும் வீரசைவருக்கும் சமணருக்குமாகும்; சைவருக்காகாவென்றறிக. விரதத்தன் பிச்சை கொண்டவிடத்தில் விழுந்த சேடமெடுத்து உண்பவருக்கு வினை கெடுமென்று ஆகமங்கூறுமெனக. (௪௦௨)

சடையாற்கை யேற்றுணலாற் சாம்பராற் றூவி
னுடையாலுந் தீரா துடல்.

இ - ள். சடையால் - சடையினாலும்,—கை ஏற்று உண லால் - கையேற்றுண்டலினாலும்,—சாம்பரால - சாமபரினு லும்,—தோலின உடையாலும - தோலுடையினாலும்— உடல திராது - பிறவி நீஙகாது. எ - று. (௪௦௩)

உறவுபகை யாசைவெறுப புள்ளச் சழக்கு
மறினே பிறவி யறும.

இ - ள். உறவு பகை - உறவும பகையும்—ஆசை வெறு ப்பு - விருப்பும் வெறுப்பும்—உள்ளச் சழக்கும அறின - மற றுள்ள மனக்குறறஙகளும் நீங்கின்—பிறவி அறும - பிறவி நீங்கும். எ - று. (௪௦௪)

அயாசிதபிச்சாவிதிக்குத் தோற்றுவாய செய்கினறார.

உரைத்தாமே மாதுா கரியை யுணாக
வுரைப்பா மயாசிதமு மோா.

இ - ள். மாதுாகரியை உரைத்தாமே உணர்க - மாதுாகரிபிச் சாவிதியைச் சொன்னாம அதனையறிக;— அயாசிதமும் உரை ப்பாம் ஓர் - இனி அயாசிதபிசசாவிதியையுஞ் சொல்வாம் அதனையறி. எ - று. (௪௦௫)

அயாசிதபிச்சாவிதியைப் பதிெனாரு திருக்குறளா

லுணர்த்துகின்றார.

பிணிக்கும பணிக்கும் பிறர்செய்யுஞ் சேதந்
தனக்கு முயனறோமோ தான்.

இ - ள். பிணிக்கும் - வியாதிக்கும்—பனிக்கும்-பனிக்கும்— பிறர் செய்யும் சேதந்தனக்கும் - பிறராலே செய்யப்படுங்கே ட்டுக்கும்—முயன்றோமோ - ஆசைப்பட்டு முயற்சிசெய்தோ மோ இல்லையே. எ - று. (௪௦௬)

இருவினைக்கு மீச னியைந்த பலத்தைத்
தருவ னொருவினைக்கோ தான்.

இ - ள். ஈசன் - சிவபெருமான்—ஒருவினைக்கோ - ஒருவினைக்குரிய பலத்தைமாத்திரமோ—இருவினைக்கும் இயைந்த பலத்தைத் தருவன் - நல்வினை தீவினையென்னும் இருவினைகளுக்கும் பொருந்திய சுகதுக்கமென்னும் இருபலங்களையுங் கொடுப்பார். எ - று. (ச0எ)

உண்டோ வதீதத் துணர்வுதிக்கை யாமுளத்திற
கொண்ட குறிப் பின்றி விளங் கும்.

இ - ள். அதீதத்து உணர்வு உதிக்கை உண்டோ - கருத்தா வேண்டுவதில்லை ஆன்மாத் தானே செய்த கன்மத்தை அறிந்து புசிப்பானெனின் நாம் சுக்குமதேகத்தைப் பொருந்திய அதீதாவத்தையிலே நமக்கு அறிவுதித்தலுண்டோ இல்லையே;—யாம் உளத்தில் கொண்ட குறிப்பு இன்றி விளங்கும் - அது கருவி குறைதலின்றேலென்னின் கருவி கரணாதிகளோடு கூடிய சாக்கிராவத்தையிலே நாம் காலையில் எழுந்து ஊருக்குப் போதல்வேண்டுமென்று மனசிலே நினைத்துக்கொண்டு நித்திரை செய்தபோது விடிந்திரண்டுநாழிகை சென்றும் எழாதிருப்பதென்னை, ஆதலால் ஆன்மாவுக்குக் கருவிகரணாதிகளைக் கூட்டிக் காரியப்படுத்தும் ஒருகருத்தா உண்டு. எ - று. (ச0அ)

அகாரணத் தாலே விளங்கா ததனுக்
ககாரணனே கன்கா ரணன்.

இ - ள். அகாரணத்தாலே விளங்காது-ஆன்மாவுக்கு அறிவு யாதொருகாரணமின்றித் தானே விளங்கமாட்டாது;—அதனுக்கு அகாரணன் ஏகன் காரணன் - அதற்குத் தமக்குக் காரணமில்லாதவரும் ஒருவருமாகிய சிவபெருமானே காரணர். எ - று. (ச0கூ)

உதிப்பித் தவனே யுணவை நிறுத்தும்
விதிக்கிசைய வென்றாக்கம விட்டு.

இ - ள். உதிப்பித்தவனே விதிக்கு இசைய உணவை நிறுத்தும் என்று - சிருட்டித்த சிவபெருமானே அவரவர் கருமத்துக்கீடாகச் சுகதுக்க பலங்களைக் கொடுப்பரென்று துணிந்து—ஆக்கம விட்டு - ஆன்மபோதத்தாலுண்டாகும் உற்சாகத்துவாரிகம். எ - று.

"நீயே படைத்தவுடனீ காப்பை யாரென்ன—நாயேனுக் கென் பொறுப்பு நாயகனே - யாயுரைச—சீர்கேட்குஞ் சோணகிரிச் சீமானே வைத்தவனே—நீர்கேட்கு மோமரங்க ணின்று." எனப் பிறருங் கூறுதல் காண்க. (௪௧௦)

இருப்ப ரிரவுபக லற்ற விடத்தி
னொருப்பட் டமலத் துடன்.

இ - ள். இரவு பகல் அற்ற இடத்தில - கேவலமுஞ் சகலமுமில்லாத சுத்தாவத்தையிலே—அமலத்துடன் ஒருப்பட்டு இருப்பர் - நிருமலமாகிய சிவத்தோடும் இரண்டறக் கலந்திருப்பர். எ - று. (௪௧௧)

இருவினையான் மூவிதத் தின்போ டுன்பந்
தருமமல னென்றார் தமை.

இ - ள். அமலன் - சிவபெருமான்—இருவினையால் - நல்வினை தீவினைகளுக்கீடாக—மூவிதத்து-ஆத்தியான்மிகம் ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் என்னும் மூவிதத்தானும்—இன்போடுன்பும் தரும் என்றார்தமை - சுகதுக்கங்களைக் கொடுப்பாரென்று தெளிந்த பெரியோர்களை. எ - று.

தன்னாலும் பிறவான்மாக்களாலும் வருவது ஆத்தியான்மிகம். தேவர்களால் வருவது ஆதிதைவிகம். பிருதிவி முத

விய பஞ்சபூதங்களால் வருவது ஆதிபௌதிகம். இவற்றை முறையே "தன்னாற் பிறராற் றனக்குவருந் தீங்குமல-பின்றோ விலங்கரவந் தேளொறுப்பு - சென்முதனீ—மட்டையல வன் முதலே மீனரவ மாதியினுங்—கட்டமுமிங் கானமிகவே காள். கருவிற் றுயரசெனிக்குங் காலை துயர்மெய்—திரைநரைமூப் பிறநிலைதுப் செத்து - நரகதி—றுழூந் துயரடியிலை யாளி னப மாதியெலா—முழுதவு தைவிகமென் றோர். பனியா லிடியாற் படர்வா டையினுந்—துனிதென் றலினுஞ் சகமுந் தனையனைய—நீரினுமினமின னலுநெருப்பி னுந்துயரின— போரிற் பவுதிகமா கும்." எனனுஞ் செய்யுள்களாலறிக. ()

ஊட்டுவிப்பான் மற்றை யொருவரா லுள்ளபயன்
காட்டுமம லனபலங்கள் கண்டு.

இ - ள். அமலன - சிவபெருமான்—பலங்கள் கண்டு-அவ ர்களுக்குரிய பலங்களை அறிந்து—மற்றை ஒருவரால் ஊட்டு விப்பான் - வேறொருவரைக்கொண்டு நுகருதிகமினறிப் புசிப் பிப்பர்;—உள்ள பயண காட்டும் - தேகாந்தத்தில் அவர்களுக் குரிய முத்தியையுங்கொடுப்பா. எ - று. (௪௪௧)

அவனே யினாதா மருத்த வருநதி
யவனு யிருப்பரவ ராங்கு

இ - ள். அவர் - அந்தப்பெரியோர்கள்—ஆங்கு அவன் ஏவி னர்தாம் அருத்த அருநதி - முற்கூறியபடி அசசிவபெருமானு லே பிரேரிக்கப்பட்டவர்கள் புசிப்பிக்கப் பொருணசையில் லாது அவர்கள்பயன கருதிச் சிவோகம்பாவனையினுலே புசி த்து,—அவனுய் இருப்பர் - அச்சிவனேயாய் நிற்பர்கள். எ-று.

ஆன்மா யாதனை யாதனைப் பற்றினன் அதனதன் சுபாவ மே தன்சுபாவமாந்தன்மையுடைமையால் அதுவதுவாயே நிற்பன்; ஆதலால் அசுத்தப்பொருளாகிய பாசத்தோடு ஒற்று

மைப்பட்டு நிற்கும்போது பசுவேயாய் நின்ற ஆன்மாச் சுத்த ப்பொருளாகிய சிவனேடு ஒற்றுமைப்பட்டு நிற்கும்போது சிவன்குணங்களாகிய எண்குணங்களும் தன்றன்மையாகக் கொண்டு சிவனேயாய் நிற்பன். இதுவே சிவத்துவத்தைப் பெறுதலெனப்படும். (௪௧௪)

என்ன குறையுடையா ரியானெனதென் னுஞ்செருக்கற்
றன்னியமற் றூரமலத் தார்ந்து.

இ - ள். யான் எனது என்னும் செருக்கு அற்று - அகங்கார மமகாரங்களை நீங்கி—அமலத்து ஆர்ந்து அனனியம் அற்றூ - சிவதத்தோடு கலந்து வேறற்ற ஞானிகள்—என்ன குறை உடையார் - யாதுகுறையுடையாகள். எ - று. (௪௧௫)

உண்ணுமுயி ரோதனத்தையூட்டுவிப்பானேசிவனென்
றெண்ணுமவர்க் கிலலைவினை யீங்கு.

இ - ள். உயிர் ஒதனத்தை உண்ணும் - ஆன்மா அன்னதைப் புசிக்கும்—சிவனே ஊட்டுவிப்பான் என்று எண்ணுமவர்க்கு - சிவபெருமானே அதனை ஊட்டுவிப்பாரென்று தெளிந்த பெரியோர்களுக்கு—ஈங்கு வினை இல்லை - ஆகாமியம் ஏறுவதில்லை. எ - று. (௪௧௬)

சற்பாத்திர அசற்பாத்திரங்களினிலக்கணமும் தாதா
அதாதாக்களினிலக்கணமும் உணர்த்தத்
தோற்றுவாய் செய்கின்றூர்.

தரிக்கவினிப் பாத்திரா பாத்திரந்தா தாவோ
டுரைப்பா மதாதாவை யும்.

இ - ள். இனிப் பாத்திர அபாத்திரம் - இனிச் சற்பாத்திரம் அசற்பாதஇரங்களின் இலக்கணத்தையும்—தாதாவோடு

அதாதாவையும் - தாதா அதாதாக்களின் இலக்கணத்தையும் உரைப்பாம் - சொல்வாம்;—தரிக்க - அவைகளை உள்ளத்த மைக்க. எ - று. (௪௧௭)

நிறுத்தமுறையானே சற்பாத்திரலக்கணம் மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்.

ஈவான் றனக்கிரங்கி யேற்குமவன் பாத்திரமே
காய்வா னவனே கரிசு.

இ - ள். ஈவான்றனக்கு இரங்கி ஏற்குமவனே பாத்திரம் - ஒருபொருளைத் தன்பயன் கருதாது அதனைத் தருபவனமேலிரங்கி வாங்குபவனே சற்பாத்திரம்;—அவனே கரிசு காய்வான் - அவனே குற்றத்தைப் போக்குபவன். எ - று.(௪௧௮)

பாத்திரமே யுச்சிப் பகலணையிற் பாவியரும்
பாரபபாரோ பத்தா பழுது.

இ - ள். பாவியரும் உச்சிப்பகல் அணையின் பாத்திரமே - பாவிகளும் மத்தியானகாலத்திலே பசித்து வந்தார்களாயிற் பாத்திரமேயாவா;—பத்தா பழுது பார்ப்பாரோ—அந்நேரத்திலே சிவபத்தர்கள் அவர்கள்குற்றத்தைப் பார்த்துத் தள்ளிவிடார்கள். எ - று. (௪௧௯)

பங்கு குருடர்பிணிப் பட்டாரும் பாத்திரமே
தங்கினிரக் கந்தாதா வுக்கு.

இ - ள். தாதாவுக்கு இரக்கம் தங்கின்—தாதாவுக்கு இரக்கமுண்டாயின்,—பங்கு குருடர் பிணிப்பட்டாரும் பாத்திரமே - முடவருங் குருடரும் வியாதியாளரும் பாத்திரமேயாவர். எ - று.

உம்மையால் மிடியர் முதலாயினருமெனவறிக. (௪௨௦)

அசற்பாத்திரலக்கணமுணர்த்துகின்றார்.

தன்னைக் குறித்திரப்பான் றன்னை யபாத்திரமென்
றுன்னிடுவா கற்றோ ருளந்து.

இ - ள். தன்னைக் குறித்து இரப்பானறனனை அபாத்திரம் என்று - தனபயனைக் குறித்திரப்பவனை அசறபாததிரமென்று—கற்றோா உளதது உனனிடுவா - நூல்களைக் கறறோர் மனசிலே நினைபபா. எ - று. (சஉக)

தாதாவிலக்கணமுணர்த்துகின்றார்.

இரக்கத்தா லாதரவா லேதேனு மீயும்
வரத்தினன் றாதாவா வான்.

இ - ள். இரக்கததால் ஆதரவால் ஏதேனும் ஈயும் வரததினன - தன்னிடதது யாசிதத மிடியனிடத்திலே கிருபையினாலும சிரததையினாலும தனக்கியன்றதொனறை வரையாது கொடுக்குஞ் சிறப்பினையுடையவனே—தாதா ஆவான் - தாதாவென்று சொல்லப்படுவோன். எ - று. (சஉஉ)

அதாதாவினிலக்கணம் ஐந்துதிருக்குறளா

லுணாத்துகின்றா.

அன்பு மருளுமற னீவான்றா தாவலனவ்
வன்பன்கை வாங்கிட லுய் வார்.

இ - ள். அன்பும் அருளும் அற ஈவான் தாதா அலன் - கிருபையும் சிரததையுமின்றிக்கொடுப்பவன் தாதாவலன்;—உய்வார் அவ்வன்பன் கை வாங்கிடல் - பரகதியடையக்கருதுவோர் அவவனனெஞ்சன்கையிலேவாங்காதொழிக. எ - று.

இரக்கபற னீவா னவன்கையேற் றுனு
மிருப்பர் நிரயத் தினைத்து.

இ - ள். இரக்கம் அறாவான் - இரக்கமின்றிக் கொடுக்கும் அதாதாவும்—அவன் கை ஏற்ருனும் - அவன்கையில் வாங்கிய அபாததிரனும்—நிரயத்து இளைததது இருப்பர் - நரகத்திலே கிடந்து வருந்துவாாகள். எ - று. (௲உ௪)

அஞ்சு மவனு மதிதியரைக் கணடன்னம
வஞசகனுந் தாதா வலர்.

இ - ள். அதிதியரைக் கணடு அஞ்சுமவனும் - அதிதிகளைக்கண்டவுடனே யாதாயினுங்கேட்பாரென்று அஞசுவோனும்—அன்னம் வஞ்சகனும்—வீட்டில் அன்னமிருக்கும்போது கொடாது வஞ்சிப்பவனும்—தாதா அலா - அதாதாக்கள். எ - று.

இரையருந்துங் காலத் தினங்கூட்டுங் காக்கை
கரவாது காணுராா காண்.

இ - ள். காக்கை இரை அருந்தும் காலத்துக கரவாது இனம் கூட்டும்-அறிவில்லாத காகமும் தான் இரை புசிக்கும் போது வஞ்சியாது தன்னினங்களைக் கூட்டிப் புசிக்கும்;—காணுர் ஆர் காண் - இதனைக் காணுதவர் யாவர். எ - று. ()

பறவையினுக் குள்ள பரிவுமிலார் கற்று
மறிவற்ரு ரற்ரு ரறம்.

இ - ள். பறவையினுக்கு உள்ள பரிவும் இலார் - பறவையிடத்துள்ள இரக்கமுமில்லாதவர்—கற்றும் அறிவு அற்ருர் - நூல்களைக் கற்றும் அறிவில்லாதவர்;—அறம் அற்ருர் - தருமமில்லாதவர். எ - று. (௪உ௭)

அறிவின்பயன்கள் இவையென்பதுணர்த்துகின்ருர்.

அன்பு மருளு மறிவுக் கடையாள
மென்பருணர்ந் தோர்சிவன்வாக் கீண்டு.

இ - ள். ஈண்டு - இவ்வுலகத்திலே—சிவன் வாக்கு உணர்ந்தோர் - சிவாகமத்தைப் படித்தறிந்தோர்—அறிவுக்கு அன்பும் அருளும் அடையாளம் என்பர் - அறிவுண்மைக்கு இரக்கமுங் கிருபையும் அடையாளமென்று சொல்வர். எ - று. (௪உ௮)

சிவலிங்கவிலக்கணமுணர்த்தத் தோற்றுவாய் செய்கின்றார்.

இசைப்பா மினிச்சிவ லிங்க விதமும்
பசிப்பாழி மூலமறுப பார்.

இ - ள். பசிப்பாழி மூலம் அறுப்பார் - யாவருஞ் சரீரத்துக்கு மூலமாகிய வினையை நீக்கும்பொருட்டு—இனிச் சிவலிங்கவிதமும் இசைப்பாம் - இனிச் சிவலிங்கவிலக்கணத்தையுஞ் சொல்வாம். எ - று. பாழி - குழி. (௪உ௯)

சிவலிங்கவிதமுணர்த்துகின்றார்.

பரார்த்தமென விட்டலிங்க மெனவிரு பாங்காம
பரார்த்தவித மீரிரண்டாம பார

இ - ள். சிவலிங்கமானது—பரார்த்தம் என இட்டலிங்கம் என்ன இருபாங்காம - பரார்த்தலிங்கமெனவும் இட்டலிங்கமெனவும் இருவிதப்படும்;—பரார்த்தவிதம் ஈரிரண்டாம் பார்- அவற்றுட் பரார்த்தலிங்கபேதம் நான்காமென்றறி. எ - று. ()

இட்டலிங்கவிலக்கணம மேலுணர்த்தப்பட்டமையால்
அதனையொழித்துப் பரார்த்தலிங்கவிலக்கண
முணர்த்தததொடஙகி அவற்றின் பெயாக
ளுணர்த்துகின்றார்.

சயம்புவுந் தைவிகமு மாரிடமு மாந்தர்
நயந்தலிங்கந் தானுமென நான்கு.

இ - ள். பரார்த்தலிங்கமானது—சயம்புவும் - சுவாயம்புவலி ங்கமும்—தைவிகமும் - தைவிகலிங்கமும்—ஆரிடமும் - ஆரி டலிங்கமும்—மாந்தா நயந்த விகுகத்தானும் என நான்கு - மானுடலிங்கமுமென நான்குபேதப்படும். எ - று.

குருக்கேத்திரமுதலிய புண்ணியஸ்தலங்களிலே தானே தோன்றுவது சயம்பு. தேவர்களாற்ருபிக்கப்பட்டது தைவி கம். இருடிகளாற்ருபிக்கப்பட்டது ஆரிடம். அசுரர் இயக்கர் சித்தர் முதலாயினோராற்ருபிக்கப்பட்டதும் அது. மானுடராற் ருபிக்கப்பட்டது மானுடம்.

காணலிங்கமொன்று கூட்டிப் பரார்த்தலிங்கம் ஐவகைப்ப டுமெனக் கூறலுமொன்று. அது "மனிதர்தா பித்த லிங்க மாதவர் வானோ மற்றைப்—புனிதராங் கணங்கள் பூசை புரி ந்திடு மிலிங்கமொன்றும—பனுமிவை நானகுந் தானே படி தனி லுதித்த லிங்க-மெனுமிந் நோடு மைந்தும பரார்த்தமெ ன்றெணுக வென்றும." என்னுஞ் செய்யுளாலறிக. (சங்க)

அவவிலிங்கநிலையுணர்த்துகின்ருர்.

சயன மிருக்கை நிலைசரிக்கை காண
மயசயம்பு மானுடநதை வம்.

இ - ள். காணம் மய சயம்பு மானுடம் தைவம் - காணலிங் கமும் அழகிய சயம்புலிங்கமும்மானுடலிங்கமும் தைவிகலிங் கமும்—சயனம் இருக்கை நிலை சரிக்கை - முறையே சயனிக் குமிலிங்கமும் இருக்குமிலிங்கமும் நிற்குமிலிங்கமும் நடக்குமி லிங்கமுமாம். எ - று.

சுயம்புலிங்கம் சலாசிரயமெனவும் பருவதாசிரயமெனவும் இருவிதப்படும். அது பதாகைவடிவினதாயும் சருச்சரைவடி வினதாயும் உருத்திராக்ஷவடிவினதாயும் தேன் நெய்யென்ப

வற்றின் கந்தங்களிலொன்றைப் பொருந்திப் பாதாளமுதற பருவதாகிருதியாயிருக்கும். தைவிகலிங்கம் தீபாகாரமாய் மேடு பள்ளமுடையதாய் நானாவிதமாகிய கோடரத்தோடும் டங்கத்தோடும் சூலத்தோடுங்கூடினதாய் இரணடுகைகளையுங் கூப்பினது போல்வதாய்த் திருமுகத்திலே நெல்லுப்பிரமாண முயர்ந்து நீண்டு தாரையாயிருக்கும். காணலிங்கம் வெள்ளரிக்காய் பூசினிக்காய் பனம்பழம் விளாம்பழம் மாதுளம்பழம் போன்றிருக்கும். ஆரிடலிங்கம் மூலந்தூலமாயேனும் நுனியும் நடுவுந் தூலமாயேனும் பலாக்காய் சுரைக்காய் வழுதுணங்காய் வில்வக்காய் தேங்காய் வாழைப்பழம் போன்று பிரமசூத்திரமின்றியிருக்கும். மானுடலிங்கம கர்ப்பக்கிருகத்துவாரமானத்தாலேனும் சர்ப்பக்கிருகமானததாலேனும் சிரோவாத்தனத்தோடும் பிரமாதிமூன்றுபாகத்தோடும் பிரமசூத்திரத்தோடுஞ் செயப்படுவதாம. அது சமகண்டமுதலிய பேதத்தாற் ரூண்ணூற்றூறு பேதப்படும். (சுங உ)

சிவலிங்கங்கள்பூசிக்கப்படும்போது இருக்கு முறைமையுணாத்துகின்றூர்.

இருக்குஞ் சயன மியக்க நிலையு
மருச்சனைசெய் யும்போதன் பால்.

இ - ள். அன்பால் அருச்சனை செய்யும்போது - அனபினுலே பூசைபணணும்போது— சயனம இயக்கம் நிலையும இருக்கும் - சயனிப்பதும் நடப்பதும் நிற்பதுமாகிய இலிஙகங்களைத்தும் சுகாசனமாக இருந்தே அப்பூசையைக் கைக்கொள்ளும். எ - று. (சுஙங)

விக்கிரகங்களும் இங்ஙனமென்பதுணர்த்துகின்றூர்.

இருப்பர் மகேசரிரு பத்தைவ ருள்ளு
மருச்சனைசெய் யும்போதன் பால்.

இ - ள். அன்பால் அருச்சனை செய்யும்போது - அன்பினாலே பூசைபண்ணும்போது—மகேசர் இருபத்தைவருள்ளும் இருப்பர் - மகேசுரபேதமாகிய இருபத்தைந்து விக்கிரகங்களுள்ளும நிற்பனவும நடப்பனவுமாகிய அனைத்தும் சுகாசனமாக இருந்தே அப்பூசையைக் கைக்கொள்ளும். எ - று.

சயனம் திருமாலுக்கே உசிதமென்க. இருபத்தைந்து விக்கிரகங்களை, "மதியணி யுஞ்சடை யாருமை கேள்வர் மழுவிடையார்—சதியி னடபதி வாகலி யாணா நலையினும்பாகதிமதற் செற்றவர் காலற்குங் கால ரெயிலெரித்தார்—துதியிற் சலந்தர ளுரை வதைத்த சுரந்திரரே. அத்தி யுரித்தவர் வேள்வி யழித்தவா மாலரதனா—சத்தியொா பாகா கிராதா கங காளாசண் டேசருக்குச—சித்தி யளித்தவ ராலால முண்டவர் செம்பொறியான்—பத்தியி னுக்கொரு சக்கர மீந்த பரம்பரனே. கரிமுக னுர்க்கருள் செய்தார்சோ மாக்கந்தர் காலொன்றுளா—ருரிய சுகாதனா ளுமேப தேச ரிலிங்கத் துற்று—ரிருபதி னைந்து விக்கிர கங்களென் னும்மிவா தாந்—தெரிவுறக் கொண்டமைத் தாமாள வந்த செயலிதுவே." என்னுஞ் செய்யுள்களாலறிக. (சாடு௯)

## பரார்த்தலிங்கபூசைக்கு அதிகாரிகளை யுணர்த்துகின்றார்.

சிவன்முகத்தி லேசெனித்த விப்பிரசைவ
ரிவரே யருச்சனைக்கென றெண்.

இ - ள். சிவன முகத்திலே செனித்த விப்பிரசைவர் இவரே - சிருட்டிகாலத்திலே அநாதிசைவராகிய சதாசிவமூர்த்தியுடைய சத்தியோசாதம் வாமதேவம் அகோரம் தற்புருடம் ஈசானம் என்னும் பஞ்சவத்திரத்தினின்றும் தோன்றிய கௌசிகா காசியபர் பாரத்துவாசர் கௌதமர் அகத்தியரென்னும்

பஞ்சருஷிகோத்திரத்திலே சனித்த சிவப்பிராமணர்களாகிய ஆதிசைவர்களே—அருச்சனைக்கு என்று எண் - பரார்த்தபூசைக்கு அதிகாரிகளென்றறி. எ - று.

அநாதிசைவர், ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர், அந்தியசைவரெனச் சைவர் எழுவகையர். மகாசைவராவார் பிரமாமுகத்திற்றோன்றிய வைதிகப்பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றவர். அநுசைவராவார் சிவதீக்ஷை பெற்ற க்ஷத்திரியரும் வைசியரும், அவாந்தரசைவராவார் சிவதீக்ஷை பெற்ற சூத்திரர். பிரவரசைவராவார் சிவதீக்ஷை பெற்ற அநுலோமர். அந்தியசைவராவார் சிவதீக்ஷை பெற்ற மற்றையோர். அது "அரியசதா சிவனெனப்போ னநாதிசைவ னவன்பா லவதரித்த சிவமறையோ ராதிசைவ ரிவர்பார்—உரியசிவ தீக்கைபெற்ற பூசுரர்மா சைவ ருயர்ந்த வரசன்வணிக னநுசைவராவார்—பெரியகுவ லப்புயத்தோ னவாந்தரசை வனசீர் பெறுசவன்ன னுதியநு லோமர்பிர வரராம—விரியவனி மிசையொழிந்தோ ரந்தியசை வத்தோரா விரிந்திடுமேழ் சைவவித மிவையெனநூல் விளம்பும்." என்னுஞ் செய்யுளாலறிக.

ஆதிசைவருள்ளும் சமயதீக்ஷை விசேஷதீக்ஷை நிருவாணதீக்ஷை ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றவரே பரார்த்தலிங்கத்தைத் தீண்டற்கு அதிகாரிகளாவர். இவைபெறாதவர் தீண்டின், உலகத்துக்கும் அரசனுக்குங் கேடு விளையும். அது "தரித்தபி டேகமந்தஞ் சுசியினுற சுத்தசைவ—ரருச்சனை புரிக வொன்று மன்பினாற் பரார்த்த லிங்கந்—தரித்திடா னபிடே காந்தந் தாவர லிங்கந் தீண்டிற்—பரித்திடா வளத்தைப் பாரும் பார்த்திவற் காகும் பாவம். ஆதலால் வேந்த னாராய்ந் தடைவுற வபிடே காந்த—மோதுநூன் முறையினுள்ள வுத்தம னாலே யென்றும்—போதகபுனிதன் றன்னைப்

பூசனை புரிவித் தானே—லாதிதன் சிவலோ கத்தி னமாவன்
பூசகனு மாங்கே" என்னுஞ் செய்யுள்களாலறிக. (௪௩௫)

மகாசைவர் பூசித்தற்குரிய இலிங்கமுணர்த்துகின்றார்.

அயன்முகத்திற் றோன்றிய வந்தணரார்ச் சித்துப்
பயனடைதற் கிட்டலிங்கம பாங்கு.

இ - ள். அயன் முகத்தில் தோன்றிய அந்தணர் - பிரமமுகத்திற்றோன்றிய வைதிகப்பிராமணருள்ளே சிவதீக்ஷைபெற்றோராகிய மகாசைவர்கள்—ஆர்ச்சித்துப் பயன அடைதற்கு இட்டலிங்கம் பாங்கு - பூசித்து முத்தி பெறுதற்கு இட்டலிங்கமே உரித்தாம். எ - று. (௪௩௬)

மகாசைவர் பரார்த்தலிங்கத்தைத் தீண்டியவழிப்படுங்

பாங்கிலலை தீண்டப் பரார்த்த மவாதீண்டிற
றீங்குலகுக் காமென்று தேறு.

இ - ள். அவர் பரார்த்தம் தீண்டப் பாங்கு இல்லை - அம்மகாசைவர்கள் பரார்த்தலிங்கத்தைத் தீண்டுதற்கு விதியில்லை;- தீணடின் உலகுக்குத் தீஙகு ஆம எனறு தேறு - தீண்டினார்களாயின் உலகத்துக்குத் தீஙகுணடாமென்றறிக. எ - று.

தீண்டிய குற்றம் போம்படி பரிகாரம் பண்ணுக. இவவிரண்டு திருக்குறட்கருத்தும் "வைதிகர் பெறினுஞ் சைவ தீக்கையை வாய்க்க வேதங்—கையினாற் பரார்த்த லிங்கந் தீண்டுதல் கடனே வன்று—வையகந் தனக்கு நாசம் வருமிவர் தீண்டிற் சுத்த—சைவராற் பரிகா ரத்தைப் புரிகநூல் சாற்றுமாற்றால்." என்னுஞ் செய்யுளாலுமறிக. (௪௩௭)

சதாசிவமூர்த்திக்கு முகநிரூபணம் இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

ஈசான முச்சிமுக மீசதிசை நோக்கியுறுந்
தேசார் புருடங்கீழ்த் திக்கு.

இ - ள். உச்சி முகம ஈசானம் ஈசதிசை நோக்கி உறும் - உச்சிமுகமாகிய ஈசானம் வடகிழக்குத்திக்கை நோக்கியிருக்கும்;—தேசு ஆர் புருடம கீழ்த்திக்கு - ஒளி பொருந்திய தற்புருடம் கிழக்குத்திக்கை நோக்கியிருக்கும. எ - று. (௪௩௮)

தெற்கு வடக்குமேற் றிக்குமுறை யானோக்குந்
தக்கவகோ ராதிமுகந் தான்

இ - ள். தக்க அகோர ஆதி முகம் - தகுந்த அகோரம் வாமதேவம் சத்தியோசாதமென்னும் மூன்றுமுகங்களும—முறையால் தெற்கு வடக்கு மேற்றிக்கு நோக்கும் - முறையே தெற்கையும் வடக்கையும மேற்கையும நோக்கியிருக்கும. எ-று. ()

பரார்த்தலிங்கத்துக்கு முகநிரூபணம மூன்றுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

எத்திசையி னாலயத்து வாயி லிலங்குமுக
மத்திசையிற் றற்புருட மாம.

இ - ள். ஆலயத்து வாயில எத்திசையின் இலங்கும் - திருக்கோயிற்றுவாரம் எந்தத்திக்கிலிருக்கும்—அத்திசையின் முகம தற்புருடம் ஆம் - அந்தத்திக்கை நோக்கியிருக்குமுகம் தற்புருடமாம். எ - று. (௪௪0)

ஈசான வத்திரமு மேய்ந்ததன்மீ தேயிடப்பாற்
றேசார நோக்கும்வி திக்கு.

இ - ள். ஈசானவத்திரமும் அதன்மீது ஏய்ந்து - ஈசானமுகம் அந்தத்தற்புருடத்துக்குமேலே பொருந்தி—இடப்பால் விதிக்குத தேசு ஆர நோக்கும் - அதற்கு இடப்பக்கத் திசைக் கோணத்தை ஒளி பொருந்த நோக்கியிருக்கும். எ - று. ()

அந்தத் திசையா னனம்பூ ருவதிக்கிற்
பந்திக்கு மென்றுளத்திற் பார்.

இ - ள். அந்ததிசை ஆனனம் பூருவதிக்கில பந்திக்கும் என்று - தற்புருடநோக்கும அந்தத்திக்கிலுள்ள முகமானது கிழக்குத்திக்கிலே பொருந்துமென்று—உளத்தில் பார் - மனசிலே அறி. எ - று.

எனவே, மேற்குத்துவாரமாயில் மேற்கேயிருந்த சத்தியோசாதமும், தெற்குதுவாரமாயில் தெற்கேயிருந்த அகோரமும், வடக்குத்துவாரமாயில வடக்கேயிருந்த வாமதேவமும், தற்புருடத்துக்குத் தத்தமிடத்தைக் கொடுத்துக் கிழக்குத்திக்கிலே போமென்பது கருதது. ஈசானமுச்சிமுகம் என்பது முதலிய ஐந்து திருக்குறட்கருததும் "திகழும பூர்வ திசைநோக்கி யமல னிலஙகுஞ் சிவலிஙகந்—திகழு மறறைத் தென்றிசையை நோக்கிப் புவியிற் சிவலிங்கந்—திகழு மருகிக் குடதிசையை நோக்கிச் சோம திசையினையு—ந்கழு முகமைந் ததற்கதனைப் பூர்வ திசையி னிகழ்ததிடுவாட. இலங்கு மீச முகமுச்சி தனனி லீசத் திசைநோக்கி—யிலங்கு மதன்கீழ்த் தறபுருடம் பூர்வத் தெழிலார் வலததோண்மே--லிலங்கு மகோரந்தென்னோக்கி யினிய சாதஞ் சிறுபுறத்தி—னிலஙகுங் குடதிக் கினை நோக்கி யிடத்தோள் வாமம் வடக்கிலங்கும். தென்றிசை தன்னை நோக்கித் திகழ்ந்திடி னிலங்கு மங்கே—யொன்றிடும் புருட மீச முச்சியுற் றங்கி நோக்குந்—தென்றிசை யகோரம் பூர்வ திசைபுரு டத்தா னத்தி—னென்றுமிவ் வாறு மற்றை யுத்தர திக்கு மேற்கும்." என்னுஞ் செய்யுள்களாலுமறிக.

தெற்குத்துவாரமாயிற் றற்புருடம் தெற்கும், சத்தியோசாதம் வடக்கும், அகோரம் மேற்கும், வாமதேவம் கிழக்கும் பொருந்துமெனவும், வடக்குத்துவாரமாயிற் றற்புருடம் வடக்கும், சத்தியோசாதம் தெற்கும், அகோரம் கிழக்கும், வாமதேவம் மேற்கும் பொருந்துமெனவும், சிலவாகமங்களிற் கூறப்படும். (சசஉ)

இடபமும் பலிபீடமும் இருக்குமிடமுணர்த்துகின்றா.

இலிங்க முகத்தி னெதிரே யிடப
மிலங்கும் பலியுமென வெண்.

இ - ள். இலிங்க முகத்தின் எதிரே - சிவலிங்கத்தினது முகத்துக்கெதிரே—இடபம் பலியும் இலங்கும் என எண் - இடபமும் பலிபீடமும் விளங்குமென்றறிக. எ - று.

பச்சிமத்துவாரமாகில் நிருதியிற்றுகப் பலியிடுக. (சசஙு)

துவாரபாலகர்தானமுணர்த்துகின்றா.

அந்தத் துவாரத்தி னர்ச்சித்துப் பாலகரை
வந்தனை செய்க மகிழ்ந்து.

இ - ள். அந்தத் துவாரத்தின் - சிவலிங்கம் எந்ததிக்கை நோக்கியிருக்குமோ அந்ததிக்குத்துவாரத்திற்றானே—பாலகரை மகிழ்ந்து அர்ச்சித்து வந்தனை செய்க - துவாரபாலகர்களை மனமகிழ்ந்து பூசித்து வணங்குக. எ - று.

இவ்விருதிருக்குறட்கருத்தும் "எத்திசை தன்னை நோக்கி யிலங்கிடுஞ் சிவலிங்கந்தா—னத்திசைத் துவார பால ரர்ச்சனை புரிக வன்பா—லத்திசை தன்னிற் பீட மிடபமு மெதிரே யாகுஞ்—சுத்தசைவாகமத்தின் விதிவழி தொகுத்துச் சொன்னோம்." என்னுஞ் செய்யுளாலுமறிக. (சசச)

நைவேத்தியஞ்செயப்பெறுமுகம் இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

பஞ்சான னந்தனினும் பாங்குறப்போ னங்கொடுக்க
பஞ்சகசெம் பொற்பாத் திரத்து.

இ - ள். செம் பொன் பஞ்சக பாத்திரத்து - சிவந்த பொன்னினாலே செய்யப்பட்ட ஐந்து பாத்திரங்களிலே—பஞ்ச ஆனனந்தனினும் பாங்கு உறப் போனம் கொடுக்க - ஈசான முதலிய ஐந்துதிருமுகங்களிலும் தனித்தனியே விதிப்படி அன்னத்தை நிவேதனமபண்ணுக. எ - று. (சசரு)

தற்புருட வத்திரத்திற் றூனைவேத்தியமு
மற்புதனுக் காமென் றறி.

இ - ள். தற்புருட வத்திரத்திற்றூனே நைவேத்தியமும் - அது கூடாதவழித் தற்புருடமுகத்திற்றூனே நிவேதிக்கப்பட்டதும்—அற்புதனுக்கு ஆம் என்று அறி - சிவபெருமானுக்குப் பிரீதியாமென்றறி. எ - று.

பாம்பின் முகங்களைந்தினுள் ஒருமுகத்திற் பருகின் மற்றவைகளுக்குந் திருத்தியாமாறுபோலத் தற்புருடமுகத்தின் நிவேதித்தது மற்றவைகளுக்கும் நிவேதித்ததாமென்றறிக.

பஞ்சசாதாக்கியங்களுள்ளே சிவசாதாக்கியம் ஈசானத்துப், அமூர்த்திசாதாக்கியம் சத்தியோசாதத்தும், மூர்த்திசாதாக்கியம் வாமதேவத்தும், கர்த்திருசாதாக்கியம் அகோரத்தும், கருமசாதாக்கியம் தற்புருடத்தும் பொருந்துதலானும், சாதாக்கியமைந்தும் ஒன்றாய்த் திரண்ட அவதரம் கருமசாதாக்கியமாதலானும், தற்புருடமே சிறப்புடைத்து; ஆதலாற் றற்புருடமுகத்து நிவேதித்தலே உத்தமமாயிற்று. அது "கன்மசாதாக்கி யங்காண் கருதிடிற் புருட மெங்கு—மன்னபா ஞதியந்த முகந்தனிற் கொடுக்க வன்பா—லுன்னிடி னகோரங்

கர்த்த ரமூர்த்தமே யுணரிற் சாத—மன்னிய மூர்த்தம் வாம மதித்திடிற் சிவமீ சானம். கன்மசா தாக்கி யத்திற் கலந்துறு மற்றை நான்கு—மன்னுமூன றிரண்டு மொன்று மறைய முகங்க டம்பி—லுன்னியம் முறைமை தன்னை யோதன மாதி யெல்லாங்—கன்மசா தாக்கி யத்திற் றிசைதொறுங் கொடுக்க கற்றோர்." என்னுஞ்செய்யுள்களாலறிக. இவவாறன்றி, ஈசா னமுகஞ் சிவாகமமிருபத்தெட்டும் உதிக்கப்பெற்ற ஊர்த்தவ முகமாதலால், அமமுகத்து நிவேதித்தலே உததமமென்று சிலவாகமங்களிற்கூறப்படும். (சசகூ)

நிருமாலியமல்லாதன இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.

சயம்புவுந தைவிகமு மாரிடமு மென்று
மிகந்தனநின் மாலியமென் றெண்.

இ-ள். சயமபுவும் தைவிகமும் ஆரிடமும - சயம்புவுந் தைவிகமும் ஆரிடமுமாகிய இம்மூவகையிலிங்கஙகளுக்கும— நின்மாலியம் என்றும் இகந்தன என்று எண் - நின்மாலியய எக்காலத்துமில்லையென்றறி. எ - று. (சசஎ)

நின்மால்ய மன்றிவ்விலிங் கத்து நிவேதித்த
வன்னாதி பானியாந் தம்.

இ-ள். இவவிலிங்கத்து நிவேதித்த அன்னம் ஆதி பானி யம் அந்தம் - இவவிலிங்கங்களுக்கு நிவேதிக்கப்பட்ட அன்ன முதற்பானியமீறாயின—நின்மால்யம் அன்று - நிருமாலியமா காவாம். எ - று. (சசஅ)

அந்நைவேத்தியம் புசிக்குமுறைமை இரணடு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

சிவதீக்கைச் சைவ ருருந்துகதே சாகு
மவருள்ளுந் தேசிகர்க்கா காது.

இ - ள். சிவதீக்கைச் சைவர் அருந்துக - சிவதீக்ஷையைப் பெற்ற ஆதிசைவர்கள் அதனைப் புசிக்கக்கடவர்கள்;—தேசு ஆகும்-புசிப்பவர்களுக்கு அறிவு பிரகாசிக்கும்;—அவருள்ளும் தேசிகர்க்கு ஆகாது - அவர்களுள் ஆசாரியர்க்கு ஆகாது. எ-று.

ஆசாரியர் பாத்திரசேடத்தைப் படையாது எடுத்து வந்து அதனாற் பிராணாக்கினிஹோமஞ்செய்து புசிக்க. நிருமாலியம் புசிக்கின் அவிழுக்கொருகற்பம் நரகத்தில் வாதையுறுவர். பஞ்சகவ்வியம் புசித்து அகோரத்திற் பதினாயிரமுருச்செபித் தல்லது மற்றைச்சந்தி பூசிக்கலாகாதென்றறிக. (௬௨௬)

மருந்திதுவென் றேயருந்தின் மாய்ந்துவிடும் பாவ
மருந்திடலன் னத்தாசை யால.

இ - ள். மருந்து இது என்றே அருந்தின் பாவம் மாய்ந்து விடும் - மகாசைவர் அநுசைவர் அவாந்தரசைவர்கள் பிறவிப் பிணிக்கு இதுவே மருந்தென்று கருதிப் பத்தியினால் ஆதிசைவரை வணங்கி உழுந்து பருத்திக்கொட்டை இலந்தைக்காய் நெல்லிக்காய் எலுமிச்சங்காய் என்னும் இவற்றினொன்றினளவினதாக வாங்கிப் புசிக்கின் அவர் செய்த பாவந்தேய்ந்துவிடும்;—அன்னத்து ஆசையால் அருந்திடல் - ஒருகாலத்தும் அன்னவாஞ்சையினாலே புசியற்க. எ - று. (௬௫௦)

புசிக்கலாகா நிருமாலியங்கள் இரண்டெனக் குறளா
லுணர்த்துகின்றார்.

மானுடதா பித்தசிவ லிங்கத்தின் மாலியத்தை
யானறல்பூ மிக்கழலுக் காக்கு.

இ - ள். மானுடர் தாபித்த சிவலிங்கத்தின் மாலியத்தை - மானுடலிங்கத்தின் நிர்மாலியத்தை ஒருவரும் புசிக்கலாகாதா தலால்,—ஆன் அறல் பூமிக்கு அழலுக்கு ஆக்கு - அதனைப்

சலத்திற்போடுதலேனும்
செய்க. எ - று. (௬௩௧)

அல்லாற் சிவவிப் பிரரருந்த லாமவரை
யல்லார்க்கா காதென் றறி.

இ - ள். அல்லால் சிவ விப்பிரர் அருந்தலாம் - அங்ஙனமன்றாயின் ஆதிசைவர் புசிக்கலாம்;—அவரை அல்லார்க்கு ஆகாது என்று அறி - அவரையொழிந்தோர்கள் புசிக்கலாகாதென்றறி. எ - று. (௬௩௨)

நிருமாலியம் புசித்தற்குரியரல்லாதாரை
யுணர்த்துகின்றார்.

நின்மலமே நின்மலனின் மாலியந்தா னாதலினாற்
புன்மலர்த்தார்க் காகா புசிப்பு

இ - ள். நின்மலன் நின்மாலியம் நின்மலமே - நிருமலராகிய சிவபெருமானுடைய நிருமாலியம் நிருமலமேயாம்;—ஆதலினால் புசிப்புப் புன்மலர்த்தார்க்கு ஆகா - ஆகையால் அதனைப் புசித்தல் பொல்லாத மலத்தோடு பொருந்தினவர்களுக்காகாது. எ - று.

புன்மலத்தாரென்றது சிவதீக்ஷையில்லாதாரை. சிவதீக்ஷையில்லாதாருள், நிர்மாலியம் புசித்தவனும், கொடுத்தவனும், விற்றவனும், அவிழுக்கொருகற்பம் கும்பிநரகத்தில் அழுந்துவரென்றறிக. (௬௩௩)

நிருமாலியத்தை அவமதிசெய்யலாகாதென்பது
உணர்த்துகின்றார்.

மிதியேல் கடவேன் மிசைவியே லன்பர்க்
கதிபா தகமருந்தி னாம்.

இ - ள். மிதியேல் கடவேல் அன்பர்க்கு மிசைவியேல் - முற்கூறிய நிர்மாலியங்களை மிதியாதே, கடவாதே, சிவபத்தர்களுக்குப் புசிப்பியாதே;—அருந்தின் அதிபாதகம் ஆம்-அவைகளை விடாது புசிக்கின் அதிபாதகத்துக்குச் சமமாகும். எ-று.

நிருமாலியத்தை அவமதித்தவருக்குப் பரிகார முணாத்துகின்றார்.

வன்னிகுசை கவ்வியமு மாய்நதிடுக மாய்ந்துவிடு
மின்னவிதத் தொன்றியற்றி னீங்கு.

இ - ள். ஈங்கு இன்னவிதத்து ஒன்று இயற்றின் - இங்கே கூறப்பட்ட நிர்மாலியத்தை மிதித்தன்முதலிய இக்குற்றங்களுள் ஒன்றைச் செய்தால்,—வன்னி குசை கவ்வியமும் மாந்திடுக - சமிவிருக்கபத்திரமும் குசை நுனியும் போட்டுத் தாபித்த பஞ்சகவ்வியத்தை உட்கொள்க;—மாய்ந்துவிடும் - உட்கொள்ளின் அக்குற்றம் நீங்கிவிடும். எ - று.

மிதித்தால் நூறுருவும், கடந்தால் ஐம்பதுருவும்,இருந்தால் இருநூறுருவும,சிவபத்தருக்குப் புசிப்பித்தால் ஆயிரமுருவும, அகோரமந்திரத்திற்செபிக்க. விடாது புசித்தவனும், விடாது புசிப்பித்தவனும், ஒருகாலத்து விவேகமுதிக்கின், அன்றுதொட்டுத் தினந்தோறும் ஒருபொழுதாயினும் இருபொழுதாயினும் அதிபாதகத்துக்குள்ள பரிகாரத்தையேற்றிச் செய்துமுடிக்க. (சுஙரு)

நிருமாலியமல்லாதது இதுவென்று வரையறுத் துணர்த்துகின்றார்.

அல்லநிரு மாலியஞ்சாங் தாட்டியநீர் சூட்டியபோ
தெல்லார்க்கு மாமடைக்கா யீங்கு.

இ - ள். சாந்து - சயம்புமுதலியவற்றிற்குச் சாத்திய சந்தனமும்—ஆட்டிய நீர் - ஆடியருளப்பண்ணிய திருமஞ்சனமும்—சூட்டிய போது - சூட்டிய பூக்களும்—அடைக்காய் - தாம்பூலமும் பாக்கும்—நிருமாலியம் அல்ல-நிருமாலியங்களல்ல;—எல்லார்க்கும் ஆம் - அவை எல்லார்க்குமாம். எ - று.

அபிடேகம்பண்ணிய பால் தயிர் நெய் தேன் கருப்பஞ்சாறு பழமென்பன ஆகாவெனக் கொள்க. (சநிசு)

விக்கிரகங்களுக்கு நிவேதிக்கப்பட்டன நிருமாலியமல்ல

வென்று ஐந்துதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

சகளிரு பத்தைவர் தாமருந்துஞ் சேட
மகலா வகத்தடியாாக் காம.

இ - ள். சகளர் இருபத்தைவர் தாம் அருந்தும் சேடம் - சந்திரசேகரர் முதலாகிய இருபத்தைந்து விக்கிரகங்களும் கொண்டருளிய நைவேத்தியம்—அகலா அகத்து அடியார்க்கு ஆம் - விட்டுநீங்காது பணிவிடை செய்யும் பரிசாரகர்களுக்காம். எ - று. (சநிஎ)

அம்பிகைநிர் மாலியமா மந்தணர்முன் னால்வர்க்குந்
தந்திமுகன் மாலியமுந் தான்.

இ - ள். அம்பிகை நின்மாலியம் - உமாதேவியினது நிர்மாலியமும்—தந்தி முகன் மாலியமும் - விக்கினேசுரரது நிர்மாலியமும்—அந்தணர் முன் நால்வர்க்கும் ஆம் - பிராமணர் முதலிய நான்குவருணத்தார்க்குமாகும். எ - று.

நால்வர்க்குமென்ற உம்மையால் அநுலோமர்க்குமாகுமெனவும்,தந்திமுகன் மாலியமுமென்ற உம்மையால் சிதேவி பூதேவி சரசுவதி துர்க்கை நிர்மாலியங்களுமாகுமெனவுங்கொள்க. ()

ஏறும் புகழ்வீர மெல்லாமுண் டுண்பாருக்
காறுமுக னின்மாலி யம்.

இ - ள். ஆறுமுகன் நின்மாலியம் உண்பாருக்கு - முருகக் கடவுளுடைய நிர்மாலியத்தைப் புசிப்பவர்களுக்கு—ஏறும் புகழ் வீரம் எல்லாம உண்டு - மிருந்த கீர்த்தி வீரமுதலியன வெல்லாம் உண்டாகும். எ - று. (சுருக)

வாதிக்கு மேபிணியை மாந்துமவாக் கெப்பொழுது
மாதித்த னின்மாலி யம.

இ - ள. ஆதித்தன நின்ம லியம் - சூரியனது நிமாலிய மானது—எப்பொழுதும் மாந்துபவர்க்குப் பிணியை வாதிக்கும் - தன்னை எப்போதும் புசிப்பவாகளுக்கு வியாதியைப போக்கும். எ - று.

சூரியநிர்மாலியம் சூரியபூசையுடையார் மாத்திரம் புசிக்கலாகாதெனவறிக. (சுகூ0)

மற்றைப் பரிவாரத் தார்மாலி யந்தானுங்
குற்றமல மாந்தல குணம.

இ - ள். மற்றைப் பரிவாரத்தார் மாலியந்தானும் - மற்றைப் பரிவாரதேவதைகளுடைய நிமாலியங்களையும்—மாந்தல் குற்றம் அல குணம் - புசித்தல் குற்றமாகாது குணமாம். எ-று.

பரிவாரத்தாரென்றது அட்டபரிவாரதேவதைகளையும், சோடசபரிவாரதேவதைகளையும், முப்பத்திரண்டுபரிவாரதேவதைகளையுமென்க. கொடிப்படத்தினிடபதேவர் நிர்மாலியம் பெண்கள் புசிக்கின் மகப்பெறுவர். பிரமாநிர்மாலியம் பிராமணருக்காம். இருந்திராதிலோகபாலகர் நிர்மாலியம் புசிக்கின் ஆரோக்கியமுண்டாம். ஐயனார் நிர்மாலியமும், அவர் தேவிமாராகிய புட்கலை பூரணை நிர்மாலியமும், சத்தமாதர்கள் நிர்மாலியமும்,

பிராமணரொழிந்த மற்றவர்களுக்காம். துர்க்கைநிர்மாலியம் புசிக்கின் வீரமுண்டாம். சேட்டாதேவி நிர்மாலியமும், அவள் பக்கத்திலிருக்கும் அவள் பெண்ணாகிய மணியினது நிர்மாலியமும், அவள் பிள்ளையாகிய இரக்ஷபனது நிமாலியமும், புசிக்கிற் புத்திரனுண்டாம். வித்தியாபீடத்தின் நிர்மாலியம் புசிக்கின் ஞானமுண்டாம். கேத்திரபாலர் நிர்மாலியம் புசிக்கின் நிதியுண்டாம். சண்டேசுரர் நிர்மாலியம சூத்திரருக்காம். சண்டேசுரசத்தியாகிய யமனி நிர்மாலியம் பெண்கள் புசிக்கின நன்மையுண்டாம. (சுகூக)

இட்டலிங்கபூசையுணர்த்தத் தோற்றுவாய் செய்கின்றார்.

பகர்ந்தாம் பரார்த்த விலிங்க மினியாம்
பகர்வாமே யிட்டலிங்கம பார்.

இ - ள். யாம் பரார்த்தவிலிஙகம பகர்ந்தாம் - நாம் பரார்த்தலிஙகத்தைச் சொன்னேம;—இனி இட்டலிங்கம் பகர்வாம் பார் - இனி இட்டலிங்கத்தைச் சொல்வாம் அறி. எ - று. ()

இட்டலிங்கமாவதிதுவென்பது இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

செய்துசிவ தீக்கையினைத் தேசிகன்றன்புத்திரனைக
கையுறக்கொ ளென்று கசிந்து.
கொடுக்கக் கொளுமிலிங்க மிட்டலிங்கங் கொண்டா
னடுத்தவினை தீர்க்கு மது.

இ - ள். தேசின் சிவதீக்கையினைச் செய்துகசிந்து - ஆசாரியன் விசேடதீக்ஷையைப் பண்ணி அருள் சுரந்து,—புத்திரனைக் கை உறக் கொள் என்று கொடுக்க - அத்தீக்ஷை பெற்ற புத்திரகனைப் பார்த்து, நீ உள்ளளவுங்கைவிடாது இவரைநாடோறும் பூசியென்று அநுமதி செய்து, அடியேன் இச்சரீர

மூள்ளவரையும் சிவபூசை செய்தன்றி ஒன்றும் உட்கொள்ளேன் என்று பிரதிஞ்ஞை செய்வித்துக்கொண்டு கொடுக்க,—கொளும் இலிங்கம் இட்டலிஙகம் - அவன் வாங்கிப் பூசிக்கும் இலிங்கம் இட்டலிஙகமாம்;—அது கொண்டான் அடுதத வினை தீர்க்கும்-அது தன்னை வாங்கி நாடோறும் பூசிப்பவனை அடைந்த வினைகளைப் போக்கும். எ - று. (௩௬௩) (௩௬௪)

இட்டலிங்கபூசை செய்தற்கு அதிகாரிகளை யுணர்த்துகின்றார்.

அருச்சிக்க விட்டலிங்க மந்தணர்முன் னால்வ
ருரித்தே யநுலோமர்க் கும.

இ - ள். அந்தணா முன் நால்வர் இட்டலிஙகம் அருச்சிக்க-பிராமணர் முதலிய நாலவரும் இட்டலிங்கத்தைப் பூசிக்கக்கடவர்கள்;—அநுலோமாக்கும் உரிதது - அப்பூசை அநுலோமாகளுக்கும் உரித்தாகும. எ - று.

"அந்தணர்முன் னொருநால்வா சிவதீக்கைக் கருகாவர்-சிந்தைமகிழ் வுறப்பூசை செய்கசிவன் றிருவடியிற்—புந்திமகிழ் வுறப்பூசை யநுலோம ரும்புரிக—தந்தமக்குத தக்கவெலை மண்டபத்திற் றனித்தனியே." என்னுஞ் செய்யுளானுமறிக. ()

அநுலோமரிலக்கணம் உணர்த்துகின்றார்.

புருடனுயர்ந் தானிழிந்த பொற்றொடியைப் புல்ல
வருவார்தா மேயநுலோ மர்.

இ - ள். உயர்ந்தான் புருடன் இழிந்த பொற்றொடியைப் புல்ல - நான்குவருணத்துள்ளும் உயர்ந்த வருணத்தாடவன் இழிந்த வருணத்துப் பெண்ணைப் புணர,—வருவார்தாமே அநுலோமர் - பிறப்பவர்களே அநுலோமர். எ - று.

"பார்ப்பா ரரசர் வணிகர்வே ளாளரென—நாற்குலத் தவ ருந் தங்குல நடையினு—முயர்ந்த வாணினு மிழிந்த பெண் ணினும் - வியந்த கூட்டத் தவரநு லோமர்." என்னுஞ் சூத்தி ரத்தானுமறிக.

பிராமணனுக்கு க்ஷத்திரியப்பெண்ணிடத்திலே பிறந்தவன் சவர்ணன்; வைசியப்பெண்ணிடத்திலே பிறந்தவன் அம்பட் டன்; சூத்திரப்பெண்ணிடத்திலே பிறந்தவன் பாரசவன்; ஆக ப்பிராமணனுக்குப் பிறந்தவர் மூவர். க்ஷத்திரியனுக்கு வைசிய ப்பெண்ணிடத்திலே பிறந்தவன் மற்குரு; சூதிரப்பெண்ணி டத்திலே பிறந்தவன் உக்கிரன்; ஆக க்ஷதிரியனுக்குப் பிறந் தவர் இருவர். வைசியனுக்குச் சூத்திரப்பெண்ணிடத்திலே பிறந்தவன் சூசுகன். ஆக அநுலோமர் அறுவராதல் காண்க.

பிராமணர் முதனல்வரும் முறையே நான்குமூன்றிரண் டொருவருணங்களிலே விவாகஞ்செய்யலாமெனக் கிரணுகம த்தில் விதிக்கப்பட்டது. (சகூகூ)

பிரதிலோமரிலக்கணம் உணர்த்துகின்றார்.

புருடனிழிந் தானுயர்நத பொற்றொடியைப் புல்ல
வருவார் பிரதிலோ மர்.

இ - ள். இழிந்தான் புருடன் உயர்ந்த பொற்றொடியைப் புல்ல - இழிந்த வருணத்தாடவன் உயர்ந்த வருணததுப் பெ ண்ணைப் புணர,—வருவார் பிரதிலோமர் - பிறப்பவர்களே பிரதிலோமர்கள். எ - று.

"இழிந்த வாணினு முயர்ந்த பெண்ணினும்—வியந்த கூட் டத் தவர்பிரதி லோமர்." என்னுஞ் சூத்திரத்தானுமறிக.

க்ஷத்திரியனுக்குப் பிராமணப்பெண்ணிடத்திலே பிறந்தவன் சூதன். வைசியனுக்கு க்ஷத்திரியப்பெண்ணிடத்திலே பிறந்த வன் மாகதன். பிராமணப்பெண்ணிடத்திலே பிறந்தவன்

வைதேககன்; ஆக வைசியனுக்குப் பிறந்தவர் இருவர். சூத்திரனுக்கு வைசியப்பெண்ணிடத்திலே பிறந்தவன் அயோகவன்; க்ஷத்திரியப்பெண்ணிடத்திலே பிறந்தவன் க்ஷத்தா; பிராமணப்பெண்ணிடத்திலே பிறந்தவன் சண்டாளன்; ஆகச் சூத்திரருக்குப் பிறந்தவர் மூவர். ஆகப்பிரதிலோமர் அறுவராதல் காண்க.

அநுலோமத்தானும் பிரதிலோமத்துப்பெண்ணுங்கூடிப் பிறந்தவர் அந்தராளர். பிரதிலோமத்தானும் அநுலோமத்துப் பெண்ணுங்கூடிப் பிறந்தவர் விராத்தியர்.

பிரதிலோமருக்கு, ஆசாரியனிடத்தே தங்கள் தங்களுக்குரிய தீக்ஷை பெற்று அவன் கற்பித்தபடியே பிரதக்கிண நமஸ்காரம் பண்ணிக்கொண்டிருப்பதே, சிவபூசையெனவறிக. ()

சூத்திரருக்கு மந்திரோச்சாரணமுறைமை மூன்று
திருக்குறளானுணர்த்துகின்றார்.

சூத்திராபீ சாக்கரஞ்சொல்லாதுசொலி மந்திரத்தை
யாத்திகரர்ச் சிக்கபல மாம.

இ - ள். ஆத்திகர் சூத்திரர் - ஆத்திகராகிய சூத்திரர்கள்— மந்திரத்தைபீசாக்கரம சொல்லாது சொலி அர்ச்சிக்க - மந்திரங்களைப் பீசாக்கரங்கூட்டாது உச்சரித்துப் பூசிக்கக்கடவர்கள்;—பலம் ஆம்-பூசிக்கின் அதற்கேற்ற பயனுண்டாம். எ-று.

ஆத்திகராவார் கடவுளும் புண்ணியபாவமும் சுவர்க்கநரகமும் உண்டென்போர்; நாத்திகராவார் இல்லையென்போர். அது "பொன்னுலகம் வெந்நரகம் புண்ணியபா வம்புரிவார்— நின்மலனு முண்டென்று நிச்சயித்தா—ரிந்நிலைமை—யாத்திகரே யார்கண்டா ரம்மைப் பலமென்பார்—நாத்திகரென்றே யுளத்துளோ." என்னும் வெண்பாவாலறிக. (சகூஅ)

ஓதேல் கலாமந் திரமொருமூன் றேழைந்து
மோதேல்கா யத்திரியை யும்.

இ - ள். கலாமந்திரம் ஒருமூன்று ஏழைந்தும் ஓதேல் - வேதமந்திரமாகிய கலாமந்திரமுப்பதெட்டையும் உச்சரியாதே;—காயத்திரியையும் ஓதேல் - சிவகாயத்திரியையும் உச்சரியாதே. எ - று. (௬௬௧)

அக்கரநி யாசத்தை யிட்டலிங்கத் தாக்கிடுக
தக்கதென வேமதித்துத் தான்.

இ - ள். இட்டலிங்கத்து-இட்டலிங்கபூசையிலே—அக்கரநியாசத்தைத தக்கது எனவே மதித்துஆக்கிடுக-ஐம்பததோரக்கரநியாசத்தைமாத்திரம் தக்கதென்று நினைந்து பண்ணுக.எ-று.

எனவே, பிராமணர் முதலிய மூவரும் இரண்டுநியாசமும் பண்ணலாமென்பது பெறப்பட்டது. சூத்திரருள், அம்மூவரி லொருவராலே சமயதீக்ஷை முதலிய ஐந்தினையும் பெற்ற நைட்டிகனும், அவனிடத்து அவற்றைப் பெற்ற நைட்டிகனும், தீக்ஷையான்மார்த்தகருமங்களுக்கெல்லாம் அதிகாரியாவனென்றும், அவைகளுக்குரிய சகலமந்திரங்களினும் அதிகாரியாவனென்றும், புரோக்ஷித்தும் அமிர்ததருஞ்சொல்லுகையால், அவர் எக்காலத்துமோதலாம்; இல்வாழ்வானுக்கு நித்தியகருமத்திலே உபவீதமாத்திரமும் நைமித்திககருமத்திலே பீசமந்திராதிகாரமுமுண்டு. (௬௭0)

சிவபூசாபேதங்களை மூன்றுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

சுத்தமுங் கேவலமு மிச்சிரமுந் தொண்டரவர்
பத்தியினு லர்ச்சிக்கும் பாங்கு.

இ - ள். தொண்டரவர் பத்தியினால் அர்ச்சிக்கும் பாங்கு - சிவனடியார்கள் பத்தியினாலே பூசிக்குஞ்சிவபூசை—சுத்தமும்

கேவலமும் மிச்சிரமும் - சுத்தமும் கேவலமும் மிச்சிரமுமென மூன்று பேதமாம். எ - று. (சஎக)

சுத்தஞ் சிவலிங்க மொன்றுமே சுந்தரியு
மொத்துறைதல் கேவலமென் றோர்.

இ - ள். சிவலிங்கம் ஒன்றுமே சுததம் - சிவலிங்கமொன்றைமாத்திரம் பூசிததல் சுத்தபூசையாம;—சுந்தரியும ஒத்து உறைதல் கேவலம் எனறு ஓர் - அவ்விலிங்கத்தோடு உமாதேவியையுங்கூட்டிப் பூசிததல் கேவலபூசையென்றறி. எ - று.

விநாயகர் கந்தர் இடபதேவரென்னும் இம்மூவரையும் அவ்விருவருடன் கூட்டி ஐவராகப் பூசித்தலும் கேவலபூசையெனப்படும். (சஎஉ)

அருக்கன் கரிமுகவ னாதிசண் டாந்தம்
விரிததருச்சிக் கைமிச் சிரம.

இ - ள். அருக்கன கரிமுகவன ஆதி சண்ட அந்தம - சூரியன் விநாயகர் முதலாகச சண்டேசுரா இறுதியாக— விரித்து அருச்சிக்கை மிச்சிரம் - விரித்துப் பூசித்தல் மிச்சிர பூசையாம். எ - று. (சஎங)

சிவபூசாபேதங்களுக்கு அதிகாரிகளைப் பிரித்து
இரண்டுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

துறந்தாற்குச் சுத்த மருகமில் வாழ்விற்
சிறந்தாற்குக் கேவலமே தேசு.

இ - ள். துறந்தாற்குச் சுத்தம் அருகம் - துறவிக்குச் சுத்த பூசையே உரித்தாம்;—இல்வாழ்வில் சிறந்தாற்குக் கேவலமே தேசு - இல்வாழ்வானுக்குக் கேவலபூசையே விசிட்டமாம். எ - று. (சஎச)

அருகமே தேசிகனுக் காமிந்த மூன்று
மொருவாத நேச முறின்.

இ - ள். ஒருவாத நேசம் உறின் - சிவபெருமானிடத்தே விட்டு நீங்காத பத்தியுண்டாயின்,—தேசிகனுக்கு இந்த மூன்றும் அருகமே - ஆசாரியனுக்கு இம்மூவிதபூசையும் உரியனவேயாம். எ - று. (சஎரு)

பொதுவிதியுணர்த்துகின்றார்.

இயன்றதிவற் றொன்றை யருச்சிக்க வேற்ற
பயன்றருமீ சன்பாங்கு பார்த்து.

இ - ள். இவற்று இயன்றது ஒன்றை அருச்சிக்க - யாவராயினும் இம்மூவிதபூசையுள் இயன்றதொன்றைப் பண்ணுக;—ஈசன் பாங்கு பார்த்து ஏற்ற பயன் தரும் - சிவபெருமான் அம்முறைமையையறிந்து அதற்கேற்ற பலத்தைக் கொடுப்பார். எ - று. (சஎசு)

மேன்முடிந்தது முடிக்கின்றார்.

அறிந்துவிதி யுஞ்சௌச மாதிநீ ராடற
திறமுந் தவறாதே செய்.

இ - ள். விதியும் அறிந்து - சிவாகமவிதிகளையறிந்து,—சௌசம் ஆதி நீர் ஆடற்றிறமும் தவறாதே செய் - சௌசமுதலியனவற்றையும் ஸ்நானத்தையும் வழுவாது செய். எ - று. ()

இட்டலிங்கபூசைக்கு மண்டபஞ்செய்யுமுறைமை
ஏழுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

மலையினதி தீரத்தின் வாழ்மனையி னீசா
னெலையினுமா மண்டபமென் றெண்.

இ - ள். மலையின் - பருவதத்திலும்—நதி தீரத்தின் - ஆற்றங்கரையிலும்—வாழ் மனையின் - இருக்கின்ற வீட்டிலும்—ஈசன் எலையினும் - சிவாலயத்திலும்—மண்டபம் ஆம் என்று எண் - மண்டபஞ்செயற்பாலதென்றறி. எ - று. (௪௭௮)

முழமிருப திற்கொள்க முப்பதினுங் கொள்க
வழகுறவே மணடபத்தை யாய்ந்து.

இ - ள். மணடபத்தை அழகு உற ஆய்ந்து - மண்டபத்தை அழகு பொருந்த ஆராய்ந்து—முழம் இருபதில் கொள்க - இருபதுமுழததிறசெய்க;—முப்பதினும் கொள்க - முப்பதுமுழததினுஞ் செய்க. எ - று. (௪௭௯)

மண்டபமொன் பான்முழத்தின் வாய்க்கவியற் றேழி
மெண்டிகழைந் தின்மூன் றினும். [னுமா

இ - ள். மண்டபம ஒன்பான் முழததின் வாய்க்க இயறறு - மண்டபத்தை ஒன்பதுமுழத்தினுஞ் சிறக்கச் செய்க;—ஏழினும் ஆம் - ஏழுமுழததிறசெய்யினுமாம;—எண் திகழ் ஐந்தின் மூன்றினும் - எண் பொருந்திய ஐந்துமுழம் மூன்றுமுழததினுஞ்செய்யினுமாம.

முழமாவது மானுங்குலம் இருபததுநான்கு கொண்டது. மானுங்குலம் உததமம், மததிமம, அதமம் என மூவகைப்படும். எட்டுநெல்லுக் குறுக்குககொண்டது உததமம, ஏழு மத்திமம், ஆறு அதமம். அன்றியும் நான்குநெல்லு நீளங்கொண்டது உத்தமம், மூன்றரை மத்திமம், மூன்று அதமம். (௪௮0)

இயற்றுகநாற் கோணத்தா லிட்டமுற வட்டத்
தியற்றலுமா மண்டபமென் றெண.

இ - ள். மண்டபம் நாற்கோணத்தால் இட்டம் உற இயற்றுக - மண்டபத்தை நாற்கோணத்தாலே பிரீதி பொருந்தச்

செய்க;—வட்டத்து இயற்றலும் ஆம் என்று எண் - வட்டமாகச் செய்யலுமாமென்றறி. எ - று.  (சஅக)

திண்ணிய விட்டிகையாற் செய்மண் டபமரத்தாற்
பண்ணலுமாம் பாங்கென்றே பார்.

இ - ள். மண்டபம் திண்ணிய இட்டிகையால் செய் - மண்டபத்தைக் கடினமாகிய செங்கல்லினாலே செய்க;—மரத்தால் பண்ணலும் பாங்கு ஆம் என்றே பார் - மரத்தினாற் செய்தலுமுசித்தாமென்றறி. எ - று.  (சஅஉ)

மண்ணினாற் செய்யலு மாகும் வறியர்தாந்
திண்மையுற வேவிதியைத் தேர்ந்து.

இ - ள். வறியர்தாம் விதியைத திண்மை உறவே தேர்ந்து-வறியவர்கள் விதியைத் திண்மை பொருந்த ஆராய்ந்து—மண்ணினால் செய்யலும் ஆகும்-மண்ணினாலே செய்யலுமாம்.எ-று.

வாயிலத னாற்றிசையும் வாய்க்கச்செய் பச்சிமத்தில்
வாயிலுமா கும்பூரு வத்து.

இ - ள். அதன் நாற்றிசையும் வாயில் வாய்க்கச் செய் - அம் மண்டபத்துக்கு நான்குதிக்கினும் துவாரங்களைச் சிறக்கச் செய்க;—பச்சிமததில் பூருவத்து வாயிலும் ஆகும் - அன்றேல் மேற்கிலாயினுங் கிழக்கிலாயினுந் துவாரஞ்செய்க. எ - று.

துவாரம் தெற்குத்திக்கிற் செய்யலுமாம்.  (சஅச)

வேதிகை செய்யுமுறைமை நான்குதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

மண்டபமைங் கூறாக்கி வாய்க்க நடுக்கூற்றிற்
றிண்டிகழும் வேதிகையைச் செய்.

இ - ள். மண்டபம் ஐங்கூறு ஆக்கி - பூசாமண்டபத்தின் உள்ளகலத்தை ஐந்துகூறு பண்ணி,—நடுக்கூற்றில் - பக்கங்களிலே இவவிரண்டு கூறு விட்டு, நடுக்கூற்றிலே—திண் திகழும் வேதிகையை வாய்க்கச் செய் - திண்மை பொருந்திய பூசாவேதிகையைச் சிறக்கச் செய்க. எ - று. (சஅ௫)

உத்தமமே மண்மயத்தின் வேதிகைதானோருங்கான்
மத்திமமே செங்கன் மயம்.

இ - ள். ஓருங்கால் - ஆராயுமிடத்து—மண் மயத்தின் வேதிகை தான் உத்தமம் - மண்ணினாலே செய்யப்பட்ட வேதிகையே உத்தமம்;—செஙகன்மயம் மத்திமம் - செங்கல்லினாலே செய்யப்பட்ட வேதிகை மத்திமமாம். எ - று. (சஅசு)

உன்னதமீ ரெட்டாகு மோரெட்டு மாகுங்க
லின்னாது வேதிகைக்கென் றெண்.

இ - ள். உன்னதம் ஈரெட்டு ஆகும் - அவவேதிகைக்கு உயரம் பதினாறங்குலமிருத்தல்வேண்டும்;—ஓரெட்டும் ஆகும் - எட்டஙகுலமுமாம்;—வேதிகைக்குக் கல் இன்னாது என்று எண் - வேதிகைக்குச் சிலை ஆகாதென்றறி. எ - று. (சஅஎ)

நாற்றிசையும் வேதிகைக்கு நாட்டிடுக தம்பத்தை
யூற்ற முறவே யுணர்ந்து.

இ - ள். ஊற்றம் உறவே உணர்ந்து - உறுதியாகும்படி அறிந்து—வேதிகைக்கு நாற்றிசையும் தம்பத்தை நாட்டிடுக - வேதிகைக்கு நான்குதிக்கிலும் தூண் நாட்டுக. எ-று. (சஅஅ)

தோயத்தாற் கோமயத்தாற் சுத்திசெய்கமண்டபத்தை
யேயுத்தான் மந்திரத்தா லே.

இ - ள். மண்டபத்தை - இஙஙனஞ் செய்யப்பட்ட பூசாமண்டபத்தை—ஏயத் தான் மந்திரத்தாலே - பொருந்தும்படி

அதிரமந்திரத்தை உச்சரித்து—தோயத்தால் கோமயத்தால் சுத்தி செய்க-வடித்த சலத்துடன் கூட்டிய கோமயத்தினுலே சுத்திசெய்து விதிவழி பிரதிட்டைபண்ணுக. எ - று. (சஅக)

பீடலக்கணம் ஆறு திருக்குறளாலுணர்த்துகின்ருர்.

இருமுழநீ ளம்பீடத் தெய்து மகல
மொருமுழ மென்றே யுணர்.

இ - ள். பீடத்து எய்தும் நீளம் இருமுழம் - திருப்பீடத்திற் குப் பொருந்திய நீளம் இரண்டுமுழமும—அகலம் ஒருமுழம் என்றே உணர்-அகலம ஒருமுழமுமாயிருத்தல்வேண்டுமென் றறி. எ - று.

அரசு, ஆல், அத்தி, இறளி, பலாசு, கருங்காலி, வன்னி, வில் வம், மா, வேங்கை, நறுமுருங்கை, காட்டுவாகை என்னும் யஞ் ஞவிருக்ஷங்களுள் இயன்றதொன்றினுலே திருப்பீடஞ்செய்க.

பன்னிரண் டங்குலம் பாதத் துயரமா
முன்னினுய ரந்தனைநீ யோர்.

இ - ள். பாதத்து உயரம் பன்னிரண்டு அங்குலம் ஆம் - பீடத்தின் கால்களினது உயரம் பன்னிரண்டங்குலமாயிருத் தல்வேண்டும்;—உன்னின் உயரந்தனை நீ ஓர் - ஆராயின் உயரத்தை நீயறி. எ - று. (சஅஅ)

பாதத்தைச் சிங்கமெனப் பண்ணிடபம்போலும்பண்
போதகம் போலும் புரி.

இ - ள். பாதத்தைச் சிங்கம் எனப் பண் - பீடத்தின் கா லைச் சிங்கம்போலப் பண்ணு;—இடபம்போலும் பண் - அன் றேல் இடபம்போலேனும் பண்ணு;—போதகம் போலும் புரி - அன்றேல் யானைபோலேனும் பண்ணு. எ - று. (சஅஉ)

நளினத்தைப் பீடத்தி னாப்பட் பணுக
வளமுறவே நாணு வணம்.

இ - ள். பீடத்தின் நாப்பண் - அந்தப்பீடத்தினடுவே—நளினத்தை வளம் உறவே நானுவணம் பணுக - பதுமத்தை வளம் பொருந்தும்படி பலநிறமாக எழுதுக. எ - று.

அகலத்தை ஒவ்வோரங்குலத்தின் நான்குவட்டமாகப் பண்ணி, நடுமுதல்வட்டத்திற் கர்ணிகையைப் பொன்னிறமாகவும், அதனடுவே ஒன்பதுவிரையைக் கருநிறமாகவும், இரண்டாம்வட்டத்தின் முப்பத்திரண்டு கேசரத்தை அடி பொன்னிறமும் நடு இரத்தநிறமும் நுனி முத்துநிறமுமாகவும், மூன்றும்வட்டம் தளமும் தளசந்தியுமாகவும், நான்காம்வட்டம் தளாக்கிரமாகவும், இடையிடையிரேகை கருநிறமாகவும், இப்படியே பதுமத்தைச் சாதிலிங்கமுதலாகிய பஞ்சவன்னங்களாலுமெழுதுக. முற்கூறிய் நான்குவட்டஞ்செய்த இரேகையை வெள்ளைநிறமாக எழுதுக. (சகக)

பீடத்தை வேதிகைமேல் வைத்ததன்மீதேமற்றோர்
பீடத்தை வைத்ததற்குப் பின்.

இ - ள். பீடத்தை வேதிகைமேல் வைத்து-அந்தப்பீடத்தை வேதிகையின்மேலே வைத்து,—அதன் மீதே மற்றோர்பீடத்தை வைத்து-அதன்மேலே வேறொருபீடத்தைவைத்து.எ-று.

பதுமமலர் பீடமதின் பச்சிமத்தில் வைத்தே
விதிவழியுஞ் செய்க வினை.

இ - ள். அதற்குப் பின்-அதற்குப் பின்பு—பதுமமலர்பீடம் அதின் பச்சிமத்தில் வைத்தே-பொன் முதலியவற்றாற்செய்த பதுமத்தையேனும் அலங்காரபீடத்தையேனும் அந்தப்பீடத்தின்மேலே கிழக்குமுகமாக வைத்து,—விதிவழியும் வினை

செய்க-விதிப்படி அதில் அடுக்குமாலைதாங்கியுஞ்செய்க. எ-று.

பூசோபகரணசம்பாதனமுணர்த்துகின்றார்.

பூசனைக்கு வேண்டு முபயோகம் பூரித்துப்
பேசுதலில் லாமவுனம் பெற்று.

இ - ள். பூசனைக்கு வேண்டும் உபயோகம் பூரித்து - பூசைக்கு வேண்டுந் திருமஞ்சனம் திருப்பள்ளித்தாமமுதலிய உபகரணங்களைக் குறைவின்றித் தேடிச் சமீபத்தில் வைத்துக்கொண்டு,—பேசுதல் இல்லா மவுனம் பெற்று - மௌனவிரதனாகி. எ - று. (சகூசா)

சௌரபூசையுணர்த்துகின்றார்.

பூர்வதிசை நோக்கியிருந் தாதித் தியன்பூசை
யார்வமுறச் செய்கவிதி யால்.

இ - ள். பூர்வதிசை நோக்கி இருந்து - கிழக்குமுகமாக இருந்து,—ஆதித்தியன் பூசை விதியால் ஆர்வம் உறச் செய்க - சூரியபூசையை விதிப்படி விருப்பம் பொருந்தச் செய்துமுடிக்க. எ - று. (சகஎ)

துவாரபூசையுணர்த்துகின்றார்.

பண்ணிடுக பூசனையைப் பச்சிமத்து வாரத்து
நண்ணினர்க் கெல்லா நயந்து.

இ - ள். பச்சிமத் துவாரத்து - வடக்குமுகமாகப் புலித்தோன்முதலிய ஆசனத்திலிருந்து பீடத்தின்மேற்கே துவாரமாகப் பாவித்து,—நண்ணினர்க்கு எல்லாம் நயந்து பூசனையைப் பண்ணிடுக - அங்கே பொருந்திய துவாரபாலகர் எழுவருக்கும் விருப்பத்தோடு பூசையைப் பண்ணுக. எ - று

துவாரபாலகர் எழுவராவார் கணபதி, சரசுவதி, இலக்குமி, நந்தி, கங்கை, மகாகாளர், யமுனை எனவிவர். (சகஅ)

பரிவாரநாயன்மாரை எழுந்தருளப்பண்ணுமுறைமை
இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

பூர்வதிசை யிற்புரிக போரேற்றின் பூசையினை
யார்வமுளத் தோங்கவல ரால்.

இ - ள். பூர்வதிசையில் போர் ஏற்றின் பூசையினை உளத்து ஆர்வம் ஓங்க அலரால் புரிக - சிவபெருமானுக்குச் சந்நிதி கிழக்காதலால் இடபதேவரை மேற்கே முகமாக எழுந்தருளப்பண்ணி மனசிலே விருப்பம் பொருந்தும்படி பூவினாலே பூசிக்க. எ - று. (சகக)

ஆனைமுக னாதியரை யர்ச்சிக்க வெல்லையறிந்
தேனையரை யுமவிதியா லே.

இ - ள். ஆனைமுகன் ஆதியரை ஏனையரையும் - விநாயகர் முதலியோரையும் பிறரையும்—எல்லை அறிந்து விதியாலே அர்ச்சிக்க - அவரவருக்கு விதித்த எல்லையறிந்து விதிப்படி பூசிக்க. எ - று.

இலிக்கத்துக்கு முன்னே மேற்கே முகமாகத் திருநந்திதேவரையும், அவருக்கு முன் சூலத்தையும், அவருக்கு வாமத்திலே ஆதித்தனையும், அக்கினிதிக்கிலே சாத்தாவையும், மகேசுரரையும், சிவபெருமானுக்குத் தெற்கே தக்ஷிணாமூர்த்தி வித்தியாபீடத்தையும், நிருதியிலே கணபதியையும், அவருக்கு இடப்பக்கத்திலே பிரமாவையும், வாயுவிலே சுப்பிரமணியரையும், வடக்கே தெற்கு முகமாக நிருத்தமூர்த்தியையும், அவருக்கு வாமத்திலே போகசத்தியையும், குபேரனுக்கும் வாயுவுக்கும் நடுவே இலிங்கோற்பவத்தையும், குபேரனுக்கும் ஈசானருக்கும் நடுவே சிவபத்தர்களையும், அவருக்கு வாமத்திலே வைரவரையும், எழுந்தருளப்பண்ணிப் பூசிக்க. இடபத்துக்கும் ஆதித்தனுக்கும் நடுவே திருநீற்றாதாரத்தில் மாயாசத்தியை

யும், திருநீற்றிலே லகுளீசுரனையும், கயிற்றிலே வாசுகியையும் பூசித்து, அதற்கடுக்கச் செபமாலையை வைத்துப் பூசிக்க. ()

ஆன்மார்த்தபூசாவிதியை விரித்துரைக்குநூல்
இதுவென்பதுணர்த்துகின்றார்.

இட்டலிங்க பூசனைகொய்தீங்கிசைத்தாஞ்சூக்குமத்துங்
கட்டுரைக்கும் வித்தரித்துக் காண்.

இ - ள். இட்டலிங்க பூசனை கொய்து ஈங்கு இசைத்தாம் - ஆன்மார்த்தபூசாவிதியை இங்கே சுருக்கிச் சொன்னேம்;— சூக்குமத்தும் வித்தரித்துக் கட்டுரைக்கும் காண் - சூக்குமாகமத்திலும் விரித்துச் சொல்லும்; அங்கே கண்டுகொள். எ - று.

உம்மையால் அஞ்சுமான் காரணம் முதலிய ஆகமங்களினு மென்றறிக. (௫0க)

பஞ்சசுத்தியுணர்த்துகின்றார.

பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப்
பஞ்சவித பாசமறுப் பார்.

இ - ள். பஞ்சவித பாசம் அறுப்பார் - ஆணவமுதலிய பஞ்சபாசங்களையும் நீக்கக் கருதுவோர்கள்—பஞ்சவித சுத்தியினைப் பாங்கு ஆகப் பண்ணிடுக - ஆன்மசுத்தி தானசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி இலிங்கசுத்தியென்னும் பஞ்சசுத்திகளை விதிப்படி செய்க. எ - று.

ஆத்தும சுத்தியாவது பூதசுத்தி, அந்தரியாகம், சமாதியென்னு மூன்றன்றொகுதியாம். (௫0உ)

அந்தரியாகம் இன்றியமையாததென்ப
துணர்த்துகின்றார்.

அர்ச்சித்தா னந்தரியா கம்புரியா தேபலத்தை
யர்ச்சித்தா னென்றே மதி.

1244 (6144)

இ - ள். அந்தரியாகம் புரியாதே அர்ச்சித்தான் - அந்தரியாகம் 'பண்ணாது சிவபூசை செய்தவன்—பலத்தை வர்ச்சித்தான் என்றே மதி - அந்தப்பூசாபலத்தை விட்டவனுவனென்றறி. எ - று.

"சிறந்தகத்து ளான்மாவி லுறைசிவனைப் பூசையினைச் செய்யா ளுகி, மறந்துபுறத் தினிற்பூசை வருந்தியே யியற்றுப வன் வயங்கு மாவின், கறந்தபா லடிசிலகங் கையுளே யிருப்ப துந்தான் கண்டு ளுது, புறங்கையினை நக்குமவன் போலுமால் யாமறியப் புகலுங் காலே." என்னுஞ் செய்யுளானுமறிக. ()

ஸ்நானவேதிகையிலக்கணம் நான்குதிருக்குறளா லுணர்த்துகின்றூர.

செய்க வபிஷேக வேதிகை செம்பிளுற்
செய்யலுமா குமபலா சின்.

இ - ள். அபிடேகவேதிகை செம்பினுல் செய்க - ஸ்நான வேதிகையைத் தாமிரத்தினுலே பண்ணுக;—பலாசின் செய்யலும் ஆகும் - பலாசினுலே பணணுதலுமாம். எ - று.(ருoச)

ஒருமுழங் கோமுகை யோடு மகல
மரைமுழமா மேயுன் னதம்.

இ - ள். கோமுகையோடும் ஒருமுழம் - ஸ்நானவேதிகைக்குக் கோமுகை கூட நீளம் ஒருமுழமாம்;—அகலம் உன்னதம் அரைமுழம் ஆம் - அகலமும் உயரமும் அரையரைமுழமாம். எ - று. (ருoரு)

நாற்கோண மேகலையைப் பண்ணிடுக நாற்றிசையு
மேற்றவணி பெற்றிலங்க வீது.

இ - ள். ஈது ஏற்ற அணி பெற்று இலங்க - இத்தஸ்நானவேதிகை பொருந்திய அழகு பெற்று விளங்கும்படி—நாற்றிசை

யும் - இதற்குநான்குதிக்கிலும்—நாற்கோணமேகலையைப் பண்ணிடுக - நாற்கோணமேகலையைச் செய்க. எ - று. (நிoசு)

வைத்தொருபீ டத்தி லதனையதன் மேலிலிங்கம்
வைத்தபிடே கஞ்செய் மதித்து.

இ - ள். அதனை ஒருபீடத்தில் வைத்து - அந்தஸ்நானவேதிகையை ஒருபீடத்தின்மேலே வைத்து,—அதன்மேல் இலிங்கம் வைத்து - அதன்மேலே சிவலிங்கத்தை எழுந்தருளப்பண்ணி—மதித்து அபிடேகம் செய் - விதியை ஆராய்ந்து அபிஷேகஞ்செய்க. எ - று. (நிoஎ)

அபிஷேகஞ்செய்யுந்தானமுணர்த்துகின்றார்.

அபிடேக வேதிகையில் வைத்தபிடே கஞ்செய்
யபிடேக மங்கையிலா கா.

இ - ள். அபிடேகவேதிகையில் வைத்து அபிடேகம் செய்- சிவலிங்கத்தை அபிடேகவேதிகையில் வைத்து அபிஷேகம்பண்ணு;—அம் கையில் அபிடேகம் ஆகா - அழகிய கையில் வைத்து அபிஷேகம்பண்ணலாகாது. எ - று. (நிoஅ)

எண்ணெய்க்காப்புவிதி மூன்றுதிருக்குறளா

லுணர்த்துகின்றார்.

கைக்கிரியை யெண்ணெயா குங்கடவுண் மேனிக்குக்
கைக்கவதல் லாவெண்ணெய் காசு.

இ - ள். கைக்கிரியை எண்ணெய் கடவுள் மேனிக்கு ஆகும்- கையினால் விதிப்படி செய்யப்பட்ட எண்ணெயே சிவபெருமானுடைய திருமேனிக்குரித்தாம்;—அது அல்லா எண்ணெய் காசு கைக்க - அஃதொழிந்த எண்ணெய் குற்றமுடையதாதலால் அதனை வெறுத்துத் தள்ளுக. எ - று.

எள்ளை வண்டு முதலிய பழுதறப் பதினாறுதரம் பார்த்து ஆராய்ந்து, உவர் முதலிய தீய சலங்களை விடாது, நல்ல சலத்தைப் புதிய பாண்டத்தில் விட்டு,எள்ளைக் கருந்தோல்போமளவும் காலினால் மிதியாது கையினாற் பிசைந்து கழுவி, காகம் கோழி நாய் பன்றி முதலியன வாயிடல் மிதித்தல் செய்யாவண்ணம் உலர்த்தி, கல்லினாலேனும் புளியமரத்தினாலேனுஞ் செய்த நாய் முதலியன வாயிடாத கைச்செக்கினால் ஆட்டியே சாத்துக. இங்ஙனமன்றி ஆட்டிய எண்ணெய் மதுவுக்கொக்குமென்றறிக. (௫0௧)

பாங்கல்ல வெண்ணெய் படிகத்தி னுக்கானெய்
பாங்கென்றே யாட்டுகவன் பால்.

இ - ள். படிகத்தினுக்கு எண்ணெய் பாங்கு அல்ல - படிகலிங்கத்துக்கு எண்ணெய் உரித்தன்று,—ஆன் நெய் பாங்கு என்றே அன்பால் ஆட்டுக - பசுநெய்யே உரித்தென்றறிந்து அன்பினால் அபிஷேகம்பண்ணுக. எ - று. (௫௧0)

பரிவுறவெண் ணெய்யைப் புரோக்கிபடி கத்தில்
வரமுறுகூர்ச் சத்தான் மதித்து.

இ - ள். படிகத்தில் - படிகலிங்கத்திலே—எண்ணெய்யை வரம் உறு கூர்ச்சத்தான் மதித்துப் பரிவு உறப் புரோக்கி - எண்ணெய்யை மேன்மை பொருந்திய கூர்ச்சத்தினால் ஆராய்ந்து அன்பு பொருந்தப் புரோக்ஷி. எ - று. (௫௧௧)

அபிஷேகத்திரவியங்களினடைவு நான்குதிருக்குறளானுணர்த்துகின்றார்.

ஆட்டிடுக கந்த தயில முதலதன்பி
னட்டுகவா னைந்தினையு மார்ந்து.

இ - ள். முதல் கந்த தயிலம் ஆட்டிடுக - முதற் சந்தனாதி யெண்ணெயினால் அபிஷேகம்பண்ணுக;—அதன் பின் ஆன் ஐந்தினையும் ஆர்ந்து ஆட்டுக - அதன்பின்பு பஞ்சகவ்வியங்க ளினாலும் அன்பினோடும் அபிஷேகம்பண்ணுக. எ - று.

பஞ்சகவ்வியமாவன விதிப்படி கூட்டியமைக்கப்பட்ட பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பனவாம்.(௫௧௨)

பஞ்சாமிர் தம்பா லதன்பின் றதிநெய்தே
னெஞ்சாக் கரும்பினிர தம்.

இ - ள். அதன் பின் பஞ்சாமிர்தம் - அதன்பின்பு பஞ்சா மிர்தமும்—பால்-பாலும்—ததி - தயிரும்—நெய் - நெய்யும்— தேன் - தேனும்—எஞ்சாக் கரும்பின் இரதம் - குறைவில் லாத கருப்பஞ்சாறும். எ - று.

விதிப்படி சேர்க்கப்பட்ட பால், தயிர், நெய், தேன், சருக் கரை என்பன ரசபஞ்சாமிர்தமெனப்படும். இவற்றோடுவா ழைப்பழம் பலாப்பழம் மாம்பழம் என்னு மூன்றையுங்கூட் டிற் பலபஞ்சாமிர்தமெனப்படும். (௫௧௩)

கனியுதகந் தெங்கிளநீர் கந்தநீர் கும்பந்
தனில்விதியாற் றாபித்த நீர்.

இ - ள். கனி உதகம் - பஞ்சபலோதகமும்—தெங்கு இள நீர் - தெங்கினது இளநீரும்—கந்த நீர் - சந்தனக்குழம்பும்— கும்பந்தனில் விதியால் தாபித்த நீர் - கும்பத்தில் விதிப்படி தாபித்த சலமும். எ - று.

பஞ்சபலோதகங்களாவன எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, தமரத்தம்பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாது ளம்பழச்சாறு என்பனவாம். இளநீர் முகிழைத் திறந்து தனித் தனி அபிஷேகம்பண்ணுக. தாமிரபாத்திரத்தில் விட்டபா

னும், வெண்கலப்பாத்திரத்தில் விட்ட இளநீரு, மதுவுக்கொக்குமென்றறிக. (ருகச)

என்னு மிவையு மினியபத மந்திரத்தைப்
பன்னியுரைத் தாட்டுகபாங் கால்.

இ - ள். என்னும் இவையும் - என்றுசொல்லப்படும் இந்த திரவியங்களை—இனிய பதமந்திரத்தைப் பன்னி உரைத்துப் பாங்கால் ஆட்டுக - இனிமையாகிய எண்பத்தொருபதமந்திரத்தை உச்சரித்து விதிப்படி அபிஷேகஞ்செய்க. எ - று.

பதமந்திரத்துக்கு அருகரல்லாதவர் சங்கிதாமந்திரத்தை உச்சரிக்க. (ருகரு)

அபிஷேககலசம் பிடித்து அபிஷேகஞ்செய்யுமுறைமை
நான்குதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

ஏந்தியபி டேககல சத்தை யிடக்கரத்தில்
வாய்ந்தவலக் கையதன்மேல் வைத்து.

இ - ள். அபிடேககலசத்தை இடக்கரத்தில் ஏந்தி - அபிஷேககலசத்தை இடக்கையில் ஏந்தி,—அதன்மேல் வாய்ந்த வலக்கை வைத்து - அதன்வாயிலே சிறந்த வலக்கையை வைத்து. எ - று. (ருகசு)

சங்கென்னு முத்திரையாற் றாழ்ந்தொழுகுந் தண்புன [லாட்
டெங்களிறை தங்கிலிங்கத் தின்.

இ - ள். எங்கள் இறை தங்கு இலிங்கத்தின் - நமது கடவுளாகிய சிவபெருமான் இருக்கும் இலிங்கத்திலே—தாழ்ந்து ஒழுகும் தண் புனல் - அபிஷேககலசத்தினின்றுங் கீழ்நோக்கி விழுகின்ற குளிர்ந்த திருமஞ்சனத்தை—சங்கு என்னும் முத்திரையால் ஆட்டு - சங்கமுத்திரையினால் அபிஷேகஞ்செய்க. எ - று.

சங்கென்னு முத்திரையாந் தர்ச்சனிமூலத்தைவலத்
தங்குட்டத் தக்கிரந்தொட் டால்.

இ - ள். வலத்து அங்குட்டத்து அக்கிரம் தர்ச்சனி மூலத்தைத் தொட்டால் - வலக்கையினது பெருவிரனுனி சுட்டுவிரலினடியைத் தொட்டால்,—சங்கு என்னும் முத்திரை ஆம்- அது சங்கமுத்திரையாம். எ - று. (௫௧௮)

ஆன்கோட்டு மாத்திரத்தி னாலங் குலவுயரத்
தான்விழுநீ ராட்டுகலிங் கத்து.

இ - ள். நாலங்குல உயரததான் ஆன் கோட்டு மாத்திரத்தின் விழும்நீர் - நாலங்குலவுயரத்தினின்றும் பசுவினது நுனிக்கொம்பின் பருமைபோலச்சிறுக விழுஞ்சலத்தை—இலிங்கத்து ஆட்டுக - பரார்த்தலிங்கத்தில் அபிஷேகஞ்செய்க. எ-று.

ஆன்மார்த்தலிங்கத்திலே பூசிக்கின், அதிற்பாதி பருமையும் இரண்டங்குலவுயரமுங்கொள்க. (௫௧௯)

அபிடேகாந்தத்திலே செயற்பாலதுணர்த்துகின்றார்.

பத்தியினு லாட்டிடுக சங்குளுறும் பாணியினை
வத்திரத்தான் மேலீர மாற்று.

இ - ள். சங்குள் உறும் பாணியினைப் பத்தியினல் ஆட்டிடுக - சங்கினுள் இருக்கின்ற சலத்தைப் பத்தியினல் அபிஷேகஞ்செய்;—மேல் ஈரம் வத்திரத்தால் மாற்று - அதன்பின்பு சிவலிங்கப்பெருமான் திருமேனியிலுள்ள ஈரத்தைத் திருவொற்றுடையாலே மாற்றுக. எ - று. (௫௨௦)

சிவலிங்கத்தை எழுந்தருளப்பண்ணுந்தானமுணர்த்துகின்றார்.

எழுந்தருளப் பண்ணிடுக பீடத் திலிங்கம்
விழைந்துகம லாதனத்தின் மீது.

இ - ள். பீடத்துக் கமல ஆதனத்தின் மீது - பீடத்திலே பதுமாதனத்தின்மேலே—இலிங்கம் விழைந்து எழுந்தருளப் பண்ணிடுக - சிவலிங்கத்தை விரும்பி எழுந்தருளப்பண்ணுக. எ - று. (௫உக)

ஆசனவகையுணர்த்துகின்றார்.

அருகஞ் சலாதனமு மிட்டலிங்கத் தென்று
மருகக் திரமபரார்த் தத்து

இ - ள். இட்டலிங்கத்துச் சலாதனமும் அருகம் - இட்ட லிங்கத்துக்குச் சலாசனமும் உரித்தாம்;—பரார்த்தத்துத்திரம் என்றும் அருகம் - பரார்த்தலிங்கத்துக்குத் திராசனமே எக்காலத்தும் உரித்தாம். எ - று.

இட்டலிங்கத்துக்கு ஸ்நானவேதிகையிலே சலாசனமும், ஸ்நானவேதிகையினின்றும் பீடத்தெழுந்தருளப்பண்ணிய பின்பு திராசனமும் பூசிக்க. பரார்த்தத்திலே சகளமூர்த்தியை ஸ்நானவேதிகையிற் சலாசனங்கற்பித்துப் பூசிக்க. (௫உஉ)

நிறுத்தமுறையானே சலாசனமுணர்த்துகின்றார்.

சலாதனம னந்தருந்தன் மாதியொரு நான்கு
நலாரெண்ணு மம்புயமு நாடு.

இ - ள். அனந்தரும் - அனந்தாசனமும்—தன்ம ஆதி ஒரு நான்கும் - தன்மம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் என்னும் நான்கும்—நலார் எண்ணும் அம்புயமும் - நல்லோர் மதிக்கும் பதுமமும்—சலாதனம் நாடு - சலாதனமாமென்றறி. எ - று.

சலாசனமெனினும் சடுத்தாசனமெனினுமொக்கும். (௫உ௩)

திராசனமுணர்த்துகின்றார்

ஆதார சுத்தி முதற்குடிலா சத்தியந்த
மோதாய் திராதனமென் றோர்ந்து.

இ - ள். ஆதாரசத்தி முதல் குடிலாசத்தி அந்தம் - ஆதாரச த்திமுதற் குடிலாசத்தியீறாக அடைவிலே அருச்சிப்பது--திரா தனம் என்று ஓர்ந்து ஓதாய்-திராசனமென்றறிந்துசொல்.எ-று

ஆவாகனாதிகளுக்கு மந்திரம் மூன்று திருக்குறளா லுணர்த்துகின்றார்.

ஆவாக னாதிகளைச் சத்தியோ சாதாதி
நாவாற் சொலிச்செய் நயந்து

இ - ள். ஆவாகன ஆதிகளை - ஆவாகனம தாபனம் சந்நிதா னம் சந்நிரோதனம் சுவாகதார்க்கியம் என்னும் ஐந்தையும— நயந்து சத்தியோசாத ஆதி நாவால் சொலிச் செய் - விரும்பி முறையே சத்தியோசாதமுதலிய ஐந்துமந்திரங்களையும் நாவி னாலுச்சரித்துச் செய்க. எ - று.

திக்குப்பந்தனம் அத்திரத்தினாலும், அவகுண்டனம் கவசத் தினாலும், தேனுமுத்திரை மூலத்தினாலும், மகாமுத்திரை சத் திமந்திரத்தினாலுஞ்செய்க. (௫உ௫)

இருதயத் தினாலு மிவைபுரிய லாகு
மிருதயமெங் கும்பொதுவென் றெண.

இ - ள். இருதயம் எங்கும் பொது - இருதயமந்திரம எல்லா க்கிரியைகளுக்கும் பொதுவாம்;—இவை இருதயத்தினாலும் புரியலாகும் என்று எண் - ஆதலால் ஆவாகனமுதலிய இக்கிரி ரியைகளை இருதயமந்திரத்தினாலுஞ்செய்யலாமென்றறி.எ-று.

மந்திரந் தன்னை மதித்தியம்பாக் கன்மத்தும்
மந்திரத்தைச் சொல்க மதித்து.

இ - ள். மந்திரந்தன்னை மதித்து இயம்பாக் கன்மத்து - ஆகமங்களிலே இதற்கு இம்மந்திரமென்று சுட்டிச் சொல்

லாத கிரியைகளெல்லாவற்றிற்கும்--இம்மந்திரத்தை மதித்துச் சொல்க - இவவிருதயமந்திரத்தையேஉரியதென்று தெளிந்து உச்சரிக்க. எ - று. (௫உஎ)

பஞ்சாவரணபூசை இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

பிரமாங்கம் வித்தேசர் பேணுகண மெண்டிக்
குரமொடுகாப் போர்படைக ளும்.

இ - ள். பிரமாங்கம் - பஞ்சப்பிரமசடங்கதேவர் பதினொரு வரையும்—விததேசா - விததியேசரா எண்மரையும் —பேணு கணம் - விரும்பப்பட்ட கணேசுரர் எண்மரையும்—எண் திக்கு உரமொடு காப்போா - நன்குமதிக்கப்படும் உலோகபா லர்பதின்மறையும்—படைகளும் - அவர்களுடைய ஆயுதங் களபத்தையும். எ - று.

விததியேசுரர் எண்மராவாா அநந்தா, சூக்குமர், சிவோத்த மர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிக ண்டி எனவிவா. கணேசுரா எண்மராவார் நந்தி, மகாகாளர், பிருங்கி, கணபதி, இடபம, கந்தர், பார்வதி, சண்டா எனவி வர். உலோகபாலர் பதின்மராவாா இந்திரன், அக்கினி, இய மன், நிருதி, வருணன, வாயு, குபேரன், ஈசானன், பிரமா, விட்டுணு எனவிவா. உலோகபாலராயுதம் பத்தாவன வச்சி ரம், சத்தி, தண்டம், கட்கம், பாசம், அங்குசம், கதை, சூலம், பதுமம், சக்கரம் எனவிவை. (௫உஅ)

பஞ்சா வரண மருச்சிக்க பாங்காக
வெஞ்சா விதியெண்ணி யீங்கு.

இ - ள். பஞ்சாவரணம்-பஞ்சாவரணத்திலும்—எஞ்சாவிதி எண்ணி - குறைவில்லாத விதியை ஆராய்ந்து—பாங்கு ஆக ஈங்கு அருச்சிக்க - உரிமை பொருந்த இங்கே பூசிக்க. எ - று.

பிரமாங்கங்களைத் தளங்களிலும், வித்தியேசுரர்களைத் தளாக்கிரங்களிலும், கணேசுரர்களைப் பீடத்தின கண்டத்திலும், உலோகபாலர்களைக் கீழ்ப்பீடத்திலும், தசாயுதங்களை ஆதாரசிலையின்மேலும் பூசிக்க. வித்தியேசுரர்களையும் கணேசுரர்களையும் நீக்கிப் பூசிப்பது திரயாவரணபூசை. பிரமாங்கங்களை மாத்திரம் பூசிப்பது ஏகாவரணபூசை. (ருஉகூ)

பாத்தியாதிகட்கு முத்திரை இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

அங்குட்ட மத்திமைய நாமிகையி னாற்கொடுக்க
தங்கையாற் பாத்தியமுந் தான்.

இ - ள். பாத்தியமும் - பாத்தியாசமனார்க்கியங்களைக் கொடுக்கும்போது,—தங்கையால் அங்குட்டம் மத்திமை அநாமிகையினால் கொடுக்க - பாத்திரத்தை இடக்கையினால் வைத்துக்கொண்டு வலக்கையின் பெருவிரலும் நடுவிரலும் ஆழிவிரலுமாகிய மூன்றையுங்கூட்டிப் பிடிக்கும மிருகமுத்திரையினாலே கொடுக்க. எ - று. (ருகூ0)

அங்குட்டந் தர்ச்சனியி னாற்கொடேே லர்க்கியமு
மங்குதிர மாங்கொடுக்கி னப்பு.

இ - ள். அர்க்கியமும் அங்குட்டம் தாச்சனியினால் கொடேல் - அர்க்கியமுதலியவற்றைப் பெருவிரலினாலுஞ் சுட்டுவிரலினாலுங் கொடாதே,—அங்குக் கொடுக்கின் அப்பு உதிரம் ஆம் - அங்ஙனங்கொடுக்கின், அந்தச்சலம் இரத்தத்துக்கொக்கும். எ - று. (ருகூக)

பாத்தியத்துக்குத் திரவியங்களுணர்த்துகின்றார்,

ஆரமிலா மச்சை யறுகோடு வெண்கடுகுஞ்
சீருறவே பாத்தியத்திற் சேர்.

இ - ள். ஆரம் இலாமச்சை அறுகோடு வெண்கடுகும் - சந்தனம் இலாமச்சை அறுகு வெண்கடுகு என்னும் இந்நான்கையும்—சீர் உறவே பாத்தியத்தில் சேர் - விதிப்படி பாத்தியத்திற்கூட்டு. எ - று. (௫௩௨)

ஆசமனத்துக்குத் திரவியங்கள் இரண்டிருக்குறளா லுணர்த்துகின்றார்.

இலவங்கங் கர்ப்பூரஞ் சாதிசிற் றேல
நலவசுவா சேலமுநன் று.

இ - ள். இலவங்கம் - இலவங்கப்பட்டையும்—கர்ப்பூரம் - கருப்பூரமும—சாதி - சாதிக்காயும்—சிற்றேலம் - சிற்றேலமும்—வசுவாசி - வசுவாசியும்—ஏலமும் - பேரேலமுமாகிய ஆறுதிரவியங்களின் பொடியையும்—நன்று - நன்றாக. எ-று.

ஆசமன மாகு மறலியொடு கூட்டுதலும்
பாசத்தைப் பாற்றும பதிக்கு.

இ - ள். அறலியொடு கூட்டுதலும - சலத்துடனே கூட்டுதலும்,—பாசத்தைப் பாற்றும் பதிக்கு ஆசமனம் ஆகும் - ஆன்மாக்களுடைய பாசத்தை நீக்குஞ் சிவபெருமானுக்கு ஆசமனமாம். எ - று. (௫௩௪)

அருக்கியதத்துக்குத திரவியங்களுணர்த்துகின்றார்.

அருக்கியம்பா னீரெள் ளரிசிகுசை யந்த
நிறைத்தமலர் வெண்கடுகு நெல்.

இ - ள். பால் நீர் எள் அரிசி குசை அந்தம் - பாலும் சலமும் எள்ளும் அரிசியும் தருப்பைநுனியும்—நிறைத்த மலர் வெண்கடுகு நெல் - நிறைக்கப்பட்ட பூவும வெண்கடுகும் நெல்லுமாகிய இவவெட்டும்—அருக்கியம் - அருக்கியந்தாபித்தற்குரியனவாம். எ - று. (௫௩௫)

பாத்தியாதிகொடுக்குந்தானமுணர்த்துகின்றார்.

பாதத்திற் பாத்தியமே பாங்குமுகத் தாசமன
மாதிமுடிக் கேற்றருக்கி யம்.

இ - ள். ஆதி பாதத்தில் பாத்தியம் - சிவபெருமானுடைய இரண்டுபாதங்களினும வலமிடமாக நமோந்தமாகப் பாத்தியத்தை ஒவ்வொருதரமும,--முகத்து ஆசமனம் - ஈசானமுதலிய ஐந்துதிருமுகங்களினும் சுவதாந்தமாக ஆசமனத்தை மும்மூன்றுதரமும்,—முடிக்கு அருக்கியம் - ஈசானமுதலிய ஐந்துதிருமுடிகளினும் சுவாகாந்தமாக அருக்கியத்தை ஒவ்வொருதரமும்,—ஏற்று பாங்கு - கொடுத்தல் உரித்தாம். எ - று. (ருங௬)

முகநிரூபணம் இரண்டுதிருக்குறளாலுணர்த்துகின்றார்.

அபிமுகன்பூர் வத்தமல னித்தியகன் மாதிக்
கபிமுகனு வன்மேல்பா கத்து.

பாங்குறவே கும்பந்தா பிக்கும்போ தும்பத்த
ரோங்குதற்குத் தீக்கைசெயி னும்.

இ-ள். அமலன் நித்தியகன்மாதிக்குப் பூர்வத்து அபிமுகன் - சிவபெருமான் நித்தியமுதலிய கருமங்களுக்குக் கிழக்குமுகமாகவே இருப்பார்;—பாங்கு உறவே கும்பம் தாபிக்கும்போதும - யாகசாலையிலே விதிப்படி கும்பந்தாபிக்கும்போதும்—பத்தர் ஓங்குதற்குத் தீக்கை செயினும் - சிவபத்தர்கள் உய்யுமபொருட்டுத் தீக்ஷையிலே கும்பந்தாபிக்கும்போதும்—மேல் பாகத்து அபிமுகன் ஆவன் - மேற்குமுகமாக இருப்பர். எ - று. (ருங௮)

நைவேத்தியஞ்செய்யுமுறைமை ஐந்துதிருக்குறளா
லுணர்த்துகின்றார்.

அருத்துகவைந் தானனத்து மன்னுதி யல்லா
லருத்திடுக பூர்வவத னத்து.

இ - ள். ஐந்து ஆனனத்தும் அன்னம் ஆதி அருத்துக - ஈசானமுதலிய பஞ்சவத்திரங்களினும் அன்னமுதலியவற்றைத் தனித்தனியே பாத்திரத்திற்படைத்து நிவேதிக்க;--அல்லால் பூர்வவதனத்து அருத்திடுக - அது கூடாவழி ஏகபாத்திரத்திற் படைத்துத் தற்புருடவதிரத்திலே நிவேதிக்க. எ - று. ()

வத்திரமாந் தற்புருட மாதேவற் காதலினவ்
வத்திரத்தி னூட்டல் வழக்கு

இ - ள். தற்புருடம் மாதேவற்கு வததிரம் ஆம் - தற்புருடமே சிவபெருமானுக்கு வத்திரமாம்;—ஆதலின் அவவத்திரத்தின ஊட்டல் வழக்கு - ஆதலினால் அவவத்திரத்தின் நிவேதித்தலே முறைமையாம். எ - று. (ருசo)

அகோர மிதயமம லற்கியலை யாய்ந்தோ
ரகோரமுகத் தன்னமருத் தார்.

இ - ள். அகோரம் அமலற்கு இதயம் - அகோரம் சிவபெருமானுக்கு இருதயமாம்;—இயலை ஆய்ந்தோர் அகோரமுகத்து அன்னம் அருத்தார் - ஆதலினாற் சிவாகமங்களை ஆராய்ந்தவர்கள் இவ்வகோரமுகத்தில் அன்னத்தை நிவேதியார்கள். எ-று.

பூர்வதிசை யிற்புருடத் திற்போ தமிர்தாதி
யார்வமுற மற்றுமுத வாங்கு.

இ - ள். பூர்வதிசையில் புருடத்தில் - ஆதலினாற் கிழக்கு நோக்கிய தற்புருடத்திற்முனே—போது அமிர்து ஆதி மற்றும் ஆர்வம் உற உதவு - திருப்பள்ளித்தாமம் அன்னாதி மற்றுமுள்ள உபசாரங்களை விருப்பம் பொருந்தக் கொடு. எ - று. ()

அங்குட்ட மத்திமைய நாமிகையா லன்னாதி
யங்கருத்தாய் தற்புருடத் தால்.

இ-ள். அங்குட்டம் மத்திமை அநாமிகையால்-பெருவிரலும் நடுவிரலும் ஆழிவிரலுமாகிய மூன்றையுங்கூட்டிப்பிடிக்கும் மிருகமுத்திரையினால்—அன்னாதி தற்புருடத்தால் அருத்தாய் - அன்னாதிகளைத் தற்புருடமந்திரத்தினாலே நிவேதிக்க. எ - று.

நிவேதனத்துக்கு அரிசி வரையறுத்துணர்த்துகின்றார்.

இருநாழி தான்கனிட்ட மிட்டலிங்கத் தென்று
மிருதூணி யுத்தமமென் றெண்.

இ - ள். என்றும் இட்டலிங்கத்து - தினந்தோறும் இட்டலிங்கத்துக்கு நிவேதித்தற்கு—இருநாழிதான் கனிட்டம் - இருநாழியரிசி அதமமாம்;—இருதூணி உத்தமம் என்று எண்- இருதூணியரிசி உத்தமமென்றறி. எ - று.

உத்தமத்தினுத்தமம் இருதூணி; உத்தமத்தின் மத்திமம் எழுகுறுணி; உத்தமத்தினதமம் தூணிப்பதக்கு. மத்திமத்தினுத்தமம் ஐங்குறுணி; மத்திமத்தின்மத்திமம் தூணி; மத்திமத்தினதமம் முக்குறுணி. அதமத்தினுத்தமம் பதக்கு; அதமத்தின்மத்திமம் குறுணி; அதமத்தினதமம் இருநாழி. ஐயுழக்கரிசிவைக்கிற் பிசாசபோசனமாம். புத்திபூர்வமாகவேனும் அபுத்திபூர்வமாகவேனும் இருநாழியிற்குறைய நிவேதித்தவன் ஒவ்வோரரிசிக்கு ஒவ்வொருகற்பம் பைசாசபுவனத்திற் பிசாசாயிருந்து ஆண்டுள்ள போகங்களை அநுபவிப்பனென்றறிக.

சுத்தான்னம், மத்வன்னம், தத்தியன்னம், பாயசான்னம், கிருசரான்னம்,குளான்னம்,முற்கான்னம் என அன்னம் எழுவகைப்படும். பிறிதொன்றுங்கூட்டாது தனியே பாகம்பண்ணப்பட்டது சுத்தான்னம், தேன்வார்த்துப் பிசறிய அன்னம் மத்வன்னம். தயிர் வார்த்துப் பிசறிய அன்னம் தத்தியன்னம். வேண்டிய அரிசியும் அதிற்பாதி கொண்ட பயற்றம் பருப்பும் அரிசியினிருமடங்கேனும் மும்மடங்கேனும் நான்மடங்

கேனுங்கொண்ட பாலுங்கூட்டிப் பாகப்பண்ணப்பட்டது பாயசான்னம். அரிசியின் நான்கிலொருபங்கு எள்ளுப்பொடியும் எள்ளுப்பொடியிற்பாதி நெய்யுமாகப்பிசறிய அன்னம் கிருசரான்னம். அரிசியிற்பாதி கொண்ட பாலும் அரிசியிற்பாதி கொண்ட வெல்லமும் வெல்லத்திற் பாதி கொண்ட நெய்யுமாகக் கூட்டிப் பாகம்பண்ணப்பட்டது குளான்னம். அரிசியின் நான்குமடங்கு கொண்டசிறுபயறும் தேங்காய்த் துருவலுங் கூட்டிப் பாகமபண்ணப்பட்டது முற்கான்னம். இனி முற்கான்னம், சர்ஷபான்னம், மாஷான்னம், ஆமிலான்னம்,திலான்னம் என அன்னம் ஐவகைப்படும் என்றலுமொன்று. சர்ஷபம் கடுகு. ஆமிலம் புளி. கிருசரம் எள்ளு. (௫௪௪)

தற்புருடமுகத்தில் நிவேதித்தற்குக் காரண முணர்த்துகின்றார்.

கன்மசா தாக்கியங்காண் டற்புருட மாதலினாற்
கன்மஞ்செய் கன்மத்தின் கண்.

இ - ள். தற்புருடம் கன்மசாதாக்கியம் காண் - தற்புருடவத்திரம் கன்மசாதாக்கியமாம்;—ஆதலினால் கன்மம் கன்மத்தின்கண் செய் - ஆதலால் நைவேத்தியமுதலிய உபசாரங்களனைத்தையும் அக்கன்மசாதாக்கியத்திற்றானே செய்க. எ - று.

சிவசாதாக்கியமுதலிய நான்கும் ஒன்றையொன்று பற்றி அடைவில் இக்கன்மசாதாக்கியத்தை அடைந்திருத்தலின்,இக்கன்மசாதாக்கியத்திற் செய்தனவெல்லாம் மற்றைச்சாதாக்கியங்களினும் செய்தனவேயாமென்க. (௫௪௫)

சாதாக்கியங்களின் இலக்கணம் இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

கன்மம் புருடங் கருத்தா வகோரமேற்
குன்னுங்கான் மூர்த்த முறும்.

இ - ள். உன்னுங்கால் - சிந்திக்குங்காலத்து,—கன்மம் புருடம் - கன்மசாதாக்கியம் தற்புருடமாம்;—கருத்தா அகோரம்-கர்த்திருசாதாக்கியம் அகோரமாம்;—ஊர்த்தம மேற்கு உறும்-ஊர்த்திசாதாக்கியம் சத்தியோசாதமாம். எ - று. (ருசசு)

வாம மமூர்த்தமே யீசான வத்திரத்தி
னமஞ் சிவமென்றே நாடு.

இ - ள். அமூர்த்தம் வாமம் - அமூர்த்திசாதாக்கியம் வாமதேவமாம்;—சிவம் ஈசானவத்திரத்தின் நாமம் என்றே நாடு-சிவசாதாக்கியம் ஈசானவத்திரமாமென்றறி. எ - று. (ருசஎ)

சிவன் சகளநிட்களராய முறைமையுணர்த்துகின்றார்.

சாதாக் கியமைந்தி னாற்சகள நிட்களனும்
போதானந் தன்சிவனன் போடு.

இ - ள். போத ஆனந்தன் சிவன் - ஞானானந்தராகிய சிவபெருமான்—அன்போடு - ஆன்மாக்கண்மேல் வைத்தகாருண்ணியத்தினாலே—சாதாக்கியம் ஐந்தினால் சகளநிட்களன் ஆம்-பஞ்சசாதாக்கியத்தினாற் சகளநிட்களராவர். எ - று.

சகளம் வடிவுடையது. நிட்களம் வடிவில்லது. இவ்விருதன்மையுங்கூடுகையாற் சகளநிட்களமென்றார். (ருசஅ)

சகளநிட்களராயினமைக்குக் காரணம் இரண்டு
திருக்குறளாலுணர்த்துகின்றார்.

நிட்களன்று னன்பா னினைந்தருச்சிக் கச்சகள
நிட்களனா னனிமல னே.

இ - ள். மனம் ஒருவடிவிற்பற்றுவதொழிந்து வடிவறுதியிற் பற்றமாட்டாதாதலால்,—நிட்களன் நிமலன் - நிட்களராகிய சிவபெருமான்—அன்பால் நினைந்து அருச்சிக்கச் சகள

நிட்களன் ஆனான் - தம்மை ஆன்மாக்கள் அன்பினாலே தியானித்துப் பூசிக்கும்பொருட்டுச் சகளநிட்களராயினார். எ - று.

ஆதலினா லென்றுஞ் சதாசிவனை யர்ச்சிக்க
வோதிவிதி வாணலிங்கத் தும்.

இ - ள். ஆதலினால் - ஆதலினாலே—விதி ஓதி - சிவபூசாவிதியை ஓதியுணர்ந்து—சதாசிவனை வாணலிங்கத்தும் என்றும் அர்ச்சிக்க - சதாசிவமூர்த்தியை வாணலிங்கமுதலிய இலிங்கங்களின் எக்காலமும் பூசிக்க. எ - று. (௫௫௦)

பூசாந்தத்திற் பிரதக்கிணவிதியுணர்த்துகின்றார்.

எழுமூன்றல் லாலைம்மூன் றொன்பானே ழைந்து
வழுவலமூன் றுஞ்செய் வலம்.

இ - ள். வலம் - பிரதக்கிணத்தை—எழுமூன்று - இருபத்தொருதரமாயினும்,—அல்லால் ஐம்மூன்று-அஃதன்றிப் பதினைந்துதரமாயினும்,—ஒன்பான் - ஒன்பதுதரமாயினும்,—ஏழ் - ஏழுதரமாயினும்,—ஐந்து - ஐந்துதரமாயினும்,—மூன்றும் - மூன்றுதரமாயினும்,—செய் - செய்க;—வழு அல - இவை குற்றமல்லவாம். எ - று.

எனவே, இரண்டுதரம் ஒருதரஞ்செய்தல் குற்றமென்ப தாயிற்று. (௫௫௧)

பூசாந்தத்திற் பிரதக்கிணஞ்செய்யாதார்க்குக் குற்றமுணர்த்துகின்றார்.

செய்யான் வலத்தைச் சிவபூசை செய்தபல
மெய்தா னவன்விடம்ப னே.

இ - ள். வலத்தைச் செய்யான் - பூசைமுடிவிலே பிரதக்கிணஞ்செய்யாதவன்—சிவபூசை செய்த பலம் எய்தான் - அச்

சிவபூசை செய்ததனாலாகும் பலத்தை அடையான்;—அவன் விடம்பனே - அவன் விடம்பனெனப்படுவன். எ - று. ()

நமஸ்காரவிதியுணர்த்துகின்றார்.

அட்டாங்கத் தாற்புருட ரல்லாதார் பஞ்சாங்க
மிட்டமுற மூன்றிருவர்க் கும.

இ - ள். இட்டம் உற - விருப்பம் பொருந்தும்படி—புருடர் அட்டாங்கத்தால் - ஆடவர்கள் அட்டாஙகமாக நமஸ்கரிக்க;—அல்லாதார் பஞ்சாங்கம் - பெண்கள் பஞ்சாங்கமாக நமஸ்கரிக்க;—மூன்று இருவர்க்கும் - திரயாங்கம் அவ்விருவர்க்குமுரித்தாம். எ - று.

நமஸ்காரவிதியை "வலஞ்செய்து தண்டனை மானவிதி வழிதழுவத்—தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமற் றிருகன்னந்—துலங்குமுக வாய்புயங்க ளெனுமெட்டுந் தோயமயி-ரிலங்குசிரங் கரமுழந்தா ளெனுமைந்து மிசைந்திடவே" என்பதனாலும், "சிரஙகர முழந்தாண் மண்ணைத் தீண்டிற்பஞ் சாங்க மாகுஞ்—சிரந்தனிற் கரங்கள் கூப்பிற் றிரிவித வங்க மாகுஞ்—சிரந்தனைத் தாழ்த்து நிற்கை தேரினே காங்க மாகும்—வரம்பெறு மெட்டு மைந்து மத்திம மூன்றே கம் பின்." என்பதனானுமறிக. (ருருக)

சண்டேசுரபூசை மூன்றுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.

ஏறாது குன்றா தியற்றி வினையனைத்துஞ்
சீறார்சண் டன்பூசை செய்.

இ - ள். வினை அனைத்தும் ஏறாது குன்றாது இயற்றி - சிவ பூசாகருமங்களெல்லாவற்றையும் நூனாதிகமின்றிச் செய்து—

சீ று ஆர் சண்டன் பூசை செய் - கோபம் பொருந்திய சண்டேசுரரைப் பூசைபண்ணு. எ - று. (௫௫௪)

அருச்சிக் கினுமலரன் ஞதியிலீ சன்ரு
ளருச்சிக்க சண்டனையன் பால.

இ - ள். ஈசன் தாள் மலர் அன்ஞதியில் அருச்சிக்கினும் - சிவபெருமானுடைய திருவடிகளைப் புஷ்பம் அன்னமுதலிய கணிகலிங்கஙகளிலே பூசிப்பினும்,--சண்டனை அன்பால் அருச்சிக்க - சண்டேசுரரை அன்போடு பூசைபண்ணுக. எ - று.

பூசித்தவுடன் விடப்படுதலாற் கணிகமெனப்பட்டன. கணிகலிங்கம் பன்னிரண்டு. அவையாவன மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்ஷம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, சருக்கரை, மா என்பனவாம். ()

சண்டனையர்ச் சித்தவரே சம்புவையர்ச் சித்தபலங்
கொண்டிடுவர் மற்றையாகொள் ளார்.

இ-ள். சண்டனை அர்ச்சிததவரே சமபுவை அர்ச்சித்த பலம் கொண்டிடுவர் - சண்டேசுரரைப் பூசித்தவர்களே சிவபெருமானைப் பூசித்ததனலாகும் பயனைப் பெறுவர்கள்,—மற்றையர் கொள்ளார் - பூசியாதவர்கள் அப்பயனைப் பெருர்கள். எ - று.

உடையவரை எழுந்தருளப்பண்ணுமுறைமை
யுணர்த்துகின்ருர்.

தலையிற் கழுத்திற் றரிக்கசிவ லிங்க
மலையாமற் பேடகத்தி ஞக்கு.

இ - ள். சிவலிங்கம் அலையாமல் பேடகத்தின் ஆக்கு - சிவலிங்கப்பெருமானை விசித்திரவஸ்திரத்தினலே சுற்றி அசையாவண்ணம் பேடகக்கோயிலின்கண் எழுந்தருளப்பண்ணி

வைக்க;—தலையில் கழுத்தில் தரிக்க - யாத்திராகாலங்களிலே சிரத்திலேனுங் கழுத்திலேனுந் தரித்துக்கொள்க. எ - று.

துறவிகள் வலக்கக்கத்திலேனும், வாகுவிலேனும், முழங்கையிலேனும், மணிக்கட்டிலேனுந் தரிக்கலாமென்றறிக. நடக்கும்போது தாம்பூலாதிபட்சணம் மலசலம் விடல் நரவாகனமொழிந்த வாகனங்களினேறல் புத்தகந்தண்டு கமண்டலமொழிந்த சுமையெடுத்தலாகா. அரசர் சோரர் யானை புலி முதலியவற்றின் பயத்தால் மலசலம் விடின், அச்சமற்ற எல்லையிற் சென்றபின், மலமோசனக்குற்றநீக்கத்தின்பொருட்டு ஐந்துபலசந்தனமாயினும் அதிற்பாதியாயினும் ஆட்டிப் பஞ்சகவ்வியமுந் தனித்தனி முழுக்காப்புஞ்சாத்தி அகோரத்தைப் பதினையாயிரந்தரஞ் செபிக்க. கேவலமுடையார் கவ்வியமும் இருபலச்சந்தனமும் ஆட்டித் தனித்தனி முழுக்காப்புஞ்சாத்தி அகோரத்தை எண்ணாயிரந்தரஞ் செபிக்க. சுத்தமுடையார் பஞ்சகவ்வியமாயினும் அவற்றுளொன்றாயினும் ஆட்டிச் சந்தனமேனும் வில்வமேனும் ஒருபலமாட்டி அகோரத்தை ஐயாயிரந்தரஞ் செபிக்க. சலமோசனக்குற்றநீக்கத்தின்பொருட்டு மூவருங் கவ்வியத்தை ஆட்டி அகோரத்தை முறையே நாலாயிரந்தரம் ஆயிரந்தரம் ஐஞ்ஞூறுதரஞ் செபிக்க. இரண்டும் மோசித்துக் கழுவிச் சுத்தாசமனமுதலிய கருமங்களாற் சுத்தனாகாது ஒருநாழிகை சென்று செய்தானாயின், இருகுணிதஞ்செய்க. இப்பயங்களினாற் பூசையோடு கூட நித்திரை செய்யின், மூவரும் அகோரத்தை முறையே அறுநூறுதரம் முந்நூறுதரம் நூறுதரஞ்செபிக்க. (௫௱௭)

இட்டலிங்கத்துக்கு நிவேதித்தது நிருமாலியமன்றென்ப துணர்த்துகின்றார்.

இட்டலிங்கத் துக்குநிவே தித்ததுநின் மாலியமன்
றிட்டமுற மாந்தினுறு மின்பு.

இ - ள் இட்டலிங்கத்துக்கு நிவேதித்தது நின்மாலியம் அன்று - ஆன்மார்த்தலிஙகத்துக்கு நிவேதிக்கப் பட்டது நிருமாலியமன்றும்;—இட்டம உற மாந்தின் இன்பு உறும் - ஆதலால் அதனை நாடோறும் விருப்பம் பொருந்தும்படி நியமமாகப் புசிக்கின் இன்பமுண்டாம். எ - று. (௫௫௦)

ஆன்மார்த்தலிங்க நிருமாலியம் புசித்தற்குரியார் இவரென்பது இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்

பூசகற்கே தானுகு மற்றையாக டாம்புசித்தா
லாச றுநதே சாமென றறி.

இ - ள். பூசகற்கே தான் ஆகும - ஆதலால் அதனைப் புசித்தல் பூசகனுக்கே உரித்தாம்;—மற்றையாகள் தாம் புசித்தால ஆசு அறும தேசு ஆம எனறு அறி - புத்திரர் மித்திரர் பாரி முதலாயினோா புசித்தாலும் அவர்களிடத்து உண்டாகிய பாவம் நீங்கி ஞானம உணடாமெனறறி. எ - று. (௫௫௧)

மனனும் படிகத்தின் வாணத்தின் மாலியந்தான்
கன்னியர்க்காம பாலர்க்காங் காண்.

இ - ள். மன்னும் படிகத்தின் வாணத்தின் மாலியந்தான் - பொருந்திய படிகலிங்கத்தின் நிருமாலியமும் வாணலிங்கத்தின் நிருமாலியமும்—கன்னியர்க்கு ஆம் பாலர்க்கு ஆம் காண் - கன்னியர்களுக்குமாம் பாலகர்க்குமாமென்றறி. எ - று. ()

ஆசாரியர் சேடமும் திருமுறையின் சேடமும் புசிப்பார் பெறும் பயனுணர்த்துகின்றார்.

தேசிகன் சேடந் திருமுறையின் சேடமுந்
தேசுறுமுண் பார்க்கென்றே தேறு.

இ. - ள். தேசிகன் சேடம் திருமுறையின் சேடமும் உண்பார்க்கு - சிவபதமடைந்த ஆசாரியனைப் பூசித்து நிவேதித்த

சேடத்தையும் திருமுறைக்கு நிவேதித்த சேடத்தையும் பத்தியினால் உண்பவர்களுக்கு—தேசு உறும் என்றே தேறு - ஞானம் உண்டாமெனறறி. எ - று.

ஆசாரியர் பிரசாதங்கொள்ளவேண்டின் அவரநுமதிப்படி உச்சிட்டங் கொள்க; கொள்ளின் ஞானமுண்டாம். அவர் போசனஞ்செய்து உத்தராபோசனம் பண்ணியபின் பத்தியுடனே பிரசாதம் வாங்கிக்கொள்வதன்றி முன் வாங்கின் அவருடனே புசித்ததோடோக்குமாதலாற் குற்றமாமெனவறிக. சமபோசனகாலத்திற் பத்திமிகுதியினால் விரும்பிக் கேட்டானாயின் மறுக்க. அன்றேற் பிராணாகுதி முடிவிற் சிறிதன்னத்தைக் கொடுத்து அவவன்னத்தை அவன் புசிக்குமுன் மிருத்திஞ்சயத்தை எட்டுத்தரம் அபிமந்திரித்துப் புசிக்க. புசித்து விட்டானாயின் நூற்றெட்டுத்தரம் அபிமந்திரித்துண்க. வாங்கினன் முற்குற்றத்திற்கு ஐஞ்ஞூறுதரமும் பிற்குற்றத்திற்கு ஐயாயிரந்தரமும் அகோரத்தைப் போசனாந்தத்திற்செபிக்க. அவர் உண்ட கதலி முதலிய இலைப்பரிகலங்களில் உண்ணின் நானூறுதரஞ் செபிக்க. கொடுத்தவர் பாதி செபிக்க. அவர் அறியாமல் உண்டான இருநூறுதரஞ் செபிக்க. (௫௬௧)

சிவஞானிசேடம் புசிப்பார் பெறும்பய
னுணாத்துகின்றார்.

சிவஞானி பாத்திர சேட மருந்தி
னவஞான மெல்லா மறும்.

இ - ள். சிவஞானி பாத்திரசேடம் அருந்தின் - ஒருவன் சிவஞானி புசித்த பாத்திரசேடத்தை உண்டானாயின்,—அவஞானம் எல்லாம் அறும் - அவனிடத்துள்ள அவஞானமெல்லாம் நீங்கும். எ - று. (௫௬௨)

ஆசாரியப் பிரசாதத்தையும் சிவஞானிபாத்திரசேடத்தையும் பாவிக்கு முறைமையுணர்த்துகின்றார்.

மருந்துமிது வானமுது மீதெனவே வாஞ்சித்
தருந்தினர்க்கெல லாநலமு மாம்.

இ - ள், மருந்தும் இது வான் அமுதும் இது எனவே வாஞ்சித்து அருந்தினர்க்கு - ஆசாரியப்பிரசாதத்தையும் சிவஞானி பாத்திரசேடத்தையும் புசிக்கும்பொழுது எமது பிறவிப்பிணியைத் தீர்க்கும் மருந்தும் இதுவே தேவலோகத்திலுள்ள அமிர்தமும இதுவேயென்று பாவிதது விரும்பிப் புசித்தவர்களுக்கு—எல்லா நலமும் ஆம் - சகலநன்மைகளுமுண்டாம்.எ-று.

இந்நூலை எழுதிக் கொடுத்தவர் பெறும் பயன் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

எடு தி யிதழினுற விந்நூலை யீவார்
விழைவார்க்கு நூல்விதியி னல்.

இ - ள். இந்நூலை-சைவசமயநெறியென்னும் இந்த நூலை—நூல் விதியினல் இதழின் உற எழுதி - சிவாகமவிதிப்படி ஓலையிலே பொருந்த எழுதி—விழைவார்க்கு ஈவார் - அதனை விருமபுவோர்க்குக் கொடுப்பவர்கள். எ - று. (௬௬௨)

ஆயிரங் கற்பமெழுத் தொன்றுக் கமர்வருயிர்த்
தாயவனீ டும்புரத்துட் டாம்.

இ - ள். எழுதது ஒன்றுக்கு ஆயிரம் கற்பம் - ஓரெழுத்துக்கு ஆயிரங்கற்பமாக—உயிர்த் தாயவன் நீடும் புரத்துள் தாம் அமர்வர் - சர்வான்மாக்களுக்குத் தாயாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்குஞ் சிவலோகத்தில் வாழ்வர்கள்.எ - று. ()

இந்நூலைப் பூசிப்போர் பெறும்பயனுணர்த்துகின்றூ.

அர்ச்சிப்பா ரிந்நூ லலரினாற் பாவவிதம்
வாச்சித்து வாழ்வாராமேல் வான்.

இ - ள். இந்நூல் அலரினால் அர்ச்சிப்பார் - இந்நூலைப் பூவினாலே நாடோறும் பூசிப்பவர்கள்—பாவவிதம் வர்ச்சித்து மேல் வான் வாழ்வார் - பலவகைப்பட்ட பாவங்களையும் போக்கி மேன்மையாகிய சிவலோகத்தில் வாழ்வர்கள். எ - று. ()

இந்நூலைப் போதிப்பார் பெறும்பயனுணர்த்துகின்றூ.

படித்துணர்ந்திந் நூலபகர்வார் பக்குவர்க்குப் பாவ
மடாததமர்வார் சிவலோ கத்து

இ - ள். இந்நூல் படித்து உணர்ந்து பக்குவர்க்குப் பகர்வார் - இந்நூலை ஓதியுணர்ந்து பக்குவான்மாக்களுக்குப் போதிப்பவர்கள்—பாவம் அடாதது சிவலோகத்து அமர்வார் - பாவங்களைப் போக்கிச் சிவலோகத்தில் வாழ்வர்கள். எ - று.

இந்நூலை கேட்போர் பெறும் பயனுணர்த்துகின்றூ.

மகிழ்வுறக்கேட் பாருங் கரிசினை மாற்றிப
புகழுறச்சேர் வார்மேற் புரம.

இ - ள். மகிழ்வு உறக் கேட்பாரும் - இந்நூலை மகிழ்ச்சிபொருந்தக் கேட்பவர்களும—கரிசினை மாற்றிப் புகழ் உற மேற்புரம் சேர்வார் - பாவத்தைப் போக்கிக் கீர்த்தியுண்டாகும்படி மேன்மையாகிய சிவலோகத்தை அடைவர்கள். எ - று. ()

இந்நூலைக் கேட்டு முடிந்த நாளிலே செயற்பாலனவற்றை
இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றூர்.

முற்றியநாட் கேட்டிந்நூன் முன்வைத் தியன்றபொரு
ளர்ச்சிக்க தேசிகற்கார் வத்து.

இ - ள். இந்நூல் கேட்டு முற்றிய நாள் - இந்நூலைக் கேட்டு முடித்த நாளிலே—தேசிகற்கு இயன்ற பொருள் முன் வைத்து - போதகாசாரியருக்குத் தங்கள் தங்களால் இயன்ற திரவியம் பூமி பசு மோதிரமுதலியவைகளைக் கொடுத்து—ஆர்வத்து அர்ச்சிக்க - அவரை விருப்பத்தினோடும் பூசிக்கக்கடவர்கள். எ - று.

இதனைப் படித்தவர்களுக்கும் இவ்வாறே செய்க. (௫௭௧)

பந்த மறுக்கும் பசுபதிதன் பத்தர்க்கு
மந்தணர்க்கு மூட்டுகவன் னம்.

இ - ள். பந்தம் அறுக்கும் பசுபதிதன் பத்தர்க்கும் - பாசத்தைக் கெடுத்தருளுஞ் சிவபெருமானுக்கு அன்பர்களாகிய மாகேசுரர்களுக்கும்—அந்தணர்க்கும் - பிராமணர்களுக்கும்—அன்னம் ஊட்டுக - அன்னமூட்டக்கடவர்கள். எ - று. ()

இங்ஙனஞ்செய்தார் பெறும்பயனுணர்த்துகின்றார்.

இந்தமுறை தன்னை யியன்றபடி தாமியற்றின்
வந்துறுமே முன்சொல் வரம்.

இ - ள். இந்த முறை தன்னை இயன்றபடி தாம் இயற்றின் - இந்தமுறைமையை இயன்றபிரகாரஞ்செய்யின்,—முன்சொல் வரம் வந்து உறும் - முற்கூறிய சிவலோகப்பிராப்தியாகிய பலம் வந்து சேரும். எ - று. (௫௭௩)

நூலாசிரியர் பெயர்.

சைவ சமயநெறி சாற்றினன்சம் பந்தனுயிர்
மையலற வாய்க்க வரம்.

இ - ள். சம்பந்தன் - மறைஞானசம்பந்தநாயனார்—உயிர் மையல் அற வரம் வாய்க்க - ஆன்மாக்களுக்கு அஞ்ஞானம்

நீங்கவும் சிவபதப்பிராப்தியாகிய பலங்கிடைக்கவும்—சைவசமயநெறி சாற்றினன் - சைவசமயநெறியென்னும் இந்நூலைத திருவாய்மலர்ந்தருளினர். எ - று. (௫௭௨)

பொதுவிலக்கணமுற்றிற்று.

ஆ திருக்குறள் ௭௨௭.

சைவசமயநெறியுரை முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேவன் றிருவடிவாழ்க.

---

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧௫ | ௧௩ | பாதார்த்தங் | பதார்த்தங் |
| ௩.௧ | ௨௩ | கமங்ளைக் | கமங்களைக் |
| ௧௧௯ | ௨௩ | ஓரிலிங்கமும | ஓரிலிங்கமும் |
| ௧௪௩ | ௨௪ | மூவிதச்செபங் | மூவிதசெபங் |
| ௨௨௫ | ௫ | நீரீக்கணம் | நிரீக்கணம் |
| ௨௫௨ | ௧௨ | சர்ப்பக் | கர்ப்பக் |
| ௨௬௫ | ௨௪ | இருந்திராதி | இந்திராதி |
| ௨௭௯ | ௧௬ | இலிக்கத்துக்கு | இலிங்கத்துக்கு |

# திருக்குறளகராதி.


| பாட்டு. | பக்கம். |
|---|---|
| அகத்தின் | ௧௮௯ |
| அகாரணத் | ௨௪௩ |
| அகோர | ௨௯௩ |
| அக்கரநி | ௨௭௦ |
| அஙகியினை | ௬௯ |
| அஙகுட்-தா | ௨௯௦ |
| அங்குட்-தா | ௧௬௪ |
| அஙகுட்-தான் | ௧௯௭ |
| அஙகுட்யால | ௨௯௩ |
| அஙகு-யானீ | ௧௫௬ |
| அஙகுட்-யிறு | ௨௯௦ |
| அஙகுட்டம | ௨௨௮ |
| அசலஞ் | ௧௨௭ |
| அசசத்தா | ௬௮ |
| அஞசு | ௨௪௯ |
| அடிககணுவி | ௨௨௭ |
| அடியரிடா | ௩ |
| அடியிரட்டி | ௨௨௭ |
| அடைந்தவ | ௨௫ |
| அட்டமிசட் | ௯௦ |
| அட்டமியிற் | ௮௩ |
| அட்டாங்கத் | ௨௯௮ |
| அணிக | ௧௩௨ |
| அணியலுமா | ௧௫௯ |
| அணியறக | ௧௬௩ |
| அதன்பின | ௨௧௮ |
| அதன்பிணி | ௨௨௪ |
| அதன்பின்பு | ௨௨௨ |
| அதிதால | ௧௨௩ |
| அததமயத | ௮௪ |
| அதிபரா | ௯௩ |
| அதிரத்தா | ௧௯௬ |
| அதிரதி | ௨௩௯ |
| அநதணரா | ௩௪ |
| அந்தணரே | ௨௬ |
| அநதணா-மா | ௧௬௦ |
| அநதணா-மாம | ௨௯ |
| அநதநதி | ௨௪௭ |
| அந்தததூ | ௨௫௮ |
| அநதநுான் | ௩௫ |
| அநதயுகந | ௬௬ |
| அபிடேக | ௨௮௨ |
| அபிமுகன | ௨௯௨ |
| அமரரிடா | ௩ |
| அமலனைதத | ௨௨ |
| அமலன | ௭௩ |
| அயபிளைகநா | ௨௬௪ |
| அயன்முக | ௨௫௫ |
| அயனமிரண் | ௫௧ |
| அயனரியு | ௧௧௩ |
| அரசாயத | ௧௮௪ |
| அரயனைபயிலெ | ௧௯௪ |
| அரிதேற்பொ | ௧௧௫ |
| அருஙகனக | ௧௧௩ |
| அருகங | ௨௨௫ |
| அருகஞ | ௨௮௭ |
| அருகமல் | ௧௯௪ |
| அருகமேதே | ௨௭௨ |
| அருகமேநா | ௪௩ |
| அருகரலா | ௧௭௭ |
| அருக்கன | ௨௭௧ |
| அருக்கியம் | ௨௯௧ |
| அருச்சிக்க | ௨௬௭ |
| அருசசிக்கி | ௨௯௯ |
| அருததுக | ௨௯௨ |
| அருந்தலதி | ௧௭௮ |
| அருநதல்பதி | ௧௭௯ |
| அருநதிடுக | ௧௪௬ |
| அருந்திய | ௧௬௯ |
| அருந்திறு | ௨௦௧ |
| அருநதுகதக் | ௧௮௧ |
| அருநதுகவ | ௨௪௦ |
| அருநதுயபோக | ௧௯௭ |
| அருநதே-விட | ௧௭௦ |
| அருநதே-வி | ௧௮௦ |
| அருசசிதத்தா | ௨௮௦ |
| அருசசிப்பா | ௩௦௪ |
| அலரினைசசூ | ௧௮௨ |
| அலாருட் | ௨௧௯ |
| அல்லநிரு | ௨௬௩ |
| அலலாறசி | ௨௬௨ |
| அலலாற்சு | ௭௫ |
| அலலும் | ௧௧௦ |
| அவருள்ளும | ௫௫ |
| அவருள்-தீ | ௫௫ |
| அவருள்-தே | ௧௪ |
| அஃவனே | ௨௪௫ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| அவ்வியத்தம | ௧௨௬ |
| அவ்வியததம் | ௧௨௬ |
| அள்ளிப்பி | ௧௫௩ |
| அள்ளிப்பி | ௧௫௪ |
| அறவுநெ | ௧௬ |
| அறவுந்த | ௧௮ |
| அறவுமெவ | ௧௬ |
| அறவெறுத் | ௨௪௧ |
| அறிந்துவிதி | ௨௭௨ |
| அறிந்தே | ௭௯ |
| அறுபத | ௨.௩௬ |
| அறுபபன் | ௮௦ |
| அற்றிடினு | ௩௨ |
| அற்றிடினே | ௨௬ |
| அஞ்ஞியம | ௭௯ |
| அனுமதியை | ௭௧ |
| அனபுட | ௧௭௬ |
| அன்பும-ற | ௨௪௮ |
| அன்பும-றி | ௨௪௯ |
| அன்றியே | ௧௯௧ |
| அன்றெடுத் | ௧௫௦ |
| அன்னங்க | ௨௦௦ |
| அன்னந்த | ௧௮௭ |
| அன்னமலா | ௨௦௪ |
| அன்னியநூ | ௧௧௧ |
| அன்னியாக்கு | ௪௪ |
| அன்னை | ௫௨ |
| ——— | |
| ஆகாரதோட | ௧௫ |
| ஆகுமே | ௧௮௪ |
| ஆகும்பிணி | ௧௩௧ |
| ஆக்கிப்பு | ௨௩௯ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| ஆக்கிவிளக் | ௧௭௮ |
| ஆசமனஞ் | ௧௦௪ |
| ஆசமனமா | ௨௯௧ |
| ஆசறினு | ௩௨ |
| ஆசாரியன் | ௬௫ |
| ஆடிமுத | ௮௧ |
| ஆடையற | ௧௬௯ |
| ஆட்டிடுக | ௨௮௩ |
| ஆதரவி | ௫௯ |
| ஆதலினெல | ௨௯௭ |
| ஆதலினீன் | ௪௮ |
| ஆதலினற் | ௯௯ |
| ஆதனந் | ௧௭௫ |
| ஆதார | ௨௮௭ |
| ஆதிதிதி | ௨௨௦ |
| ஆயாமஞ் | ௯௭ |
| ஆயிரங | ௩௦௩ |
| ஆயுவழியு | ௧௨௩ |
| ஆய்ந்துகிரி | ௭௩ |
| ஆரமிலா | ௨௯௦ |
| ஆராத | ௬௭ |
| ஆரியனைத | ௨௩௩ |
| ஆரியனபா | ௨௦ |
| ஆவாக | ௨௮௮ |
| ஆறிரனை | ௨௨௪ |
| ஆறைநதின் | ௮௧ |
| ஆனிமுத | ௮௧ |
| ஆனினமு | ௮ |
| ஆனைமுக | ௨௭௯ |
| ஆன்கோட்டு | ௨௮௬ |
| ——— | |
| இக்குணதி | ௪௭ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| இசைப்பா | ௨௫௦ |
| இடக்கையி | ௧௬௮ |
| இடைதா | ௧௦௭ |
| இடையின் | ௧௪௦ |
| இட்டங்கெ | ௧௨௨ |
| இட்டமுடன் | ௯௨ |
| இட்டலிங்க | ௨௮௦ |
| இட்டலிங்கத | ௩௦௦ |
| இட்டணெணக் | ௬௪ |
| இதுகொள்கை | ௬௪ |
| இதுதான | ௧௫௪ |
| இநதநெறி | ௧௭௪ |
| இந்தமுறைத | ௩௦௫ |
| இநதமுறைம | ௨௭ |
| இநதமுறையி | ௯௮ |
| இந்தவிக | ௪௬ |
| இயற்றித்தா | ௭௭ |
| இயற்றியே | ௨௩௧ |
| இயற்றுக | ௨௭௩ |
| இயனறதிவ | ௨௭௨ |
| இயனறதே | ௧௬௪ |
| இரக்கததா | ௨௪௮ |
| இரககமற | ௨௪௮ |
| இரககிக்கை | ௧௬௨ |
| இரஙகிக் | ௫௩ |
| இரண்டுமுழ | ௧௫௭ |
| இரவியுளத் | ௧௩௧ |
| இரவியென | ௧௧ |
| இரவிற் | ௧௭௭ |
| இரவுபாக | ௭௨ |
| இரவே | ௨௩௫ |
| இருகூறு | ௨௩௯ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| இருகையி | ௧௬௯ |
| இருக்குஞ் | ௨௫௨ |
| இருக்குமி | ௨௦௯ |
| இருக்கை | ௨௩௫ |
| இருதயத் | ௨௮௮ |
| இருத்தியே | ௧௯௦ |
| இருநாழி | ௨௯௪ |
| இருநான்கு | ௧௪௯ |
| இருந்தா | ௨௦௨ |
| இருந்து | ௧௦௩ |
| இருபது | ௨௧௫ |
| இருப்பரி | ௨௪௪ |
| இருப்பர் | ௨௫௨ |
| இருப்பை | ௧௦௨ |
| இருமுழ | ௨௭௬ |
| இருவினைக்கு | ௨௪௩ |
| இருவினையா | ௨௪௪ |
| இரையருந்து | ௨௪௯ |
| இலங்கியா | ௧௪௧ |
| இலவங்கங் | ௨௯௧ |
| இலிங்க | ௨௫௮ |
| இவருணையி | ௩௬ |
| இவவிரண்டு | ௧௨௫ |
| இழித்தாரே | ௨௩௨ |
| இன்றன்றே | ௬௮ |
| இன்னமு-யா | ௨௨௪ |
| இன்னமு-யி | ௨௨௯ |
| — | |
| ஈசானமு | ௨௫௬ |
| ஈசானந் | ௨௧௨ |
| ஈசானவ | ௨௫௬ |
| ஈட்டித் | ௨௩௫ |
| ஈரத | ௧௦௦ |
| ஈவான் | ௨௪௭ |
| ஈனர் | ௨௦௨ |
| — | |
| உச்சரித்தோ | ௨௦௩ |
| உச்சிக்குமு | ௧௦௭ |
| உச்சிக்குழி | ௧௨௨ |
| உண்டுசிவ | ௭ |
| உண்டுமெணி | ௧௩௩ |
| உண்டோ | ௨௪௩ |
| உணைறுமுயி | ௨௪௬ |
| உண்ணே | ௧௭௯ |
| உதவியதே | ௮ |
| உதிக்கு | ௨௧௭ |
| உதிப்பித் | ௨௪௪ |
| உத்தமமாந் | ௧௦௬ |
| உத்தமமேம | ௨௭௫ |
| உத்தமமேமீ | ௧௧௪ |
| உத்தமரா | ௧௩ |
| உப்பு | ௮௩ |
| உயாந்த | ௧௨௪ |
| உயிாக்குண் | ௮௦ |
| உய்வா | ௯ |
| உரமாலே | ௧௩௯ |
| உரிததல்ல | ௩௪ |
| உரித்துப | ௩௩ |
| உருட்டிப் | ௧௫௦ |
| உரைத்தமலன் | ௩௮ |
| உரைதா-தே | ௫௪ |
| உரைத்தா-சா | ௨௨௩ |
| உரைத்தாமி | ௨௩௨ |
| உரைத்தாமே | ௨௪௨ |
| உரைத்தாம் | ௭௪ |
| உரைத்தே | ௨௦௭ |
| உரையே | ௨௦௧ |
| உலகமும் | ௨ |
| உழுந்தமிழ் | ௧௯௭ |
| உளளங்கை | ௨௪௨ |
| உளிவெ | ௧௪௯ |
| உறவுபகை | ௨௬௦ |
| உறினே | ௪௫ |
| உறபத்தி | ௨௨௧ |
| உறுச | ௨௩௭ |
| உன்னதநா | ௧௦௨ |
| உன்னதமீ | ௨௭௫ |
| உன்னிச்சிவ | ௨௨௮ |
| உணனிச்செ | ௧௪௪ |
| உன்னை | ௧௬௬ |
| — | |
| ஊட்டுவிப் | ௨௪௫ |
| — | |
| எட்டங் | ௧௫௫ |
| எட்டிரு | ௧௧௬ |
| எட்டுக் | ௨௨௭ |
| எண்ணெய் | ௧௯௯ |
| எதிரைசயி | ௨௫௬ |
| எருக்குக் | ௧௭௩ |
| எல்லா | ௧௪௭ |
| எவவுயிரு | ௧௬௭ |
| எழுக | ௮௫ |
| எழுதி | ௩௦௩ |
| எழுந்தருள | ௨௮௬ |
| எழுமூன்ற | ௨௯௭ |
| என்ற | ௮௨ |
| என்றே | ௧௯ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| என்ன | ௨௪௬ |
| என்னு-மூத | ௧௯௧ |
| என்னு-யுமி | ௨௮௫ |
| ஏந்தியபி | ௨௮௫ |
| ஏவுதன் | ௬௩ |
| ஏறுது | ௨௯௮ |
| ஏறும | ௨௬௫ |
| ஏற்றிடுக | ௧௪௯ |
| ஏற்றின்கு | ௧௧௪ |
| ஏற்றுச் | ௧௯௬ |
| ஐந்துகூறு | ௧௨௩ |
| ஐந்துகூற் | ௧௨௪ |
| ஐம்மூன்று | ௧௮௧ |
| ஐயந் | ௩௧ |
| ஒப்பரே | ௯௬ |
| ஒருகையி | ௧௬௫ |
| ஒருதந் | ௭௫ |
| ஒருமுழம் | ௨௮௧ |
| ஒருவற்கே | ௪௯ |
| ஒருவிதமே | ௧௩௬ |
| ஒன்பானெ | ௧௧௭ |
| ஒன்றுகி | ௨ |
| ஒன்றியுற | ௧௪௧ |
| ஒன்றிரண் | ௧௩௪ |
| ஒன்றுமூன | ௧௧௯ |
| ஓசையுறிற் | ௧௪௨ |
| ஓடே | ௧௭௬ |
| ஓதுகநா | ௭௫ |
| ஓதேல் | ௨௭௦ |
| கங்கைநதி | ௧௨ |
| கஞ்சன் | ௧௬ |
| கடப்புவிளா | ௯௧ |
| கட்டிகீழ் | ௧௬௮ |
| கட்டுரைத்தா | ௧௫௩ |
| கணவ | ௪௨ |
| கதவிபலா | ௧௯௩ |
| கந்தமலர் | ௧௫௨ |
| கரந்தி | ௧௩௯ |
| கருங்காலி | ௮௦ |
| கழுவிசசி | ௨௦௫ |
| கழுவிப்பி | ௨௦௫ |
| கழுவியே | ௧௮௯ |
| களங்கங் | ௧௨௨ |
| கறுப்புச் | ௧௫௧ |
| கற்பமது | ௧௪௭ |
| கற்புடையா | ௧௪௬ |
| கனிட்டங | ௧௦௬ |
| கனியுதகந் | ௨௮௪ |
| கன்பசா | ௨௯௫ |
| கனமம் | ௨௯௫ |
| காக்கைக் | ௧௭ |
| காட்டிப் | ௯௭ |
| காபிலமா | ௧௦௧ |
| கார்த்திகை | ௪௯ |
| காலப்பழு | ௧௪ |
| கிட்டாதேற் | ௧௧௬ |
| குண்டத்தா | ௬௧ |
| குதர்க்கவுரை | ௧௬௭ |
| குளத்திற் | ௧௬௬ |
| குறித்துமறு | ௧௨௯ |
| குறித்துச் | ௧௨௯ |
| குறியுங் | ௩௨ |
| குன்றுதே | ௨௪௦ |
| கைகுவித்து | ௧௬௪ |
| கைக்கிரியை | ௨௮௨ |
| கையிறு | ௨௦௦ |
| கைக்கொ | ௧௧௮ |
| கொடுக்க | ௨௬௬ |
| கொடுத்திடுக | ௧௩௭ |
| கொண்டத | ௧௨௦ |
| கொண்டா | ௧௧௮ |
| கொள்க | ௧௧௧ |
| கோபுர | ௧௨௮ |
| கோவி | ௧௮ |
| சகளிரு | ௨௬௪ |
| சங்கிரமத் | ௯௩ |
| சஙகெ-யாந் | ௨௮௫ |
| சங்கே-யாற் | ௨௮௬ |
| சடையாற் | ௨௪௧ |
| சண்டனையர் | ௨௯௯ |
| சதுர்முகன் | ௪ |
| சத்திமனத் | ௨௩ |
| சத்தியோ-தபி | ௧௩௬ |
| சத்தியோ-திற் | ௨௧௦ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| சந்திதா | ௧௦௩ |
| சநதியா | ௨௨௧ |
| சநதியொரு | ௧௦௮ |
| சநகிரகாந | ௧௨௫ |
| சாயமுத | ௨௦ |
| சமயியெனப | ௫௫ |
| சயம-மாந | ௨௫௦ |
| சயப மெனை | ௨௪௦ |
| சயன | ௨௫௧ |
| சரசரதத | ௧௨௧ |
| சரிததாாகரு | ௧௭௩ |
| சலததின | ௧௯௫ |
| சலாதனம் | ௨௮௭ |
| சனணியாசி | ௩௮ |
| —— | |
| சாதா-மெ | ௨௦௯ |
| சாதா-மை | ௨௯௬ |
| சாநதா | ௧௮௫ |
| சாமபவியாற் | ௨௨ |
| —— | |
| சிததியினை | ௩௮ |
| சிததிவிரும | ௭௦ |
| சிநதனை | ௬௪ |
| சிநதிப்பாம் | ௭ |
| சிரததி | ௧௩௮ |
| சிரநெறறி | ௧௫௭ |
| சிரந்துயிலிற் | ௧௭௨ |
| சிவஞானி | ௩௦௨ |
| சிவதிக்கைச் | ௨௬௦ |
| சிவசோசா | ௬௭ |
| சிவபூசை | ௧௦௯ |
| சிவலிஙகந் | ௧௧௩ |
| சிவனைக் | ௬௪ |
| சிவன | ௨௫௩ |
| சிறகரவே | ௬௯ |
| —— | |
| சுததரு | ௨௭௧ |
| சுததிபண | ௧௯௨ |
| சுததமுங | ௨௭௦ |
| சுலவி | ௧௮௭ |
| சுழுனையிற | ௧௪௫ |
| —— | |
| சூததிரரா | ௪௮ |
| சூததிராக்கு | ௧௧௭ |
| சூததிராயீ | ௨௬௧ |
| சூததிரனும் | ௨௮ |
| சூரியகாந | ௧௨௫ |
| —— | |
| செபிகக | ௧௯௬ |
| செய்கசெப | ௧௪௦ |
| செய்கவபி | ௨௮௧ |
| செய்துசிவதீ | ௨௬௬ |
| செயதுசிவபூ | ௨௩௧ |
| செயதுபுனி | ௧௯௫ |
| செயபிரம | ௧௦௫ |
| செயயான | ௨௯௭ |
| செயயி | ௮௧ |
| செயவிக்க | ௧௮௩ |
| செல்வததி | ௬௨ |
| செனனமய | ௧௮௩ |
| சென்மமொரு | ௧௭௦ |
| செனறு | ௫௬ |
| சென்றூர்த் | ௨௨௮ |
| —— | |
| சேழகத | ௧௯௮ |
| —— | |
| சைசெமசா | ௩௦௫ |
| சைவசயய-சை | ௧௦ |
| சைவரைச | ௨௪ |
| —— | |
| சொனனவி | ௧௪௮ |
| —— | |
| தக்கோா | ௧௮௬ |
| தணணறவின் | ௫௬ |
| தணணீர | ௨௦௧ |
| தணபுனலின் | ௨௩௦ |
| தமக்கருக | ௧௩௧ |
| தமமுளளத | ௧௩௦ |
| தரிககவினிப் | ௨௪௬ |
| தரிககதலை | ௧௫௮ |
| தரிதது-மெ | ௫௬ |
| தரிதது-வி | ௭௦ |
| தருசசேக் | ௧௯௪ |
| தாசசனி | ௧௪௩ |
| தாப்டணைததி | ௩௬ |
| தலதனத | ௧௯௨ |
| தலையிற | ௨௯௯ |
| தறபருடத | ௨௧௧ |
| தறபுருட-வ | ௨௫௯ |
| தனககருக | ௨௩௯ |
| தனகனெகன | ௨௩௫ |
| தனிதத-தை | ௧௯௪ |
| தனிதத-யீ | ௧௩௭ |
| தன்னிருகை | ௧௬௭ |
| தன்னுடனே | ௧௮௮ |
| தன்னைக் | ௨௪௮ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| தாங்கி | ௧௮௧ | தோயத்தாற் | ௨௭௫ | பகலெடுத்த | ௯௭ |
| தாசனுய்ப் | ௨௧ | — | | பங்குகுரு | ௨௪௭ |
| திடகறபு | ௨௨௯ | நம்பன் | ௩ | பங்குனி | ௧௪௯ |
| திண்ணிய | ௨௭௪ | நமமடிக | ௪ | பஞ்சவிதசு | ௨௮௦ |
| திரிகாலத | ௧௪௦ | நயந்தா | ௨௦௯ | பஞ்சவிதரு | ௧௨௪ |
| திரிசூலத் | ௧௫௮ | நலஙகொளகி | ௯௦ | பஞ்சவிததி | ௧௦௫ |
| திருநீற்றின் | ௧௫௨ | நல்லார் | ௧ | பஞ்சாமிர் | ௨௮௪ |
| திருப்பணி | ௯ | நவின்றநதி | ௫௪ | பஞ்சாவ | ௨௮௯ |
| திருமடைப் | ௧௯௦ | நளினதனைதப் | ௨௭௭ | பஞ்சான | ௨௫௯ |
| திண்டே | ௧௯௮ | நள்ளிருளி | ௧௦௮ | படிக்கும் | ௨௧௯ |
| தித்தமுத | ௨௧௧ | நனமனைத | ௧௧௨ | படிததுணா | ௩௦௪ |
| துய்யவிலை | ௯௪ | நாயகத்தைத் | ௧௩௭ | பட்டம்போ | ௧௯௧ |
| துலையினிறுத் | ௧௧௪ | நாலங | ௯௨ | பணிக | ௯௯ |
| துறந்தாறகு | ௨௭௧ | நாறகோண | ௨௮௧ | பண்ணிடுகத | ௯௦ |
| துறவிதா | ௯௪ | நாற்றிசையும் | ௨௭௫ | பண்ணிடுகதி | ௪௬ |
| தூஙகி | ௭௨ | நிசிதனினீ | ௯௯ | பண்ணிநியா | ௨௦௬ |
| தூலலிங்க | ௧௩௦ | நி-களன்ற | ௨௩௯ | பண்ணிடுகபூ | ௨௭௮ |
| தெறகு | ௨௫௯ | நிததியமு | ௩௯ | பண்ணியுறத | ௨௩௪ |
| தேசிகராதிக் | ௨௨௯ | நிததியவங்க | ௮௪ | பண்ணுகபா | ௧௯௧ |
| தேசிகராதிதி | ௧௨ | நிறைந்த | ௨௩௧ | பதினொன்கி | ௮௦ |
| தேசிகாக்கு | ௩௩ | நிறபதல | ௭௨ | பதினொ-பஞ் | ௨௨ |
| தேசிகர்தம | ௧௭௪ | நின்மலமே | ௨௯௨ | பதினொன்-பட் | ௮ |
| தேசிகாபூ | ௧௭௦ | நின்மலன் | ௨௪௦ | பதுமமலர் | ௨௭௬ |
| தேசிகனை | ௧௯௪ | நின்மால்ய | ௨௯௦ | பததியின் | ௨௮௯ |
| தேசிகனேக் | ௧௦ | நீஙகாத | ௧௮ | பந்தமறு | ௩௦௫ |
| தேசிகனசே | ௩௦௧ | நீங்காதே | ௧௧௯ | பரமசிவன | ௧௪௬ |
| தேசிகன்ற | ௧௨௦ | நீங்கிய | ௨௩௯ | பரமசிவனு | ௧௮௧ |
| தேர்ந்தறிக | ௪௫ | நீராடுதலு | ௧௦௧ | பரமசிவனே | ௧௩௬ |
| தேவரடி | ௧௯௫ | நீருடனே | ௧௫௧ | பரமப் | ௩௬ |
| தேவரதி | ௧௮௭ | நுரைகுமிழி | ௧௦௪ | பார்பார்வை | ௧௪௨ |
| தொடவலக் | ௨௦௯ | நெற்றியுரங் | ௧௫௭ | பரார்த்தமெ | ௨௫ |
| தொழுதே | ௯௩ | பகர்ந்தாம் | ௨௯௯ | பரிகையெனு | ௨௦௬ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| பரிக்க | ௨௨௮ |
| பரிக்க | ௨௩௪ |
| பரித்தரிப்பாம | ௫ |
| பரிந்துடைந்தா | ௨௫ |
| பரிமேல் | ௬ |
| பரியவுத | ௧௭ |
| பரிவுறவெ | ௨௮௩ |
| பருகிடுக | ௧௬௮ |
| பருமைத | ௧௦௨ |
| பலமையொ | ௪௯ |
| பலவாரு | ௨௧௮ |
| பல்விற | ௩௬௮ |
| பறவையினுக் | ௨௪ |
| பற்றற் | ௫௩ |
| பற்றியடனே | ௫௦ |
| பன்னிர-நீ | ௯௨ |
| பன்னிர-பா | ௨௭௬ |
| பன்னிரண்டு | ௧௧௭ |
| பாகம | ௨௪௫ |
| பாங்கல்ல | ௮௩ |
| பாங்காகுஞ் | ௨௨௩ |
| பாங்கில்லை | ௨௫௫ |
| பாஙகுறவெ | ௨௯௨ |
| பாததிற | ௨௯௨ |
| பாததைச | ௨௭௬ |
| பாதிரியுஞ் | ௧௯௩ |
| பாத்திரதி | ௨௩௭ |
| பாத்திரமும | ௨௨௯ |
| பாத்திரமும் | ௨௩௭ |
| பாத்திமே | ௨௪௭ |
| பாலிவென்டுப் | ௨௦௦ |
| பாவமு | ௧௪௧ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| பிணிக்கும் | ௨௪௨ |
| பிரம | ௪௦ |
| பிரமாங்கம் | ௨௮௯ |
| பிரமோப | ௨௭ |
| பிழைப்பித்தே | ௫ |
| பிறந்திளைய | ௧௪௮ |
| பிறரொடுபே | ௨௦௭ |
| பிடத்தை | ௨௭௭ |
| புக்குமனே | ௨௩௦ |
| புசிக்க | ௭௩ |
| புசித்தமனே | ௨௦௪ |
| புநலவண | ௫௨ |
| புரிந்தே | ௬௩ |
| புரிமூல | ௨௨௫ |
| புருடனிழி | ௨௬௮ |
| புருடனுயா | ௨௬௭ |
| புறத்திறகபூ | ௨௦௪ |
| புனனமூழ் | ௩௮ |
| புனிததல | ௨௧௯ |
| புனிதமுற | ௨௦௮ |
| பூசகறகே | ௩௦௧ |
| பூசனைக்கு | ௨௭௮ |
| பூசுர | ௩௫ |
| பூணுமற | ௧௩௨ |
| பூண்பதற்குக் | ௧௩௨ |
| பூதியனு | ௧௬௨ |
| பூதியினே | ௧௬௨ |
| பூரவதி-ப்பு | ௧௦௩ |
| பூரவதி-யிற்பு | ௨௭௯ |
| பூர்வ-யிரு | ௨௭௮ |
| பூரவ-யிறபுரு | ௨௯௩ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| பெய்க | ௨௦௪ |
| பெய்ததனிற் | ௧௫௦ |
| பெரிய | ௧௮ |
| பெருவாகை | ௯௦ |
| பெறினு | ௭௮ |
| பொயயுலக | ௭ |
| பொருளுட | ௫௨ |
| பொனனினே | ௬௯ |
| போதுசண | ௭௭ |
| போமபொழு | ௧௭௬ |
| போாககஞ்சும | ௬௮ |
| மகிழ்வுறக | ௩௦௪ |
| மடியரு | ௧௬ |
| மணந்திறு | ௧௮௦ |
| மணிவாண | ௧௧௨ |
| மனைசுட்ட | ௧௧௧ |
| மணடபமை | ௨௭௪ |
| மணடபமொ | ௨௭௩ |
| மண்ணுளு | ௯௫ |
| மணணிறுற் | ௨௭௪ |
| மதிமமாம | ௫௦ |
| மந்தந் | ௧௪௩ |
| மநதிரந | ௨௮௮ |
| மந்திரிக்க | ௯௯ |
| மரித்திடனு | ௧௮௦ |
| மருதிறலி | ௯௧ |
| மருநதற | ௧௮௫ |
| மருந்திது | ௨௬௧ |
| மருந்துமிது | ௩௦௩ |
| மலமோசி | ௯௫ |
| மலினவுடை | ௨௩௬ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| மலையினதி | உஎஉ |
| மற்றைப் | உசுரு |
| மறறைமுனி | ச |
| மற்றையக | கOசு |
| மற்றையமா | ருO |
| மற்றையருக் | கசுக |
| மறறையாக்கு | ககந |
| மறறையவா | உகூ |
| மறறையோ. | கககூ |
| மறமெருருவா | கசுசு |
| மனைவி | கஅO |
| மன்னமொரு | உசு |
| மனனாக்கு | நரு |
| மனனும | நOந |
| மாதரும | கருகூ |
| மாநதிரி | உச |
| மாளிகை | சு |
| மாறறிமயிா | உOஉ |
| மாற்றுக | கOO |
| மானத | கசந |
| மானுடாதா | உசுக |
| — | |
| மிகதமெளிந | கஎO |
| மிதியேல் | உசுஉ |
| முகமும | கOஉ |
| முடக்கியிரு | கநக |
| முடிதால | கஉச |
| முடிததிரு | உநந |
| முதலிகொடு | சO |
| முத்திவிருப்பி | ருக |
| முந்திப்பி | உச |
| முநதியச | உஉந |



| பாட்டு. | பக்கம். |
|---|---|
| முநதியதே | எச |
| முநதியநான | ககஅ |
| முந்து | கூந |
| முரசாதி | உOந |
| முழந்தாள் | கஎ |
| முழமிருப | உஎந |
| முறைமையுற | நஅகூ |
| முறறியநாட் | நOச |
| முறறியபின் | உOந |
| முறறினாக்கு | கரு |
| முற்று | ககச |
| முன்ன-யின | உநஉ |
| முன்ன-யின | உசக |
| முனன-யுற | உநச |
| முன்னூலி | சுரு |
| மூப்பு | கசஅ |
| மெய்புளக | சசு |
| மோபித | அசு |
| விங்கததை | கஉந |
| — | |
| வடதிசையில | கஎஉ |
| வடிததிடுக | கருக |
| வததிரததி | கருரு |
| வததிரமாந் | உகூந |
| வரையாதே | கூ |
| வலக்காற் | உஉகூ |
| வலப்பாலிற் | உOரு |
| வலப்பான் | ககூசு |
| வளைததிடுக | ககூரு |
| வனநதனிற | கருந |
| வன்னிகுசை | உசுந |
| வன்னிவன | கருச |



| பாட்டு. | பக்கம |
|---|---|
| வாணலிங்க | கஉ |
| வாணமெனனு | ககந |
| வாதிக்கு | உசுரு |
| வாமமமூாத்த | உகூசு |
| வாயிலத | உஎச |
| வாரமுற | சுகூ |
| வாக்கவல | உOசு |
| வாாததிடுக | கருச |
| வாழ்க | |
| — | |
| விசயமுத | உகக |
| விடினே | எஅ |
| விருப்பத | சுஅ |
| விருமபுந் | சசு |
| விலக்கியநா | கூச |
| விளஙகின | கஉ |
| விளமபின | ருக |
| விளைநத | கருக |
| விளையேல | கூரு |
| வீட்டிமல | உந |
| வீழ்வா | ச |
| வெயணகத | கசுக |
| வெணகல | உநந |
| வெண்மை | ககரு |
| வெபமொழிய | ரு |
| வெறுததா | கச |
| வேணுப் | உஉசு |
| வேதமுத | நம |
| வைக்கனி | உOக |
| வைந்திடித | கரு |
| வைத்தொ | உஅ |